ಶ್ರೀ ಮಲೆಯ ಗ್ರಂ
ಸಂ- ಮಾಸಿ. 2004

IL
Vijaya Nagara
Pol.
226162

தினமலர்
செப்டம்பர் 2004

14th ANNUAL CONFERENCE OF THE NUCLEAR SOCIETY

அட்டைப்பட விளக்கம்

முதல் பக்க அட்டை : கல்பாக்கத்தில்
நடைபெற்ற இந்திய அணுசக்தி சங்கத்தின்
14ஆவது மாநாடு

நான்காம் பக்க அட்டை : யானைகள் முகாம்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034-35
மார்கழி - ஐத
ஜனவரி 2004
மலர் : 35 இதழ் : 7
விலை ரூ.10

இந்த இதழில்...

- யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் – மகத்தான வெற்றி 2
- புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 7
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு 10
- இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு 11
- அனைவருக்கும் கல்வித் திட்டம் – இலக்கை விஞ்சிச் சாதனை 12
- தமிழகத்தில் பெண்களுக்கென "மகளிர் தொழில் பூங்காக்கள்" 15
- மகாமகத் திருவிழா – மகத்தான ஏற்பாடு 17
- அனைவருக்கும் ஊட்டச்சத்துக் கல்வி 21
- ஊனமுற்றோருக்கான அரசு சலுகைகள் 25
- போலியோ நோயை அறவே ஒழிக்க அரசு சீரிய நடவடிக்கை 28
- மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் கோவை மாவட்ட ஊராட்சிகள் 30
- மூதறிஞர் இராஜாஜி – தமிழகத்தின் தவப்புதல்வர் 33
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி 37
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தி 38
- மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களின் பொங்கல் வாழ்த்துப்பா 39
- கவியரசர் இளந்தேவன் கவிதை 40
- இந்திய அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை 42
- சாலை மேம்பாட்டுப் பணிகள் – புதிய பாலங்கள் 45
- மணிக்கொடி சீனிவாசன் நூற்றாண்டு விழா 46
- சேலம் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சிறப்பான செயல்பாடுகள் 49
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மக்களின் பங்கேற்பில் உருவான பள்ளிக்கூடம் 52
- இரத்த அழுத்தம் – ஒரு பார்வை 54
- ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலைய முதல் விற்பனை தொடக்க விழா 57
- நட்சத்திரக் குழந்தைகள் (சிறுகதை) 60
- ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம் 64
- சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறும் ஊரக வளர்ச்சிப் பணிகள் 65
- சென்னையில் சர்வதேச மேலாண்மைப் பயிற்சி மையம் 67
- தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் "மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா" 69
- மதுரை மாவட்டத்தில் சிறப்பு மருத்துவ முகாம் 71
- கரூர் மாவட்டத்தில் பொன்விழா சுயவேலைவாய்ப்புத் திட்டம் 73
- உடல் ஊனமுற்றோருக்கான உன்னதப்பணி 76
- உலகை பொங்கும் உலக்கையருவி 78

ஆசிரியரும் வெளியிடுபவரும் :**வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி நடைபெற்ற யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி

திரு. ஜே. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

"இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல், விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் உள்ளன என்பதை, நாம் அனைவரும் அறிவோம். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர்களுக்காகக் கூட பரிதாபப்பட்ட வள்ளலார் போன்ற பெருமக்கள் வாழ்ந்த பூமி இது. மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான் என்ற அடிப்படையில், விலங்குகளிடத்தில் நான் கொண்டிருக்கும் அன்பும் கருணையும் அனைவரும் அறிந்ததுதான்''

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா.

மயிலாப்பூரில் ஒரு யானை, யானைப்பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும் பிச்சை எடுப்பதற்கு அதனை முறைகேடாகப் பயன்படுத்துவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தபோது, மருத்துவ சிகிச்சையும் அடைக்கலமும் அளிப்பதற்காக அந்த யானையை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைத்ததோடு அந்த யானைப்பாகன் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக யானைகளை முறையாகப் பராமரிப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

யானைகள் உடல்நலத்தைத் தொடர்ச்சியாக கண்காணிக்கவும், தேவையான மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கவும், திறமைவாய்ந்த கால்நடை மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு ஆலோசனை வழங்கினார்கள். யானைகள் சீரற்ற, கடினமான தரையில் நிற்க வைக்கப்படுவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அவற்றின் கால்களில் சிராய்ப்போ, புண்ணோ ஏற்படாதவாறு மண் தரையில் அல்லது புல் வெளியில்தான் அவை நிறுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். குடிப்பதற்கும், குளிப்பதற்கும், போதுமான அளவு தண்ணீர் வீழ்ங்கப்படுவதன் மூலம், யானைகளின் உடலும், உள்ளமும், எப்போதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். திருக்கோயில்களில், யானைகளைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல், ஒரு நாளில் குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டுமே அவை பணியில் ஈடுபடுத்தப்பட

வேண்டும் என்றும், அவற்றிற்குப் போதுமான ஒய்வு தரப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் பராமரிக்கப் பட்டு வரும் யானைகளுக்கு 2003 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒருமுறை, ஒரு மாத கால அளவிற்கு, யானைகளுக்கு ஒரு நலவாழ்வு முகாம் நடத்தவும், அங்கு தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் உள்ள அனைத்து யானைகளும் கொண்டுவரப்பட்டு அவற்றின் உடல்நிலை பேணப்பட்டு, புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனவும், அந்த ஒரு மாத காலத்தில், யானைகளுக்குப் புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்படும் எனவும் அவற்றின் உடல் நலமும் மனநலமும் பேணப்படும் எனவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

வழக்கமாக ஆற்றிவரும் வேலைப்பளுவில் இருந்து ஒரு மாத காலத்திற்கு யானைகளுக்கு முழு ஒய்வு அளிக்கப்படும் எனவும் அந்த ஒரு மாத காலம் அளிக்கப்படும் ஊட்டச்சத்து உணவின் மூலமும், ஒய்வின் மூலமும் இந்த யானைகள் திருக்கோயில் களுக்குத் திரும்பச் செல்லும்போது, புத்துணர்ச்சியோடு தங்கள் பணிகளை மேற்கொள்ள இயலும் எனவும் அறிவித்ததோடு, அதிக வருமானமுள்ள திருக்கோயில் களின் நிதியிலிருந்து இதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தனியாரால் பராமரிக்கப்படும் யானைகளையும் இந்த முகாமில் அதன் உரிமையாளரின் முழு விருப்பத்தோடு கலந்துகொள்ளச் செய்யலாம் எனவும் அறிவுரை வழங்கினார்கள். தனியார் யானைகளுக்குப் போக்குவரத்து மற்றும் 30 நாட்களுக்கான உணவு மற்றும் அனைத்துச் செலவுகளையும் அரசே மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்கள்.

எல்லா யானைப்பாகர்களுக்கும் யானைகளை அன்புடன் பராமரிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் சிறப்புப் பயிற்சி தனியாக அளிக்கவும் அறிவுறுத்தினார்கள். தொடர்ச்சியாக யானைகள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வனத்துறை ஆகியவற்றின் அதிகாரிகளைக் கொண்டு ஒரு ஒருங்கிணைப்புக் குழுவும் அமைத்து உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, வனத்துறை மற்றும் கால்நடைத்துறை ஒத்துழைப்போடு தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் யானைகள் மற்றும் தமிழகத் திலுள்ள விரும்பும் தனியார் யானைகளுக்கு நீர் வசதி கொண்ட, ஏற்ற சுற்றுச்சூழல் அமைந்த முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (தெப்பக்காடு) யானைகள் நலவாழ்வு முகாம் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது.

இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், கால்நடைத்துறை அலுவலர்கள் மற்றும் வன ஆர்வலர்கள் முன்னிலையில் 16–11–2003 முற்பகல் எளிய நிகழ்ச்சியுடன் தொடங்கி வைக்கப்பட்டது. இம்முகாமில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 37 யானைகளும் தனியாருக்குச் சொந்தமான 18 யானைகளும் பங்கேற்றன. இத்துடன் 45

வனத்துறைக்குச் சொந்தமான யானைகளும் மொத்தம் 100 யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் பங்கேற்றன.

இம்முகாமில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டவாறு யானைகளின் உடல்நிலை பேணப்பட்டு, புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒரு மாதக் காலத்தில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. இதன் மூலம் யானைகள் உடல் நலமும், மன நலமும் ஆரோக்கியமான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இம்முகாம் வழக்கமான வேலைப் பளுவிலிருந்து யானைகளுக்கு முழு ஓய்வு அளிக்கப்படும் சூழ்நிலையை ஏற்படுத்தியது. இம்முகாம் காலத்தில் அளிக்கப்பட்ட ஊட்டச்சத்து உணவு மற்றும் ஓய்வின் மூலம் யானைகள் திரும்ப பராமரிப்பதும் நமது இன்றியமையாத கடமையாகும்'' என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் சீரிய முறையில் வனத்துறை மற்றும் கால்நடைத்துறையின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டது.

இராமநாதபுரம் சமஸ்தான திருக்கோயிலுக்குச் சொந்தமான விஜயலஷ்மி, மதுரை தனியாருக்குச் சொந்தமான சீதா, சேலம் தனியாருக்குச் சொந்தமான லஷ்மி, மதுரை அருள்மிகு கூடலழகர் திருக் கோயிலுக்குச் சொந்தமான மதுரவள்ளி, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான வள்ளி, திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான கோமதி, இரட்டை திருப்பதி அருள்மிகு அரவிந்த லோச்சனார்

இருப்பிடத்திற்குச் சென்ற போது புத்துணர்ச்சியோடு அவைகள் உள்ளன.

ஒவ்வொரு யானைக்கும் மொத்த உணவு அதன் எடையில் 5 சதவிகித அளவில் அளிக்கப்பட வேண்டும் என்ற வழிமுறை இம்முகாமில் தவறாது பின்பற்றப்பட்டது.

"நம்முடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரிய விலங்குகளை சிறந்த முறையில் பராமரிப்பது நமது கடமையாகும். குறிப்பாக, நிலத்தில் வாழும் உயிர்களில் மிகப்பெரியனவாகவும் மனிதர்களுக்கு உதவிகரமாகவும் உள்ள யானைகளைப் பாதுகாப்பதும் திருக்கோயிலுக்குச் சொந்தமான லஷ்மி, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ருக்கு, மதுரை தனியாருக்குச் சொந்தமான குலேபகாவலி ஆகிய யானைகள் உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக உடல் பலகீனமாகவும், வாதநோய், கண்புரை நோய் மற்றும் சேற்றுப்புண் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தன. மேற்கண்ட யானைகளுக்குச் சிறப்பு நவீன சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையாக குணமுற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இம்முகாமிற்கு இரட்டை திருப்பதி அருள்மிகு அரவிந்தலோச்சனார் திருக்கோயிலுக்குச் சொந்தமான மிகவும் இளவயதுடைய லஷ்மி என்ற யானைக்கு ஒரு கண்

பார்வை முழுமையாக இல்லாது இன்னொரு கண் பார்வை இழக்கும் அபாயத்துடன் கொண்டு வரப்பட்டது. அதற்கு அதிநவீன சிகிச்சை அளிக்கப்பட்டு பார்வை இல்லாத ஒரு கண்ணிற்கு அதிசயக்கும் வகையில் பார்வை கொண்டு வரப்பட்டது. மேலும் பேன், சேற்றுப்புண், வாதம், மண் உண்ணும் பழக்கம் போன்ற உபாதைகள் சில யானைகளுக்குத் தொற்றி இருந்தது. அவையெல்லாம் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டன. இம்முகாம் நடத்தப்படவில்லையெனில் மேற்கண்ட யானைகளின் உடல்நலம் ஒரு கேள்விக்குறியாகி இருக்கும் என்று யானைகள் சிறப்புநல வாழ்வு முகாமில் யானைகளுக்கு சிகிச்சை அளித்த குருவாயூர் திருக்கோயில் யானைகள் நல மருத்துவர் திரு.கே.சி. பணிக்கர் மற்றும் தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவர் ஆகியோர் கருத்துத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு மற்றும் நம் நாட்டு சுற்றுலாப் பயணிகளும், மாணவ–மாணவிகளும், வன ஆர்வலர்களும் மற்றும் பலதுறை அலுவலர்களும் இம்முகாமைக் கண்டுகளித்ததோடு, பாராட்டவும் செய்தனர்.

இம்முகாமின் சிறப்பு அம்சங்களாக யானைக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி, அதேபோன்று யானைப் பாகன்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி ஆகியன முகாம் வளாகத்திற்குள்ளேயே ஏற்பாடு செய்யப்பட்டது. முகாம் அருகே யானைகள் குளிப்பதற்கு ஏற்ற வகையில் மாயாறு ஆற்றுப்படுகையில் இம்முகாம் அமைக்கப்பட்டது சிறப்பு வாய்ந்ததாகும். சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு முகாம் சுற்றிலும் சூரிய ஒளி மின்சாரக் கம்பி வேலி அமைக்கப்பட்டு வன விலங்குகளிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. முகாமைச் சுற்றி பயிற்சி அளிக்கப்பட்ட "கும்கி'' என்று அழைக்கப்படும் யானைகளும், கண்காணிப்பு கோபுரமும் மேலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியது.

யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளித்த சிறப்பு நலவாழ்வு முகாமின் வெற்றியைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்கள் "யானைகள் நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இனி ஆண்டுதோறும் 45 நாட்கள் யானைகள் முகாம் நடத்தப்படும்'' என்று அறிவித்துள்ளார்கள். மேலும் "யானைகளின் மனநலம், உடல்நலம் தான் இந்த முகாம் நடத்தப்பட்டதற்கு முக்கிய நோக்கம் ஆகும். வன இலாகா அதிகாரிகள், கால்நடை டாக்டர்கள் ஆகியோர் இயற்கை சூழ்நிலையில் யானைகள் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்பதை நேரடியாக தெரிந்து கொண்டனர். பல புதிய தகவல்களும் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த முகாமுக்குச் சென்று நேரில் பார்த்த பார்வையாளர்கள் பலர் இந்தத் திட்டத்தைப் பாராட்டியுள்ளனர். எனவே ஆண்டுதோறும் இதுபோன்ற யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்கள் இந்த முகாம் நடைபெறும் தேதிகள் யானைகளை கொண்டு செல்ல வசதியாக முன்கூட்டியே அறிவிக்கப்படும். யானைகள் முகாம் வெற்றி அடைந்துள்ளதைத் தொடர்ந்து முன்பு யானைகளை முகாமுக்கு அனுப்ப மறுத்த மடம் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இனி யானைகளை இந்தப் புத்துணர்ச்சி அளிக்கும் முகாமுக்கு அனுப்ப முன்வருவார்கள் என்று நம்புகிறேன். யானைகளை முகாமுக்கு சவுகரியமாக எந்தவித கஷ்டமும் இல்லாமல்



அனுப்ப அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். முகாமுக்கு ஆகும் செலவு அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும். இந்து அறநிலையத்துறை, வனத்துறை, கால்நடைத்துறை, மாவட்ட நிருவாகம், தனியார் மடத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் அரும்பங்கு ஆற்றியது தான் இந்த முகாம் வெற்றி பெற்றதற்கு முக்கியக் காரணமாகும். யானைகள் மீது பரிவு காட்டும் இந்த உன்னதத் திட்டத்தை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது'' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமின் இறுதி நாளான 15-12-2003 பிற்பகல் அனைத்து யானைகளும் ஒருங்கிணைந்து நிற்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர், மாண்புமிகு சுற்றுலா துறை அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, வனத்துறை, கால்நடைத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்று அமைச்சர் பெருமக்கள் யானைகளுக்கு வெல்லம், கரும்பு பழவகைகள் அளித்தும், யானைப் பாகன்களுக்கு வேட்டி, துண்டுகள் வழங்கியும் முகாமை இனிதே நிறைவேற்றிச் சிறப்பித்தார்கள். •

சொல் வங்கி

தமிழ் வளர்ச்சித் துறையின் 15-ஆவது கூட்டத்தில் ஆங்கில வார்த்தைக்கு இணையான தமிழ்வார்த்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலம்	தமிழ்
Synergy	கூவியாற்றல்
Empathy	ஊடுணர்வு, அநுவாதல்
Pora	நுண்துளை
POTA	பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்
TESMA	தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பேணுகைச் சட்டம்
Humanity	மன்பதை, மனித இனம்
Dispensing Chemists	மருந்தாக்குநர்
Electro Plasting	மின்பூச்சு
Financier	நிதியாளுநர்
Informatics	தகவலியல்
Info system	தகவல் அமைப்பியல்
Spiral Bindings	சுருள்கட்டு
Super Speciality	நனி தனிச் சிறப்பு
Peripheral	புறநிலை
Processor	செயலி
Parlour	அகம்
Thermostat	வெப்பச்சீராக்கி
Upholstery	இருக்கை ஒப்பனை
Winding (Electrical)	மின் கம்பிச் சுற்று
Number Plate	எண் தகடு
Head Light	முகப்பு விளக்கு

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களில், கிராமப் புறங்களில் புதிய தொழில் ஊக்கத்தை அளிக்கக்கூடிய 'ஒரு ஒன்றியத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தொழில்' என்னும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள திட்டம், 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாகும்.'

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இம்மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளூரிலேயே கிடைக்கும் வேளாண் பொருட்களைக் கொண்டு குறைந்த பட்சம் ரூ.1 கோடி முதலீட்டில் வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் அலகுகள் அமைக்கப்படும். இவ்வலகுகளுக்கு சிறப்பு ஊக்க உதவிகள் மற்றும் வழிகாட்டுச் சேவை அளிக்கப்படும். மேலும் கடனுறுதி நிதி திட்டத்தின் கீழ் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு வங்கிகள் பிணையம் இல்லா கடனுதவி அளிப்பதற்காக மூலதன முதலீட்டின் வரம்பினை ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தொழில் வணிகத்துறை மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சிறப்பு ஊக்க உதவிகள்

இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்கான முதலீட்டில் 15 விழுக்காடு மூலதன மானியம், ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும். மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 50 விழுக்காடுக்கும் அதிகமாக மகளிரைப் பணியில் அமர்த்தினால் அதற்குக் கூடுதலாக 5 விழுக்காடு மூலதன மானியமும் மின்னாக்கி மானியமாக 15 விழுக்காடு (ரூ.5 இலட்சம் வரை) மானியமும் வழங்கப்படும். மேலும் குறைந்த அழுத்த மின்மானியம், உற்பத்தி தொடங்கிய முதலாண்டில் 30 விழுக்காடு, இரண்டாவது ஆண்டில் 20 விழுக்காடு மற்றும் மூன்றாவது ஆண்டில் 10 விழுக்காடு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் வழிமுறைகளின்படி, மாவட்ட தொழில் மையங்களில் இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களின் தலைமையின் கீழ் உள்ள வழிபடுத்தும் குழுவினால் பரிசீலனை செய்து, தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் உள்ள மாவட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பின்பு, மாவட்ட அளவிலான குழு தொழில் முனைவோர்களை நேர்காணலுக்கு அழைத்து திட்டங்களைப் பரிசீலனை செய்து அவர்களால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் பட்டியலை மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் இறுதி அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. அரசின் சிறு தொழில் துறைச் செயலரின் தலைமையின் கீழுள்ள மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு இத்திட்டங்களைப் பரிசீலித்து இறுதியாக அனுமதிக்கப்பட்ட திட்டங்களைத் தொழில் முனைவோருடன் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் விவரத் திட்ட அறிக்கையினை தாக்கல் செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில ஒருங்கிணைப்புக்குழுவால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி அனுமதி பெறுதல் மற்றும் மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்டுதலை மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரும் அளிக்கின்றனர்.

இன்றைய நிலவரப்படி, 364 வட்டாரங்களில் 682 திட்டங்களுக்குப் புதிய அண்ணா மறுமலர்ச்சித்



திட்டத்தின் கீழ் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதலளித்துள்ளது.



முக்கிய அம்சமாக இத்திட்டத்தின் கீழ் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய சரிவூட்டப்பட்ட கார்பன், குளிர்பதனம், உயிர் கழிவிலிருந்து இயற்கை உரங்கள், உயிரியல் தொழில் நுட்பப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், சோத்துக் கத்தாழை, நெல் உமியிலிருந்து சோடியம் சிலிகேட், நிலக்கடலை ஓட்டிலிருந்து செல்லுலோஸ், மிளகாயிலிருந்து ஓலியோ ரெசின், ஜவ்வரிசியிலிருந்து இத்தைல் ஆல்கஹால் மற்றும் நீரகற்றப்பட்ட உயர்தரப் புரோட்டீன் ஆகிய புதுமையான முன்னோடித் தொழில் திட்டங்கள் இதுவரையில் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, இது போன்ற திட்டங்களை மேலும் ஊக்குவிக்கலாம். இது போல நீரகற்றப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள், மாம்பழச் சாறு, மல்லிகை வாசனை திரவம், வெள்ளரிப் பிஞ்சு பதப்படுத்துதல், முந்திரி பக்குவப்படுத்துதல், மூலிகை மருந்துகள் மற்றும் தென்னை நார் கழிவுப் பொருட்கள் முதலியன ஏற்றுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டவைகளில் முக்கியமான திட்டங்களாகும்.

மாநில ஒருங்கிணைப்புக்குழு ஒப்புதலளித் துள்ள 682 திட்டங்களுள் 214 திட்டங்களுக்கு நிதியுத்விக்கான விண்ணப்பங்கள் வங்கிகள்/நிதி நிறுவனங்கள் / தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பித்துள்ள 214 திட்டங்களுள், 120 திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடனுதவிக்காக ஒப்புதல் ஆணை வழங்கியுள்ளது. 34 திட்டங்கள் சொந்த முதலீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. செயலாக்கத்தில் உள்ள 154 திட்டங்களுள், 68 அலகுகள் மொத்தம் ரூ.46.21 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

2,593 மகளிர் உள்ளிட்ட சுமார் 3,442 ஊரக பகுதி மக்களுக்கு இந்த 68 அலகுகள் வேலை வாய்ப்பு அளித்துள்ளன.

உற்பத்தி துவங்கியுள்ள 68 அலகுகள் 20 மாவட்டங்களில் 54 வட்டாரங்களில் உள்ளன. அவை மலர்ச்சாறு எடுத்தல், முந்திரி பதப்படுத்தல், தேங்காய்த் தூள், பால் பொருட்கள், தேங்காய் ஓட்டுத் தூள், தென்னை நார் கயிறு கழிவுக்கட்டி, கயிறு நார், முறுக்கப்பட்ட கயிறு, பருப்பு ஆலை, நவீன அரிசி ஆலை, எண்ணெய் ஆலை, காளான் வளர்ப்பு, சவ்வரிசி ஆகிய தொழில் அலகுகள் ஆகும். கோயம்புத்தூரில் 8 வட்டாரங்கள், கடலூரில் 1 வட்டாரம், திண்டுக்கல்லில் 1 வட்டாரம், ஈரோட்டில் 7 வட்டாரங்கள், காஞ்சிபுரத்தில் 2 வட்டாரங்கள், கரூரில் 2 வட்டாரங்கள், மதுரையில் 3 வட்டாரங்கள், நாகர்கோவிலில் 4 வட்டாரங்கள், நாமக்கல்லில் 2 வட்டாரங்கள், நீலகிரியில் 1 வட்டாரம், புதுக்கோட்டையில் 5 வட்டாரங்கள், சேலத்தில் 1 வட்டாரம், சிவகங்கையில் 1 வட்டாரம், திருநெல்வேலியில் 5 வட்டாரங்கள், திருவள்ளூரில் 1 வட்டாரம்,

திருவண்ணாமலையில் 1 வட்டாரம், திருச்சியில் 3 வட்டாரங்கள், வேலூரில் 2 வட்டாரங்கள், விழுப்புரத்தில் 3 வட்டாரங்கள் மற்றும் விருதுநகரில் 1 வட்டாரத்திலும், இவ்வலகுகள் உற்பத்தியைத் துவக்கியுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொடங்கப்படும் தொழில்களுக்கு மானியம் வழங்குவதற்காக 2002 – 03 ஆம் ஆண்டில் ரூ.4.92 கோடியும் 2003 – 04 ஆம் ஆண்டில் ரூ.10 கோடியும் அரசு ஒதுக்கியுள்ளது. இந்த நிதி இதுவரை உற்பத்தியை தொடங்கியுள்ள 68 நிறுவனங்களுக்கும் இனிமேல் உற்பத்தியைத் தொடங்கும் 150 தொழில்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

இந்தப்புதிய பகுமை திட்டமானது ஊரகப்பகுதிகளின் மூலதனம், அறிவு, தொழில் நுட்பம் மற்றும் சந்தை இணைப்பு ஆகியவற்றை ஊக்குவித்து ஊரகப்



பகுதிகளில் சீரான வளர்ச்சிக்கும் கூடுதல் வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும். இத்திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளின் மனித வளம் உற்பத்தித் துறையுடன் இணைந்து செயல்பட வாய்ப்பாக அமைகிறது. விவசாய சமுதாயத்தினருக்குத் தங்களின் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் அதே சமயத்தில் விளை பொருளின் மதிப்பை கூட்டுவதற்கும் இத்திட்டம் உதவியாக உள்ளது. உலக வர்த்தகக் கொள்கையின் காரணமாக விவசாய வர்த்தகச் சந்தை ஆரம்பித்துள்ள நிலையில் சந்தை நிலவரங்கள், வர்த்தக தகவல்கள், அறுவடை மற்றும் பக்குவப்படுத்தும் தகவல்கள் போன்ற முன்னோடி தொடர்புகள் (Forward linkages) மிகவும் முக்கியமானதாகும். இதைப் போலவே, உயர் விளைச்சலுக்குரிய வேளாண் அறிவு, மாற்றுப் பண்ணை முறைகள், இயற்கை உரங்கள் பயன்படுத்துவது, விதை மற்றும் பண்ணைப் பொருட்கள், நவீன இயந்திர கருவிகள் உபயோகிக்க பின் தொடர்புகள் (Backward linkages) முன் கூட்டியே திட்டமிட வேண்டியுள்ளது. எனவே, இத்திட்டத்தை வேளாண்துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் வேளாண் விற்பனைத் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மேலும் ஒற்றைச் சாளர முறையில் கட்டட வரைபட ஒப்புதல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அனுமதி விரைவில் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 27 மாவட்டங்களில் நடைபெற்ற புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தகவல் பரப்புக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பற்றியும் அரசு வழங்கும் மானியங்கள் பற்றியும் விளக்கிக் கூறி இத்திட்டத்தில் தொழில் முனைவோர்கள் பங்கு கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்தில், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப் பட்ட தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்குள்ள சிரமங் களைக் கேட்டறிந்து, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் எடுத்து வருகின்றார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம் மிக நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

– ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தொழில் வணிகத்துறை, சென்னை – 5.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

❖ **உழைப்பு** ❖
❖ **தான் பெறும் ஊதியத்தின்** ❖
❖ **மதிப்பைவிடத் தனது** ❖
❖ **உழைப்பின் மதிப்பை** ❖
❖ **உயர்த்திக் காட்டும் மனிதனே** ❖
❖ **சமூகத்தில்** ❖
❖ **முன்னேற முடியும்.** ❖
❖ **- ஆபிரகாம் லிங்கன்** ❖

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு

தமிழக முதலமைச்சர் அவர்களின் அழைப்பையேற்று, லண்டன் பிரபு சுவராஜ்பால் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 1.1.2004 அன்று சந்தித்துப் பேசினார்.

முதலமைச்சர் அவர்களின் உறுதியான தலைமையின்கீழ் தமிழகம் ஒட்டுமொத்த வளர்ச்சி கண்டுள்ளது என்று முதலமைச்சர் அவர்களை சுவராஜ்பால் பாராட்டினார்.

அதே நேரத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரை மேம்படுத்துவதற்கு எடுத்துவரும் முயற்சிகளுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்த அவர், சென்னை மாநகரின் வளர்ச்சி கண்கூடாகத் தெரிவதாகவும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் குறிப்பாக, தமிழகம் மற்றும் இங்கிலாந்து தொழிற்துறைகளுக்கு இடையே நல்லுறவு ஏற்பட முழு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் அப்போது அவர் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் குறிப்பாக, சென்னையில் சர்வதேசத் தரத்திலான சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு பிரபு சுவராஜ்பாலின் ஒத்துழைப்பு வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அதற்கு பிரபு சுவராஜ்பால், சரியான தருணத்தில் சென்னை மாநகரில் பொழுதுபோக்கு தொழிற்சாலையை உருவாக்கித் தருவதற்கு, தம்மாலான அனைத்து முயற்சிகளையும் நிச்சயமாக செய்து தருவதாக உறுதி கூறினார்.

மேலும், சென்னை மாநகரில் அழகுக்கலை தொழிற்சாலையை உருவாக்குவதற்கு, தாம் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டைக் குறிப்பாக சென்னையைப் பன்னாட்டு உற்பத்தி மையமாக்கும் முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய புதிய முயற்சிகளுக்கு, தாம் முழு அளவில் ஒத்துழைப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி லட்சுமி பிராணேஷ், இ.ஆ.ப., மேம்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என்.நாராயணன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

*

இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடுமையான முயற்சிகளின் காரணமாக மலேசியாவிலிருந்து தமிழகம் மீண்டு வந்துள்ள திரு.சிவராமன் முரளிதரன், திரு. சுந்தரராஜு, திரு. கோபிநாதன் ஆகிய தமிழ் இளைஞர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 26-12-2003 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இருந்து வேலை தேடி மலேசியா சென்ற இளைஞர்கள் அங்குள்ள நிறுவனங்களால் ஏமாற்றப்பட்டு மிகவும் அவதிப்படும் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இது குறித்து 2-12-2003, 13-12-2003 ஆகிய நாள்களில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.வாஜ்பாய் மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா ஆகியோருக்கு கடிதம் மூலம் விவரத்தைத் தெரிவித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து இருந்தார்கள். அவர்களது பாஸ்போர்ட், விசா முதலிய ஆவணங்கள் முடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகத்தை அணுகிய போதிலும் அங்கு உதவி கிடைக்காத நிலையினையும் அந்தக் கடிதத்தில் விரிவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்து, இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து, மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு இதுகுறித்து கடந்த 18-12-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.யஷ்வந்த் சின்ஹா எழுதிய கடிதத்தின் மூலம் இவர்கள் அனைவரையும் மீட்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று உறுதி அளித்திருந்தார்.

இதன்படி, உரிய வேலைக்கான விசாவுடன் மலேசியா சென்றும் அங்குள்ள நிறுவனங்களால் ஏமாற்றப்பட்டு ஊதியமும் தங்குவதற்கு இடமும் கிடைக்காமல், உணவுக்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்த திரு.சிவராமன் முரளிதரன், திரு.சுந்தரராஜு, திரு.கோபிநாதன் ஆகியோர் 25-12-2003 அன்று சென்னை வந்து சேர்ந்தனர். மலேசியா நாட்டில் இருந்து தாங்கள் மீண்டும் தமிழகம் வருவதற்கு காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இந்த மூன்று தமிழ் இளைஞர்களும் நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று இளைஞர்கள் வேலையில்லாமல் அவதியுறும் நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற சில்லறை மது விற்பனைக் கடைகளில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளர்களாக பணியமர்த்த உத்தரவிட்டார்கள். இதன்மூலம் இவர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப, மாதந்தோறும் ரூ.1,500 முதல் ரூ.3,000 வரை ஊதியமாகக் கிடைக்கும். இது தவிர, ஊக்கத்தொகையும் கிடைக்கும்.

*

அனைவருக்கும் கல்வித் திட்டம் இலக்கை விஞ்சிச் சாதனை

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாடு முதல் நிலை மாநிலமாகத் திகழ வேண்டும் என்னும் இலட்சிய நோக்கோடு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கல்வித்துறையிலும் தனது தீவிர கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.7.2002 அன்று "அனைவருக்கும் கல்வி இயக்கம்" (Sarva Shiksha Abhiyan) என்னும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அப்போது அவர்கள் ஆற்றிய உரையில்,

"அனைவருக்கும் கல்வி இயக்கம்" திட்டம் மகத்தான ஒரு திட்டமாக மலர்ந்து, நறுமணம் வீசி, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மாணவச் செல்வங்களுக்கும் பெரும் பயனைத் தர இருக்கின்றது.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி –
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

– என்ற பாரதியார் வாக்கிற்கு ஏற்ப, ஏழை, எளிய மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்து மக்களுக்கும் தேவைப் படுகின்ற அனைத்து கல்வி வசதி களையும், செய்து தருவதில் உங்கள் அன்பு சகோதரியின் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

"அனைவருக்கும் கல்வி இயக்கம்" அத்தகைய சீரிய பணிகளில் முக்கிய மான ஒரு திட்டப் பணியாகும். இந்தப் பணியில் அனைத்துத் தரப்பு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், நன்முறையில் பங்கேற்று, இந்தத் திட்டத்தினை வெற்றி பெற செய்து, 2010–ஆம் ஆண்டில் பள்ளிக்குச் செல்லாத குழந்தை ஒன்று கூட தமிழ்நாட்டில் இல்லை என்று அனைவரும் போற்றத்தக்க நிலையை நாம் எய்த வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப "தமிழ்நாட்டில் உள்ள அனைவரையும் கல்வி கற்கச் செய்து, உலகமெல்லாம் தமிழ்மக்களின் பெருமை ஒங்கச் செய்யும் நோக்கத்துடன் 14 வயதுவரை உள்ள குழந்தைகள் அனைவரையும் குறைந்த பட்சமாக எட்டாம் வகுப்பு வரை கல்வி பெறச் செய்வதை விரைந்து நடைமுறைப் படுத்திட உறுதி கொண்டு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. அதனை அடிப் படையாகக் கொண்டே அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதில் தமிழகம் முதன்மை பெற்றிடவேண்டுமென்ற நோக்கத்துடன், அனைவருக்கும் கல்வி வழங்குவதில் மக்களை உட்படுத்தி மக்களே முன்னின்று நடத்தும் மாபெரும் மக்கள்



இயக்கமாக்கிச் செயல்படுத்துவதற்கான திட்ட நடவடிக்கைகளை அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் வாயிலாக தற்போது தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் மக்கள் திட்டமாகவும் வெளிப் படையானதாகவும் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

தமிழகத்திலுள்ள பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளும், குறிப்பாக சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் குழந்தைகள், பெண் குழந்தைகள், இயலாக் குழந்தைகளும் கல்வி பெறும் வகையில் பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குதல், ஆசிரியர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இலக்கை நோக்கிய இடைவிடாத பயணத்தில் கடந்த 2002 – 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது. 1,112 புதிய தொடக்கப்பள்ளிகளும், 1,075 புதிய நடுநிலைப் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. 4,172 புதிய ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 385 வட்டார வளமைய மேற் பார்வையாளர்களும், 2,695 வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர்களும் நியமிக்கப்பட்டனர். 3,930 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள், 40,891 கிராமக் கல்விக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.



இதுவரை இல்லாத ஒரு புதிய திருப்பமாக அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் அமைக்கப்படும் பள்ளிக் கட்டடங்களைக் கட்டும் பணியில் மக்களே பங்கெடுத்து கிராமக் கல்வி குழுவின் பங்கேற்புடன் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் கல்விப் பயிர் வளர மக்கள் சமுதாயமும், மகத்தான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது என்பது சிறப்பான ஒன்றாகும்.

168 வட்டார வளமையக் கட்டடங்கள், 474 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையக் கட்டடங்கள், 1,959 இரு வகுப்பறைக் கட்டடங்கள், 1,508 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள், 6,719 கழிப்பிட வசதிக் கட்டடங்கள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. 5,166 குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிறப்பான செயல் பாடுகளில் விரைந்த நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பயனாக, "அனைவருக்கும் கல்வித் திட்டம்'' தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள், 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் எளிதாகக் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2001–2002ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளி வசதி பெற்ற குடியிருப்புகளின் விழுக்காடு 97.1லிருந்து 2003–2004ஆம் ஆண்டில் 100 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதிகளை வழங்குவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்னும் பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

33,522 பள்ளிகளுக்கு பள்ளி மானியமும், 1 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ஆசிரியர் களுக்கு ஆசிரியர் மானியமும், 2,187 பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங் களுக்கு மானியமும், 33,522 பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

1 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 6, 7 மற்றும் 8ஆவது வகுப்புகளில் பயிலும் 15 இலட்சத்து 92 ஆயிரத்து 427 மாணவர்களுக்கு கணினிக்கல்வியும், 7 இலட்சத்து 26 ஆயிரத்து 268 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு வாழ்க்கைக்கு உகந்த தொழிற்கல்வியும் வழங்கப் படுகின்றது.

63,066 மாற்றுத்திறன் மிக்க குழந்தைகளுக்கு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட இயலாதோருக்கான இணைந்த கல்வித் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. மேலும் 8 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 13 வட்டாரங்களில் 11 பெண் கல்விச் சிறப்புத் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் பெண் கல்விச் சிறப்புத் திட்டத்தின் கீழ், 114 பள்ளித் தொகுப்பு முன்மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளது.

• • •

தமிழகத்தில் பெண்களுக்கென "மகளிர் தொழில் பூங்காக்கள்"

தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்வில் புதிய எழுச்சியை ஏற்படுத்தி, அவர்கள் சுயமாக தொழில் செய்து, தங்களை உயர்த்திக் கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது விரைந்த நடவடிக்கை மூலம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிட்கோ நிறுவனத்தின் மூலம் பெண் தொழில் முனைவோருக்கு 500 தொழிற்கூடங்களுக்கான மனைகள் ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சீரிய திட்டம் தமிழ்நாடு

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் வாழவந்தான் கோட்டை, சேலம் மாவட்டம் கருப்பூர் கிராமம், கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமம் மற்றும் மதுரை மாவட்டத்தில் தற்போது இப்பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் வாழவந்தான் கோட்டை

திருச்சிராப்பள்ளியில் 10–3–2003 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழவந்தான் கோட்டை மகளிர் தொழில்பூங்காவை தொடங்கிவைத்தார்கள். இங்கு சிட்கோவிடம் உள்ள 165.72 ஏக்கர் நிலத்தில் 51.7 ஏக்கர் நிலம் மகளிர் தொழில் பூங்காவிற்காக மேம்பாடு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூபாய் 180 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த தொழில்பேட்டையில் 10 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள 174 தொழில் மனைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இத்தொழில்பூங்காவிற்காக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் பிணை வைப்புத் தொகையுடன் பெறப்பட்டு ஒதுக்கீட்டு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன.

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில்

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், திரு முல்லை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள தொழில் பூங்காவை 4–7–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இங்கு 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழில் பூங்காவை நிறுவ நடவடிக்கை எடுத்து தமிழக அரசு புதிய அரசு அரசாணை எண் 243 வருவாய் (நி.மு.5(2)) துறை நாள் 19.07.2001இல் முதல் கட்டமாக 290.84 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு சிட்கோ நிறுவனத்திற்கு முன்னுழைவு செய்ய அனுமதி அளித்துள்ளது. இதில் இதுவரை 273.36 ஏக்கர் நிலத்தினை சிட்கோ கையகப்படுத்தியுள்ளது.

திருமுல்லைவாயில் தொழில்பேட்டையில் முதல் கட்டமாக 290.84 ஏக்கர் முழுவதும் பெண்களுக்கான தொழில் பூங்காவாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பெண் தொழில் முனைவோரின் ஆர்வம் குறித்து "கேட்பு ஆய்வு" செய்ததில், 5 சென்ட், 10 சென்ட், 15 சென்ட், 25 சென்ட், 50 சென்ட் மற்றும் 1 ஏக்கர் தொழில் மனைகளுக்கான விசாரணைகள் 492ம், 540 சதுர அடி, 990 சதுர அடி, 2,120 சதுர அடி தொழிற்

கூடங்களுக்கான விசாரணைகள் 142ம் இதுவரை பெறப்பட்டுள்ளது. இதுவரை 1,198 விண்ணப்பப் படிவங்கள் பெண் தொழில் முனைவோருக்கு விற்கப்பட்டு, 200 பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் பிணை வைப்புத் தொகையுடன் திரும்பப் பெறப்பட்டுள்ளன. 184 விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு தமிழக அரசின் நிருவாக ஒப்புதல் அரசு கடிதம் 30/SIC/2002 நாள் 19.6.2002இல் பெறப்பட்டுள்ளது. இதுவரை இந்தத் தொழில்பேட்டையில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்தல், வடிகால் வசதி அமைத்தல், சாலை விளக்குகள் அமைத்தல், சுற்றுவேலி அமைத்தல் ஆகியவை ரூபாய் 610 இலட்சம் மதிப்பீட்டில் முழுவீச்சில் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன. இதில், 5 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டு 1.5 இலட்சம் லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப் பட்டு முடிவு பெற்றுள்ளது. வடிகால் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சரளை மண் விரித்தல், மழைநீர் வடிகால் வேலைகள், RCC வடிகால் பலகைகள் தயாரித்தல் மற்றும் பதிக்கும் வேலைகளும் முடியும் தருவாயில் உள்ளன. தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து உள்ளன. இந்தத் தொழிற்பேட்டையில் 342 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒதுக்கீடு ஆணைகள் விண்ணப்பதாரர் களுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

சேலம் மாவட்டம் கருப்பூர் கிராமம்

சேலத்திலிருந்து10 கி.மீ. தூரத்தில் கருப்பூர் கிராமத்தில் பெரியார் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 51.7 ஏக்கர் நிலத்தில் "மகளிர் தொழில்பூங்கா" அமைக்க அரசு ஆணை 37/2002 நாள் 19/7/2002 மூலம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மேற்படி நிலத்தில் சிட்கோ நிறுவனத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவரும் முன் நுழைவு ஆணை வழங்கியுள்ளார். சேலம் கிளை மேலாளர் நிலத்தை எடுத்துக் கொண்டு பூர்வாங்கப் பணிகள் மேற் கொண்டுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 22.7.2002 அன்று இத்தொழிற் பேட்டைக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். ரூபாய் 213 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் செய்வதற்கு சிட்கோ குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. கேட்பு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இத்தொழிற் பேட்டையில் 5 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவிலான 159 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வளர்ச்சிப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதுவரை 105 விண்ணப்பங்கள் பிணை வைப்புத் தொகையுடன் பெறப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டம் பெருங்குடி, வலயங்குளம் மற்றும் வலயப்பட்டி கிராமங்களில் சுமார் 45.33 ஏக்கர் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு நிலமாற்று உத்தரவு வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களுக்குக் கேட்பு விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் நில நிருவாக ஆணையருக்குப் பரிந்துரை அனுப்பியுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமம்

இம்மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் 39.72 ஏக்கர் பட்டா நிலம் பெண்களுக்கான தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் அரசு கடித எண். (நிலை) 118 சிறு தொழில் (சிதொசி) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9 இல் நிருவாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்கானும் ஆணையின்படி கோவை மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களை நில எடுப்புப் பணி மேற்கொள்ளவும் தனியார் பேச்சு வார்த்தை மூலம் நிலத்தை கிரயம் செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.16043/ என்/2/2001 நாள் 24.12.2003இல் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

– பொது மேலாளர்,
தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்.

மகாமகத் திருவிழா – மகத்தான ஏற்பாடுகள்



திரு.எஸ். கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்

"திருக்கோயில்களின் இருப்பிடம்" என்கிற பெருமைக்குரிய திருநகரம் குடந்தை மாநகரமாகும். இலக்கியம் போற்றும் குடந்தை சோழர் கால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகக் கருதிப் போற்றப் படுகின்ற நிலை பெற்றுள்ளது. இங்கு பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் பக்திப் பெருவிழா – மகாமகத் திருவிழா.

வடமாநிலத்தில் நடைபெறும் கும்பமேளாவைப் போல இத்திருவிழா மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். இவ்விழாவையொட்டி நாடு முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து குடந்தை மகாமகக் குளத்தில் நீராடி வழிபடுவதிலிருந்தே இந்தத் திருவிழாவின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்திட முடியும்.

மகாமகத் திருவிழாவின் முக்கியத்துவத்தையும் – இத்திருவிழாவினையொட்டி திருக்குடந்தையில் சங்கமித்திடும் மக்கள் கடலையும் கருத்திற் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப தமிழ்நாடு அரசின் மூலம் மகத்தான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மகாமகம் திருவிழாவையொட்டி செயல்படுத்தப் படும் வளர்ச்சித் திட்டங்கள் – அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் – ஆலய திருப்பணிகள் – விழாவிற்கான பிற ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கண்காணிக்கவும் – பணிகளை விரைவுபடுத்தி உரிய காலத்தில் செய்து முடிக்கும் வகையிலும், விழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைந்திட வழிவகுக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில் – பல்வேறு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் உள்ளடங்கிய 23பேரைக் கொண்ட உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டு நிருவாக இயந்திரம் முழுமையாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

மகாமகம் குளத்தில் தூர் எடுத்து – ஒரு அடி உயரத்திற்கு மணல் பரப்பி – பின்னர் தண்ணீர் விட்டு பக்தர்கள் நீராடுவதற்கு வசதி செய்து தரவும் – மகாமகக் குளத்தின் படிக்கட்டுகளைச் சீர் செய்யவும், ஏர்கம்பரசர் மூலம் படிக்கட்டுகளின் இணைப்புகளைச் சுத்தம் செய்யவும் – மகாமகம் குளத்தில் உள்ள 20 புண்ணிய தீர்த்த வாரி ஊற்றுக் கிணறுகளை சீரமைக்கவும் மகாமகக் குளத்திற்கு தண்ணீர் விடுவதற்கு ஆதாரமான அரசலாற்றில் தூர் எடுக்கவும் வரத்து வாய்க்காலை சீர்செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் நிலையில் உள்ளன.

மக்கள் காவிரியாற்றில் புனித நீராடுவதற்கு வசதியாக ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகப் படிக்கட்டுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சக்கரா படித்துறைகளை சீரமைக்கும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பழவத்தான் கட்டளை வாய்க்கால் உள்ளூர் மற்றும் பெருமாண்டி வாய்க்கால் குடந்தை மாநகர எல்லைக்குள் செல்வதால் அவற்றை ரூ.23 இலட்சம் செலவில் தூர் வாரி செப்பனிடவும் மற்றும் சிறுபாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடந்தை பொற்றாமரைத் திருக்குளத்தை சீரமைக்கும் பணிகள் ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாமகத்திற்குள் 17சைவ மற்றும் வைணவ திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு செய்ய வேண்டும் என்பது ஆகம விதிகளில் ஒன்றாகும்.

அந்த வகையில் 9 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

மேலும் 8 திருக்கோயில்களுக்கும் மகாமகம் குளத்தை சுற்றியுள்ள ஆலயங்களுக்கும் திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மகாமகம் தொடர்புடைய 17 திருக்கோயில்கள் மற்றும் 16 சோடசலிங்க கோயில்கள் ஆகியவற்றிற்கான திருப்பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான செலவினம் மொத்தம் ரூ.1.50 கோடியாகும்.

மகாமகம் திருவிழாவையொட்டி புறவழிச்சாலை அமைத்தல், பல்வேறு சாலைகளை அகலப்படுத்தல் போன்ற பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

கும்பகோணம் புறவழிச்சாலைகள் 3 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ. 712.75 இலட்சம் மதிப்பிலும், மேலும் ஒரு புறவழிச்சாலை 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.645.40 இலட்சம் மதிப்பிலும் மற்றொரு புறவழிச்சாலை 2.76 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ.657.30 இலட்சம் மதிப்பிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

காவேரி மற்றும் அரசலாற்றில் குறுக்கே 3 பாலங்கள் ரூ.394 இலட்சம் மதிப்பிலும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநிலச் சாலைகளான திருவாரூர் – குடவாசல் கும்பகோணம் சாலை 6.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.57.60 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் – மன்னார்குடி அதிராம்பட்டினம் சாலை 2 கி.மீ. நீளத்திற்கு ரூ. 8 இலட்சம் மதிப்பிலும், கல்லணை – காவேரிப்பட்டினம் 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.30 இலட்சம் மதிப்பிலும், கல்லணை – காவேரிப்பட்டினம் சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் – சீர்காழிச்சாலை 3.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.32.40 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட உள்ளது. மாவட்ட சாலைகளான சுவாமிமலை இணைப்புச்சாலை 0.20 கி.மீ. நீளத்திற்கு 0.90 இலட்சத்திலும், கும்பகோணம் – கொள்ளிடக் கரைச்சாலை 1 கி.மீ. நீளத்திற்கு ரூ.5.30 இலட்சம் மதிப்பிலும் மேம்படுத்தப்பட உள்ளது.

இதர மாவட்டச் சாலைகள் 39.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட உள்ளது. இதர மாவட்டச் சாலைகளில் புளியஞ்சேரி – குடிதாங்கிச் சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.38.50 இலட்சம் மதிப்பிலும், காடச்சம்பாடி சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும் கலம்பரம்சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும் கலம்பரம்சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.50 இலட்சம் மதிப்பிலும், மருதாநல்லூர் – அன்னல்கரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.17.20 இலட்சம் செலவிலும், சுந்தரப்பெருமாள் கோவில் – மருதாநல்லூர் சாலை 4.80 கி.மீ. நீளத்திற்கு ரூ.31.20 இலட்சம் மதிப்பிலும் சுவாமிமலை இரயில்வே ஸ்டேசன் ரோடு – பட்டீஸ்வரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.11.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் கோயிலாச்சேரி சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் – கோவிலாச்சேரி சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு 8.50 இலட்சம் மதிப்பிலும், தேப்பெருமா நல்லூர் சாலை 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பிலும், திருநாகேஸ்வரம் – திருநாரையூர் சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.30.90 இலட்சம் மதிப்பிலும் சாலைப்பணிகள் நடைபெறுகிறது.

அனைத்து சாலை மேம்பாட்டுப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுவருகின்றன.

மகாமகத்தையொட்டி, குடந்தை மாநகரம் பெறுகின்ற மகத்தான கட்டமைப்பு வசதி கும்பகோணத்திற்கும் தஞ்சாவூருக்கும் இடையே நடைபெறும் அகல இரயில்பாதை அமைக்கும் பணியாகும். ரூ.73 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் இப்பணி, துரிதமாக நடைப்பெற்று வருகின்றது.

மகாமகத்தையொட்டி குடந்தை மேம்பாலத்திற்கு அருகாமையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கலையரங்கம் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

மகாமகம் திருவிழாவை செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெற மக்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்துதர அரசு ஆணை பிறப்பித்து – அரசின் பல்வேறு துறைகளும் முடுக்கிவிடப் பட்டு போர்க்கால அடிப்படையில் பணிகளை செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியின் மூலம் ரூ.162.30 இலட்சம் மதிப்பீட்டில் 18 குடிநீர் அபிவிருத்தி பணிகளும், ரூ.51.92 இலட்சம் செலவில் வடிகால் சிறுபாலம் கட்டுவதற்காக 15 பணிகளும் ரூ.160.10 இலட்சம் செலவில் சாலை பணிகளும், நகராட்சி பள்ளிக் கட்டிட பராமரிப்புக்காக 35 பணிகள் ரூ.66.45 இலட்சம் செலவிலும் புதிய கழிவறைகள் அமைத்தல் மற்றும் கழிவறை பராமரிப்புக்காக 65 பணிகள் ரூ.117.90 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகாமகம் திருவிழாவினையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் பொதுமக்களுக்கு வசதியாக திருச்சி, திண்டுக்கல், சேலம், கோவை, வேலூர், ஈரோடு, புதுக்கோட்டை, காரைக்குடி, விழுப்புரம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 2,000த்திற்கு மேற்பட்ட பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கும்பகோணம் நகரில் பொதுமக்களின் வசதிக்காக 9 இடங்களில் தற்காலிகப் பேருந்து நிலையங்களை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. மகாமகம் திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் பணிகளை மேற்கொண்டுள்ள காவல்துறை மற்றும் பல்வேறு துறைகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகாமகம் திருவிழா பாதுகாப்புப் பணியில் 22,000க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியமர்த்தப்பட வுள்ளார்கள்.

இந்தப் பாதுகாப்புப் பணிகளை முறைப்படுத்த ஐந்து காவல்துறை கண்காணிப்பாளர்கள் மூன்று கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 8 துணை காவல்துறை கண்காணிப்பாளர்கள், 13 ஆய்வாளர்கள் உட்பட 29 காவல்துறை அதிகாரிகளை சிறப்பு அதிகாரிகளாக நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஏற்கெனவே குடந்தை நகரில் காவல்துறை துணைகண்காணிப்பாளர், ஆய்வாளர், சார் ஆய்வாளர்களாகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர், நெல்லை, தூத்துக்குடி, மதுரை, புதுக்கோட்டை, கரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து காவலர்கள் வரவழைக்கப்பட்டு இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இத்தகைய பாதுகாப்புப் பணிக்கு வரும் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் தங்குவதற்காக 136 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தேவையான அடிப்படை வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாமகப் பணிகள் பாதுகாப்பு உட்பட பல்வேறு பணிகள் குறித்து திட்டங்களை கணினி மூலம் தயாரிக்க குடந்தை நகர கிழக்கு காவல்நிலையத்தில் தனி அலுவலகம் அமைக்கப்பட்டு அதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி மொத்தம் ரூ.2.63 கோடியில் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது. இவ்விழாவினையொட்டி 100 படுக்கைகள் கொண்ட தற்காலிக மருத்துவமனை அமைத்திட வகை செய்யப் பட்டுள்ளது.

600 மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் மருத்துவமனையில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 24 மணிநேரமும் இவர்கள் பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 250 அவசர கால மருத்துவ ஊர்திகள் (ஆம்புலன்ஸ்) தயார்நிலையில் வைக்கப்படவுள்ளது.

பொதுமக்களின் சுகாதார வசதியை கருத்தில் கொண்டு 500 இடங்களில் கழிவறை வசதி செய்து தரப்படவுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி அமைக்கப் படவுள்ள 9 தற்காலிகப் பேருந்து நிலையங்களில் மருத்துவ உதவி மையங்களும், மகாமகம் குளத்தை சுற்றி 13 உதவி மையங்களும் அமைக்கப்படும்.

மருத்துவத் துறைக்கு சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தஞ்சை, திருச்சி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவக் குழுக்களைத் தயார் நிலையில் வைத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவக் குழுவில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இடம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி வருகைத்தரும் இலட்சக்கணக்கான மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நியாயமான விலையில் தரமான உணவுப் பொருட்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடந்தை மாநகரில் உள்ள பல்வேறு உணவகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உணவு

தயாரிக்கும் இடம், சூழல் ஆகியவை பரிசோதிக்கப்பட்டு மேற்பார்வையிடப் பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்பின் உரிமை பெற்றவர்கள் மட்டுமே உணவு மற்றும் தேநீர் நிறுவனங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் நகரத்தில் உள்ள அனைத்து உணவகத்தின் உரிமையாளர்களும் நகரரட்சியில் உரிய உரிமம் பெறுமாறும் உணவுப் பொருட்களைத் தரமாகவும், சுகாதார முறையிலும் தயாரிக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

குடந்தை நகரிலும் குடந்தையைச் சுற்றியுள்ள கும்பகோணம் திருவிடைமருதூர், திக்குனந்தார், பாபநாசம், அம்மாபேட்டை, வலங்கைமான் ஊராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் பழுதுகள் ஏற்பட்டால் உடன் சீர் செய்ய ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் உடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் நாள்தோறும் குளோரினேசன் செய்திட ஊராட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கும்பகோணத்தில் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் மார்ச் மாதம் 15ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு சிறப்பான பொருட்காட்சி நடத்தப்படவுள்ளது. மகாமகம் திருவிழாவையொட்டி திருவிழா நடைபெறும் தருணத்தில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த சுமார் 2 கோடியே 19 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 60 மின்மாற்றிகளை (டிரான்ஸ் பார்மர்) திட்டமிட்டு இதுவரை 42 டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளைத் துரிதமாக முடிக்கவும், சாக்கோட்டை தாராசுரம் திருநாகேசுவரம் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்களில் கூடுதலாக டிரான்ஸ் பார்மர்களை நிறுவவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடந்தை நகர மக்கள் பயன்பெறும் வகையில் 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை மகாமகம் திருவிழாவிற்கு முன்னர் முடிக்கும் வகையில் நிருவாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

குடந்தை மாநகரில் குவிந்திடும் குப்பைகளை அப்புறப்படுத்தி நகரின் தூய்மையைக் காத்திட 70 ஊர்திகளும் 400க்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு ஊழியர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பூக்கின்ற குறிஞ்சி மலர் புகழ்மிக்கதாகும். அதைப்போன்று பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை குடந்தை மாநகரில் சீருடன் சிறப்புடன் நிகழும் மகாமகம் திருவிழா உலக மக்களின் கவனத்தை ஈர்த்து உள்ளத்தை மகிழ்விக்கும் பெரு விழாவாகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து ஏற்பாடுகளும் சீருடனும் செம்மையாகவும் செயல்படுத்தப்படுகின்றது.

அனைவருக்கும் ஊட்டச்சத்துக் கல்வி

நோக்கம்

தமிழகத்தை ஊட்டச்சத்துப் பற்றாக் குறையில்லாத மாநிலமாக்க மக்களிடையே நல்ல உணவுப் பழக்க வழக்கத்தைக் கொண்டு வரும் வகையில் ஊட்டச்சத்துக் குறித்து விழிப்புணர்வை உருவாக்குதல்.

ஊட்டச்சத்து நிலை மேம்பாடடைய மக்களிடையே ஊட்டச்சத்துக் கல்வியின் அவசியத்தை உணரச் செய்தல்.

உத்திகள்

மக்களின், குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆட்படுவோரின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் உத்தியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

- பல்வேறு திட்ட மேலாளர் களிடையே ஊட்டச்சத்துக் குறித்து ஆதரவு மனப்பான்மையைத் திரட்டுதல்.
- மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குதல்.
- பல்வேறு நிலைப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.

பங்கேற்பாளர்கள்

மாநில மற்றும் மத்திய அரசின் மனிதவள மேம்பாடு, சுகாதாரம், ஊரக வளர்ச்சி மற்றும் கள விளம்பரத் துறைகள்.

மனையியல் கல்லூரிகளின் ஊட்டச்சத்து வல்லுநர்கள்.

மருத்துவக் கல்லூரிகளின் நோய்த் தடுப்பு மற்றும் குழந்தை சிகிச்சைப் பிரிவு பேராசிரியர்கள்.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் சார்ந்த தேசிய அளவிலான நிறுவனங்கள்.

பன்னாட்டுச் சேவை அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

பிறந்த குழந்தையின் ஊட்டச்சத்துக்கான கல்வி

- **குழந்தை பிறந்த உடனே தாய்ப்பாலூட்டுதல்**

தாய்ப்பால் நன்கு சுரக்க சீம்பால் ஊட்டவும். நோய் எதிர்ப்பு சக்தியும் உயிர்ச்சத்தும் நிறைந்தது சீம்பால். சாதாரண பிரசவங்களில் அரைமணி நேரத்திற்குள்ளாகவும் அறுவை சிகிச்சை பிரசவங்களில் 4 இல் இருந்து 6 மணி நேரத்திற்குள்ளாகவும் தாய்ப் பாலூட்டத் தொடங்க வேண்டும்.

- **6 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே ஊட்டுதல்**

வயிற்றுப் போக்கு, சுவாச மண்டல நோய் போன்ற தொற்றுகளைத் தவிர்ப்பதற்கு தாய்ப்பால் அவசியம். இதனால் சிசு மரணம் குறையும்.

- **2 வயது வரை தாய்ப்பாலைத் தொடர்ந்து கொடுத்தல்**

தரமான புரதம், உயிர்ச்சத்து, "ஏ" போன்ற தாய்ப்பாலின் அனைத்து நன்மைகளும் தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம்

குழந்தைக்கு 2 வயது மற்றும் அதற்கு மேலும் கிடைக்கிறது.

6 மாதத்தில் துணை உணவைத் துவக்குதல்

- வளரும் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களைப் பெற 6ஆவது மாதத்திலிருந்து துணை உணவு தேவை.
- வறுத்து அரைத்த ஏதேனும் ஒரு தானியத்தின் மாவுடன் வெந்நீர் மற்றும் சர்க்கரை கலந்த உணவே குழந்தையின் முதல் துணை உணவு. 6 மாத வயது பூர்த்தியான அடுத்த நாளே இத் துணை உணவை ஊட்ட ஆரம்பிக்க வேண்டும். சமுதாயத்திலும் அங்கன்வாடி மையங்களிலும் இதை ஒரு விழாவாகவே நடத்தலாம்.
- மற்ற சத்துக்களுடன் இரும்புச்சத்து, உயிர்ச்சத்து "ஏ" போலிக் அமிலம் போன்றவையும் நிறைந்துள்ள பச்சைக் காய்கறிகள் குழந்தைக்கு மிகவும் அவசியம். அவித்து நன்கு மசித்த கீரை, காய்கறிகளை வாரத்தில் 3 முதல் 5 நாள்களாவது ஊட்ட வேண்டும்.
- மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை மசித்து ஊட்டுதல் வேண்டும்.
- வறுத்து அரைத்த தானியம் மற்றும் பருப்பு மாவு கலந்து தயாரித்த சத்து மாவினை வெந்நீர் அல்லது பால் கலந்து தேவையானபோதெல்லாம் ஊட்டலாம். இந்த மாவினை சுகாதார முறையில் தயாரித்து ஒரு மாத காலம் வரை இருப்பில் வைக்க முடியும்.
- குழந்தை தனது வளர்ச்சி வேகத்துக்கு ஈடுகட்டும் வகையில் அதிக உணவை உண்ண இயலாது. ஆகவே குழந்தை உண்ணும் சிறிய அளவிலான உணவைச் செறிவூட்டும் வகையில் ஒரு தேக்கரண்டி எண்ணெய், சர்க்கரை போன்றவற்றை அவ்வுணவில் சேர்த்து ஊட்ட வேண்டும். போதுமான துணை உணவு குழந்தைக்குக் கிடைப்பதை உறுதி செய்தல் மூலம் 6 மாதம் முதல் 2 வயது வரை ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக் குறையைத் தவிர்க்கலாம்.

வளர்ச்சியைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்

முறையாக மாதாமாதம் எடை எடுத்து எடை அட்டையில் குறித்தல் மூலமே குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணித்து மேம்படுத்த முடியும்.

தன் சுத்தம்

உணவைத் தயாரிக்கும் போதும் குழந்தைக்கு உணவூட்டும் போதும் தன்சுத்தம் பேணுதல் அவசியம். இதன்மூலம் நோய்தொற்றைத் தவிர்க்கலாம்.

குழந்தை உடல் நலமில்லாத போது உணவூட்டல்

நோயுறும் போது குழந்தை அதிக சக்தி இழப்புக்கு ஆளாகும். இழப்பை ஈடுசெய்யும் வகையில் தொடர்ந்து உணவூட்டுதல் அவசியம்.

பள்ளிக்குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- பள்ளி செல்லும் குழந்தைகளின் வளர்ச்சி வேகம் தொடர்ந்து அதிகரிக்கிறது.
- வளர்ச்சி வேகத்துக்கு வேண்டிய சத்துக்களின் தேவை அதிகரிப்பதுடன் கல்வியில் கவனம் செலுத்தும் வகையில் உழைக்கவும் அதிக சக்தி தேவை.
- அவர்களது உடல் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் கூடுதல் கல்வி கற்கும் திறன் அதிகரிக்கவும் ஊட்டச்சத்து அத்தியாவசியமானது.
- பள்ளி செல்லும் குழந்தைகளின் கூடுதல் ஊட்டச்சத்துத் தேவையைப் புறக்கணிக்கும் பட்சத்தில் அது அவர்களது மனதை ஒருமைப்படுத்தும் திறனைப் பாதிப்பதுடன் பள்ளி செல்வதன் முழுப்பயனும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.
- பள்ளிக் குழந்தைகள் வீட்டிலிருந்து எடுத்துவரும் மதிய உணவானது பொதுவாக அளவும் சத்தும் போதுமானதாக இல்லை.
- பள்ளிக் குழந்தைகளின் உணவில் சக்தி, புரதம், உயிர்ச்சத்து "ஏ" இரும்புச்சத்து போன்ற அனைத்தும் குறைவாய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் உணவு கொடுக்க வேண்டும்.

வளர் இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்துக் கல்வி

தினசரி உட்கொள்ளும் உணவு வேளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், வறுத்த நிலக்கடலையுடன் நாட்டுச் சர்க்கரை, கொழுக்கட்டை, அவித்த சுண்டல், பழ வகைகள் போன்றவற்றை உணவுக்கு இடையே உட்கொள்ளச் செய்வதன் மூலம் பள்ளிப்பருவ மற்றும் வளர் இளம் பருவத்தினர் ஊட்டச்சத்துப் பெறுதலை அதிகரிக்கச் செய்யலாம்.

- வளர் இளம் பருவம் வாழ்க்கையின் மிக முக்கியப் பகுதியாகும். ஏனெனில் இப்பருவத்தில் தான் மனித வாழ்க்கையின் இரண்டாவதும் இறுதியானதுமான அதிவேக வளர்ச்சி நடைபெறுகிறது.
- குழந்தைப் பருவத்தில் ஏதேனும் ஊட்டச்சத்துக் குறைபாடு இருந்திருந்தால்கூட வளர் இளம் பருவத்தில் நிறைவு செய்ய அதிக வாய்ப்புகள் உள்ளன.

- வளர் இளம் பெண்கள் சராசரியாக உட்கொள்ளும் உணவில் கலோரி (சக்தி) பரிந்துரை செய்யப்படும் அளவைக் காட்டிலும் மிகக் குறைவாகவே உள்ளது.
- பெண் குழந்தைகளுக்குத் தேவையான அளவில் ஊட்டச் சத்துணவு, வளர் இளம் பெண்களுக்கு இரும்புச்சத்து மற்றும் கூடுதல் ஊட்டச் சத்துணவு கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- வளர் இளம் பெண்களுக்கு குடும்ப வாழ்க்கைக் கல்வி, திறன் வளர் பயிற்சி, தாய்சேய் நலப்பயிற்சி, காய்கனி பதப் படுத்துதல் குறித்த பயிற்சியளித்தல் மூலமாகவே பரம்பரை பரம்பரையாக சுழன்று வரும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை வேரறுக்க முடியும்.
- பெண் கல்வியின் அவசியம், 19 வயதிற்குள்ளாகப் பெண் திருமணம் தவிர்த்தல் ஆகியவை குறித்து பெற்றோருக்கும் வளர் இளம் பெண்களுக்கும் ஆலோசனை வழங்குதலுடன் 21 வயது வரை முதல் கர்ப்பத்தைத் தவிர்ப்பதன் அவசியம் குறித்தும் கல்வியளித்தல்.

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- உண்ணும் உணவின் அளவை அதிகரித்தல் அவசியம்.
- அதிக அளவில் இரும்புச் சத்துக் கொண்ட முழு பருப்பு மற்றும் பயறு வகைகள், முளைக்கட்டிய தானியங்கள், கீரை வகைகள், சர்க்கரை, பேரீச்சம்பழம் போன்றவற்றை தினசரி உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- கர்ப்பகால ஆரம்பநிலையில் அதிக அளவு ஃபோலிக் அமிலம் தேவைப்படுவதால் அது நிறைந்துள்ள கீரை வகைகளை கர்ப்பகால ஆரம்பத்திலிருந்தே தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- தினசரி ஏதாவது ஒரு பழம் உட்கொள்ள வேண்டும்.
- பால்,தயிர், மோர், முட்டை, மீன் மாமிசம் போன்றவற்றை உணவில் சேர்த்தல் நல்லது.
- கருவிலுள்ள குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு அயோடின் சத்து அதிகம்



தேவைப்படுவதால் கர்ப்பிணிப் பெண் தன் உணவில் அயோடின் கலந்த உப்பையே பயன்படுத்த வேண்டும்.

- அதிக அளவில் தண்ணீர் மற்றும் திரவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- குறைவான அளவில், உணவை அதிக தடவைகள் சாப்பிட வேண்டும்.

பாலூட்டும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- தாய் கர்ப்ப காலத்தில் சாப்பிட்ட அளவைவிட, கூடுதலாகச் சாப்பிட வேண்டும்.
- பிறந்த குழந்தைக்குத் தேவையான தாய்ப்பால் சுரக்க தாய்க்கு தினமும் 550 கலோரி கூடுதல் சக்தி தேவைப்படுகிறது.
- உள்ளூரில் கிடைக்கும் விலை குறைந்த சத்தான பொருட்களைக் கொண்டு உணவு தயாரிக்கலாம்.
- குடும்ப நபர்களின் அன்பான அணுகுமுறை தாய், சேய் இருவரின் ஆரோக்கியத்திற்கும் பெரிதும் உதவிகரமாக அமையும்.
- அன்றாட உணவில் அதிக அளவில் தானியம் மற்றும் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- அன்றாடம் காய்கறி உணவுடன் ஏதாவதொரு பழத்தை உட்கொள்ளவேண்டும்.
- பால், மோர் மற்றும் திரவ உணவுகளுடன் போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.
- முட்டை, மீன், இறைச்சி போன்றவற்றையும் உண்ணலாம்.
- மிகுந்த சக்தி நிறைந்த உணவுகளான நெய், எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆகியவை பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவை.
- வீட்டிலேயே தயாரித்த பொரி விளங்காய் உருண்டை மிகவும் நல்லது.

ஓய்வு

- மிதமான ஓய்வும் மன அமைதியும் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவை.
- நல்ல மனநிறைவுடன் பதற்றமின்றி தாய் பாலூட்டுவதால் பால் சுரப்பு அதிகமாகும்.

இரும்புச் சத்து மாத்திரை

- தாய்ப் பாலூட்டும் காலத்தில், முதல் ஆறு மாதங்களுக்கு தினமும் இரும்புச் சத்து மாத்திரை உட்கொள்ள வேண்டும்.

தாய்ப்பாலூட்டல்

- பிறந்த உடன் குழந்தைக்கு, சீம்பால் தர வேண்டும். தாய், குழந்தைக்கு பாலூட்டுவதால், அதிக இரத்தப் போக்கு மற்றும் இரத்தச் சோகை போன்றவற்றைத் தவிர்க்கலாம்.
- குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே முதல் உணவு.
- தாய்ப்பால் மட்டுமே ஊட்டுவதால் தாயின் நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்கும். தாய் அடுத்து கர்ப்பம் தரிப்பது தள்ளிப் போகும். மேலும் நீரிழிவு நோய் உள்ள தாய்க்கு இன்சுலின் தேவை குறையும்.
- தாய்ப்பால் ஊட்டும் தாய்க்கு, மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் எலும்பு முறிவு நோய்கள் வராமல் தடுத்து பாதுகாப்பை அளிக்கிறது.

வயதானோர்க்கு ஏற்படும் உணவு தொடர்பான வியாதிகளைத் தவிர்க்க ஆரோக்கிய உணவுக் கல்வி

- முழுமையாகத் தீட்டப்பட்ட தானியங்கள் அதிக சத்து நிறைந்தவை.
- இரும்புச் சத்து, உயிர்சத்து "ஏ" ஃபோலிக் அமில குறைபாடுகளைத் தவிர்க்க அந்தந்த பருவ காலங்களில் விளையும் காய்கறிகளையும் தினசரி ஏதாவது ஒரு பழத்தையும் உண்ண வேண்டும்.
- பச்சைக் கீரை, காய்கறிகளும், பழங்களும் உயிர்ச்சத்துக்கள், தாது உப்புக்கள், நார்ச்சத்து ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளன. குழந்தை முதல் அனைத்து வயதினருக்கும் இவை அத்தியாவசியமாகும்.
- அங்கன்வாடி மையத்தில் வீட்டைச் சுற்றி, பள்ளி வளாகத்தில் வீட்டுத் தோட்டம் மற்றும் சமுதாய ஊட்டச்சத்துத் தோட்டம் அமைப்பதன் மூலம் காய்கறிகளையும், பழங்களையும் அதிகம் உற்பத்தி செய்யலாம்.
- மிதமான அளவில் பருப்பு வகைகள், கொட்டை வகைகள், பால் பொருட்கள், உடல் கட்டமைப்புக்கு உதவும் கொழுப்புப் பொருட்கள், நெய், சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய் ஆகியவையும் ஆரோக்கியத்திற்கு உகந்தவை.
- தொற்றுநோய், உடலில் ஊட்டச்சத்து இழப்புக்கு வழிவகுக்கும். தன் சுத்தம் மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்து சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்துக் கொள்வதன் மூலம் தொற்றுநோய்கள் வராமல் தவிர்க்கலாம்.

60 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- முட்டை, மாமிசம், பால் ஆகியவை குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நல்லது. ஆயினும் வயது வந்தவர்களும், முதியோர்களும் மிதமான அளவில் சாப்பிடலாம்.
- காய்கறிகளும் தினசரி ஒரு பழமும் உட்கொள்வதன் மூலம் இரும்புச்சத்து, உயிர்ச் சத்துக்கள் "ஏ" மற்றும் "சி" ஃபோலிக் அமிலக் குறை பாடுகளைத் தவிர்க்கலாம்.
- காய்கறி, கீரைகள் மற்றும் பழங்களும் உயிர்ச்சத்து மற்றும் தாது உப்புக்கள் நிறைந்தவை.
- எண்ணெய், நெய், வெண்ணெய், சர்க்கரை ஆகியவை குழந்தைகளுக்கும் கடின உழைப்பாளிகளுக்கும் மிக முக்கியம். ஆனால் வயதானோர் இந்தப் பொருள்களை உட்கொள்வதில் கட்டுப்பாடு தேவை.
- நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய் தவிர புற்றுநோய் கூட வராமல் தடுக்க நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும்.
- அதிக உடல் பருமன் என்பது ஒரு மனிதனுக்கு நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய சம்பந்தமான மற்றும் மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்பட வழிவகுக்கும்.
- முதியவர்களுக்கு குறைந்த அளவிலான உணவு அதிக தடவை தேவைப்படுகிறது. வயதான காலத்தில் ஆரோக்கியமாய்த் திகழ பால், பால்சார்ந்த பொருள்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவை அவசியமாகும். ஆனால் கொழுப்புச் சத்து நிறைந்த பொரித்த, மசாலா கலந்த உணவுப் பொருள்களைத் தவிர்த்தல் வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர்
உலக வங்கி உதவிபெறும்
ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள்
(தொடர்புப் பிரிவு)
தரமணி, சென்னை – 600 113.

* * *

ஊனமுற்றோருக்கான அரசு சலுகைகள்

உடலில் ஊனம் இருந்தாலும், உள்ளத்தில் ஊனமின்றி உழைத்து தம் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டவர்கள் எத்தனையோ பேர். ஊனமுற்ற வர்களுக்கு அரசும் தன்னார்வத் தொண்டு நிறுவனங் களும் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றன. ஊனமுற்றவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் அளிக்கும் சலுகைகள் பற்றிய ஒரு பார்வை :–

யார், யாருக்கு சலுகைகள்?

பார்வையற்றோர் (முழுமையாகவும் குறைந்த அளவிலும் பார்வையற்றவர்கள்), காது கேளாதோர் (காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர், காது கேளாதோர்), கை, கால் ஊனமுற்றோர் (போலியோவால் பாதிக்கப்பட்டவர், விபத்தினால் உறுப்புகளை இழந்தோர், 3 அடிக்கு குறைவான உயரம் உள்ளவர்கள், மூளை வாதத்தால் பாதிக்கப்பட்டோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு உறுப்புகளை இழந்தோர்) மனநலம் குன்றியவர்கள் என பல்வேறு பிரிவுகளாக ஊனமுற்றோர் பிரிக்கப்படுகின்றனர். இவர்களில் 40 சதவிகித ஊனத்துக்கு மேல் உள்ளவர்கள் சலுகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

சென்னை அண்ணா நகரில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவல கத்தில், சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த ஊனமுற்றவர்களும் பதிவு செய்து கொள்ளலாம்.

அதுபோல, பெரம்பலூர், திருவாரூர், தருமபுரி, நாமக்கல், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக் கோட்டை, தேனி, கரூர் ஆகிய 15 மாவட்டங்களைச் சேர்ந்த பார்வை யற்றவர்கள், காது கேளாதோர் ஆகியோரும் சென்னை அலுவல கத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை, சேலம், நீலகிரி, வேலூர், கடலூர், நாகர்கோவில் ஆகிய 13 மாவட்டங்களைச் சேர்ந்தோர் தொடர்புடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள சிறப்புப் பிரிவுகளில் பதிவு செய்யலாம்.

சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பின்வரும் பயன்களைப் பெறலாம் :-

- ✶ கல்வித் தகுதியைப் பதிவு செய்து கொள்ளலாம்.
- ✶ தொழில் நுட்பம் தொடர்பான ஆலோசனைகளைப் பெறலாம்.
- ✶ மத்திய, மாநில அரசுத் துறைகளில் வழங்கப்படும் 3 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கான பரிந்துரை களைப் பெறலாம்.
- ✶ தனியார்த் துறை வேலைவாய்ப்புகளுக்கும் பரிந்துரை பெறலாம்.

* தொண்டு நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் தொழிற் பயிற்சிகள் மற்றும் இதர உதவிகள் பெற ஆலோசனை பெறலாம்.

* சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மானியத்துடன் கூடிய கடன் பெற உதவி கோரலாம்.

* ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகம் மூலம் அளிக்கப்படும் அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறவும் ஆலோசனை பெறலாம்.

அரசு வழங்கும் சலுகைகள்

கல்வி

* கல்வி நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீடு.

* கல்விச் சேர்க்கையில் 5 ஆண்டுகள் வயது வரம்புச் சலுகை.

* கல்வி உதவித் தொகை.

* அரசு சிறப்புப் பள்ளிகள் மூலம் உணவு விடுதியுடன் கூடிய இலவசக் கல்வி.

* பார்வையற்றோருக்கு அரசுத்தேர்வுக் கட்டணத்தில் சலுகையுடன் இலவசப் பிரெய்லி புத்தகம் மற்றும் உதவியாளர்கள் உதவியுடன் தேர்வு எழுத வசதி.

வேலைவாய்ப்பு

* மத்திய, மாநில அரசுப் பணிகளில் 3 சதவிகித இட ஒதுக்கீடு.

* அரசுப் பணிகளுக்கான வயது வரம்பில் 10 ஆண்டுகள் வரை சலுகை.

* உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு அரசுப் பணிக் காலியிடங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் பரிந்துரை.

* வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரைக்கப்படும்போது 25 சதவிகித மனுதாரர்கள் பரிந்துரை.

* பார்வையற்ற, காதுகேளாத, மனவளர்ச்சி குன்றியவர்களுக்குப் பதிவு புதுப்பித்தலில் இருந்து விலக்கு.

* ஆசிரியர் பணியிடங்களில் பார்வையற்றவர் களுக்கு 2 சதவிகித இடஒதுக்கீடு. அதுபோல ஆசிரியர் அல்லாத பணிகளுக்கு காது கேளாதோருக்கு 2 சதவிகித ஒதுக்கீடு.

பார்வையற்றோருக்கு நிவாரணம்

* பார்வையற்ற வேலை வாய்ப்பு இல்லாதோருக்கு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, ஓராண்டுக்கு மேல் காத்திருப்போர் இதற்குத் தகுதியுடையவராவர். கல்வித் தகுதிக்கு ஏற்ப 5 ஆண்டுகள் வரை நிவாரணத்தொகை அளிக்கப்படும்.

* 10–ஆம் வகுப்பு முடித்தவர்களும் மாதம் ரூ.200/–ம், பிளஸ் டூ முடித்தவர்களுக்கு மாதம் ரூ.250ம் பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300ம் அளிக்கப் படுகிறது. இத்தொகை பெற வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 40 தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு 45. இத்தொகையைப் பெற, பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகலாம்.

மறுவாழ்வு அலுவலகங்கள் அளிக்கும் சலுகைகள்

* ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை பெறலாம்.

* மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், தோள்தாங்கி ஆகிய உபகரணங்களை இலவசமாகப் பெறலாம்.

* காதுகேளாதோர் காது ஒலிக்கருவி பெறலாம்.

* பார்வையற்றோர் எனில் கறுப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல், பிரெய்லி கைக்கடிகாரம் ஆகியவை பெறலாம்.

கல்வி உதவித்தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை படிப்போருக்கு ரூ.250 வழங்கப்படும். ஆறாம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு ரூ.750ம், 9–ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிப்போருக்கு ரூ.1,100 அளிக்கப்படும். பட்டப் படிப்புக்கு ரூ.1,500–ம் முதுநிலைப் படிப்புக்கு ரூ.1,950ம் பெறலாம்.

இலவசப் பேருந்துப் பயணச் சலுகை

* அரசுப் பேருந்துகளில் பார்வையற்றவர்கள் 100 கிலோ மீட்டர் வரை இலவசமாகப் பயணம் செய்ய சலுகை.

* மனநலம் குன்றியவர்கள் பாதுகாவலருடன் இலவசமாக பயணம் செய்யலாம்.

* காது கேளாத, கை, கால் ஊனமுற்ற நிலையில் பள்ளி, கல்லூரியில் படிப்பவர்கள், தொழிற் பயிற்சி பெறுபவர்கள், பணிக்குச் செல்வோர், மருத்துவச்

சிகிச்சைக்குச் செல்பவர்கள் ஆகியோருக்கு பேருந்து பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. அதுபோல, ஆண்டுக்கு ஒரு முறை அரசு விரைவுப் பேருந்து மாநிலத்துக்குள் உள்ள சொந்த ஊருக்குச் செல்லவும் சலுகை வழங்கப்படுகிறது.

திருமண உதவி

* நல்ல நிலையில் உள்ளவர்கள் உடல் ஊனமுற்றோரைத் திருமணம் செய்தால் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை (ரொக்கமாக ரூ.3 ஆயிரம், தேசிய சிறுசேமிப்பு பத்திரமாக ரூ.7 ஆயிரம்) அளிக்கப்படும்.

சட்டம் பயின்றவர்களுக்கு

* சட்டக் கல்வி முடித்து வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும் சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ரூ.3 ஆயிரம் உதவித் தொகை.

மருத்துவ உதவி

* போலியோவால் பாதிக்கப்பட்டோருக்கு முடநீக்கு அறுவை சிகிச்சை, பிசியோதெரபி பயிற்சி, கை, கால் இழந்தோருக்கு செயற்கை உறுப்புகள் அளிக்கப்படும்.

பராமரிப்பு உதவித்தொகை

* கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோருக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ரூ.200 அளிக்கப்படுகிறது.

மானியத் தொகை

* சுயதொழில் செய்ய விரும்புவோர் வங்கிக் கடன் பெற ரூ.2,000 வரை மானியம் அளிக்கப்படுகிறது.

* சென்னை கிண்டியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் படித்த காது கேளாதோர் மற்றும் பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றோர் சிறப்புத் தொழில் பழகுநர் பயிற்சி (Special Apprenticeship) பெற ரூ.500 உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

வீட்டு வசதி

* மாநில அரசின் வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீட்டில் தனி ஒதுக்கீடு.

மத்திய அரசு வழங்கும் சலுகைகள்

* ஊனமுற்றோருக்கும் அவருக்கு உதவியாகச் செல்வோருக்கும் ரயில் பயணங்களில் கட்டணச் சலுகை.

* பொது தொலைபேசி மையம் அமைக்க அனுமதி வழங்குவதில் முன்னுரிமை.

* மொத்த வருமானத்தில் ரூ.50,000 வருமான வரிச் சலுகை.

* தொழில் வரி செலுத்துவதில் இருந்து விலக்கு.

* பணியில் உள்ள ஊழியர்களுக்கு போக்குவரத்துப் படி.

* பெட்ரோல், டீசல், எரிவாயு, விநியோக உரிமங்கள் வழங்குவதில் சிறப்பு ஒதுக்கீடு.

* அரசு நலத்திட்ட உதவிகளில் 3 சதவிகிதம் ஒதுக்கீடு.

* போட்டித் தேர்வுகளில் கட்டணச் சலுகை.

* உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. இது தவிர, முக்கிய மாவட்டத் தலைநகரங்களிலும் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

– சென்னை அலுவலக முகவரி
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம்,
சி–48, 2–வது அவென்யூ,
அண்ணா நகர்,
சென்னை – 600 040.
தொலைபேசி : 044 – 26213433

* * *

போலியோ நோயை அறவே ஒழிக்க அரசு சீரிய நடவடிக்கை

மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் நோய்த் தடுப்புப் பணிகளை செயல்படுத்துவதில் தமிழக அரசு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் தாய்சேய் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள். மேலும் முதலமைச்சரின் 18 அம்ச திட்டத்தில் தடுப்பூசித் திட்டத்தையும் ஒரு அங்கமாக இணைத்து முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

குழந்தைகளை அச்சுறுத்தும் கொடிய உயிர்க் கொல்லி நோய்களான தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, காசநோய், தட்டம்மை, போலியோ ஆகியவைகளுக்கு எதிராக தமிழக அரசு பலவகையான தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்கி வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12 இலட்சம் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளும் 13 இலட்சம் கருவுற்ற தாய்மார்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக தமிழக அரசு எடுத்துவரும் தீவிர நடவடிக்கையினால் போலியோ நோய் தமிழ்நாட்டில் வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டது. இருந்த போதிலும் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அதிக அளவில் குழந்தைகள் பாதிக்கப் பட்டுள்ளனர். தமிழ்நாட்டிலும் கூட திருச்சியில் நாடோடி வகுப்பைச் சேர்ந்த ஒரு குழந்தை பாதிக்கப்பட்டிருக்கிறது. போலியோவை உண்டாக்கும் வைரஸ் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனவே போலியோ நோயை அறவே ஒழிக்க தமிழக அரசு இந்த ஆண்டும் இரண்டு சுற்றுகள் போலியோ சிறப்பு முகாம்கள் நடத்தத் தீர்மானித்துள்ளது. அதன்படி கடந்த ஜனவரி4 ஆம் தேதி முதல் சுற்று சிறப்பு முகாம் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சர் ந.தளவாய்சுந்தரம் அவர்கள் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் 4 ஆம் தேதி காலை 7 மணியளவில் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுத்து முகாமைத் தொடங்கி வைத்தார்கள். அவ்வமையம் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை செயலாளர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., மற்றும் பொதுசுகாதாரத் துறை இயக்குநர் திரு.ட கிருஷ்ணமூர்த்தி, ஆகியோரும் கலந்து கொண்டு விழாவை சிறப்புறச் செய்தார்கள். ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பெருவாரியாக விழாவில் பங்கேற்று பெருமை சேர்த்தனர்.போலியோ நோயை அறவே ஒழிப்பதற்கு தமிழக அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- ஜனவரி 4 ஆம் தேதி 40,400 சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு 5 வயதிற்குட்பட்ட சுமார் 73 இலட்சம் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.
- பொதுமக்களின் வசதிக்காக சொட்டு மருந்து மையங்கள் அவரவர் பகுதியிலேயே அரசு



மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், பள்ளிக்கூடங்கள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் முக்கிய பொது இடங்களில் அமைக்கப்பட்டு எல்லாக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

- சுமார் 50 க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் துறைகள் பொதுசுகாதாரத் துறையோடு இணைந்து செயல்பட்டு முகாம் வெற்றி பெற பாடுபட்டுள்ளனர்.
- 5000 க்கும் மேற்பட்ட வாகனங்கள் மருந்து விநியோகம் மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளைச் சேர்ந்த பணியாளர்கள் குழந்தைகளைக் கூட்டி வந்து சொட்டுமருந்து வழங்கும் பணியில் ஈடுபட்டனர்.
- பஸ் நிலையம், ரயில்வே நிலையம், சுற்றுலாப் பகுதிகள் மற்றும் விமான நிலையங்களில் நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டு முகாம் நாளின்போது பயணம் மேற்கொள்ளும் எல்லாக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.
- எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கும் சிறப்புக் குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது.
- சொட்டு மருந்து போடப்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இடதுகை சுண்டுவிரலில் அடையாளமை வைக்கப்பட்டது. முகாம் நடத்தப்படுவதன் அவசியம் பற்றியும் போலியோ சொட்டு மருந்தின் முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகள் வானொலி தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து அளிக்கப்படவேண்டும். இதுவே முகாமின் முக்கியக் குறிக்கோளாகும். ஒரு குழந்தைகூட விடுபடக்கூடாது. ஏதேனும் ஒரு குழந்தை விடுபட்டாலும் அந்தக் குழந்தைக்குப் போலியோ நோயினால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது அல்லது அந்தக் குழந்தை மூலம் 'நோய்த் தொற்று' பிற குழந்தைகளுக்குப் பரவ வழி ஏற்பட்டுவிடும்.
- சொட்டுமருந்து எத்தனை முறைகள் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அரசு தரும் சொட்டு மருந்து தரமானது மற்றும் பாதுகாப்பானது.
- போலியோ என்ற வைரஸ் நுண்கிருமிகளால் குழந்தைகள் பாதிக்கப்படும்போது அவர்கள் கை, கால்கள் நிரந்தரமாக ஊனமாக்கப் படுகின்றன. போலியோ நுண்கிருமிகள் அசுத்தமான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் குழந்தைகளிடையே பரவுகின்றன. மேலும் எந்த ஒரு ஊனமடைந்த குழந்தைக்கும் அறுவை சிகிச்சை செய்தாலும் முற்றிலும் குணமாக்க இயலாது. அதற்கான செலவும் அதிகமாகும். ஆகவே போலியோ நோய் வராமல் தடுப்பது முக்கியமாகும். அதற்கு ஒரே வழி ஆண்டுதோறும் அரசு மூலம் நடத்தப்படும் பல்ஸ் போலியோ முகாம்களில், 5 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் கூடுதல் தவணைகள் சொட்டு மருந்து கொடுப்பதே ஆகும்.
- சென்ற 4-ஆம் தேதி சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வரும் பிப்ரவரி 22ஆம் தேதி தவறாமல் மீண்டும் ஒரு தவணை கூடுதல் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.
- பெற்றோர்களும் பொதுமக்களும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, அரசுடன் ஒத்துழைத்து போலியோ நோயை அறவே ஒழிக்க உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும்
நோய்த் தடுப்பு மருந்து

மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் கோவை மாவட்ட ஊராட்சிகள்

ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீது, 2003 – 2004 சட்டமன்ற நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசும்போது,

"Renewable energy derived from the sun, wind and Biomass etc., is not only a clean source of energy but is most suitable for meeting the energy of rural areas, using locally available resources"

என்று கூறினார்கள்.

அதனடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் மரபு சாரா எரிசக்தி திட்டத்தின் கீழ், ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு 16.7.2003 அன்று ஒரு நாள் பயிலரங்கம் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணைந்து நடத்தப்பட்டது. அதில் மரபு சாரா எரிசக்தி திட்டத்தின் பயன்பாடுகள் குறித்தும் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

சூரிய ஒளி தெரு விளக்குகள், பயோமாஸ் கேஸ்ஸிஃபையர், எரோஜெனரேட்டர், காற்றாலை மூலம் நீர் இறைத்தல், மனிதக் கழிவுடன் இணைத்து சாண எரிவாயுக் கலன் அமைத்தல் ஆகியவை பற்றியும் பயிலரங்கம் முடிவில் விரிவாக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம், சென்னைக்கு அனுப்பப்பட்டது.

அதன் அடிப்படையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் முழு பங்கீட்டுடன் Ankur Scientific நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட, பயோமாஸ் கேஸ்ஸிஃபயர் கேஸ் – 9 கருவி காரமடை வட்டாரம், ஓடந்துறை ஊராட்சியில் 31.10.2003 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தக் கருவியின் விலை ரூ.3.10 இலட்சம் ஆகும். இதில் மானியம் ரூ.1.35 இலட்சம்.

இது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் இயக்கப்பட்டு வருகிறது. முற்றிலும் மரக்கழிவுகள் உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி, ஊராட்சிக்கு வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வசதி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.





இந்த மின் சக்தி, நரிப்பள்ளம் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஆற்றிலிருந்து நீர் ஏற்ற உள்ள 10.5 திறன் கொண்ட மின் மோட்டாரை இயக்குவதற்கும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரினை ஓடந்துறை ஊராட்சியில் உள்ள 9 கிராமங்களுக்குக் குடிநீர் பம்ப் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

நடைமுறையில் உள்ள செலவில் 65%ஐ 100% பயோமாஸ் கேஸ்ஸிஃபயர் கருவி மூலம் சேமிப்பு கிடைக்கிறது. இதில் ஒரு பகுதி சுய உதவிக்குழுவிற்கு இலாபமாகவும் ஒரு பகுதி ஊராட்சிக்கு சேமிப்பாகவும் கிடைக்கிறது.

மேலும், குடிநீர் பம்புகள் இயங்காத நேரத்தில் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின்சாரம் தேவைப்படும் தொழில் செய்வதற்கும் விளக்குகள் எரியச் செய்யவும் பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.



இதன் விளைவாக 50 பயோமாஸ் கேஸ்ஸிஃபயர்கள், பல்வேறு ஊராட்சிகளில் வங்கிகள் உதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

காற்றாலை மூலம் நீர் இறைத்தல்

கோவை மாவட்டத்தில், சுல்தான்பேட்டை வட்டாரம் இடையர்பாளையம் ஊராட்சியிலும் மற்றும் பல்லடம் வட்டாரம் செம்மிபாளையம் ஊராட்சியிலும் காற்றாலை மூலம் நீர் இறைக்கும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீர் இறைத்து தரைமட்ட தொட்டியில் தண்ணீர் சேமிக்கப் பட்டு, பள்ளி மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் ஊராட்சியில் மின் மோட்டார்கள் இயக்கும் பணியாளர் ஊதியம் மற்றும் மின்கட்டணத் தொகை ஆகியவை சேமிக்கப்படுகிறது.

10 காற்றாலை மூலம் நீர் இறைக்கும் கருவிகள் பல்வேறு ஊராட்சிகளில் வங்கிகள் உதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் (Night Soil Linked Biogas Plant) :

கோவை மாவட்டம் பல்லடம் வட்டாரம் செம்மிபாளையம் ஊராட்சி மற்றும் கிணத்துக்கடவு வட்டாரம் பொட்டையாண்டிபுரம்பு ஊராட்சி ஆகியவற்றில் 10 கன மீட்டர் மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் செம்மிபாளையம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள சாண எரிவாயுக் கலனிலிருந்து உற்பத்தியாகும் எரிவாயு அவ்வளாகத்தில் நீர் இறைக்கப் பயன்படும் ஆயில் என்ஜினை இயக்கவும் விளக்கு எரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள எரிவாயு அவ்வூராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் சமையல் எரிவாயுவாகப் பயன்படுத்தப் படுகிறது. இதனால் வளாகத்தின் மின்கட்டணம் மற்றும் அங்கன்வாடி மையத்தின் எரிபொருள் தேவை ஆகியவை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

காரமடை வட்டாரம் ஓடந்துறை ஊராட்சியில் 135 தொகுப்பு வீடுகளில் கட்டப்பட்டுள்ள கழிப் பறைகளுடன் இணைத்து இரண்டு 10 க.மீ. மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் அமைக்கப் பட்டுள்ளது. இதில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு 25 தொகுப்பு வீடுகளில் சமையல் எரிவாயுவாகப் பயன்படுத்தப்படுகிறது. 25 மனிதக் கழிவுடன் இணைந்த

சாண எரிவாயுக் கலன்கள் பல்வேறு ஊராட்சிகளில் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



சூரிய ஒளி தெரு விளக்குகள்

கோவை மாவட்டம் காரமடை வட்டாரம் ஓடந்துறை ஊராட்சி கல்லார்புதூர் கிராமத்தில் 25 தொகுப்பு வீடுகள் உள்ள பகுதியில் 25 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அவ்வூராட்சியின் மின் கட்டண செலவு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூராட்சியில் 40 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன. அனைத்து ஊராட்சிகளிலும் 1,000 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் முதல் முறையாக மரபு சாரா எரிசக்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக மின்மோட்டார் இயக்கும் பணிக்கு ஆண்டிற்கு ரூபாய் பதினோறு கோடி மின் கட்டணத் தொகையாக மின்வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. மரபு சாரா எரிசக்தி உற்பத்தியின் மூலம், ஊராட்சிகளில் செலவு செய்யப்படும் மேற்படி தொகையினைக் குறைத்து அவ்வூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

– வே. இராமநாதன்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்.

* * *

எறும்பு

- உலகமெங்கும் 15 ஆயிரம் வகையான எறும்புகள் உள்ளன.
- 2.மி.மீ. நீளம் முதல் 30 மீ.மீ. நீளம் வரை பல அளவுகளில் எறும்புகள் உள்ளன.
- பொதுவாக நாம் அறிந்த சிவப்பு, பழுப்பு அல்லது கறுப்பு நிறங்கள் தவிர வெளிர் மஞ்சள் மற்றும் பச்சை நிறமுள்ள எறும்புகளும் உள்ளன.
- ஒரு பழைய எறும்புப் புற்றுக்குள் 15 இலட்சம் எறும்புகள் வரை இருக்கும்.
- எறும்புகள் தோன்றி ஏறக்குறைய 4 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- நிலத்தடியில் வாழும் எறும்புகளுக்குக் கண்கள் கிடையாது.

சென்னையில் செய்தித்தாள்

1785ஆம் ஆண்டு சென்னையில் "மெட்ராஸ் கூரியர்" என்ற செய்தித் தாளை ரிச்சர்டு ஜான்ஸ்டன் என்ற ஆங்கிலேயர் வெளியிட்டார். இந்த இதழில்தான் ஆங்கில நாட்டில் வெளியிடும் இதழ்கள் போலவே முதல் இரண்டு பக்கங்கள் செய்திகளும், மூன்றாவது பக்கத்தில் வாசகர் கருத்துகளும், கடைசிப் பக்கத்தில் விளம்பரங்கள், கவிதைகள் முதலியனவும் அமைந்திருந்தன.

1791–இல் "வீக்லி மெட்ராஸ் கௌஸட்" என்ற இதழ் தோன்றியது.

* * *

மூதறிஞர் இராஜாஜி
தமிழகத்தின் தவப்புதல்வர்

பொதுவாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்று, வரலாற்றிலும் மக்களின் மனதிலும் நீங்கா இடத்தைப் பெற்ற தலைவராக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்கின்றார்கள்.

அன்னியர் ஆதிக்கத்திற்கு நாடு ஆட்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்த வேளையில், விடுதலைப்போராட்ட வேள்வித்தீயில் குதித்து, எதிர்காலத்தலைமுறை, சுதந்திரக் காற்றை சுவாசிக்கவேண்டும் என்பதற்காகத் தங்களின் வாழ்வின் வசந்தத்தைக் கருக்கிக் கொண்ட ஒப்பற்றத் தலைவர்களில் ஒருவராக நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள்.

"தேசப்பிதா" என்றும் "மகாத்மா" என்றும் போற்றப்படும் அண்ணல் காந்தியடிகளின் சகாக்களில் ஒருவர், அவருக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அருமை நண்பர்களில் ஒருவர் என்ற வகையில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதை வரலாற்றில் படிக்கும்போது அவர் எத்தகைய பெருமைமிக்க தலைவராக, அறிவாற்றல் மிக்க சிந்தனையாளராகத் திகழ்ந்தார்கள் என்பதை நம்மால் உணர்ந்திட முடிகிறது.

அண்ணல் காந்தியடிகள் அவர்களை முழுக்க முழுக்க ஆதரித்து அவரது கருத்தை ஏற்று மூதறிஞர் இராஜாஜி செயல்பட்ட காலமும் உண்டு. காந்தியடிகளின் கருத்தோடு தமக்கு மாறுபாடான எண்ணம் எழுமானால் அதை மறைக்காமல் வெளியிடுகின்ற துணிச்சல்மிக்க தலைவராகவும் அவர் திகழ்ந்த சூழ்நிலையும் தோன்றியதுண்டு.

ஆனால் தனது கருத்தை ஆதரித்தாலும் அல்லது மாறுபாடான நிலைப்பாடு கொண்டிருந்தாலும் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அண்ணல்

மூதறிஞர் இராஜாஜி தமிழகத்தின் தவப்புதல்வர்களில் ஒருவர் என்றும், தமிழகத்திற்கு பல்வேறு வகையில் பெருமை சேர்த்த பெருந்தகையாளர் என்றும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம், தொரப் பள்ளியில் 14–12–2003 அன்று நடைபெற்ற மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் விழாவில் பங்கேற்று, அவரது வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசினார் :

"இந்திய அரசியல் வரலாற்றில் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றவரும், தமிழ்நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவராக கருதிப் போற்றப்படுபவருமான மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழாவை, அந்தப் பெருமைமிக்க தலைவர் பிறந்த இந்த மண்ணில் கொண்டாட, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து, அந்த அடிப்படையில், இங்கே, இந்த விழா சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொண்டனாக, தூதுவனாக, இந்த விழாவிலே கலந்துகொள்வதில் நான் பெருமையும் உள்ள மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதியாக விளங்கிய இந்த இடத்தில் பிறந்து, கற்ற கல்வியாலும், பெற்ற அறிவினாலும், அரிய தொண்டினாலும், அற்புதமான அரசியல் அணுகுமுறையினாலும்

காந்தியடிகள் அவர்களின் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரிய தலைவராகத் திகழ்ந்துள்ளார் என்பதை நம்மால் அறிந்திட முடிகிறது.

மகாத்மா காந்தியடிகள் மூதறிஞர் இராஜாஜி பற்றி குறிப்பிடும்போது, "எனது மனசாட்சியின் காவலர் (Conscience's keeper)" என்று குறிப்பிடுகின்றார் என்றால், அந்த இரண்டு தலைவர்களுக்கிடையே இருந்த ஆழமான நட்பினை, இணக்கமான உறவினை நம்மால் உணர்ந்திடமுடிகிறது.

இந்திய சுதந்திரப்போராட்டத்தில், உப்பு சத்தியாகிரகம் என்பது ஒரு முக்கிய சம்பவம் ஆகும். இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்றில் அது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். "Remarkable Milestone in the history of the freedom struggle" என்று சொல்லத்தக்க வகையில் அந்த போராட்டம் நடந்ததை வரலாற்று ஏடுகளில் நாம் படிக்கின்றோம்.

அந்தப் போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகள், தண்டி யாத்திரை மேற்கொண்டு சத்தியாகிரகம் நடத்தினார்கள். 1930ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து இலட்சியப் பயணம் தொடங்கி, 200 மைல் தூரத்திற்கு நடந்து, ஏப்ரல் 5ஆம் நாள் தண்டி என்ற இடத்தை அடைந்த அண்ணல் காந்தியடிகள், மறுநாள் அதாவது, 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் நாள் "தண்டி" என்ற இடத்தில் ஆங்கில ஆட்சியினர் உப்புக்கு விதித்த வரியினை எதிர்த்து உப்பு அள்ளும் போராட்டத்தினை நடத்தி கைதானார்கள்.

இந்த தண்டி யாத்திரை அண்ணல் காந்தியடிகள் தலைமையில் வடமாநிலத்தில் நடந்தது என்றால், தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க உப்பு சத்தியாகிரகம், மூதறிஞர் இராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் நடந்தது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திருச்சியிலிருந்து தொண்டர்களுடன் புறப்பட்டு, நடைபயணம் மேற்கொண்டு, வேதாரண்யத்தில் இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் ஒரு சிறப்பான கவிதையை நாமெல்லாம் படித்திருக்கிறோம்.

"கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்"

– என்ற அந்தக் கவிதை வரிகள், வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக வீரர்கள் நடைபயணத்திலே பாடிச்

செல்வதற்காகவே நாமக்கல் கவிஞர் அவர்கள் இயற்றினார்கள் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அந்த அளவிற்கு பெருமைக்குரிய தலைவராக, விடுதலைப்போராட்ட வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்ற தலைவராக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்கின்றார்கள்.

மற்றொரு வரலாற்றுச் சம்பவத்தை உங்களுக்கு நினைவூட்டுவதை எனது கடமையாகக் கருதுகின்றேன்.

இந்திய நாடு விடுதலை பெற்றபோது, நமது நாட்டின் கவர்னர் ஜெனரலாக (Governor General) இருந்தவர் லார்டு மவுண்ட்பேட்டன் ஆவார்கள்.

அந்தப் பொறுப்பில் அவருக்குப்பின்னர் இந்தியர் ஒருவரை அமரச்செய்யவேண்டும் என்று தலைவர்கள், அரசியல் விற்பன்னர்கள், ஆலோசித்தபோது, அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரே இந்தியத் தலைவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான் என்பதை எண்ணிடும்போது அவரது பெருமையினை உணர்ந்திட முடிகிறது.

– இந்தப் பதவியை வகித்த ஒரே இந்தியர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தான். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், அதுவும் இந்த மண்ணில் பிறந்தவர் என்பதை நினைத்துப்பார்க்கும்போது பெருமையும் பெருமிதமும் அடைகின்றோம்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பல்வேறு பதவிகளை வகித்தவர்கள்.

அவர் வகித்த பதவிகள் அனைத்திலும் சிறப்பாகச் செயல்பட்டு, மக்களின்

உள்ளத்திலும் வரலாற்றிலும் நீங்காத இடம் பெற்றவராவார்.

அவர் ஒரே ஒரு முறைதான் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். அதுவும் அமெரிக்க நாட்டிற்குச் சென்று அதிபர் கென்னடியைச் சந்தித்து, உலக அமைதிக்காக வாதாடினார் என்பதை எண்ணிடும்போது, போரும் பூசலும் அற்ற ஒரு சமுதாய அமைப்பை உருவாக்குவதில் அவருக்கு இருந்த அக்கறையினையும் அதற்காக அவர் மேற்கொண்ட சிறப்பான முயற்சியினையும் நம்மால் உணர்ந்திட முடிகிறது.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் கருத்தோடு, கொள்கையோடு, அரசியல் அணுகுமுறையோடு ஒத்துப்போக முடியாதவர்கள் கூட அவரைப் போற்றக்கூடிய, வாழ்த்தக்கூடிய பெருமையினை சிறப்பினைப் பெற்றிருந்தார் என்பது வரலாற்று உண்மையாகும்.

தந்தை பெரியார் அவர்களும் மூதறிஞர் இராஜாஜி அவர்களும் பொதுவாழ்வில் இரு துருவங்களாக இருந்து செயல்பட்டவர்களாவார்கள். ஆனால் அந்த இரண்டு தலைவர்களுக்கிடையே ஆழமான நட்பும், பாசப்பிணைப்பும் இருந்ததை நம்மால் அறியமுடிகிறது.

ஒரு முறை தந்தை பெரியார் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், "சீரார் ஈ.வெரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் குறையாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

மற்றொருமுறை தந்தை பெரியாருக்கு, வாழ்த்து தெரிவிக்கும்போது "எனது அன்பான எதிரிக்கு இனிய வாழ்த்துகள்" என்று இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்.

> "இராஜாஜி அவர்களைப் பற்றி
> எண்ணிடும்போது
> அறிவாற்றல், ஆட்சித்திறமை,
> கொண்ட கொள்கையில்
> உறுதி, எதிர்ப்பு கண்டு
> அஞ்சாத மனவலிமை
> ஆகியவை நமக்கு
> நினைவுக்கு வரும்.
> இந்த உயர்ந்த குணநலன்கள்
> அனைத்திற்கும் ஒட்டுமொத்த
> வடிவமாக, மாண்புமிகு
> முதலமைச்சர் புரட்சித்தலைவி
> அம்மா அவர்கள் திகழ்ந்து
> கொண்டிருக்கிறார்கள்"

இதைப்பற்றி குறிப்பிட்டு தந்தை பெரியார் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "எனக்கு பலர் வாழ்த்து தெரிவித்துள்ளார்கள், ஆனால் இராஜாஜியின் வாழ்த்து எனது நெஞ்சைத்தொட்ட வாழ்த்து" என்று பெருமையாகக் குறிப்பிட்டார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களைப் பெரிதும் போற்றினார்கள், "அந்த மாமேதை வாழுகின்ற காலத்தில் வாழ்வது நமக்குப் பெருமையாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களிடம் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள்.

புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1978ஆம் ஆண்டு இராஜாஜி பிறந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவு இல்லமாக மாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெருமையை நிலைநாட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இராஜாஜி அவர்களைப் பற்றி எண்ணிடும்போது அறிவாற்றல், ஆட்சித்திறமை, கொண்ட கொள்கையில் உறுதி, எதிர்ப்பு கண்டு அஞ்சாத மனவலிமை ஆகியவை நமக்கு நினைவுக்கு வரும்.

இந்த உயர்ந்த குணநலன்கள் அனைத்திற்கும் ஒட்டுமொத்த வடிவமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தவும், அனைத்துத் துறையிலும் தமிழகம் வளர்ச்சிபெற்று இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழவும் அரசு தீட்டும் திட்டத்தின் பயன் மக்களை முழுமையாகச் சென்றடையவும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொள்ளும் துணிச்சலான நடவடிக்கைகள், வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.

புரட்சித்தலைவி அவர்கள் இந்தத் தலைமுறை மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையும் பயன்பெறும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

எண்ணிலடங்காத புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ் மண்ணில் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் புரட்சித்தலைவியின் முயற்சி அனைத்திற்கும் துணைநிற்போம் என்று தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து மூதறிஞர் இராஜாஜி அவர்களின் புகழ் ஓங்குக! என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்''.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.

இந்த விழாவிற்கு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., தலைமை வகித்தார். விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பி துரை, திரு. கே.பி. முனுசாமி, திரு.கே.கோபிநாத், திரு.வி. கோவிந்தராஜ், திரு.பி. பழனியப்பன், கிருஷ்ணகிரி மாவட்ட தனி அலுவலர் திரு.மங்கத்ராம் சர்மா, இ.ஆ.ப., ஒசூர் சார் ஆட்சியர் திரு.லால்வேனா, இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.கே. சிங்காரம், மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் திரு.கோ.ரவிச்சந்திரன், மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுத்தலைவர் திரு.தகடூர் ஆர். விஜயன், ஒசூர் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.வி. கந்தப்பா, ஒசூர் நகராட்சித்தலைவர் திரு. பி.எம். நஞ்சுண்டசாமி, தருமபுரி நகராட்சித்தலைவர் திரு. எஸ்.ஆர். வெற்றிவேல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.கேசவரெட்டி, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.பி.சீனிவாசு, தொரப்பள்ளி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.டி.வி.வெங்கடேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, மூதறிஞர் இராஜாஜி குறித்த கருத்தரங்கம், முனைவர் துரை. செல்வராசு தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் திரு.தனராசு, பொறியாளர் திரு.ப.இராஜசேகர், முனைவர் எஸ்.அழகிரி, கவிஞர் நா.நாகராசன் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்று, பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள்.

மூதறிஞர் இராஜாஜியின் பிறந்தநாளையொட்டி, நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்ற தூய்மைப் பணி, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் ஆகியவை நடைபெற்றன.

கால்நடைத்துறையின் சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கலைப் பண்பாட்டு மையம் சார்பில், இன்னிசை நிகழ்ச்சியும், மத்திய அரசின் இசை நாடகப் பிரிவின் சார்பில், நாடகமும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் திரைப்படக்காட்சியும் நடைபெற்றன. விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான மக்கள் கண்டு கருத்து விளக்கம் பெற்றனர்.

மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவினையொட்டி, நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ–மாணவிகளுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பரிசுகளும், ஏழை எளிய மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

✧ ✧ ✧

புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

புத்தாண்டு புலர்கின்ற இந்நாளில் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2003–ஆம் ஆண்டுக்கு விடை கொடுத்து, 2004–ஆம் ஆண்டை ஆவலோடு வரவேற்கின்ற வேளை இது! பிறக்கின்ற புத்தாண்டு புதிய சாதனைப் பூக்கள் பூக்கின்ற பொற்காலமாக மலரட்டும்!

சாதனை என்பது தற்செயல் விளைவு அல்ல! அது ஓய்வில்லா உழைப்புக்கு இயற்கை அளிக்கின்ற பரிசு! அத்தகைய சாதனைச் சரித்திரத்தைக் கடந்த ஆண்டுகளில் படைத்தோம்; புத்தாண்டில் இன்னும் சிறப்பாகப் படைப்போம்; அதற்காக இன்னும் அதிகமாய் உழைப்போம்!

''உழைப்பின் வரா உறுதிகள் உளவோ!'' என்பது அல்லவா ஆன்றோர் வாக்கு.

தடையற்ற இடர்களும், செயற்கைத் தடைகளும் நம்மை வழி மறித்தாலும் இறுதி வெற்றி நமக்குத்தான் என்பதே வரலாற்றின் தீர்ப்பாகி இருந்துள்ளது.

வலிமை மிக்க தமிழகத்தை, வளம்மிக்க தமிழகத்தை உருவாக்க உறுதி கொள்வோம்.

என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளை உவகையுடன் மீண்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

பொங்கல் திருநாள் வாழ்த்து

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் உவப்புடன் கொண்டாடப்படும் ஒப்பற்ற விழா பொங்கல் விழா! இந்த மங்கலப் பொங்கல் திருநாளில் அகிலத் தமிழர்கள் அனைவருக்கும் என் இனிய பொங்கல் வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தொழில்கள் அனைத்தும் உழவுத் தொழிலையே நம்பியுள்ளன. ஆகவே. உலகத்தின் தலைமைத் தொழில் உழவுத்தொழிலே என்பார் திருவள்ளுவர்.

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்: அதனால்
உழந்தும் உழவே தலை - என்பது அவரது திருமொழி.

இவ்வாறு உழவுத் தொழிலைச் சிறப்பித்து உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் திருநாளை. பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாள் கொண்டாடி உழவர் திருநாளை மூன்றாம் நாள் கொண்டாடுகின்றோம்.

இஞ்சியும். மஞ்சளும். செங்கரும்பும். செந்நெல்லும் செழித்து விளையும் செந்தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை. தஞ்சைத் தரணியில் காவேரி நடந்தால்தான் மக்கள் வாழ்க்கை நடக்கும். எனவே. காவேரி நீரில் நமக்குரிய பங்கை நாம் பெற்றே தீருவோம் என்று இந்தப் பொங்கல் திருநாளில் உறுதி ஏற்போம். எத்தனை சோதனைகள் வந்தாலும். இறுதி வெற்றி நமக்கே என்பது காலத்தால் உறுதி செய்யப்பட்ட ஒன்று.

ஊழையும் வெல்லும் உள்ளத்து உறுதி படைத்தவர்கள் நாம்!
உடைத்திடுவோம் தடைகளை!
உயர்த்திடுவோம் தமிழகத்தை!
வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடுவோம்!
வரும் தடைகளை வெல்வோம்!
வாகை சூடுவோம்!

அன்பிற்கினிய என் அருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை உளமார்ந்த மகிழ்ச்சியுடன் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு பேரவைத்தலைவர்
டாக்டர் அவர்களின்

பொங்கல் வாழ்த்துப்பா

அகவல்

தமிழர் திருநாள்! தனித்த திருநாள்!
உழைப்பவர் நன்னாள்! உழவர் பொன்னாள்!

உழைப்பே உயர்ந்தது என்பார் கார்ல்மார்க்ஸ்!
உழைப்பவர் உயர்ந்தவர் என்பார் எம்ஜிஆர்!
உழைப்பினைப் பொருளியல் தீதியில் மதிக்கணும்!
உழைப்புக்கேற்ற ஊதியம் உலகெலாம் கொடுக்கணும்!
உழைப்பினைச் சுரண்டுவோர் கொடுமையைத் தடுக்கணும்!
உழைப்புளோர் உயர்ந்தவர்! உழைப்பிலார் தாழ்ந்தவர்!
என்னும் புதுநெறி படைப்போம்!
பொங்கல் நாளில் புதுயுகம் அமைக்கவே!!



வெற்றிப் பொங்கல்

ஓரெழுத்து மாதம் – தை
உலகம் போற்றும் மாதம்
பேர் படைத்த தமிழர் – இனப்
பெருமை கூறும் மாதம்!

நெய்மணக்கும் மாதம்! – புது
நெல் மணக்கும் மாதம்!
தை, மணக்கும் மாதம்! – இது
தமிழ் மணக்கும் மாதம்!

பொதுமறையைத் தந்த – தமிழ்ப்
புலவர் விழா மாதம்
அதிமதுரம் குறளை – நல்ல
அறிஞர் போற்றும் மாதம்!

இஞ்சிமஞ்சள் கொஞ்சும் – எம்
இனிய உழவர் மாதம்!
மஞ்சு விரட்டு மாதம்! – கனல்
மணக்கும் வீர மாதம்!

உள்ள குப்பை கூட்டி – அது
ஒழியத் தீயை மூட்டி
உள்ளக் குப்பை போக்கி – நமை
உயர்த்த வந்தது போகி!

கரும்புக்குள்ளே சாறு – அதைக்
கவிதை என்று கூறு!
இரும்பு நெஞ்சும் உருகும் – சுவை
இயற்கைதந்த பேறு!

தைமகளைப் பாடு! – அத்
தை மகளை நாடு!
வையம் உனது வீடு! – தமிழ்
வாழ்க்கைக்கில்லை ஈடு!

பொங்கும் இன்பம் பொங்கும் – தமிழ்ப்
பொங்கல் வந்த போதும்
கங்கையினும் புனிதம் – உள்ள
காவிரியைக் காணோம்!

காவிரி நீர் உரிமை – அதைக்
காப்பது நம் கடமை
வாழும் வரலாறு – அம்மா
வாகை சூடல் உண்மை!

கங்கை பாய வேண்டும் – நீர்க்
கவலை ஓய வேண்டும்
எங்கள் புரட்சித்தலைவி – வெற்றி
எதிலும் ஈட்ட வேண்டும்!

கவியரசர் இளந்தேவன்

எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சிக்கு அறிவியல் சாதனைகள் வழிகோல வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்திய அணு சக்தித் துறை தனது பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த மகிழ்ச்சியான நேரத்தில் கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் இன்று நடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்திய அணுசக்தி சங்கத்தின் 14.ஆவது ஆண்டு மாநாட்டிலும் அதனுடன் இணைந்து நடை பெறும் அணு சக்தி, மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டிலும் கலந்து கொள்ள கிடைத்த வாய்ப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந்த மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் தொடங்கி வைப்பது உள்ளபடியே சாலப்பொருத்தமானதாகும். குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்த தமிழ்ப் புலவர் உலகப் பொதுமறையான திருக்குறளை தந்த திருவள்ளுவர். அவர் எழுதிய குறளிலிருந்து

"இருள்வகைக் கடுங்கை யடும்பா லிருள்வகைக்
கடுங்கை பகாஅ தகலா"

– என்ற குறளை மேற்கோள் காட்டி, காரணமான வேர் சோதனைகளையும், துன்பங்களை எதிர்கொண்டு நீந்த முடியாமல் துவண்டு போய் விடுகிறார்கள்; சோதனைகளையும் துன்பங்களையும் எதிர்கொண்டு அவற்றைச் சமாளித்தால்தான் வெற்றி காண முடியும் என்று வள்ளுவர் இத்திருக்குறள் மூலம் சொல்லியிருக்கிறார். சாதனைகள் படைக்கும் தலைவர்கள் மாறுபட்ட சூழ்நிலைகளினால் உருவாகும் பிரச்சினைகளில் பலியாகிவிடமாட்டார்கள்.

இந்திய அணுசக்தித் திட்டங்கள் உண்மையிலேயே மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளன என்பதுதான் இந்தக் குறளின் மூலம் நாம் புரிந்து கொண்டது. நவீன இந்தியாவின் கோவிலாக கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்திராகாந்தி அணுசக்தி ஆராய்ச்சி மையம் விளங்கி வருகின்றது. உண்மையிலேயே இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் மாதிரியாக விளங்கி வருகின்றது.

மேலும் இந்திய விஞ்ஞானிகளின் எண்ணத்தில் பல்வேறு விதமான சிறப்பான கண்டுபிடிப்புகளை உருவாக்கித்து இது ஊன்று சக்தியாக விளங்குகிறது. மிகவும் பெருமைப்படத்தக்க வகையில் மின்னிக் கொண்டிருக்கும் இந்த ஆராய்ச்சி மையம் மற்றும் அணுசக்தி மின் உற்பத்தி மையம் தமிழகத்தில் அமைந்துள்ளது மிகவும் மகிழ்ச்சியான ஓர் அம்சமாகும். இதன் மூலம் இயற்கையாகவே ஆராய்ச்சியில் கண்டுபிடிப்புகள் மற்றும் அதைச் சார்ந்த உந்து சக்திகளை மக்களிடையே இயல்பாகவே உருவாக்கித் தந்து வருகிறது.

கடந்த 1956ஆம் ஆண்டு மிகச்சிறிய அளவில் முதலாவதாக அப்சரா என்ற ஆராய்ச்சி அணுஉலையுடன் துவக்கப்பட்ட இந்த ஆராய்ச்சி மையமானது இன்று அடைந்துள்ள வளர்ச்சி உண்மையிலேயே என்னை மெய்சிலிர்க்க வைத்தது. முதலாவதாக இது ஒட்டுமொத்த அணுசக்தி மறுகழற்சியை தன்னகத்தே உள்ளடக்கியது. கடந்த 1960ஆம் ஆண்டுகளில் துவங்கிய இந்தியாவின் வரத்தக ரீதியிலான அணுசக்தித் திட்டம், இந்திய விஞ்ஞானிகள் திட்டம் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் சாதனைகளில் மற்றொரு மகத்தான சாதனையாகும்.

முதலாவதாக 220 மெகாவாட் அணுஉலை இந்தியாவில் முழுவதுமாக வடிவமைக்கப்பட்ட இடம் கல்பாக்கம். கல்பாக்கத்தில் துவக்கப்பட்ட இத்திட்டம் இந்திய அணுசக்தித் திட்டத்திற்கு அடிக்கல்லாக அமைந்ததற்கு விஞ்ஞானிகளுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய திட்டங்கள் துவங்குவதற்கும் கல்பாக்கத்திற்கும் மிகப்பெரிய உறவு உள்ளது. இந்திய அணுசக்தித் துறையானது மீண்டும் கல்பாக்கத்தில் பாஸ்ட் பிரீடர் அணுஉலை திட்டத்தை சோதனை செய்ய உள்ளது.

தற்போது கல்பாக்கத்தில் புதிதாக 500 மெகாவாட் திறன் கொண்ட அதிவேக ஈனுலை (Proto type Fast Breeder) அணுஉலை புதிதாகக் கட்டப்பட்டு வருவது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்திய அணுசக்தி ஆராய்ச்சிக் கழகம் புதிதாக 3.960 மெகாவாட் திறன் கொண்ட புதிய அணுஉற்பத்தி நிலையங்களை தன்னுடைய உற்பத்தி அளவில் அதிகரிப்பது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த விரிவாக்கத் திட்டத்தில் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணுமின் திட்டத்திற்கான தண்ணீர் அணுஉலை கட்டும் பணி முடிவடைந்த பின்பு மேலும் 2,000 மெகாவாட் அணுமின் உற்பத்தி அளவு அதிகரிக்கும். கல்பாக்கம் மற்றும் கூடங்குளத்தில் நடைபெற்று வரும் இப்பணிகளுக்குத் தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று நான் இந்த நல்லநேரத்தில் உறுதியளிக்கின்றேன்.

கல்பாக்கத்தில் தண்ணீர் சுத்திகரிப்புத்திட்டம் (Reverse Osmosis Process) என்னும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 1.800 க்யூபிக் மீட்டர் அளவு (1.8 MLD) கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைத் தொடங்கியிருப்பதும் மேலும் நீராவியின் அடிப்படையில் பன்முனை சுத்திகரிப்பு முறை (Multi Stage Flash Process) என்னும் தொழில் நுட்பத்தையும் செயல்படுத்த இருப்பதாக அறிகின்றேன். இந்த இரண்டு திட்டங்களும் இணைந்து நாள் ஒன்றுக்கு 6.300 க்யூபிக் மீட்டர் அளவு (6.3 MLD) கடல்நீரை நன்னீராக்கி வழங்கிட முடியும். இது ஒரு மிகவும் முக்கியமான வளர்ச்சியாகும். கல்பாக்கம் விஞ்ஞானிகள் சிறிய ஆலைகளை அமைப்பதில் பெற்றிருக்கும் அனுபவத்தை தமிழ்நாடு கடற்கரை முழுவதும் இதுபோன்ற சிறிய ஆலைகள் அமைப்பதற்கு நாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சென்னையின் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை அடியோடு போக்கி அதற்கு நிரந்தரத் தீர்வு காண என்னுடைய தலைமையிலான அரசு முனைப்புடன் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காக கடல்நீரை நன்னீராக்கும் மிகப்பெரிய செயல் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு முனைப்புடன் இறங்கியுள்ளது. இது தொடர்பான

விஞ்ஞானிகளாகிய உங்கள் அனைவரின் ஆலோசனைகளையும் அன்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கின்றேன்.

நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் முதல் 300 மில்லியன் லிட்டர் அளவு வரையிலான கடல் நீரை நன்னீராக மாற்றும் செயல்திறனுடன் கூடிய மிகப்பெரிய ஆலைகளை நிர்மாணிக்கும் ஆற்றலை நாங்கள் வெகுவிரைவில் பெறப்போகிறோம். அதனை டாக்டர் சிதம்பரம் அவர்கள் பார்த்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லா பெரிய அணுமின் உற்பத்தி நிலையங்களும் மிகப்பெரிய அளவில் வீணாகப் போகும் வெப்பத்தின் உதவியுடன் கடல்நீரை நன்னீராக்கி அருகில் உள்ள பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்ய முன்வரவேண்டும். இதனை கூடங்குளம் அணுமின் திட்டத்தில் சேர்த்து வடிவமைத்து அதன் மூலம் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பயனடையச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அணுசக்தி சுழற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் அணுசக்தி மறுசுழற்சியைப் பயன்படுத்தத் தொடங்குவது என்பதுதான் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம். மூடிய சுழற்சி முறை என்பது நமது அணுசக்தித் திட்டங்களின் இதயத் துடிப்பாக விளங்கி வருகின்றது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அணுசக்தி சுழற்சியில் அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணுக்கழிவுகளைக் கையாளுவது ஒரு கடினமான நடைமுறைதான்.

எரிசக்தி சுழற்சி தொழில் நுட்பத்தில் தற்போது வந்துள்ள புதிய தொழில்நுட்பங்கள் குறித்து இந்த மாநாட்டில் தொடர்ந்து விவாதிக்கப்போவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவை குறித்து கவனமுடன் உங்கள் மனதில் இருத்தி செயல்படுவீர்கள் என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

"அறிவியலால் எதைச் சொல்ல இயலாதோ அதனை மனிதகுலம் அறிந்திருக்க வாய்ப்பில்லை" என்று பெட்ரன்ட் ரஸ்ஸல் கூறுவார். அதனை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாம் இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய எல்லைக்கே அணுசக்தித் திட்டம் மற்றும் அதனுடைய கணக்கிலடங்கா பயன்களின் அடிப்படையில் நாம் கிரகித்துக் கொண்ட அறிவு ஆகியவை நம்மை உந்தித் தள்ளுகிறது. சோதனை அணுஉலை மற்றும் அதிவேக ஈணுலை (Proto type Fast Breeder) ஆகியவற்றின் உயர் தொழில் நுட்பங்களை வணிக ரீதியாக பயன்படுத்துவதற்குத் தாங்கள் எடுத்துக் கொண்ட மிகப்பெரிய அடிப்படை ஆராய்ச்சி முயற்சிகளைப் படிக்கும் பொழுது நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

பிரபல ஜெர்மன் விஞ்ஞானி வெர்னர் ஹெய்சன் பெர்க் கூறியவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "அறிவியல் எந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தும்" என்று கூறியுள்ளார். இந்திய அணுசக்தித் துறையின் பொன்விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். இந்த நேரத்தில் இன்னும் நாம் பல மைல்கள் செல்ல வேண்டியுள்ளது என்பதை நினைத்துப் பார்க்க அழைக்கின்றேன். "எதார்த்தத்திற்கு எதிர்மாறான தாகத்தான் நாம் அறிவியலை கணக்கிட்டு வருகின்றோம் – அதனை அடிப்படையான நிலையிலும் குழந்தை போன்று நாம் பாவித்து வருகிறோம். ஆனால் அறிவியல் இன்றும் ஒரு முக்கியமான பொருளாகவே காணப்படுகின்றது என்பது என்னுடைய வாழ்நாள் முழுவதிலும் இருந்து கற்றுக் கொண்ட ஒன்றாகும்" என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டின் சொல்வதை நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. ஆல்பர்ட் ஐன்ஸ்டினின் இந்தக் கூற்று மூலம் அறிவியல் கண்டுபிடிப்புகள் தொடர்பான கேள்வி எழுவேண்டியதன் அவசியத்தைத் தெரிவித்துள்ளார்.

இதே உந்துதலின் அடிப்படையில் நீங்கள் மேலும் முன்னோக்கிச் சென்று உங்களுடைய ஆராய்ச்சிகளை இயற்கை, பூமி மற்றும் இந்த அண்டம் ஆகியவற்றை அடங்கியுள்ள அதிசயங்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பணியாற்ற வேண்டும். எதிர்கால மனித குலப் பாதுகாப்பு, தன்னிறைவு அடையும் வகையில் தொழில்நுட்பங்களை கண்டு பிடிப்பதற்குத் தயாரிப்புகளை தொடங்க வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு கூடியிருக்கின்ற அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அனைவரும் எதிர்காலத்தில் நல்ல பல்வேறு சாதனைகள் படைக்க உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். இந்த நாடு முழுவதும் உங்களை நினைத்துப் பெருமை கொள்கின்றது. அதேநேரத்தில் உங்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் விருப்பங்களுக்கும் இந்நாடு துணை நிற்கும், மக்கள் துணை நிற்பார்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

17–12–2003 அன்று கல்பாக்கத்தில் நடைபெற்ற இந்திய அணுசக்தி சங்கத்தின் 14ஆவது மாநாடு, அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகள் மிகவும் இன்றியமையாதவையாகும். குறிப்பாக, கிராமப்பகுதிகள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்திட அந்த கிராமச் சாலைகள் மிகுந்த தரம் உள்ளதாக ஆக்கப்பட வேண்டியது மிக அவசியம் ஆகும்.

எனவே, தமிழகத்திலுள்ள, கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து, அதற்கான திட்டப்பணிகளை செயல்படுத்த வழிவகுத்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில், கடந்த 17–11–2003 அன்று, தமிழகத்தின் 28 மாவட்டங்களில், 64.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாலங்கள் அமைக்கவும், 377.65 கி.மீ. நீளமுள்ள 142 கிராமச் சாலைகளை மேம்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து, **மேலும் தற்போது நாகப்பட்டினம், திருவாரூர், தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மொத்தம் 9 பாலங்கள் கட்டவும் 28 மாவட்டங்களில் மொத்தம் 337 கி.மீ. நீளத்தில் 133 கிராமச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள்.**

நபார்டு (NABARD) வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 57.96 கோடி ரூபாய் ஆகும்.

இதில் 80 சதவிகிதம் தொகை அதாவது 46.37 கோடி ரூபாய் நபார்டு வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்படும். மீதமுள்ள 20 சதவிகிதம் தொகை அதாவது 11.59 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக அமையும்.

தமிழகத்திலுள்ள கிராமச் சாலைகளின் தரம் உயர்த்தி ஒரு புதுவடிவம் அளிக்கும் இந்தப் பணிகள் அனைத்தையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

✱

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப எழுத்தாளர் மணிக்கொடி சீனிவாசன் அவர்களுக்கு நூற்றாண்டு விழா

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தரவும் , தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு விழா எடுத்துப் பெருமை சேர்க்கவும் தமிழ்ப் படைப்பாளிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகை வழங்கி அவர்களுக்குச் சிறப்பு சேர்க்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியும் வருகின்றார்கள். அந்த வகையில் மணிக்கொடி இலக்கிய எழுத்தாளர்கள் வரிசையில் தலைசிறந்த இடத்தைப் பெற்றிருக்கின்ற மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்த ஆணை பிறப்பித்தார்கள். 2003–2004 ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசும் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக் கேற்ப மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மணிக்கொடி சீனிவாசன் நூற்றாண்டு விழா நடத்துவது குறித்த அறிவிப்பினை வெளியிட் டார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் மணிக்கொடி எழுத் தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும். மணிக்கொடி எழுத்தாளர் களில் திரு. சீனிவாசன் முதன்மை யானவர் ஆவார்.

தமிழ் இலக்கிய வட்டாரங்களில் மணிக்கொடி சீனிவாசன் என்கின்ற பெயர் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவர் தற்போதைய நாகை மாவட்டம் சீர்காழியில் பிறந்தார்.

அவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். டெய்லி எக்ஸ்பிரஸ், ஸ்வராஜ்யா, ப்ரிபிரஸ் ஜெர்னல், சன், டான், பாம்பே ஸ்டண்டர்ட், இந்தியன் பார்லிமெண்ட் முதலிய பல ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகையிலும் பணியாற்றினார். உண்மையும் நேர்மையும் தூய்மையும் கொண்ட செய்திகளை எழுதி நாட்டு மக்களிடம் விடுதலை உணர்வை ஊட்டி, மக்களை வீறு கொண்டு எழச்செய்தார். அந்நியர் ஆட்சியின் அடக்குமுறைக்கு ஆளான மணிக்கொடி சீனிவாசன் 1932–33இல் நாசிக் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு சொல்லொன்னாத் துயரத்துக்கு ஆளானார்.

தமது எழுத்தால், இலக்கிய படைப்புகளால், நாட்டு மக்களை தட்டி எழுப்பி அந்நியர் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்த பெருமை மணிக்கொடி சீனிவாசன் அவர்களைச் சாரும்.

மணிக்கொடி சீனிவாசன் தமிழ்மொழிக்கு ஆற்றியுள்ள பணி அளப்பரியதாகும். ''மணிக்கொடி'' எனும் தமிழ் இதழைத் தோற்றுவித்து அதன் வாயிலாகத் தமிழ் மொழிக்கு இவர் ஆற்றிய பணிகள் ஏராளம், ஏராளம். இதனால் இவர் 'மணிக்கொடி சீனிவாசன்' என அழைக்கப்பட்டார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்று பலமொழிகளிலும் புலமையும் தேர்ச்சியும் பெற்றி ருந்தார். சிறைச்சாலையில் இருந்தபோது திருக்குறளை, குறள் போலவே இரண்டு வரிகளில் ஆங்கிலத்தில் எழுபது ஆண்டுகளுக்கும் முன்னரே மொழிபெயர்த்தார்.

மணிக்கொடி சீனிவாசன், தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கு அடித்தளம் அமைத்து தந்தவர் ஆவார்.

மேலும் மகாகவி பாரதியையும் – அவரது படைப்புகளையும் தமிழ் மக்கள் நன்கு அறியும் வண்ணம் பறைசாற்றிய பெருமை மணிக்கொடி சீனிவாசனுக்கு உண்டு.

அவர், மகாத்மா காந்தியடிகள், முதறிஞர் இராஜாஜி, எழுத்தாளர்கள் வ.ரா. திரு. சங்கு சுப்ரமணியம், திரு.சிட்டி, திரு.கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்ற பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

இத்தகைய பெருமைக்குரிய மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு

அரசின் சார்பில், கடந்த 30.12.2003 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கேற்று மணிக்கொடி சீனிவாசன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றி மாண்புமிகு தமிழக சட்டப்பேரவை தலைவர் டாக்டர். கா. காளிமுத்து அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது,

''மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா இங்கே சிறப்பாக நடைபெறுகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழுக்காக உழைத்த பெருமக்களை மதிக்கின்ற மாண்பினை எண்ணிப் பார்க்கிறபோது, நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் அறிஞர்கள், தமிழ் எழுத்தாளர்கள் வெவ்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களாக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்குள்ளே கூட கருத்து மோதல்கள் கூட இருக்கலாம். ஆனால் ஐந்து விரல்களும் ஒன்றாக இல்லையென்றாலும் ஐந்து விரல்களுக்கு பொதுவான உள்ளங்கை இருப்பதைப் போல, எந்தக் கருத்தோட்டத்தைக் கொண்ட தமிழறிஞராக இருந்தாலும், தமிழுக்கு உழைத்த பெருமக்கள் அரசால் பாராட்டப்படவேண்டும் என்கிற அழுத்தமான எண்ணத்தைக் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள். அந்த வகையிலேதான் மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா இங்கே நடைபெறுகிறது.

இறவாத புகழ் படைத்தவர் மணிக்கொடி சீனிவாசன். தரம் வாய்ந்த பத்திரிகையை – சிறப்புக்குரிய பத்திரிகையை அவர்கள் நிறுவினார்கள். அவர் மிகச் சிறந்த பத்திரிகையாளராகத் திகழ்ந்தார்.

அவர் நிறுவிய மணிக்கொடி என்பது வணிக நோக்கத்திற்காக நிறுவப்பட்டது அல்ல. அவர் மணிக்கொடியில் கதை எழுதினார்; கட்டுரை எழுதினார். கவிதைகளும் எழுதினார். அவர் எழுதிய கவிதைகள் அற்புதத்திலும் அற்புதமாகும்.

அவர் ஆங்கிலத்திலே, வடமொழியிலே, பிரெஞ்சு மொழியிலே புலமை பெற்றவர். ஆங்கிலத்திலே புலமை பெற்றிருந்தால் ஆங்கிலேயர் காலத்தில் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்திருக்கலாம். ஆனால் ஆங்கிலத்திலே பெற்ற புலமையை அருந்தமிழை காப்பதற்காக, வளர்ப்பதற்காக பயன்படுத்தினார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வியப்பு மேலிடுகிறது.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள், தமிழைப்பற்றி, 'தமிழிலே தமிழிலே' என்ற தலைப்பில் கவிதை எழுதி தமிழை வளர்த்தார்.

இந்தியாவில் இருக்கிற எல்லா மொழிகளையும் விட பழமையான மொழி நம்முடைய தாய்மொழி என்பது

தெரியும். ஆனாலும்கூட, இதைச் செம்மொழியாக்க வேண்டும் என்பது இன்னும் கோரிக்கையாகவே இருக்கிறது.

மணிக்கொடி சீனிவாசன் போன்ற பெருமக்கள் வளர்த்த அந்தத் தமிழை மத்திய அரசு செம்மொழியாக ஆக்க வேண்டும் என்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்களது புகழ் என்றென்றைக்கும் குன்றாமல் குறையாமல் தமிழ் உள்ளவரைக்கும் நிலைத்து நிற்கும்'' என்பதில் ஐயமில்லை.

விழாவிற்கு தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது,

"தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், மதிக்கப்பட வேண்டியவர்கள் மதிக்கப்படுகிறார்கள். போற்றப்பட வேண்டியவர்கள் போற்றப்படுகிறார்கள். பாராட்டப்பட வேண்டியவர்கள் பாராட்டப்படுகிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

நம்முடைய முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், இந்த ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, மணிக்கொடி சீனிவாசன் அவர்களுக்கு, அரசின் சார்பிலே நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் என்ற நல்ல அறிவிப்பை தெரிவிக்கச் செய்தார்கள்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் தமிழ் மொழி வளர அரும்பாடுபட்டவர். அந்தத் தமிழ் மொழியை வளர்த்தவர். சிறந்த தேச பக்தர். சுதந்திரப் போராட்ட வீரர் என்றெல்லாம் அவரைப் பற்றி அவருடைய சிறப்புகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய பேச்சுக்களிலே இருந்து இங்கே நான் புரிந்து கொண்டது, மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் நாட்டையும் தமிழ் மொழியையும் இரு கண்களாகப் பாவித்தார் என்பதைத்தான்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் தமிழ் இலக்கியம் என்ற ஆலமரத்தை நீருற்றி வளர்த்தவர்களில் ஒருவர் ஆவார்.

பத்திரிகைகள் எப்படி இருக்க வேண்டும் – அந்தப் பத்திரிகைகளை நடத்துபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருந்துவந்தார் மணிக்கொடி சீனிவாசன் அவர்கள்.

நயாகரா

உலகப்புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள நயாகரா ஆறு அமெரிக்கா, கனடா ஆகிய இருநாடுகளுக்கும் எல்லையாக இருந்து வருகிறது. இந்த நயாகரா ஆற்றின் ஒரு பக்கக் கரையில் அமெரிக்காவும் மறு பக்கக் கரையில் கனடாவும் உள்ளன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் நடத்திய அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று பாராட்டியிருக்கிறார்கள் என்றால், – அவர் எப்படிப்பட்டவராக இருந்திருக்கிறார் – எத்தகைய பெருமைக்குரியவராக திகழ்ந்திருக்கிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல எழுத்தாளருக்கு – ஒரு நல்ல இலக்கியவாதிக்கு – ஒரு சிறந்த தேச பக்தருக்கு – தமிழை வளர்த்த அறிஞருக்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பு செய்கின்ற வகையில் இந்த நூற்றாண்டு விழா நடைபெறுகிறது.

விழாவில் பங்கேற்ற மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் மகள் ராதா சீனிவாசன் அவர்களுக்கும், மகன் ஜெயதேவ் சீனிவாசன் அவர்களுக்கும் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர். கா. காளிமுத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. செம்மலை ஆகியோர் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தனர். விழாவில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை செயலாளர் திரு. பு.எ.இராமையா இ.ஆ.ப, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. இ.சுந்தரமூர்த்தி, எழுத்தாளர்கள் திரு. பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), திரு.வல்லிக் கண்ணன், திரு.பெ.கு.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர். ம.இராசேந்திரன் வரவேற்புரை யாற்றினார். விழா முடிவில் துணை இயக்குநர் திரு. வை. கண்ணபுர கண்ணன் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ் வளர்ச்சித் துறை சிறப்பாக செய்திருந்தது.

• • •

சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாடுகள்

வறுமையில் வாழும் பெண்களின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்காகவும் அவர்களை சுயஉதவிக் குழுக்களாகச் சேர்த்து ஒற்றுமைப்படுத்தி பொருளாதார மேம்பாடு அடைய வழிவகை செய்து, பயிற்சிகள் அளித்து, சிறு தொழில்கள் செய்வதற்கு ஊக்குவித்து, சமுதாய நலப் பணிகளில் ஈடுபடச் செய்து மகளிர் முன்னேற்றமடையும் வண்ணம் சேலம் மாவட்டத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

மகளிர் குழு சுதந்திரத்துடன் பணிபுரிந்திடவும் தொழில் செய்திடவும் கல்வி கற்று மேம்பாடு அடையவும் தங்கு தடையின்றி எங்கு சென்றாலும் கௌரவத்துடன், தன்னம்பிக்கையோடு வாழவும் வளரவும் சாதி–மத பேதமின்றி பெண்–ஆண் சமத்துவம் நிலை நாட்டும் உயரிய உலகைப் படைக்கவும் நாம் உதவிடல் வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் 5,901 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 99,236 பேர் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.1677.16 இலட்சங்கள் சேமிப்பு செய்துள்ளனர். இதுவரையில் 4,871 குழுக்களுக்கு ரூ.2,649.23 இலட்சங்கள் வங்கிக்கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியில் மகளிர் குழுக்கள் அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு இதுவரையில் 1,274 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 385 ஊராட்சிகள் அனைத்திலும் பஞ்சாயத்து அளவிலான இணையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது வட்டார அளவிலான இணையம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் 2003ஆம் மாதத்தில் வங்கிக் கடன் அனுமதிக்கப்பட்டு நிலுவையிலுள்ள அனைத்து குழுக்களுக்கும் கடன் வழங்க வங்கிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பாடுகள்

தற்போது மகளிர் திட்டத்தின் கீழ் 14 தொண்டு நிறுவனங்கள் 20 ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன. நெசவாளர், மகளிர், மீனவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கி 2002–2003ஆம் ஆண்டில் 911 மகளிர் குழுக்களை ஏற்படுத்த தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிகமாக அதாவது 973 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் டான்வா, மாதர் சங்கம், வனத்துறை குழுக்கள் அடங்கும்.

மகளிர் திட்டக் குழுக்களுக்குப் பயிற்சி

மகளிர் திட்டத்தில் பெண்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதற்கும் விழிப்புணர்வு பெறவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலுள்ள பயிற்சி பெற்ற பயிற்றுநர் மூலமாகப் பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1,14,079 ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு உதவித் தொகையாக ரூ.73.72 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்கள் அமைந்துள்ள புதிய குழுக்களுக்கு நடப்பு மாதத்தில் பயிற்சிகள் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2002–2003ஆம் ஆண்டில் 16,584 நபர்களுக்கு ரூ.3,87,265 செலவிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் இந்நாள் வரை 15,924 நபர்களுக்கு குழு உறுப்பினர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் திட்டக் குழுக்களுக்கு நியாய விலைக் கடைகள் ஒதுக்கீடு செய்தல்

போதிய நிதி வசதியுடன் நன்முறையில் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள், நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்த முன் வந்தால் அவற்றை அரசு ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பித்ததனைத் தொடர்ந்து தற்போது 4 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஓமலூர் வட்டாரம், மல்லூக் கவுண்டனூர், பாவனூர் மற்றும் செல்லப்பிள்ளைக் குட்டை, கொளத்தூர் வட்டாரம், தார்க்காடு ஆகிய நியாயவிலைக் கடைகளை நன்முறையில் நடத்தி வருகின்றன. மேலும் நியாயவிலைக் கடையினை ஏற்று நடத்திட விருப்பமுள்ள தகுதியுள்ள இதர மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தேர்வு செய்து பரிந்துரைக்க தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் 2001-2002ஆம் ஆண்டில் 4,701 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் 2002-2003ஆம் ஆண்டில் 6,449 உறுப்பினர்களுக்கும் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2003-2004ஆம் ஆண்டிற்கான தொழில் முனைவோர் பயிற்சிக்காக 7,000 நபர்கள் பல்வேறு துறைகள் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 3,965 பேருக்கு மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தொழில் திறன் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் 2002-2003ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் பயிற்சி பெற்றுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 1,767 நபர்களுக்கு பல்வேறு துறைகள் மூலம் தொழில் திறன் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது. இதில் மகளிர் திட்டம் மூலமாக 966 நபர்களுக்கு ரூ.5.32 இலட்சத்தில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

2003 - 04ஆம் ஆண்டிற்கான தொழில் திறன் பயிற்சி இதுவரை 454 நபர்களுக்கு ரூ.2.11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ள ரூ.4.34 இலட்சம் தொகைக்கான தொழில் திறன் பயிற்சி வழங்கிடும் பொருட்டு பயனாளிகள் தேர்வு செய்து விரைவில் பட்டியல் அனுப்ப தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

அனைத்து அரசுத் துறையினரையும் ஒருங்கிணைத்து செயல்படுதல்

சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு துறையினரும் மாதா மாதம் நடைபெறும் வட்டார அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகளை மகளிர் குழு பிரதிநிதிகளுக்கு விளக்கிடும் பொருட்டு வட்டார அளவிலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்ட கால அட்டவணையினை மாவட்ட ஆட்சியரின் முகப்புக் கடிதத்துடன் இணைத்து அனைத்துத் துறை மாவட்ட அலுவலர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் அனுப்பப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் 2003-2004ஆம் ஆண்டிற்குப் புதிய மகளிர் குழுக்கள் அமைத்தல்

2003-04ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் புதிய குழுக்கள் துவக்கிட 911 குறியீடு நிர்ணயிக்கப் பட்டுள்ளதில் நவம்பர் 2003ஆம் மாதம் முடிய 827 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இலக்கினை எய்திட மீனவர்கள், விலைமாதர்கள், அரவாணிகள், நெசவாளர் மகளிர், துப்புரவுப் பணியாளர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மகளிர், உடல் ஊனமுற்றோர், கைவினைக் கலைஞர்கள், கலப்பினக் குழுக்கள் அமைக்க தொண்டு நிறுவனங்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஆண்களுக்கென இளைஞர் சுய உதவிக் குழுக்கள் நேரு யுவகேந்திரா தொண்டு நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக் குறியீடான 150இல் இதுவரை 120 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 2001-2002 முடிய ஆண்டுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள புதியதாகத் திருமணமான மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் / உறுப்பினர் மகள் ஆகியோருக்கு ஒரு முறை மட்டும் இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கிட சேலம் மாவட்ட இலக்கு 203 என நிர்ணயிக்கப்பட்டதில் இலக்கிற்கு அதிகமாக மொத்தம் 253 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு சேலம் மகளிர் திட்ட அலுவலகத்தால் வழங்கப்பட்டது.

தற்போது 2002-2003 ஆம் ஆண்டுக்கு, இத்திட்டத்தில் 400 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்கிட சென்னை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 97 பயனாளிகள் இவ்வலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டும், மேலும் 54 நபர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் வருகிறது. எஞ்சியுள்ள 249 தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்து அனுப்பிட தொண்டு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.2000/- வரை பேறுகாலக் கடன் மற்றும் உறுப்பினர்களுக்கு சீறுவணிகக் கடன் வழங்குதல்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இதுவரை சேலம் மாவட்டத்தில் 657 சுற்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.13.12 இலட்சம் பேறுகாலக் கடனாகவும் மற்றும் 289 மகளிர் குழு உறுப்பினர்களடங்கிய 34 குழுக்களுக்கு தலா ரூ.2000/- வீதம் ரூ.5.78 இலட்சம் சிறு வணிகக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டங்களின் கீழ் தகுதியான மகளிர் குழு உறுப்பினர்கள் அதிக அளவில் பயனடைய தீவிர நடவடிக்கை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கிஷோரி சக்தி யோஜனா 2002-2003

கிஷோரி சக்தி யோஜனா 2001-2002 திட்டத்தில் சேலம்-1, சேலம்-2, கெங்கவல்லி, பெத்தநாயக்கன் பாளையம் ஆகிய நான்கு குழந்தைகள் ஊட்டச்சத்துத் திட்ட அலுவலகப் பகுதிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 120 வளர் இளம் பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் கல்வி, தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் பல்வேறு இனங்களில் (தையற்கலை, அழகுக்கலை, காகிதப் பொருட்கள் தயாரிப்பு) தொழில்திறன் பயிற்சி வழங்கப்பட்டது.

அந்தூரியா செடிகள் வளர்த்தல்

சேலம் மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், தோட்டக் கலைத்துறை மற்றும் தாட்கோ அலுவலகங்கள் இணைந்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்காட்டில் தீபம் தொண்டு நிறுவனத்தினரால் தொடங்கப்பட்ட ஏற்காடு பஞ்சாயத்து அளவிலான 12 உறுப்பினர்கள் இணைந்து அந்தூரியா மலர்ச்செடிகள் 1 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.25 இலட்சம் முதலீட்டில் வளர்த்திட முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது. திட்டத்தினை செயல்படுத்திட 1 ஏக்கர் ஊராட்சி ஒன்றிய நிலத்தினை சுமார் 30 வருட குத்தகைக்குத் தர நட்வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண்மைத் தொழில்நுட்ப அடிப்படைப் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் 2003-04ஆம் ஆண்டில் 1,000 மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வேளாண்மை தொழில் நுட்ப அடிப்படைப் பயிற்சி வழங்கிட தெரிவிக்கப்பட்டதில், இதுவரை 417 நபர்களுக்கு வேளாண்மைத்துறை மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது 180 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் குழுக்களின் விருப்பத்தின் பேரில் ஏற்காட்டில் பழரச தயாரிப்புத் தொழிற்சாலை ஏற்படுத்துதல், கூரியர் சர்வீஸ் துவக்குதல், ஊட்டச்சத்து மாவு உருண்டைகள் தயாரித்தல், தரிசு நில மேம்பாடு திட்டத்தினைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுத்த பல்வேறு துறைகள் மற்றும் தொண்டு நிறுவனம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பெண்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் அவர்கள் முழு ஆற்றலுடன் திறமைகளை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதனால், பெண்களும் அவர்களின் குழந்தைகளும், குடும்பத்தினரும் சமுதாயமும் மேம்படுவதற்கு வழிவகைகள் ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நம் ஆன்றோர்கள், சான்றோர்கள், பாவலர்கள் பெண்களின் மேம்பாடு குறித்து கண்ட கனவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நனவாக்கப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையல்ல.

- மூ.நா. கிருட்டிணசாமி
செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

* * *

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மக்களின் பங்கேற்பில் உருவான மகத்தான பள்ளிக்கூடம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமையின் உயர்வுக்கு ஓர் அடையாளமாக திகழ்கிறது மணச்சநல்லூர். திருச்சிராப்பள்ளியிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு நடுத்தர கிராமம். அரிசி ஆலைகள் நிறைந்த இந்த ஊர் தரமான அரிசிக்கும் புகழ் பெற்றது.

"ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்'' என்று பாடினார் பாரதியார். அதன்படி அரிசி ஆலைகள் அமைத்து தரமான அரிசி வழங்கிய அவ்வூர் மக்கள் அடுத்து கல்விச்சாலைகள் அமைக்க உறுதி பூண்டனர்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்கிற வள்ளுவர் வாக்கினை நன்குணர்ந்த மணச்சநல்லூர் பொதுமக்கள், நம் பிள்ளைகளும் நன்கு கல்வியறிவு பெற்று வளர வேண்டும், நம் ஊரிலும் ஒரு பள்ளிக்கூடம் அமைய வேண்டும். அதற்கான வழிமுறைகளை நம் ஊர் பொதுமக்களே செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படி 1949ஆம் ஆண்டு அரிசி ஆலை சங்கமும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து நிதி திரட்டி மணச்சநல்லூரில் ஒரு நடுநிலைப்பள்ளியைக் கட்டினார்கள். பள்ளியின் இருப்பிடம் 4.8 எக்டேர் பரப்பளவு கொண்டது.

அவ்வாறு தொடங்கப்பட்ட அப்பள்ளி கடந்த 50 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. காலப்போக்கில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரித்ததாலும் பழைய கட்டடத்தில் பள்ளிக்கூடம் செயல்படுவதில் உள்ள சிரமத்தை ஆசிரியர்களும், பொதுமக்களும் உணர்ந்தனர்.

பள்ளிக்கூடம் தொடங்கி 50 ஆண்டுகள் கடந்துவிட்டபடியால், பொன்விழா கொண்டாடவும், அதே நேரத்தில் புதிய கட்டடம் கட்டி நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தவும் விரும்பினார்கள். அதன்படி அதற்காக செயல்பட பள்ளித் தலைமையாசிரியர் தலைமையில் பொன்விழாக் குழு அமைத்தார்கள். பொன்விழாக் குழுவில் ரூ.30 இலட்சம் செலவில் 12 அறைகள் கட்ட தீர்மானிக்கப்பட்டது.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' என்கிற எண்ணத்தில் எதற்காகவும் காத்திராமல் முதன்முதலாக அப்பள்ளியின் ஆசிரியர் குழாம் தங்கள் பங்குத் தொகையாக ரூ.50,000/– நிதியில் கட்டடப் பணி தொடங்கப்பட்டது.

"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள''

– என்கிற திருவள்ளுவரின் வாக்குப்படி, மணச்சநல்லூர் அரிசி ஆலை அதிபர்கள், வணிகர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், ஊர் பொது மக்கள், பிற ஊர்களைச் சேர்ந்த கொடை உள்ளம் கொண்டவர்கள் ஆகியோர் கொடுத்த நிதி ரூ.22.75 இலட்சம் ஆகும்.

மேலும் முசிறி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மல்லிகா சின்னசாமி அவர்களின் ஒதுக்கீட்டிலிருந்து ரூ.4.5



இலட்சமும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.5 இலட்சமும் பெறப்பட்டது.

பொன்விழாக்குழு எடுத்த அரிய முயற்சியின் பயனாக ரூ.80 இலட்சம் நிதி சேர்க்கப்பட்டு, பள்ளிக் கட்டடத்தின் தரை தளமும் முதல் தளமும் சேர்ந்து 33,000 சதுர அடியில் 30 வகுப்பறைகள் கட்டப்பட்டு, பொன்விழாக் கட்டடம் எழிலார்ந்த பூர்வமாகக் காட்சி அளிக்கிறது.

மணச்சநல்லூர் மக்களின் ஒற்றுமைக்கு சான்றாக திகழும் இந்த அழகிய மேல்நிலைப்பள்ளி கட்டடத்தை கடந்த 10.12.2003 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.எஸ்.செம்மலை அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி அவர்கள் விழா பொன்மலரை வெளியிட்டார்கள். இவ்விழாவிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றார்கள்.

இவ்வரிய செயலை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பாராட்டிப் பேசியதாவது,

"கல்வியைப் போல பரிசுத்தமான பொருளை எங்கும் காண முடியாது", என தத்துவஞானி ப்ளாட்டோ கூறிய கருத்தை இந்த ஊர் பொதுமக்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் அழியாத சொத்து என்னவென்றால், கல்வி. அதை உங்கள் குழந்தைகளுக்கு கொடுத்துள்ளீர்கள் என்று கூறினார்.

– கோ. பன்னீர்செல்வம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

"தமிழைக் கற்றவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப் படையிலேயே, ஓரளவுக்கு நிம்மதியை அளிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம்.

நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும்.

பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடவேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். இசைத் தட்டுகளில் ஒலித்தால் மட்டும் போதாது. மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆக வேண்டும். எவ்வளவோ நாட்டில் எழுதப் படுகின்றன. ஒரு பத்து, பன்னிரண்டு வரிகளையாவது நாம் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டால் அது நமக்குக் கட்டாயம் பயன்படும்.

திருக்குறள் 2 வரிகளில்தான் எழுதப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்களுக்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன் படுவதற்காக – தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் தமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது".

– 1984 ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.



இரத்த அழுத்தம் ஒரு பார்வை

நமது உடலின் போக்குவரத்து சாதனம் இரத்தம். இது உடலெங்கும் சுற்றி எல்லா செல்களுக்கும் ஆக்சிஜனையும் ஊட்டச் சத்துக்களையும் வழங்குகிறது. அவைகள் வெளியிடும் கழிவுப் பொருள்களை மீண்டும் சுத்திகரிப்பு சாலைக்கு எடுத்துச் செல்லுகிறது. உடலெங்கும் இரத்த ஓட்டம் சீராக நடைபெற உதவும் பம்ப் இருதயம் என்பது தெரியும். ஆனால் இரத்தக் குழாய்களில் இரத்தம் செல்ல உதவும் விசை எதுவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? அந்த விசை இரத்த அழுத்தம். இரத்த நாளங்களின் வழியாகச் செல்லும் இரத்தம் அந்த நாளச் சுவர்களின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தை உண்டாக்குகிறது. பொதுவாக இது ஒரே நிலையாக இருக்கும். ஏதேனும் வேறுபாடுகள் இருந்தாலும் அது குறிப்பிடத்தக்க நிலையில் இருக்காது.

இடது வெண்ரிக்கிள் சுருங்கும்போது இரத்தத்தை வேகத்துடன் மகாதமனிக்குள் செலுத்துகிறது. வேகத்தையும், நேரத்தையும் கணக்கிடும் காலமாயிற்றே இது. வெறும் வேகம் என்று சொன்னால் போதுமா? எத்தனை வேகம் என்று சொல்ல வேண்டாமா? ஏறக்குறைய மணிக்கு 1.4 கிலோ மீட்டர் வேகத்தில் செலுத்துகிறது. இந்த வேகத்தில் மகாதமனிக்குள் நுழையும் இரத்தம் குறுந்தமனிகளை அடையும்போது அதன் வேகம் மணிக்கு 72 மீட்டர்கள்! தந்துகிகளில் செல்லும்போது அதன் வேகம் 18 மீட்டர்கள்!

இடது வெண்ரிக்கிளிலிருந்து துவங்கிய உடன் மகாதமனி பல கிளைகளாகப் பிரிகிறது. இக்கிளைகள் மேலும் பல கிளைகளாகவும் மாறுகிறது. இவைகள் இவ்வாறு பிரியப்பிரிய சிறு நாளங்களின் குறுக்களவு படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இவைகளின் வழியாக வரும் இரத்தத்தின் வேகமும் குறைந்து விடுகிறது. ஆனால் இவைகள் இரத்த விநியோகம் செய்யும் பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இரத்த அழுத்தம், இரத்த சுழற்சியின் ஆரம்பத்தில் அதிகமாக உள்ளது. பின்னர் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்பது இரத்தம் அது செல்லும் நாளங்களின் பக்கச்சுவர்களில் ஏற்படுத்தும் அழுத்தம். ஆரம்பத்தில் அழுத்தம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் வேகம். வேகம் குறையக் குறைய அழுத்தமும் குறைந்து கொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்று சொல்லும்போது தமனிகள், குறுந்தமனிகள், தந்துகிகள், சிரைகள் ஆகியவற்றில் ஏற்படும் அழுத்தத்தையும் குறிப்பதுதான். ஆனால் பொதுவாக கணக்கிடுவது பெரிய தமனிகளின் அழுத்தத்தைத்தான்.

ஏறக்குறைய 57 கிராம் அளவு ஆக்சிஜனூட்டம் பெற்ற புதிய இரத்தம் ஒவ்வொரு இருதயத்துடிப்பின் போதும் இருதயத்திலிருந்து வெளி செலுத்தப் படுகிறது. உடலெனும் உலகிலுள்ள ஒரு இலட்சம் கிலோமீட்டர் நெடுஞ்சாலைகளில் (இரத்த நாளங்களில்) சுற்றுலாவை ஆரம்பிக்கிறது. அவ்வாறு வர அதற்குத் தேவையான விசை அல்லது அழுத்தம் தேவை. இந்த அழுத்தம் வெப்ப இரத்தவோட்ட உயிரினங்கள் எல்லாவற்றிடையேயும் அனேகமாக சமமாக இருக்கும். சிறிய உயிரினமாக இருந்தாலும் பெரிய உயிரினமாக இருந்தாலும் சரி இரத்த அழுத்தம் ஏறக்குறைய ஒரே மாதிரி இருக்கும். இருதயத் துடிப்பு வீதம்போல் வேறுபாடுகள் இருக்காது.



இரத்த அழுத்தம் பொதுவாக எவ்வித பாதிப்பும் இல்லாதவர்களிடையே அவர்களது வயதுடன் 100ஐக் கூட்டினால் வருப் எண் சுருக்கு அழுத்தமாகவும் விரிவழுத்தம் 60 முதல் 80 மில்லி மீட்டர் பாதரசமாகவும் இருக்கும். உடலின் தேவை தன்மைக்கேற்ப

இரத்த அழுத்த வேறுபாட்டைக் கட்டுப்படுத்தும் சிக்கலான அமைவுகள் உடலில் உள்ளன.

இரத்த அழுத்தம் இரத்த நாளங்களின் வழியே செல்லும் இரத்தம் அவைகளின் சுவர்களில் ஏற்படுத்தும் விசை அல்லது அழுத்தம் என்று தெரிந்து கொண்டோம். குறுந்தமனிகளிலும் தந்துகிகளிலும் இரத்தம் மிக மெதுவாகச் செல்லுகிறது. இதனால் தமனிகளில் இரத்த அழுத்தம் சிரைகளின் அழுத்தத்தை விட அதிகமாக இருக்கும். அதாவது தமனியில் இரத்தம் எப்போதும் நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு முறை இருதயம் சுருங்கும் போதும் தமனிகளில் அழுத்தம் அதிகமாகிறது. அது விரிவடையும் போது அழுத்தம் குறைகிறது. எனவே இரத்த அழுத்தத்தைப் பார்க்கும்போது இருவகை அழுத்தங்கள் இருப்பது தெரியும். இருதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தம் அதிகமாக இருக்கும். விரிவடையும்போது ஏற்படும் அழுத்தம் குறைவாக இருக்கும்.

இரத்த அழுத்தம் எல்லோருக்கும் எப்போதும் 120/80 மி.மீ. என்று இருக்க வேண்டிய அவசியமில்லை. இது வயது, உயரம், எடை, பாலினம், நோய் ஆகியவற்றை ஒட்டி மாறுபடும். இரவில் ஓய்வெடுக்கும் போது அழுத்தம் குறைவாக இருக்கும். வயதாக ஆக அதிகரித்துக்கொண்டு போகும். ஆண்களை விட பெண்களுக்கு இரத்த அழுத்தம் அதிகம்.

பிறந்த குழந்தைக்கு சுருக்கழுத்தம் 40 மி.மீ. பாதரசம் இருக்கும். பிறந்த ஒரு மாதத்தில் இது 80 மி.மீ. ஆக உயர்ந்துவிடும். விரிவழுத்தம் 40 மி.மீ. ஆக இருக்கும். பொதுவாக இளங்குழந்தைகளிடையே இரத்த அழுத்தம் 80/40 அல்லது 90/50 மி.மீ ஆக இருக்கும்.

அதிக உடலுழைப்பு, தேகப்பயிற்சி, மனப்பதற்றம் போது இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. உடலுக்கு அதிகப்படியான ஆக்சிஜனூட்டம் தேவைப்படும் நிலையில் இருதயம் துரிதமாக இயங்குகிறது. இரத்தத்தை விசையுடன் தமனிக்குள் செலுத்த விரைந்து வரும் இரத்தம் தமனிச் சுவர்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இம்மாதிரி நேரங்களில் சுருக்கழுத்தம் 180 மி.மீ. பாதரசம் என்ற அளவில் உயர்ந்து விடும். இது தற்காலிகமாக ஏற்படுவது. எனவே இதனால் பயம் ஒன்றுமில்லை.

இரத்த மிகை அழுத்தம் என்பது பொதுவாக ஒரு நோயல்ல. இது நோய்க்குறிகளில் ஒன்று. சுருக்கழுத்தம் 140ம் அதற்கு மேலும், விரிவழுத்தம் 90ம் அதற்கு மேலும் இருந்தால் அது இரத்த மிகை அழுத்தம் என்கிறது, அமெரிக்காவிலுள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த். எனினும் சுருக்கழுத்தம் 100 முதல் 140 மி.மீ. என்பது சாதாரணம். வயது முதிர்ந்தவர்களிடையே சுருக்கழுத்தம் 150 ஆகவும் விரிவழுத்தம் 90 ஆகவும் இருப்பதுண்டு. 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடையே 160/90 ஆக இருப்பதும், 75 வயது ஆனவருக்கு 170/100 மி.மீயும் இயல்புதான்.

இந்த இயல்பான அளவிற்கு மேல் போகும் ஒவ்வொரு 10 மி.மீ.யும் இருதய நோய்களும் வன்தாக்கிற்கும் வழிவகுக்கும். சுருக்க அழுத்த அதிகரிப்பை விட விரிவழுத்த அதிகரிப்பு கவலைக்கிடமானது.

இரத்த மிகை அழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. 5 முதல் 10 சதவிகிதம் சிறுநீரகக் கோளாறுகள், தமனி நாளச் சுருக்கம் குறிப்பாக சீறுநீரகத் தமனிகளில் ஏற்படும் குறுக்கும், அட்ரினல் சுரப்பியின் மிகை சுரப்பு அல்லது அட்ரினல் சுரப்பியில் கட்டி ஆகிய காரணங்களினால் ஏற்படுகிறது. எப்போதும் எதிலும் பரபரப்பு, படபடப்பு, துரிதம் ஆகியவற்றையும் சொல்லலாம். 90 சதவிகித நோய்களில் இரத்த மிகை அழுத்தத்திற்குரிய காரணங்களைக் கண்டறிய முடியாது.

காரணமறிய முடியாத இரத்த மிகை அழுத்தத்திற்கு முதனிலை இரத்த மிகை அழுத்தம் என்று பெயர்.

முதனிலை இரத்த மிகை அழுத்தம் எதனால் உண்டாகிறது என்பதற்குச் சரியான காரணங்கள் தெரியாது. எனினும் அது ஏற்பட தூண்டுகோலாக இருப்பவைகள்:

1) உப்பு 2) தமனி படர்வடு 3) உடற்பருமன் (எடை) 4) ஈஸ்ட்ரோஜன் 5) பரம்பரை ஆகியவைகள் ஆகும்.

உயிர்வாழ உப்பு மிகத் தேவை. உடலின் தண்ணீர் சமநிலையைப் பேண, திசுக்களிடையே தண்ணீரைத் தக்க வைத்துக்கொள்ள உப்பின் உதவி மிக அவசியம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமே. நாள்தோறும் ஆயுள் முழுவதும்

உப்பைச் சேர்த்துக் கொண்டே வந்தால் அளவிற்கு மீறி விடுகிறது. மிகை அழுத்தத்தில் கொண்டு போய் முடிகிறது.

ஆஸ்திரேலிய ஆதிக் குடியினர், எஸ்கிமோக்கள் மற்றும் உலகில் பல பகுதிகளில் வாழும் பழங்குடியினர் உணவில் உப்பை மிகச்சிறிய அளவிலேயே சேர்த்துக் கொள்ளுகின்றனர். இந்தக் குழுவினரிடையே மிகை அழுத்தம் என்பதே கிடையாது. இன்னும் சொல்லப் போனால் வயதாக ஆக இவர்களிடையே இரத்த அழுத்தம் குறைந்து கொண்டுதான் வருகிறது.

இதற்கு நேர்மாறான நிலையிலிருப்பவர்கள் சாலமன் தீவுகளிலுள்ள பழங்குடிகளில் ஓர் இனமும், ஜப்பானின் வட பகுதியில் வாழும் விவசாயிகளும் முன்னவர்கள் காய்கறிகளை கடல் நீரில் வேக வைப்பதின் மூலமும் தினமும் உட்கொள்ளும் உப்பின் அளவை தங்களை அறியாமலேயே அதிகப்படுத்திக் கொள்ளு கிறார்கள். பின்னவர்கள் (ஜப்பானிய விவசாயிகள்) உணவுப் பொருள்கள் கெடாமல் இருப்பதற்காக உப்பிலே ஊற வைத்து உண்பதால் அதிக உப்பை உடலில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்விரு பிரிவினர்களிடையேயும் ஏறக்குறைய 60 சதவிகிதத்தினர் இரத்த மிகை அழுத்தத்தினால் அவதிப்படுகிறார்கள். வன்தாக்கு நோய்க்குள்ளாகி மரணமும் அடைகிறார்கள்.

நமது உடலின் ஒரு நாள் உப்புத்தேவை 500 மில்லி கிராம்கள்தான். ஆனால் தினமும் உணவுடன் நாம் சேர்த்துக் கொள்ளும் உப்பின் அளவு ஏறக்குறைய 15 முதல் 20 கிராம்கள். அதாவது 15,000 முதல் 20,000 மில்லி கிராம்கள். சிறு நீரகத்தின் பணிகளில் ஒன்று இரத்தத்தில் உப்பின் செறிவை நிலையாக வைத்திருப்பது அதாவது அதிகப்படியான உப்பை அகற்றுவது. அதன் பணித் திறனை விட பல மடங்கு உப்பு அதிகமாகச் சேர்ந்தால் அதனால் என்ன செய்ய முடியும்? இனியொரு விதி செய்து நாளும் 5 கிராமிற்குள் உப்பு சேர்த்துக் கொள்வது என்று கடைபிடித்தால் மிகை அழுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது.

உடற்பருமன் மிகை இரத்த அழுத்தத்திற்கு வழி செய்கிறது. கொழுப்பு உடலுக்குத் தேவைதான். ஆனால் அளவிற்கு அதிகமான கொழுப்பு தேவையற்ற நோய்க்கு பாதை போட்டு விடும். தேவையான எடைக்கு மேல் 20 சதவிகித எடை அதிகமுள்ளவர்களுக்கு இரத்த மிகை அழுத்தம் ஏற்படுகிறது. தேவையற்ற எடையைக் குறைப்பதின் மூலம் இரத்த அழுத்தத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து விடலாம்.

கருத்தடை மாத்திரையில் அடங்கிய ஈஸ்ட்ரோஜன் எனும் ஹார்மோன் பெண்களிடையே இரத்த மிகை அழுத்தம் ஏற்படத் தூண்டுகோலாக உள்ளது. இது உப்பை தக்க வைத்துக் கொள்ளும் திறனுடையது. நாளடைவில் இரத்த மிகை அழுத்தத்தில் கொண்டுபோய் முடியும்.

பரம்பரை காரணமாகவும் இரத்தமிகை அழுத்தம் வருகிறது. இந்த வகை பொதுவாக 40 வயதிற்கு மேலாகவே ஏற்படுகிறது. உணவில் கட்டுப்பாடு, உடல் எடை குறைப்பு, மருந்துகள் மூலமாக இதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடலாம்.

– "உடலியல் கலைக்களஞ்சியம்
நூலிலிருந்து"

* * *

ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலைய முதல் விற்பனை தொடக்க விழா

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்ற பழமொழி பலருக்கு வாழ்வளித்து, இன்று உயிர் மொழியாக விளங்கி வருவதை கைத்தொழில் செய்து வெற்றி கண்டு வருபவர்கள் மூலம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். இந்தியா தன் பொருளாதாரத்தை உயர்த்தி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய எல்லா வழிகளிலும் முயற்சி எடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கைத்திறன் மூலம் தயாரிக்கப்பட்ட அழகிய கலைப் பொருட்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பூம்புகார் நிறுவனம் அமைக்கப்பட்டு அதன் வாயிலாக கைவினைப் பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு சாதனை படைத்து வருகின்றது. இதனால் கிராமங்களில் கைத்திறன் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காப்பதற்காகவும் பூம்புகார் விற்பனை நிலையம் பேருதவி புரிவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்க ஈரோடு நகரில் 3,200 சதுர அடி இடம் வாங்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் பங்காக ரூ.16.50 இலட்சமும் மத்திய அரசின் பங்காக ரூ.12.65 இலட்சமும் பூம்புகார் கழகத்தின் சார்பில் ரூ.9.85 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.39 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பூம்புகார் விற்பனை நிலையம் இன்று புதிய சொந்த கட்டடத்தில் விற்பனையைத் தொடங்கியுள்ளது. மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் புதிய கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்தும், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் முதல் விற்பனையைத் தொடங்கியும் வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை பூம்புகார் நிறுவனத்திற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.155 இலட்சம் மதிப்பில் மாங்காடு காமாட்சியம்மன் கோயிலுக்கு தங்கத்தேர், சிவன்மலைக்கு ரூ.48 இலட்சம் மதிப்பில் மரத்தேர், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ரூ.4.27 இலட்சம் மதிப்பில் தங்க கொடிமரம், மருதமலை கோயிலுக்கு ரூ.108 இலட்சம் மதிப்பில் தங்கத்தேர், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு ரூ.1.68 இலட்சம் மதிப்பில் தங்க கருட வாகனம், பண்ணாரி அம்மன் கோயிலுக்கு ரூ.48 இலட்சம் மதிப்பில் தங்கரதம், மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்கு ரூ.77 இலட்சம் மதிப்பில் தங்கரதம், ஈச்சனாரி விநாயகருக்கு ரூ.47 இலட்சம் மதிப்பில் தங்கரதம்

ஆகமொத்தம் ரூ.5 கோடி மதிப்பில் உத்தரவின் பேரில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.9.03 இலட்சம் செலவில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கும், ரூ.20.48 இலட்சம் செலவில் கைலாசநாதர் கோயிலுக்கும் மரத்தேர்களும், ரூ.1.95 இலட்சம் செலவில் பன்னாரி மாரியம்மனுக்கு தங்கத்தேர், ரூ.17.33 இலட்சம் மதிப்பில் இஸ்கான் கோயிலுக்கு செப்பு தகடு போர்த்தும் பணி, ரூ.6.56 இலட்சம் மதிப்பில் கொளஞ்சியப்பர் கோயிலுக்கு வெள்ளி ரதம், ரூ.1.20 இலட்சம் மதிப்பில் முண்டகக் கண்ணியம்மன் கோயிலுக்கு வெள்ளித்தகடு கதவு, ரூ.29.81 இலட்சம் மதிப்பில் அம்மன் சன்னதிக்கு வெள்ளித்தகடு, ரூ.9.55 இலட்சம் செலவில் வெள்ளியம்பல நடராசர் சன்னதிக்கு வெள்ளித்தகடு, ஆகமொத்தம் ரூ.95.91 இலட்சம் மதிப்பீட்டில் பூம்புகார் நிறுவனத்திற்கு பணி கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறன்றன.

தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் பூம்புகார் விற்பனை நிலையம் 9 இடங்களில் தொடங்க திட்டமிடப்பட்டு தற்போது திருவண்ணாமலையில் கடை கொடுக்கப்பட்டு பூம்புகார் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள திருத்தணி, மதுரை, திருச்செந்தூர் போன்ற 8 இடங்களில் உள்ள கோயில்களில் மிக விரைவில் பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு இடம் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பூம்புகார் விற்பனை நிலையத்தில் சுய உதவிக்குழுக்கள் தயார் செய்த கைத்திறன் கொண்ட அழகிய பொருட்களை வாங்கி விற்பனை செய்யப்படுவது பாராட்டுக்குரியது என மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் 12 பூம்புகார் விற்பனை நிலையங்கள் உள்ளன. ஈரோடு விற்பனை நிலையத்தையும் சேர்த்து 8 விற்பனை நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வெளி மாநிலங்களில் 4 விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் 3 விற்பனை நிலையங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இந்நிறுவனம் வெளி மாநிலங்களில் மும்பை, பூனா, ஐதராபாத், விசாகப்பட்டினம் போன்ற இடங்களிலும் தமிழ்நாட்டில் 15 இடங்களிலும், கண்காட்சி நடத்தி வந்துள்ளது. பூம்புகார் விற்பனை நிலையத்தில் விற்கப்படுகின்ற பொருட்கள் கலைநயத்தோடு உருவாக்கப்பட்டவை, மிகுந்த மதிப்புமிக்கவை. நமது பண்பாட்டை எடுத்துக் காட்டுபவைகளாக அமைந்துள்ளன என மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.கு.பாண்டுரங்கன் அவர்கள் நிகழ்ச்சியில் உரையாற்றியபோது கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி துணிநூல், கைத்திறன் மற்றும் கதர்த்துறை செயலாளர் திரு.அ.இளங்கோவன்,இ.ஆ.ப., திட்ட விளக்க உரையாற்றினார். ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.தென்னரசு முன்னிலையுரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.கந்தசாமி, திரு.பி.சிதம்பரம், திரு.கே.எஸ்.பழனிசாமி, மாவட்ட விற்பனைக் குழுத் தலைவர் திரு.ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிறுவனத்தில் எண்ணற்ற கைத்திறன் கொண்ட தொழிலாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் ஏற்றம் பெறுகின்றன. இந்த அரிய கலைப்பொருட்களை வாங்கி மற்றவர்களுக்குப் பரிசளிப்பதின் மூலமாகவும் வீட்டில் அழகுபடுத்துவதின் மூலமாகவும் கைத்திறன் தொழிலை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறு பங்கு வகிக்கும் பெருமையை அடைவதோடு காந்தி கண்ட கனவான கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

- எம்.ஆர். லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

❖ ❖ ❖

அச்சுக்கலை

அச்சுக்கலை பற்றிய அறிமுகம் முதன்முதலில் சீனாவில் கி.பி.868–இல் தொடங்கியது. வாங்சிங் என்பவர் "கிரக சூத்ரா" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். இதுதான் உலகிலேயே மிகவும் பழமையான அச்சுப்புத்தகம் என்று கருதப்படுகிறது.

அசையும் அச்சு எழுத்துக்களை (Moving Types) 1301–இல் பைசாங் என்பவர் கண்டுபிடித்தார்.

அச்சு இயந்திரம் – ஜெர்மனியில் கூடன்பர்க் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த இயந்திரம் மூலம் வால்கேட் என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவர் சற்றே மாறுதலுடன் ஒரு அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

ஈரோடு மாவட்டத்தில் அரவாணிகளுக்கு உதவிட தனி சுய உதவிக்குழுக்கள்

மகளிர், பொருளாதாரத்தில் தற்சார்பு நிலை பெற்று சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டுமென்றால், அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டுவது அவசியமாகும். அந்த அடிப்படையில், ஈரோடு மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. கோயில்களில் காலணிகளைப் பாதுகாத்தல், கல்குவாரி நடத்துதல், பனைப் பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களை சுயஉதவிக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் ஊராட்சிப் பகுதிகளில் 4,846 குழுக்களும் பேரூராட்சிப் பகுதிகளில் 1,518 குழுக்களும், நகராட்சிப் பகுதிகளில் 204 குழுக்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் 95,849 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சுயஉதவிக்குழுக்களின் மொத்த சேமிப்பு ரூ.10.84 கோடியாக உயர்ந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் அரவாணிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கென்று தனியாக சுயஉதவிக்குழுக்களை அமைக்க அரசு திட்டமிட்டு, நான்கு குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவற்றில் 77 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளனர். இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர் களுக்கு, குழுவை எவ்வாறு நடத்தவேண்டும், குழு உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், எந்தெந்தத் தொழில்களை மேற் கொண்டால் இலாபகரமாக நடத்த முடியும் என்பவை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரவாணிகளுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டிருப்பது, அவர்களும் சமுதாயத்தில் மதிக்கத் தக்கவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- எம்.ஆர்.லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

செய்தியைப் பற்றி ஒரு செய்தி

முதன் முதலில் எகிப்து நாட்டில் அடிமைகள் மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

பின்னர் கிரேக்க நாட்டில், ஜூலியஸ் சீசர் காலத்தில் மக்கள் தொடர்பு என்ற கொள்கை வளர்ச்சி அடைந்தது. சுவரில் போஸ்டர்களை ஒட்டி செய்திகளைத் தெரிவிக்கும்முறை தோன்றியது. அதற்கு "ஆக்டன் துர்னா" (Actan Durna)என்று பெயர் சூட்டினர். இதனால் ஜூலியஸ் சீசரை "இதழியலின் தந்தை" என்பர்.

இந்தியாவில் அசோகர் காலத்தில் செய்திகள் பரிமாற்றம் சிறந்த முறையில் நடைபெற்றது. கல்வெட்டுகள், பாறைகள் ஆகியவற்றில் செய்திகளைச் செதுக்கி வைத்தனர். ஓவியங்கள் மூலமாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்.

நட்சத்திரக் குழந்தைகள்

பி.எஸ்.ராமையா

"அப்பா! நட்சத்திரங்களுக்குக்கூட அப்பா உண்டோ?''

"உண்டு அம்மா!''

"அவர் யார் அப்பா?''

"ஸ்வாமி''

"ஸ்வாமியா? அப்பா அவர்கூட உன்னைப்போலத் தானே இருப்பார்? நட்சத்திரம் ரொம்ப அழகாயிருக்கே! அவர் அப்பாகூட அழகாகத்தானே இருப்பார்?''

"ஆமாம் அம்மா! ஸ்வாமினுடைய அழகைப் போல வேறு யாருக்கும் அழகு இல்லை''.

"ஸ்வாமிகூட உன்னைப் போல நல்லவர் தானே?''

"ஆமாம்''

"ஆமாம். எனக்குக்கூடத் தெரிகிறது. ஸ்வாமி ரொம்ப ரொம்ப நல்லவர். நட்சத்திரமே பளிச்சின்னு அவ்வளவு நன்னாயிருக்கே! அவா அப்பா எப்படியிருப்பார்?''

"அவர் ரொம்ப நல்லவர், நம்மையெல்லாம் விடப் பெரியவர்''

"அப்பா! நட்சத்திரம் எப்போ பிறக்கும்?''

"சாயங்காலத்தில்''

"எப்படியப்பா அது பிறக்கிறது?''

"நாம் சத்தியத்தையே பேசுவதால்; நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது''.

"நான்கூட நிஜத்தையே சொன்னால் நட்சத்திரம் பிறக்குமா, அப்பா?''

"ஆமாம், அம்மா! நீ ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது''.

"அப்பா!''

"என்ன அம்மா!''

"நம்ப ஊரிலே அவ்வளவு பேரும் குழந்தைகள் எல்லாம் – நிஜத்தையே பேசினா எவ்வளவு நட்சத்திரம் பிறக்கும்? நிறைய (இரண்டு கைகளையும் விரித்துக்காட்டி) இவ்வளவு நட்சத்திரம் பிறக்குமோல்லியா?''

"ஆமாம், அம்மா!''

அதைக் கேட்டவுடன் குழந்தை ரோஹிணி வேறொன்றும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாய்த் திரும்பி விட்டாள். அவள் தனது முதிரா உள்ளத்தினுள்ளே ஸ்வாமியைப் பற்றியும் அவருடைய நட்சத்திரக் குழந்தைகளின் அழகைப் பற்றியும் மனிதர்கள் யாவரும் சத்தியத்தையே பேசுவதைப் பற்றியும் கற்பனை செய்து காண முயன்று கொண்டே வாசலுக்குச் சென்றாள்.

குழந்தை ரோஹிணிக்கு ஆறு வயசுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணிமணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோத்த ஹாரம்போல இருக்கும் அவளது பேச்சு. அவளுடைய கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள், அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை சுவர்க்க உலகத்து எண்ணங்கள்.

ஸ்ரீமான் சோமசுந்தரம், பி.ஏ., வரையில் படித்திருக்கிறார். ஆனாலும்கூடக் குழந்தை ரோஹிணியின் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒவ்வொரு சமயம் திணறிப் போய்விடுவார். "ஐயோ! இந்தக் குழந்தையின் மனதைக்கூட என்னால் திருப்தி செய்ய முடியவில்லையே'' என்று ஏங்கி நிற்பார். ஆனால் ரோஹிணியைக் கண்டவுடன், ரோஹிணியைப் பற்றி நினைத்தவுடன் அவருடைய உச்சியிலெழும் கர்வம் ஒரு சக்கரவர்த்திக்குக்கூட இராது.

பட்டணத்தில் இருக்கும்பொழுது குழந்தை இயந்திரதேவியின் குழந்தைகளைப் பற்றிப் புதிய புதிய கேள்விகளைக் கேட்பாள். கிராமத்திற்கு வந்தவுடன் அவளுடைய கேள்விகள் அதியாச்சரியகரமாக மாறிவிடும். இயற்கைத் தேவியின் சிறு விளையாட்டுகளின் இடையே அவளுடைய உள்ளம் சென்று கலந்துகொள்ளும். அவளுடைய எண்ணங்கள் இயற்கை அன்னையுடன் இறக்கை விரித்துப் பறப்பவையாக இருக்கும்.

சோமசுந்தரம் அப்பொழுது தபால் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். தினந்தோறும் தபால்காரன் வருவதற்குள் அங்கேயே நேரில்போய், ஏதாவது கடிதம் உண்டாவென்று பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆவலுடன் அவசர அவசரமாகப் போவார்; கடிதம் எதுவும் வராவிட்டாலும் தினசரிப் பத்திரிகையாவது வருமே என்று போவார். அவ்வாறு அவர் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுதுதான் குழந்தை நட்சத்திரங்களைப் பற்றிக் கேட்டாள்.

அதற்குமேல் ரோஹிணிக்கு அப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் வேறு ஒன்றுமே இல்லை. நட்சத்திரங்களினுடைய அப்பாவைப் பற்றி கற்பனை செய்து கனவு காண்பதற்குத்தான் அவளுடைய சிறிய மனசில் இடம் இருந்தது.

சோமசுந்தரம் அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே தபால் ஆபீஸுக்குச் சென்றார்.

மாலை நேரம் வந்தது. குழந்தை ரோஹிணி அப்பொழுதுதான் குளித்துவிட்டு அம்மா செய்துவிட்ட அலங்காரங்களுடன் வாசலில் வந்தாள். அவர்கள் வீட்டு வாசலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வாதாமரங்கள் உண்டு. அவற்றின் நடுவில் சென்று நின்றாள். சூரியன் அஸ்தமிக்கும் சமயம்; வானவீதியில் வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்து கொண்டிருந்தன. குழந்தை ரோஹிணி மேற்றிசைக் கோடியில் நடந்துகொண்டு இருந்த இந்திர ஜாலத்தைக் கண்டாள். அவளுடைய நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவசநிலை பிறந்தது.

ஆஹா! என்ன அழகு! அங்கு அந்த வானவெளியிலே, உண்மை கவிதை செய்துகொண்டிருந்தான். ரோஹிணியின் முகம் மலர்ந்தது. அங்கு ஒரு புதிய ஒளி தோன்றியது. அது வானவெளியில் தோன்றிய திவ்ய ஒளியின் பிரதியல்ல. குழந்தையின் ஹ்ருதய சந்திரனிலிருந்து வெளிப்பட்டு முகத்தில் வீசும் நிலவு. அவளுடைய கண்கள் சுடர் எரியும் இரண்டு மீன்களெனப் பிரகாசித்தன. காலையிலே, அதிகாலையில் சூரியோதய காலத்தில் தாமரையொன்று மலர்வதைக் கண்டிருக்கிறீர்களா? கொஞ்சமாகத் திறந்து அது தனது காதலனைக் கண்டு இளநகையாடுவதைப் பார்த்ததுண்டா? அந்தத் தாமரையைப்போல மலர்ந்து, வியப்பின் சந்தோஷத்தின் இளநகை தவழ்ந்தாட ரோஹிணியின் சிறிய அழகிய வாய் சிறிது திறந்திருந்தது.

"அவள் யார்? வானத்தில் அப்படிப்படம் எழுதி விளையாடும் அந்த வானுலக ரோஹிணி எப்படி இருப்பவள்?''

குழந்தை ரோஹிணி பலகையில் சித்திரம் எழுதி விளையாடுவதுண்டு. முதலில் ஒரு படம் வரைவாள், "சீ இது நன்றாயில்லை'' என்று அதை அழித்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அது நன்றாக இருக்கும். ஆனாலும் அதைக் கலைத்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அதையும் துடைத்துவிட்டுப் புதிய தினுசாக மற்றொன்று வரைவாள்.

வானத்து ரோஹிணியும் அவ்வாறே புதிய புதிய படங்களை எழுதுகிறாள். ஆனால் அவள் அழித்து அழித்து வரையவில்லை; மாற்றுகிறாள். எல்லாம் வர்ணப்படங்கள் இல்லை. புதிய புதிய வர்ணங்கள். ஒன்றைப்போல் மற்றொன்று இல்லை. கணந்தோறும் நவநவமாங்களிப்புத் தோன்றுகிறது. அந்த வானுலக ரோஹிணிக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? குழந்தை ரோஹிணிக்கும் சந்தோஷம்தான் வானுலக ரோஹிணியின் சந்தோஷத்தைப் பற்றி நினைப்பதில்.

சந்தியாதேவி நாணத்தினால் தலைகுனிந்து கீழ்த்திசை அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வான வீதியிலே வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதத்தைப் போன்றிருக்கிறது. கல்யாணி ராகத்தின் அவரோகணம்போல, அவளுடைய செளந்தர்யம் இனிமையானது; உள்ளம் கவர்வது அது நாணத்தினால் ஆக்கப்பட்டது; நிமிர்ந்து பார்க்காது; ஆனாலும் மகிழ்ச்சி ஊட்டுவது அவளுடைய நிறம் ஸப்த வர்ணங்களில் ஒன்றல்ல; அவற்றிற்குப் புறம்பானது; அதன் பெயர் மாலை; ஆதலால் அது மயக்கம் தருவது.

வர்ணப்படங்கள் எழுதுவது நின்றுவிட்டது. இனி வேறுவகையான சித்திரங்கள், வெள்ளை மேகத்தினால் ஆக்கப்படும் உருவங்கள். ஒளியையும் நிழலையும் கலந்து எழுதப்படும் ஓவியங்கள். அவற்றின் விளிம்புகளில் சுடர் கலந்த வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கிறது. அவை ஏன் அங்கும் இங்கும் அலைந்துகொண்டே இருக்கின்றன? ஓரிடத்தில் இருந்தால் என்ன? ஆகாசத்திற்கு இந்த நீல வர்ணம் எப்படி வந்தது? பூமி ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு வர்ணமாக இருக்கிறதே; வானம் மாத்திரம் ஏன் இப்படி ஒரே நீலமாக இருக்கிறது?

நேர் மேலே இரண்டு மேக வடிவங்கள் மெதுவாக அசைந்துகொண்டு இருக்கின்றன. இரண்டிற்கும் நடுவில் நீலவானம். களங்கமற்றது; ரோஹிணியின் உள்ளத்தைப் போன்றது. அந்த இடத்திலே, அந்த இரண்டு வெண்மையான மேகக் கூட்டங்களின் இடையிலுள்ள நீலப் பட்டாடையிலே, திடீரென்று ஒரு சுடர் தோன்றுகிறது! அடேயப்பா! அது எவ்வளவு துரிதமாகத் தோன்றிவிட்டது? கண் இமைக்கும் நேரத்தைவிடச் சீக்கிரமாக, மின்வெட்டும் நேரத்தில்; அதுகூட அதிகம், ஒரு கணத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்தில் அந்தச் சுடர்ப் பொறி பிறந்துவிட்டது!

"அம்மா! ஸ்வாமிக்கு ஒரு நட்சத்திரக் குழந்தை பிறந்துவிட்டது'' என்று கூவினாள் குழந்தை ரோஹிணி. கைகளைக் கொட்டுகிறாள். அவளது கண்கள் சிரிக்கின்றன. உள்ளம் களிவெறி கொள்கிறது.

அவளுடைய தாய், வீட்டு வாசற்படியின் அருகில் நிற்கிறாள். அவளது கவனம் வீதியில் போவோர் வருவோர் மீது சென்று லயித்திருக்கிறது. அதோ போகும் பெண்ணினுடைய ஆடையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்கிறாள். குழந்தை ரோஹிணியின் வார்த்தைகள் அவளுடைய செவிகளில் படவில்லை. ஆனால் குழந்தையின் சந்தோஷம் மாத்திரம் அவளுடைய மனத்தில் சென்று தாக்கி அதை ரோஹிணியிடம் இழுத்துச் செல்லுகிறது. குழந்தையை அப்படியே விழுங்க விரும்புவளைப் போலக் கரைபுரண்டோடும் ஆசையுடன் அம்மாவின் கண்கள் குழந்தையைப் பார்க்கின்றன.

வானவெளியிலே இருள் பரவுகிறது. இருளும் அழகாகத்தான் இருக்கிறது. அதிலும் இனிமை இருக்கிறது; மாதாவின் ஸ்நேகத்தைப் போன்ற இனிமை. ஒன்றன்பின் ஒன்றாக நட்சத்திரங்கள் பிறந்து கொண்டே இருக்கின்றன. அப்பா! எத்தனை நட்சத்திரங்கள்! குழந்தை ரோஹிணியால் அவற்றை எண்ண முடியவில்லை. அவை பிறக்கும் வேகந்தான் என்ன! அந்த வேகத்தைக் குழந்தையின் சிறிய மனம் தொடர்ந்து செல்வது சாத்தியமில்லை.

"வா, கண்ணே! உள்ளே போகலாம். இருட்டிப் போய்விட்டது'' என்று அம்மா அழைக்கிறாள்.

"இரு சும்மா, போகலாம். மானத்தைப் பாரு எவ்வளவு அழகாயிருக்கு!'' என்று நிற்கச் சொல்லுகிறாள் குழந்தை.

"ஆமாம்; அழகாய்த்தான் இருக்கிறது. இருட்டிப் போய்விட்டதே. இனிமேல் இப்படி வாசலில் நிற்கக் கூடாது. வா அம்மா, உள்ளே'' என்று மறுபடி அழைக்கிறாள் அம்மா.

"அம்மா''

"உம்''

"மானம் இப்போ எதைப்போல இருக்கு சொல்லட்டுமா?''

"சொல்லு''

"உன் முகத்தைப் போல. நீ என்னை முத்தமிடுகிறாயே, அப்போ உன் முகம் இந்த மானத்தைப்போலவே இருக்கு''

அம்மாவுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. அது சரியென்று தோன்றவில்லை. ஆனால் அந்த வார்த்தைகளில் இருக்கும் ஏதோ ஒன்று, அது வாஸ்தவந்தான் என்று சொல்லியது அவளுடைய மனத்தில்.

அம்மா சட்டென்று கீழிறங்கிச் சென்று குழந்தையை இழுத்துக் கட்டிலடங்காத காதலுடன் முத்தாடினாள். அம்மாவுக்கு வீட்டில் வேலை இருக்கிறது. மற்றொரு முறை, "உள்ளே வாடா குஞ்சு'' என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டாள்.

குழந்தை ரோஹிணி சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத் திங்களையும் சமைத்தே ஓரடியாக விழுங்கிவிடும் உள்ளச் செல்வம் படைத்து அப்படியே நின்றிருந்தாள்.

வெளியே சென்றிருந்த சோமசுந்தரம் வீட்டிற்குத் திரும்பி வந்தார். வாசலில் தனியாக வானத்தின் அழகில் லயித்து நின்ற ரோஹிணியைக் கண்டார்.

"ரோஹிணிக் குஞ்சு! என்னம்மா பார்க்கிறாய்? உள்ளே போகலாம் வா'' என்று அழைத்தார். குழந்தை, "இரு அப்பா அந்த மானம் எவ்வளவு அழகாயிருக்கு! அவ்வளவு குழந்தைகளையுடைய சுவாமிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் அப்பா'' என்றாள். அதற்குள் சோமசுந்தரத்தின் மனத்தில் வேறு ஏதோ சிந்தனை வந்து விட்டது. குழந்தை சொல்லியது சரியாகக் கூடக் காதில் விழவில்லை. "உம்'' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.

அடுத்த வினாடி ஒரு விண்மீன் நிலைதவறிச் சுடர்வீசிக் கொண்டு வானத்தினின்றும் கீழே விழுந்து மறைந்தது. அதன் பிரயாணம் சில வினாடிகளே கண்ணுக்குத் தெரிந்தது.

குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது. இரண்டு கண்களினின்றும் இரண்டு நீர் வடிவமான முத்துக்கள் கீழே உதிர்ந்தன. இந்த சின்னஞ்சிறு ஹிருதயத்தில், விவரிக்க இயலாத, சுருக்கென்று தைக்கும் ஒரு வேதனை காணுகின்றது. குழந்தை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அழுகையினிடையில், "அப்பா'' என்று இரும்பை உருக்கும் குரலில் கூப்பிட்டுக் கொண்டே வீட்டினுள் சென்றாள்.

சோமசுந்தரம் அப்பொழுதுதான் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து அருகிலிருந்த மேஜையின் மீதிருந்த ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தார். குழந்தையின் குரலைக் கேட்டவுடன் அவருடைய கையினின்றும் புத்தகம் தொப்பென்று கீழே விழுந்தது. அவருடைய ஹிருதயம் ஆயிரம் சுக்கல்களாகச் சிதறி விழுந்ததுபோல் இருந்தது. உடல் பதைத்தது.

"என்னடா கண்ணே! என் ராஜாத்தி அல்லவா! என் ரோஹிணிக் குஞ்சை யார் என்ன செய்தார்கள்?'' என்று படப்படப்புடன் கேட்டுக் கொண்டே குழந்தையை வாரித் தூக்கித் தோளின்மேல் சார்த்திக் கொண்டார்.

"அப்பா; எனக்குத் தெரிஞ்சுபோச்சு'' என்று விக்கல்களுக்கும் விம்மல்களுக்கும் இடையே சொன்னாள் குழந்தை.

"என்னடா கண்ணே, தெரிஞ்சுபோச்சு''

"அப்பா நம்ப ஊரிலே, யாரோ ஒரு பொய் சொல்லிவிட்டா அப்பா''

விக்கல்கள் விம்மல்கள்; ஹ்ருங்காரத்துடன் அழுகை.

"ஏன் அம்மா அப்படித் தோன்றுகிறது உனக்கு?''

"நீதானே அப்பா சொன்னே, நாம் ஒரு நிஜம் சொன்னால் ஒரு நட்சத்திரம் பிறக்கிறதுன்னு. அப்போ ஒரு நட்சத்திரம் கீழே விழுந்தா....யாரோ ஒரு பொய்....சொல்லிவிட்டான்னு தானே அர்த்தம்? சுவாமியினுடைய...மனசு இப்போ...எப்படி இருக்கும் அப்பா? எனக்கே...நிறைய...அழ வரதே'' என்று சொல்லிவிட்டு அழத்தொடங்கினாள் அந்தக் கபடமற்ற குழந்தை.

அந்தப் பச்சை உள்ளத்தில் எழுந்த துக்கத்தையும் அதன் துன்பத்தையும் நாவின் மொழிகளால் விவரிப்பது இயலாத காரியம். அது ஹிருதயம் ஹிருதயத்தினோடு தனது சொந்த பாஷையில் உணர்த்த வேண்டிய ஒரே புனிதமான துக்கம்.

சிறுகதைக் களஞ்சியம் நூலிலிருந்து...
வெளியீடு: சாகித்ய அகாடமி

ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் 24.12.2003 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறைச் செயலர், கூடுதல் செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது அறிவுரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதில் உறுதி பூண்டுள்ளார்கள் எனத் தெரிவித்து ஊரக வளர்ச்சித் துறை இப்பணியில் எந்த விதத்திலும் பின்தங்கி விடுதல் கூடாது என்பதை வலியுறுத்தினார்கள். பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தை உறுதி செய்யவும் தொடர்ந்து கண்காணித்து வரவும் அறிவுறுத்தினார்கள்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள 38,886 பணிகளை விரைவில் முடித்து உடனடியாக கூடுதல் நிதிக்கான முன்மொழிவுகளை அனுப்பவும்,

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 2003 – 2004ஆம் ஆண்டில் ரூ.164 கோடி மதிப்பில் 1,113 கி.மீ. சாலை அமைக்கும் பணிக்கான நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி உடனடியாக பயனுள்ள தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளைப் போலவே நடப்பு ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து கூடுதல்நிதி மற்றும் அரிசி பெறும் விதத்தில் சிறப்பாகப் பணியாற்றவும்,

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் தொழில் கடனில் மானியம் மற்றும் கடன் விகிதாச்சாரம் 1 : 2 அளவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் எனவும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோர் ஆகிய அனைவரையும் சுய உதவிக் குழுக்களில் இடம் பெற துரித நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள். மேலும் தகவல் தொழில் நுட்ப அடிப்படையில் கிராமப் புறங்களில் நிறுவப்படும் ராசி மையங்கள் பயனுள்ள வகையில் செயல்பட வேண்டும், மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைக்கும் பணியை நடப்பு நிதியாண்டிற்குள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இவ்வளாகங்களுக்கான இடம் தெரிவு செய்தல், கட்டுமானப் பணியை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் உபயோகிப்பாளர் குழுக்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இதுவரை பணிகளைத் தேர்வு செய்யாத சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையை உரிய காலக் கெடுவிற்குள் பெற்று, நிருவாக அனுமதி வழங்கி, பணிகளைத் தொடங்கி, ஏற்கெனவே தொடங்கப் பட்டுள்ள 7,320 பணிகளை ஜனவரி மாத இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும்,

மக்களின் நேரடிப் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தை முறையாக செயல் படுத்திடவும்,

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பணிகளை நடப்பு நிதியாண்டிற்குள் முடித்திடவும்,

ஊரக வளர்ச்சித்துறைத் திட்டங்களை நடைமுறை படுத்துவதில் முதன்மையான இடத்தைப் பெறும் மாவட்டத்தின் ஆட்சித் தலைவருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தங்கப் பதக்கம் வழங்க உள்ளதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர் அவர்கள் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றிட ஒத்துழைப்பு நல்க அனைவரையும் கேட்டுக் கொண்டு தனது ஆய்வுரையை நிறைவு செய்தார். •

சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறும் ஊரக வளர்ச்சிப் பணிகள்

சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கிராமப்புறத்தில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள கிராம மக்களை சுயஉதவிக் குழுக்களாக அமைத்து, பயிற்சி வழங்கி அவர்களுடைய திறமையை மேம்படுத்தி தொழில்கள் செய்வதற்குரிய வாய்ப்பு மற்றும் மானியத்துடன் கூடிய கடன் வழங்கி அதன் மூலம் வருவாயைப் பெருக்கி வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 63,894 ஐம்பதுக்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் கிராம மக்கள் சுயஉதவிக் குழுக்களாக அமைக்கப்படுகின்றனர். இதுவரை இம்மாவட்டத்தில் 3,779 சுயஉதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர் திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அங்கீகரித்து அவர்கள் மூலம் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க உதவி புரிகின்றது. சிவகங்கை மாவட்டத்தில் இதுவரை 978 குழுக்களுக்கு ரூ.97.80 இலட்சம் சுழல் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 437 குழுக்களுக்கு ரூ.8.25 கோடி தொழிற்கடனுக்காக மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கல்குவாரி, காய்கறி உற்பத்தி, பூ உற்பத்தி, கீற்று முடைதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், சாம்பிராணி தயாரிப்பு, செங்கல் தயாரிப்பு, பால் மாடு வளர்ப்பு, கயிறு உற்பத்தி, உணவுப் பொருட்கள் தயாரித்தல், மூலிகை மருந்து தயாரித்தல், கரிமூட்டம், அப்பளம் தயாரித்தல், வயர்கூடை பின்னுதல், சணல் பை தயாரித்தல் மற்றும் மளிகைக் கடை வைத்து வியாபாரம் செய்தல் போன்ற தொழில்களுக்காக மானியம் விடுவிக்கப் பட்டுள்ளது.

தொழில் திறனை மேம்படுத்துவதற்காக அப்பளம் தயாரித்தல், ஊதுபத்தி, கம்ப்யூட்டர் சாம்பிராணி, கயிறு திரித்தல், காய்கறிகள், பூ உற்பத்தி, கால்நடைகள் வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல், செங்கல் தயாரித்தல் போன்றவைகள் சுயஉதவிக் குழுக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எஸ்.ஜி.எஸ்.ஒய். அடிப்படைக் கட்டமைப்பு வசதியிலிருந்து சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய வணிக வளாகம் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சிக்கூடமும் கட்டப்பட்டுள்ளது.

தொழில்முனையும் திறனை மேம்படுத்துவதற்காக தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசின் இலக்கினைக் கருத்தில் கொண்டு தகுதியுள்ள சுயஉதவிக் குழுவிலிருந்து பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி பெற்ற விற்பன்னர்கள் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2002–03ஆம் ஆண்டில் 935 நபர்களும், 2003–04ஆம் ஆண்டில் 1,020 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

கிராம குடிநீர்த் திட்டம்

கிராம குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் ரூ. 135 இலட்சம் மதிப்பீட்டில் 328 குடிநீர்ப் பணிகளும் பேரூராட்சிப் பகுதிகளில் ரூ. 30 இலட்சம்

மதிப்பீட்டில் 63 பணிகளும் நகராட்சிப் பகுதிகளில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் 63 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் யாவும் முடிவுற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தனி நபர் விசைக்குழாய் குடிநீர்த் திட்டம்

ரூ.7.47 கோடியில் 96 ஊரகக் குடியிருப்பிடங்களுக்கு தனிநபர் விசைக்குழாய் குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 11 குடியிருப்பு இடங்களுக்கு பணி முடிவடைந்து விட்டது. எஞ்சிய 85 குடியிருப்பிடங்களுக்கு மார்ச் 2004க்குள் குடிநீர் வழங்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும்.

சிறிய விசைக்குழாய் குடிநீர்த் திட்டம்

ரூ. 3 கோடி மதிப்பீட்டில் 500 எண்ணிக்கையுள்ள சிறிய விசைக்குழாய் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 470 சிறிய விசைக்குழாய் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவு பெற்றுள்ளது.

பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

ரூ.88.59 இலட்சம் மதிப்பீட்டில் 200 அரசுப்பள்ளிகள் பயன்பெறும் வகையில் குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 64 அரசுப்பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 136 அரசுப் பள்ளிகளுக்கு மார்ச் 2004க்குள் பள்ளிகள் பயன்பெறும் வகையில் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முழு சுகாதார இயக்கம்

சிவகங்கை மாவட்டத்தில் முழு சுகாதார இயக்கம் 2003–04ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.12.29 கோடி ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23–9–2003 அன்று முழு சுகாதார இயக்கம் சிவகங்கை மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டது. முதற்கட்டமாக 148 ஊராட்சிகள் தேர்வு செய்யப் பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2006ஆம் ஆண்டில் 297 ஊராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் ஊரகப் பகுதிகளில் தனிநபர் கழிப்பறை கட்டுதல், மகளிருக்கான சுகாதார வளாகம், பள்ளிகளிலும், அங்கன்வாடிகளிலும் கழிப்பறை கட்டுதல் போன்றவற்றில் மக்களுக்குச் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் மக்கள் பங்களிப்புடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், உபயோகிப்பாளர் குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 148 ஊராட்சிகளிலும் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பிற அமைப்புகளுக்கு விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கழிப்பறை கட்டுவதற்காக விண்ணப்பங்கள், பள்ளிகளிலிருந்து 40ம், அங்கன்வாடி மையங்களிலிருந்து 55ம் பெறப்பட்டு கழிப்பறைகள் கட்ட முதற்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

-ஆ. கோபாலன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை

* * *

சென்னையில் சர்வதேச மேலாண்மைப் பயிற்சி மையம்

தமிழக முதலமைச்சர் அவர்களின் அழைப்பை ஏற்று, 1.1.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவின் எவான்ஸ்டன் நகரத்தில் உள்ள நார்த்வெஸ்டன் பல்கலைக்கழகத்தின் ஜே.எல்.கெல்லாக், மேலாண்மை துறையின் தலைவர் பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையில் தாம் உருவாக்கி வரும் சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை நிர்மாணிப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்து தரவேண்டுமென்று, தமிழக முதல்வர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், கிரேட் லேக் இன்ஸ்டிட்யூட் ஆப் மேனேஜ்மெண்ட் (GLIM) சென்னை என்றழைக்கப்படும் இந்தப் பயிற்சி மையத்தின் வகுப்புகள் வரும் ஏப்ரல் 2004 முதல் தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும், இந்த வர்த்தகப் பயிற்சி மையத்தை நிர்மாணிப்பது மற்றும் மேம்படுத்துவது தொடர்பான பல்வேறு திட்டங்கள் குறித்தும் அப்போது அவர் முதலமைச்சர் அவர்களிடம் விளக்கினார்.

இந்த வர்த்தகப் பயிற்சி மையத்தின் கல்வி நிர்வாக ஆலோசனைக் குழுவில் மெக்சிகன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி.கே.பிரகலாத், கெல்லாக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஃபில் கொட்லர், ஸ்டேன்போர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சீனு சீனிவாசன், வார்டன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கிருஷ்ணா ராமசாமி, ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காஷா ரங்கன் ஆகியோர் பங்கு பெற்றுள்ளனர்.

பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்னையில் இந்த மாதிரியான ஒரு புதிய வர்த்தகப் பள்ளியை நிறுவ வேண்டும் என்ற தம்முடைய நீண்டகால விருப்பத்தை தற்போது செயல்படுத்த விழைந்துள்ளதாகத் தெரிவித்தார். இதன் மூலம் தரமான மேலாண்மை கல்வி குறைந்த பொருட்செலவில் சென்னையில் கிடைப்பதற்கு இந்த வர்த்தகப் பள்ளி உதவியாக அமையும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான சீரிய தலைமையின் கீழ் சென்னை மாநகரமும் மற்றும்

தமிழ்நாடும் அளவிடற்கரிய வகையில் விரைந்து வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்த அருமையான சந்தர்ப்பத்தில் இதுபோன்ற ஒரு சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை உருவாக்குவதற்கு இதுதான் சரியான தருணமாகும் என்றும், இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் அவர்கள் செய்துதர உத்தரவிட வேண்டும் என்றும் அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் பாலா விபாலச்சந்திரன் சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை சென்னையில் நிர்மாணிப்பதற்கு எடுத்து வரும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியதுடன், அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தார்கள்.

இதன் மூலம் சென்னை வர்த்தக தலைநகரமாகும் சூழல் தெரிய வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரனிடம் இந்தப் புதிய வர்த்தகப் பயிற்சி மையம் மிகக்குறுகிய கால அளவில் வெகுவேகமாக நிர்மாணிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் முதலமைச்சர் அவர்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுடன், முதலமைச்சர் அவர்களின் ஆசியினால் இந்தப் பயிற்சி மையம் பல்வேறு வெற்றிகளைக் குவிக்கும் வகையில் சர்வதேச தரத்திலான வர்த்தக பயிற்சி மையம் விரைவில் சென்னையில் நிர்மாணிக்கப்பட்டு செயல்படத் தொடங்கும் என்று கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிராணேஷ், இ.ஆ.ப., மேம்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தித்தாள்

1780–இல் ஜேம்ஸ் அக்ஸ்டஸ் ஹிக்கி என்ற ஆங்கிலேயர்தான் முதன் முதலில் அச்சு வடிவச் செய்தித்தாள் கல்கத்தாவிலிருந்து வெளிவரக் காரணமானவர். அதனாலேயே அவரை இந்திய இதழியலின் தந்தை என்று அழைப்பர்.

அந்தச் செய்தித்தாளின் பெயர் "பெங்கால் கெஜட்" அல்லது "கல்கத்தா அட்வர்டைசர்" இது ஆங்கில மொழி வார இதழாகும்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில்
"மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா"

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் பாரதி மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மகாகவி பாரதியார் அவர்களின் 122ஆவது பிறந்தநாள் விழா 13-12-2003 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்குத் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள் மகாகவி பாரதியார் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசும்போது :

"பெண்கள் முன்னேற்றம் குறித்து தனது கவிதைகள் மூலம் சமுதாயத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார் ஆவார். பெண்கள் விடுதலைப் பெறவேண்டும், பெண்கள் கல்வி பெறவேண்டும் என்பதற்காக அன்று பாரதி பாடல்களைப் பாடினார். இன்று கிராமங்கள்தோறும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் அமைத்து அவரது கனவை நனவாக்கி வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பெண்கள் கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக குறிப்பாக இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். நடப்பாண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவியர்கள் 1256 பேருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கல்வி உதவித்தொகையாக ரூ.1 கோடியே 16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்கள்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் பள்ளி மாணவ-மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ் களையும் வழங்கி,

"சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்ட தியாகிகள் பலர் நம் நாட்டில் உள்ளனர். அவர்களில் மகாகவி பாரதியார் தமது கவிதைகள் மூலம் நாட்டு மக்களிடையே சுதந்திர தாக்கத்தினை ஏற்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மக்களின் கீழ் அதிக அளவு பாசத்தை காட்டியவர் பாரதியார். அனைவருக்கும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர். சமூகத்தில் பிறப்பால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பேதம் இருக்கக்கூடாது என கூறியதுடன் வாழ்ந்தும் காட்டியவர் பாரதி அவர்கள்'' என்று தெரிவித்தார்கள்.

மேலும் இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் சமூக நலத்துறை, மகளிர் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை, தாட்கோ, வருவாய்த்துறை, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் வேளாண்மைத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1056 பேருக்கு ரூபாய் 21 இலட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் "குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருத்தமான கவிதைகளை எழுதிய கவிஞர் மகாகவி பாரதியார் அவர்கள். கவிதை மூலம் தேசப் பற்றை ஊட்டி வளர்த்தவர் ஆவார். மகாகவி பாரதியார் கண்ட கனவு தற்போது தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நனவாக்கப்பட்டு வருகிறது. 1992ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் இன்று சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று பாரதியார் பாடினார். அதுபோன்று எந்த தவறு செய்தாலும் துணிச்சலுடன் தட்டிக் கேட்டு வருபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்'' என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமையேற்று பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள்,

"மக்கள் மத்தியில் தேசப்பற்று உருவாக வேண்டும். ஒரு நாடு முன்னேற கிராமங்கள் முன்னேற்றம் காணவேண்டும். கிராம வளர்ச்சிக்காக நாம் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும்'' என கூறினார்.

இவ்விழாவில் கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ. ராஜேந்திரன், விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.கே. பெருமாள், தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். ராஜம்மாள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. பிரேமகுமாரி ஜெம்மா கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு. க. கணேசன், எட்டயபுரம் பேரூராட்சித் தலைவர் ஆர். கிருத்திகா ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

முன்னதாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாரதி மணிமண்டபத்தில் உள்ள மகாகவி பாரதியார் முழு உருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

பல்துறை பணி விளக்க முகாம்

மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு எட்டயபுரம் பாரதி மணிமண்டப வளாகத்தில், மக்கள் நலன் கருதி அரசு செயல்படுத்தி வரும் திட்டப்பணிகள், சாதனைகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தி – மக்கள் தொடர்புத்துறை, வருவாய்த்துறை, சமூகநலத்துறை, மாவட்ட மறுவாழ்வுத்துறை, தாட்கோ, மகளிர் திட்டம், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் வனத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, விளக்கக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் வைக்கப்பட்டன. செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்தப் பல்துறை பணி விளக்க முகாம் கண்காட்சியினை பார்வையிட்டனர்.

முன்னதாக தூத்துக்குடி இசைப்பள்ளி "மாணவர்களின் மங்கள இசையும்", விழா முடிவில் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பில் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

– துரை. ராஜ்குமார்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி.

திராவிட மொழிகள்

திராவிட மொழிக்குடும்பத்தில் 153 மொழிகள் உள்ளன என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. இதில் பல மொழிகள் வட்டார வழக்குகள் என்றும், இந்திய மொழிக்குடும்பத்தில் பேசுவோரை வைத்து மதிப்பிடும்போது இது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது என்றும் அவ்வாய்வு கூறுகிறது. இந்திய மக்கள் தொகையில் 24.47 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

– "தமிழ்மொழி வரலாறு" என்ற நூலிலிருந்து

மதுரை மாவட்டத்தில்

சிறப்பு மருத்துவ முகாம்

திமிழக அரசு தாயுள்ளத்துடன் தமிழக கிராமப்புற மக்களின் நல்வாழ்விற்காக அறிமுகப்படுத்திய திட்டம் தான் இலவச சிறப்பு மருத்துவ முகாம்.

இம்மருத்துவ முகாமினை கிராமப் பகுதிகளில் நடத்துவதன் மூலம் தொற்றுநோய் அல்லாத நோய்களான சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய்கள், புற்றுநோய், முதியோர்களுக்கான நோய்களிலிருந்து கிராம மக்கள் விடுபட்டு இறப்பு விகிதத்தை குறைக்கும் பொருட்டும் கிராம மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழி செய்துள்ளார்கள்.

இந்த இலவச சிறப்பு மருத்துவ முகாமில் ஆண் மற்றும் பெண் சிறப்பு மருத்துவ நிபுணர் குழுவினர் சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய்கள் புற்றுநோய், முதியோர்களுக்கான நோய்களுக்கு சிகிச்சையளிக்கவும் இதுதவிர பொது மருத்துவத்திற்கும் நோயின் தன்மைகளை கண்டறிந்து உரிய பரிசோதனைகள் செய்து சிகிச்சை அளித்து உரிய மருந்து மாத்திரைகள் முற்றிலும் இலவசமாக அரசின் சார்பில் வழங்கப்படும். தேவைப்படுவோருக்கு அக்கிராமத் திலேயே ஸ்கேன் பரிசோதனை, இ.சி.ஜி. மற்றும் பிற சிறப்பு பரிசோதனைகளும் செய்யப்படும்.

1. நெஞ்சுவலி, மார்பு படபடப்பு, மயக்கம் அடிக்கடி வருதல், தலை சுற்றல், மூச்சுத்திணறல் ஏற்படுதல், இடது தோளில் சில சமயம் பரவும் வலி போன்ற அறிகுறிகள் இருந்தால், அது இரத்தக் கொதிப்பு நோயாக இருக்கலாம்.
2. அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக பசி, அதிக தண்ணீர் தாகம் ஏற்படுதல், அடிக்கடி உடலில் அசதி ஏற்படுதல், உடலின் எடை குறைந்து வருதல், அடிக்கடி மயக்கம் வருதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் ஒரு வேளை சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
3. ஆறாத புண், உடலில் எங்கேனும் பல நாட்கள் வலியில்லாத கட்டி, வீக்கம், நிறத்தில் மாறுபடும் மச்சம், உணவு விழுங்குவதில் கஷ்டப்படுதல், தொண்டையில் தொடர்ந்தாற்போல் வலி, கரகரப்பு, உடலில் உள்ள இயற்கை துவாரங்களிலிருந்து அசாதாரண இரத்தப்போக்கு இவைகள் இருந்தால் ஒரு வேளை அவர்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
4. முதியோர்களுக்கான நோய்களாக ஆஸ்துமா, மூட்டுவலி, கண்புரை மற்றும் பிறநோய்கள் ஆகியவற்றிற்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதே இம்முகாமின் நோக்கமாகும்.

இலவச சிறப்பு மருத்துவ முகாம் துவங்கி மூன்றாவது முகாமாக மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டம் கருங்காலக்குடியில் 6–12–2003 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தார். இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.பி.சந்திரமோகன், இ.ஆ.ப., தலைமையேற்றார். மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சாமி முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், "கிராமப்புற மக்களின் நலனைக்காக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கிராமப்பகுதிகளில் சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, புற்றுநோய் மற்றும் முதியவர் களுக்கான நோய்களை இம்முகாமில் பரிசோதனை செய்து உரிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகிறது என்றும் ஒவ்வொரு முகாமிற்கும் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் இலவச மருந்துகள் வழங்கப்படுகிறது'' என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அமைச்சர் அவர்கள் பேசும்போது சென்னைக்கு அடுத்தபடியாக தமிழகத்தில், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக பரிசீலனைக் குழு அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இக்குழுவின் தலைவராக மதுரை, இராசாசி மருத்துவமனை முதல்வர் அவர்களும் குழுச்செயலர் மற்றும் உறுப்பினராக இணை இயக்குநர் (சுகாதார பணி) அவர்களும் நிருவாக உறுப்பினராக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் செவ்வாய்கிழமையன்று இக்குழு கூடி, தகுதிவாய்ந்தவர்களை பரிசீலனை செய்யும். எனவே சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்கான கொடையாளர் மற்றும் பெறுபவர் ஆகியோர் பரிசீலனைக்காக இனி சென்னை செல்லத் தேவையில்லை என்றார். இதோடு மட்டுமல்லாமல் தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் ஏழை, எளியோரைப் பாதுகாக்கும் வகையில் ரூ.60 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு நோயாளிக்கும் ரூ.1.50 இலட்சம் செலவில் மருந்து மற்றும் மாத்திரைகள் வழங்கப்படுகிறது என்றார்.

தமிழகத்தில் 1,412 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் கடந்த இரண்டு வருடங்களில் 93 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் இதன் மூலமாக இச்சுகாதார நிலையங்களில் ரூ.40 இலட்சம் செலவில் 30 படுக்கை வசதிகள், விபத்து பிரிவு உட்பட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும் சென்னையில் 65 நபர்களுக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்டு இருதய கோளாறுகள் சரிசெய்யப்பட்டதாகவும் மதுரையில் 2 நபர்களுக்கு பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டுள்ளதாகவும், பேஸ்மேக்கர் கருவியின் விலை சுமார் ரூ.50 ஆயிரம் முதல் 65 ஆயிரம் வரை அரசே ஏற்கிறது என்றும் கூறினார்.

தமிழகத்திலுள்ள மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படுவதால் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலமாக வருடத்திற்கு ரூ.180 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் மற்றும் மாத்திரைகள், பிற மாநிலங்களிலிருந்து ஒளிவு மறைவின்றி ஒப்பந்த புள்ளிகள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுவதாக கூறினார்.

மேலும் சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு சென்னை கே.கே.நகரில் இயங்கும் உடல் ஊனமுற்றோர் நலனுக்கான மருத்துவமனைக்கு ரூ.1.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளார். இதன் மூலமாக உடல் ஊனமுற்றோர் நலனும் காக்கப்படுகிறது.

சாலைகளில் ஏற்படும் விபத்துகளினால் பாதிக்கப் படுவர்களின் உயிரைக்காக்கும் வகையில் தமிழகத்தில் திண்டிவனம், கிருஷ்ணகிரி, தருமபுரி, விழுப்புரம், கோவில்பட்டி ஆகிய 5 இடங்களில் மருத்துவ மனைகளைத் தேர்வு செய்து ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் தலா ரூ.63 இலட்சம் ஒதுக்கீடு செய்து ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் இம்மருத்துவமனைகளில் உயிர்காக்கும் பணிக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

நகர்புற மக்களின் நலனைக் காப்பதோடு மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களின் நலனைக் காக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்

அறிவுரைப்படி கிராமப்பகுதிகளில் இம்மருத்துவ முகாம் நடைபெறுகிறது என்று கூறினார்.

இம்முகாமிற்குத் தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் பேசும்போது, கடந்த மூன்று ஆண்டுகளாக இம் மாவட்டத்தில் இம்முகாம் சிறப்பாக நடைபெறுவதாகவும், 2001–2002 ஆம் ஆண்டில் 5 முகாம்கள் நடத்தப்பட்டு, 8,726 பேர் சிகிச்சை பெற்று 377 பேர் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இதேபோல் 2002–2003 ஆம் ஆண்டில் 13 முகாம்கள் நடத்தப்பட்டு 28,557 பேர் சிகிச்சை பெற்று, 611 பேர் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இதேபோல் 2003–2004 ஆம் ஆண்டில் 13 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு கொட்டாம்பட்டி, அலங்காநல்லூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, சேடப்பட்டி, டி. கல்லுப்பட்டி, உசிலம்பட்டி, மதுரை மேற்கு செல்லம்பட்டி, டி. வாடிப்பட்டி, கள்ளிக்குடி, மேலூர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது என்றார். மேலும் இம்முகாமில் 35 மருத்துவர்களும் 19 சிறப்பு மருத்துவர்களும் 102 செவிலியர்களும் இம்முகாமில் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அரசு இராசாசி மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு செய்யப்பட்டு வந்தது. தற்போது அது இரண்டாக உயர்த்தப்பட்டு இதுவரை 82 நபர்களுக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு 120 முதல் 130 அறுவைச் சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தனியார் மருத்துவமனை மூலமாக 50 ஏழைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் இம்மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கான காத்திருப்போர் பட்டியலின் எண்ணிக்கை குறைந்து வருவதாகக் கூறினார்.

- சிவ.சு. சரவணன்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை

* * *

கரூர் மாவட்டத்தில் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மற்றொரு மைல் கல்லாக க.பரமத்தி ஒன்றியத்தில் நெசவுதொழில் செய்துவரும் அம்மன் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக்குழு போன்ற 11 குழுக்களையும் இணைத்து "ஸ்ரீமகளிர் எக்ஸ்போர்ட்ஸ்" என்ற பெயரில் விற்பனை செய்திட தனியே வங்கிக் கணக்குத் தொடங்கி, மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது. இக்குழுவினர் உற்பத்தி செய்திடும் எக்ஸ்போர்ட் ரக மேட், தலையணை உறை, நேப்கின்ஸ், திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் ஆகியவைகளை நேரடியாக ஏற்றுமதி செய்திட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த பெண்கள் தற்போது மாதம் ஒன்றுக்கு 3 பாவு வீதம் 54 டஜன் மேட் ரக பொருட்களை உற்பத்தி செய்து நேரடியாக கரூரில் உள்ள ஏற்றுமதி நிறுவனம் மூலம் தற்போது விற்பனை செய்து வருகிறார்கள். ஐதராபாத்தில் நடைபெற்ற சார்ஸ் கண்காட்சியிலும் ஸ்ரீமகளிர் ஏற்றுமதி நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு விதமான மேட்டுகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளுக்கும் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை அனுப்பி வைக்கும் வகையில் சுய உதவிக்குழுவினருக்கு 28.09.2003 முதல் 30.09.2003 வரையில் சென்னையைச் சேர்ந்த 'சிபா' (SIPA) நிறுவனத்தின் மூலம் விற்பனை திறன் வளர் பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் இக்குழுவினருக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினையும் நிரந்தர வருவாயையும் பெற்று வாழ்க்கைத் தரம் மேம்பட வழி ஏற்பட்டுள்ளது.

– வீ. தங்கராஜ்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர் (பொ),
கரூர்.

* * *

எவரெஸ்ட் சிகரம் - சில தகவல்கள்

- 1921 இல் எவரெஸ்ட் சிகரத்தை நோக்கிய முதல் பயணம் தொடங்கியதிலிருந்து இன்று வரை 63 நாடுகளைச் சேர்ந்த 1,200 பேர் அதன் உச்சியை அடைந்திருக்கிறார்கள்.
- 176 பேர் எவரெஸ்டிலேயே உயிரிழந்து இருக்கிறார்கள்.
- 1991, மே 23 அன்று மட்டும் 89 பேர் எவரெஸ்ட் மீது ஏறி வெற்றிக்கொடி நாட்டியுள்ளனர்.
- 1996, மே 10–11 தேதிகளில் மட்டும் 10 பேர் எவரெஸ்டில் உயிரிழந்துள்ளனர்.
- எவரெஸ்டில் நான்கு பக்கமும் ஏறி உச்சியை அடைந்த ஒரே மனிதர் குஷன்ஷெர்பா என்பவர்தான்.
- இரண்டு முறை எவரெஸ்டை ஏறிய முதல் பெண்மணி சந்தோஷ் யாதவ்.
- உயிர்வாயு இன்றி எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியர் புதோர்ஜி. 1984இல் இவர் இப்பயணத்தை மேற்கொண்டார்.
- எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி பசீந்த்ராபால்.
- உலகிலேயே எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி ஜீன்கோதேபேய் என்னும் ஜப்பானியப் பெண். இவர் 1975இல் ஏறினார்.
- உலகின் மிக உயரத்தில் அமைந்திருக்கும் சரணாலயத்தின் பெயர் ஷாகர் மாத்தா தேசிய சரணாலயம். இது எவரெஸ்ட் அருகில்தான் உள்ளது.
- எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் மற்றும் ஒரே பார்வையற்றவர் எரிக் வெயன் மேயர் என்பவர் ஆவார்.

தமிழகத்திலேயே சிறப்பிடம் பெற்ற திருச்சிராப்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக இலாபத்தில் இயங்குகின்றது. மேலும் நடப்பு ஆண்டில் (2002–2003) மாநிலத்திலேயே சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் குறைந்த அளவு எண்ணிக்கை உடைய பணியாளர்களைக் கொண்டு அதிக இலாபத்துடன் இயங்கியதற்காக தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதல் பரிசைப் பெற்றுள்ளது. அரசு அறிவித்துள்ள சிக்கன நடவடிக்கையின் காரணமாக இந்நிறுவனம் 2002–2003ஆம் ஆண்டு ரூ.1 கோடியே 20 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

மொத்த விற்பனையில் இவ்வொன்றியத்தின் பணியாளர்களின் செலவு 3.16 சதவிகிதம் ஆகும். இது மாநிலத்திலேயே மிகக் குறைந்த அளவாகக் கொண்டு படைத்துள்ள சாதனை ஆகும்.

2002–2003ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1.90 இலட்சம் லிட்டர் பால் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள 513 கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டன.

இதில், நாள் ஒன்றுக்கு 72,000 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. 77,000 லிட்டர் சென்னை பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதமுள்ள பால் ஈரோடு மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள பால் பண்ணையின் மூலம் பால் பவுடர் மற்றும் பால் தொடர்பான துணைப்பொருள்கள் தயாரிக்க அனுப்பப்படுகின்றன.

இவ்வொன்றியத்தின் நிருவாகச் செலவுக்காக கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பால் வழங்கும் விவசாயிகளிடமிருந்து ஒரு லிட்டருக்கு 10 பைசா வீதம் வசூல் செய்யப்படுகிறது. தற்போது ஒன்றியத்தில் கையிருப்புத்தொகை போதிய அளவு இருப்பதால் மாவட்ட ஆட்சித்தலைவரும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவருமான டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் அறிவுரையின் பேரில் நடப்பு ஆண்டில் ரூ.77 இலட்சம் ஊக்கத்தொகை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும் இவ்வொன்றியத்திற்கு பால் வழங்கிய விவசாயிகள் அனைவருக்கும் இதுவரை நிலுவை இல்லாமல் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 50 டன் மதிப்பில் நெய் உற்பத்தி செய்து சிறந்த முறையில் பேக்கிங் செய்யப்பட்டு குஜராத், மத்திய பிரதேசம், கேரளா, இராஜஸ்தான் போன்ற வெளிமாநிலங்களுக்கு சென்னை பால் உற்பத்தியாளர் இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பாலில் இருந்து வெண்ணை எடுப்பது தற்போது 50,000 லிட்டர் கொள்திறனிலிருந்து ஒரு இலட்சம் கொள்திறனாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 4 டன் நெய் உற்பத்தி செய்ய முடியும்.

இவ்வொன்றியத்தின் மூலம் 30,000 லிட்டர் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று பெரம்பலூர் மாவட்டம் விலான்குடி கைகாட்டி என்ற இடத்தில் அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது.

1939ஆம் ஆண்டு இந்தக் கூட்டுறவு ஒன்றியம் தொடங்கப்பட்டது. இது 1995ஆம் ஆண்டு தேசிய பால்வள வாரியத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவி பெற்ற பிறகு நவீனமயமாக்கப்பட்ட பால் பண்ணையாகத் திகழ்கிறது. தற்போது இந்தக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது.

இதனை விரிவு படுத்தும் வகையில் பெரம்பலூர் பால்குளிரூட்டும் நிலையத்தை 50,000 லிட்டர் கொள் திறனிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பிரிவாக உயர்த்தவும், கரூரில் 30,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் (Support to Training and Employment Programme for Women). 90 சதவிகிதம் மத்திய அரசு உதவியுடனும், 10 சதவிகிதம் ஒன்றிய பங்காகவும் கொண்டு 2002–2003ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுக்கு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி உட்பட 7 ஒன்றியங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்படி ஒரே கிராமத்தில் 70 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பு மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2002–2003 ஆம் ஆண்டிற்கு 4 சங்கமும் 2003–2004ஆம் ஆண்டிற்கு 2 சங்கமும் 2004–2005 ஆம் ஆண்டிற்கு 2 சங்கமும் ஆக மூன்று ஆண்டுகளில் 8 சங்கங்கள் செயல்படும்.

சங்கத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் செயலாளர் பயிற்சி, செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகளுக்கும் மற்றும் கறவை மாடுகள் வாங்க ஒரு உறுப்பினருக்கு தலா ரூ.2,000 வீதம் விளிம்பு தொகை வழங்குதல் உள்பட ஆக மொத்தம் ஒரு சங்கத்திற்கு ரூ.3.5 இலட்சம் வரை உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சுயவேலைவாய்ப்பு மூலம் கறவை மாடுகள் வாங்கி அவற்றை நவீன விஞ்ஞான முறையில் பராமரித்து, அதற்குத் தேவையான செயற்கை முறைக் கருவூட்டல், மருத்துவ வசதிகள் மற்றும் கால்நடைத் தீவனம் ஒன்றியத்தின் மூலம் வழங்கி, உறுப்பினர்கள் பாலை மகளிர் சங்கத்திற்கு வழங்கி தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும், சட்டம், சுகாதாரம் மற்றும் சத்துணவு தொடர்பான தெளிவு பெற்று தங்களையும் தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் சமூகப்



பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் தமிழகத்திலேயே சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமாக தேர்வு செய்யப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு கேடயம் வழங்கப்பட்டது. கேடயத்தை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ப.வெ.தாமோதிரன் அவர்கள், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள் முன்னிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு. விடி. முருகப்பனிடம் வழங்கினார்.

- கோ.பன்னீர்செல்வம்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

* * *

உடல் ஊனமுற்றோருக்கான உன்னதப் பணி - நீலகிரி மாவட்டத்திற்குத் தேசிய விருது

தேசிய அறக்கட்டளையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் அமைப்பாளராகவும் டாக்டர் பி.ஏ. காணிக்கராஜ் மற்றும் சந்திர காந்தி ஆகியோர் உறுப்பினர்களாகவும் கொண்டு உள்ளூர் குழு (Local Level Committee) செயல்பட்டு வருகிறது. இக்குழு மத்திய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரம் வழங்குதல் அமைச்சகத்தில் இயங்கும் தேசிய அறக்கட்டளையுடன் இணைக்கப்பட்டு உடல் ஊனமுற்றவர்கள், குறிப்பாக புற உலக சிந்தனை இல்லாதவர்கள், மூளை முடக்குவாதம் கண்டவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் பல்வகை ஊனம் உள்ளவர்களின் நல்வாழ்வுக்காக தேசிய அறக்கட்டளை சட்டத்தின்கீழ் (1999 ஆம் ஆண்டின் 44வது சட்டம்) ஏற்படுத்தப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் இக்குழு 2001ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஊனமுற்றோர்களின் நலன் கருதி இக்குழு பலவழிகளில் திட்டமிட்டு மாவட்ட அளவில் ஊனமுற்றோரை கண்டுபிடித்து, கணக்கெடுப்பு நடத்தி, அவர்களின் தேவைகளை ஆய்ந்து அவர்கள் சுயேச்சையாகவும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கு உள்ளும் இயன்றவரை அதற்குப் பொருத்தமாக வாழ்வதற்கு வசதியும் அதிகாரமும் வழங்குகிறது. மேலும் ஊனமுற்ற நபர்களுக்குக் காப்பாளர் மற்றும் அறங்காவலர்களை நியமிப்பதற்கான வழி முறைகளை உருவாக்கித் தருகிறது. ஊனமுற்றவர்களுக்கு சமவாய்ப்பும் உரிமைப் பாதுகாப்பும் முழு பங்காகவும் கிடைக்க உதவுகிறது.

மேலும் நீலகிரியில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இரண்டு காப்பகங்களை ஏற்படுத்தி, அவர்களின் உடல் மற்றும் உள்ளம் வளர்ச்சியடைய பல்வேறு வகை உடற்பயிற்சி, தசைப்பயிற்சி, பேச்சுப்பயிற்சி, அடிப்படைக்கல்வி ஆகியவற்றைத் தொடர்ந்து அளித்து வருகிறது. மேலும், தாங்களே தங்கள் கடமைகளைச் செய்து கொள்ளவும் பேசவும், பாடவும், ஆடவும் கற்பிக்கப்படுகிறது.

பழைய அருவங்காடு என்ற இடத்தில் ஒரு நிரந்தர காப்பகம் அமைத்து 20 குழந்தைகள் இக்காப்பகத்திலே தங்கி பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு சிறப்பு கல்வி பயின்ற ஆசிரியர், இல்லக் காப்பாளர், தசைப்பயிற்சியாளர், உதவியாளர்கள், காவலர், சமையலர் மற்றும் துப்புரவு பணியாளர் என

10 நபர்கள் இக்குழந்தைகளின் நலன்களை கவனித்து வருகிறார்கள். மேலும் கடலூரில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தினந்தோறும் சென்று பயிலும் காப்பகமும் (Day Care Centre) அமைத்து, அக்காப்பகத்தில் சிறப்பு கல்வி பயின்ற பணியாளர்கள் நியமிக்கப்பட்டு குழந்தைகள் காக்கப்பட்டு வருகிறார்கள். இதில் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் வந்து பயின்று வருகிறார்கள். குழந்தைகள் மட்டும் அன்றி அவர்களது பெற்றோரும் இக்குழந்தைகளின் நலனில் கவனம்கொண்டு அவர்களின் ஒத்துழைப்போடு குழந்தை பராமரிக்கப் படவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கக்குச்சி, கொரடா மட்டம், கடநாடு என்ற கிராமங்களில் மொத்தம் 293 தடையில்லா சிறப்பு வீடுகள் அமைத்துக் கொடுத்து ஊனமுற்ற நபர்கள் சிரமம் இன்றி எளிதில் செல்லவும், புகையில்லாத சமையல் அறை மற்றும் துப்புரவான கழிப்பறை அடங்கியதாக வடிவமைக்கப் பட்டு தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தின் சிறப்பு அம்சமாகும். மேலும் இம்மூன்று இடங்களிலும் தசைபயிற்சி மையம், குடும்ப ஆலோசனை மையம், சுயதொழில் செய்து தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள மகளிர் திட்டம் மூலம் பயிற்சி வழங்கி தொழில் தொடங்கவும் சுய உதவிக் குழுக்கள் அமைத்து அந்தந்த பகுதி மக்கள் தாங்களாகவே திட்டமிட்டு தங்கள் வசதியை பெருக்கிக் கொள்ள துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நீலகிரி மாவட்டத்திற்கு 13.9.2003 அன்று வருகை புரிந்தபோது ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் கக்குச்சி என்ற கிராமத்தில், பாரதி நகர் என்ற இடத்தில் தசைப்பயிற்சி மற்றும் சமுதாய கூடம் திறந்துவைக்கப்பட்டது. இக்கூடத்திலேயே தொழில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு ஒரு பால்வாடி மையம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்று வருகிறது.

மேலும் இக்குழந்தைகளின் நலன் காக்க குழந்தைகள் நல மருத்துவர் நியமனம் செய்து, முறையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் ஊனமுற்றவர்களுக்கும் ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் சமுதாயத்தில் சம உரிமை வழங்கவும் தங்களின் உரிமைகளைக் காக்கவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து அவர்கள் அரசு மூலம் பெறக்கூடிய நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார். அரசு திட்டத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் உதவித் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு அனைத்து தரப்பு மக்களும் பயனடையும்படி வழிவகை செய்யப்படுகிறது.

ஊனமுற்றவர் நலனில் அரசு மற்றும் அரசு துறை அல்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டி அனைத்து துறை அலுவலர்களுக்கும் தொண்டு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு அரசு திட்டம் பற்றி விளக்கி அவரவர் துறை மூலம் ஊனமுற்றவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்யவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பான நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருவதால் நாட்டிலேயே சிறந்த உள்ளூர் குழுவிற்கான மாவட்டம் நீலகிரி மாவட்டம் என தெரிவு செய்யப்பட்டு நமது நாட்டின் குடியரசு தலைவர் மூலம் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் நமது குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களால் 3-12-2003 அன்று டில்லியில் நடைபெற்ற சர்வதேச ஊனமுற்றோர் விழாவில் பெருமை படுத்தப்பட்டார் என்பது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமின்றி நம் மாநிலத்திற்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

- அ. சந்திரசேகரன்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
நீலகிரி.

அண்டார்டிகா

அண்டார்டிகாவில் நிலவும் சராசரி வெப்பநிலை 37° சில நேரங்களில் இங்கு இந்த வெப்பநிலை –88° அளவுக்கு தாழ்ந்துவிடுகிறது. இங்கு சில சமயங்களில் காற்று வேகமாக விசி விரைவாக ஒடும் ரயில் வண்டியைப் போன்று ஒலியை உருவாக்குகிறது.

இங்கு 3 கி.மீ. ஆழத்திற்கு பனி உறைந்து கிடக்கிறது.

14 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள இந்த பிரதேசத்தில் உறைந்திருக்கும் பனி உலகில் இருக்கும் பனியின் அளவில் 95% என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

□ □ □

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கையன்னையின் எழில்மிகு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இம்மாவட்டத்தில் மலையும் மலையை சார்ந்த வனமும் கொண்ட குறிஞ்சி, முல்லை, நிலப்பகுதிகள் இயற்கையெழிலோடு திகழ்கின்றன. சுற்றுலா மாவட்டமாக திகழும் குமரியில் குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. வனங்களிலுள்ள மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் தான் மாவட்டத்தை வாழவைக்கின்றது. சுற்றுலாப் பயணிகளை கவரும் இயற்கையான அருவிகளும் வனத்தாயின் அருட் கொடையே ஆகும். இயற்கையருவிகள் சுற்றுலா பகுதி வரிசையில் திற்பரப்பு அருவியை அடுத்து வருவது உலக்கையருவி ஆகும்.

நாகர்கோவிலிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் தடிக்காரன்கோணம் செல்லும் சாலையில் அழகிய பாண்டியபுரம் சந்திப்பிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உலக்கையருவி மலை அமைந்துள்ளது. காட்டுப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட உலக்கையருவி மலை அடிவாரமான 'தூவச்சி' பகுதியிலிருந்து சுமார் 3½ கி.மீ. தூரம் கால்நடையாக மலை, காடு வழியே செல்லும்போது உலக்கையருவியைக் காணலாம். அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாத நிலையிலும் கரடு முரடான மலைப்பாதை வழியே உள்ளூர் மற்றும் மாவட்டத்திலுள்ள மக்கள், உலக்கையருவிக்குச் சென்று நீராடி, இயற்கையழகை கண்டுகளிப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. செல்லும் வழி முழுவதும் இயற்கையன்னையின் வரபிரசாதமான பச்சை பசேலென்ற காடுகள் உள்ளன. தேக்கு, ஈட்டி, மருது, வேங்கை, நெல்லி போன்ற மரவகைகளோடு கிளைகளை வெட்டினால் தண்ணீர் கொட்டும் அரிய வகை பில்லாணி மரம் மற்றும் தலைவலி தைலம் தயாரிக்கும் புல் உட்பட அரிய வகை மூலிகைகள் மலைக்காட்டில் ஏராளம். கரடி, குரங்கு, மீனா, செந்நாய், காட்டுபன்றி, சிறுத்தை, காட்டுக்கோழி, சிங்கவால் குரங்கு, மலைப்பாம்பு என வன விலங்குகளும் ஏராளம் உண்டு.

சுற்றுலாத்தல மேம்பாட்டிற்காக தனி முக்கியத்துவம் வழங்கி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாட்டுப் பணிகளை வடிவமைத்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி கோட்டை, வரலாற்றுச் சின்னமான அலைகள் தாலாட்டும் வட்டக்கோட்டை, காண்போரை வியக்க வைக்கும் மாத்தூர் தொட்டிபாலம், திற்பரப்பு அருவி என சுற்றுலாத்தல மேம்பாட்டுப் பணியைத் தொடர்ந்து உலக்கையருவி சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்கள் மட்டுமே கண்டு களித்து வந்த உலக்கையருவி சுற்றுலாத்தலத்தை மேம்படுத்தி வெளிமாநில சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் உருவாக்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் அதிகாரிகளுடன் 3 கிலோமீட்டர் தூரமும் நடந்து சென்று அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டம் சிறந்த சுற்றுலா மாவட்டமாகத் திகழ்கிறது. சர்வதேச சுற்றுலாத் தலமாகவும் புண்ணிய தலமாகவும் விளங்கி வரும் கன்னியாகுமரிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மாவட்டத்திலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் கண்டு களிக்கும் வகையில் மேம்பாட்டுப்பணிகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரிக்கு வருகை தரும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு அரசு நிதிஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மாத்தூர் தொட்டிபாலம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் குழந்தைகள் பூங்கா, குளிக்கும் வசதி, வாகன நிறுத்துமிடம் உட்பட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திற்பரப்பு அருவியில் சிறுவர் நீச்சல் குளம், பூங்கா உட்பட பணிகளும் உதயகிரிகோட்டையில் மான் பூங்கா மற்றும் சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இயற்கை எழில்மிகு உலக்கையருவிக்கு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் வந்து செல்லும் வகையில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை ரூ.20 இலட்சத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மலை அடிவாரத்திலிருந்து ½ கி.மீ. தூரம் சாலைவசதியும் மீதமுள்ள 3 கிலோ மீட்டர் வனப்பகுதியில் நடைபாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண், பெண் தனித்தனியே குளிக்க வசதிகள், உடைமாற்றும் அறைகள், சுற்றுலாப்பயணிகள் அமர்ந்து இயற்கை யழகைக் கண்டுகளிக்க இருக்கை வசதிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன. உலக்கை அருவிக்கு வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு உதவ ஏற்கெனவே இயற்கையுடன் இசைந்த வன சுற்றுலா வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என கூறினார்.

உலக்கையருவி மேம்பாட்டுப் பணிகள் குறித்து காட்டுப்புதூர் ஊராட்சித்தலைவர் திரு.பொன்.சுந்தர்நாத் அவர்கள் கூறுகையில்,

"இயற்கையாகவே அமைந்துள்ள உலக்கையருவியில் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கும். இவ்வருவிக்கு நீர் உற்பத்தியாகும் 'சுனை'யில் கோடை காலத்தில் மட்டும் நீர் ஊற்று குறைவாக இருக்குமே தவிர நீர் வற்றியது இல்லை. இவ்வருவியில் குளிப்பதற்கும், இயற்கையழகை கண்டுகளிக்கவும் உள்ளூர் மக்கள் மட்டுமே சென்று வந்த நிலை மாறி மாவட்டம் முழுவதிலிருந்து மட்டுமின்றி பிற மாவட்டங்களிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் திரளாக வந்து செல்கின்றனர். சுற்றுலாப்பயணிகளுக்குத் தேவையான வசதிகளை செய்துதரவேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரி வந்தனர். உலக்கையருவி பகுதி முழுவதும் வனப்பகுதிக்குள் இருப்பதால் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுவதில்

தாமதம் ஏற்பட்டது. சுற்றுலாத்தலங்கள் மேம்பாட்டுப் பணிகளைத் தீவிரப்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் 'உலக்கையருவி மேம்பாட்டுத் திட்டம் ஏற்கப்பட்டு செயல்படுத்தப்படுவது சுற்றுலா தல மேம்பாட்டு பணி மட்டுமின்றி கிராம மக்களின் வாழ்க்கைதர மேம்பாட்டிற்கும் அடித்தளமாக அமையும்" என கூறினார்.

- கு. தாணப்பா,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி.

ஓவியத்தின் மதிப்பு!

உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிக்காஸோ என்பவரைப் பற்றி உலக மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

அவர் தீட்டிய ஒரு ஓவியம் மட்டுமே 36 இலட்சம் ரூபாய்க்கு அந்தக் காலத்திலேயே விற்கப்பட்டது. (அப்போது ரூபாயின் மதிப்பு இன்றைய ரூபாயின் மதிப்பை விட பல மடங்குகள் அதிகமாகும்)

அப்போது அவர் தீட்டிய ஆயிரத்துக்கும் அதிகமான ஓவியங்கள் அவரிடம் இருந்தன. அன்றைய பண மதிப்பின்படி அவருடைய ஓவியங்களின் மதிப்பு 17 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டதாம்.

திருவாரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள்

உளரக வளர்ச்சித் துறை மூலம் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகவும் முதன்மையான மாநிலமாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பு மிக்க முயற்சியால் திகழ்ந்து வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகளை தாயன்புமிக்க வழிகாட்டுதலோடு திருவாரூர் மாவட்டத்தில் குறிப்பாக தேசத்தின் இதயமாக விளங்கிடும் கிராமப்புறப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளும் முழு சுகாதார திட்டப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தொகுப்பு வீடுகள்

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் 662 தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளது.

கச்சா வீடுகளை பக்கா வீடுகளாக மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.61.60 இலட்சம் மதிப்பீட்டில் 616 பணிகள் எடுக்கப்பட்டு 267 பணிகள் நிறைவுபெற்று மீதமுள்ள பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா–I-ன் கீழ் குளம் தூர்வாருதல், கிராம சாலைகள் அமைத்தல், நெல்களம் அமைத்தல் போன்ற 1043 பணிகள் ரூ.6.43 கோடி மதிப்பீட்டில் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா–II-ன் கீழ் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் 1,233 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதில் 614 பணிகள் முடிவுற்றுள்ளன.

பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 28 சாலைகளை மேம்படுத்த ரூ.6.25 கோடிக்கு மதிப்பீடுகள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

முழு சுகாதாரத் திட்டம்

முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 77,000 குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பறைகள் அமைக்கவும், 1,803 பள்ளிகளுக்கு கழிப்பிடங்கள் கட்டவும், 50 மகளிர் சுகாதார வளாகங்கள் அமைக்கவும், 519 அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறைகள் அமைக்கவும், கழிப்பறைகள் அமைக்க மற்றும் பராமரிக்கத் தேவையான சாதனங்களை மலிவு விலையில் பெற்றிட 5 ஊரக சுகாதார அங்கன்வாடிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பூர்ணா கிராமின் சுவராஜ்கர் யோஜனா திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 795 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கிடவும், 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கடன் மானியம் வழங்கிடவும், திட்டமிடப்பட்டு இதுவரை 412 குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் விடுவிக்கப் பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள், முழு சுகாதாரத் திட்டப் பணிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தொழில் வளர்ச்சி ஆகியவை அரசின் ஆணைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் நடைபெற்று வருகின்றது.

- க. சண்முக சுந்தரம்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவாரூர்.



தமிழரசு
RNI No. TAMIL/2004/13670
RGN No. TNRNS/(DOR)/33/0003/Wrpr-2


தமிழரசு
பிப்ரவரி 2004
BHOOMI POOJAN
BHOOMI POOJAN
SHRI ATAL BIHARI VAJPAYEE
Selvi J Jayalalithaa



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
தை – மாசி, பிப்ரவரி 2004
மலர் : 35 இதழ் : 8
விலை ரூ.10

அட்டைப் படவிளக்கம்

முதல் பக்க அட்டை : கன்னியாகுமரி – காஷ்மீரை இணைக்கும் தேசியநெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நான்கு வழி சாலைக்கான அடிக்கல் நாட்டு விழா

இரண்டாம் பக்க அட்டை : குடியரசு நாள் விழா

மூன்றாம் பக்க அட்டை : தமிழ்நாடு காவல்துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணி தொடக்க விழா

நான்காம் பக்க அட்டை : சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்தியாவின் முதல் சமுதாய வானொலி ஒலிபரப்புத் தொடக்க விழா

இந்த இதழில்

❖ மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசு
– தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை 2
❖ தேனி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை 16
❖ சென்னையில் கோலாகலமாக நடந்த குடியரசு நாள் விழா 26
❖ தமிழ்நாடு காவல்துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணி
தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை 29
❖ திருவள்ளுவர் திருநாள் விழா 35
❖ சாலைகளை இணைப்பது – இதயங்களை இணைப்பதாகும்
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை 37
❖ மக்களின் வாழ்வு மேம்பாடடுக்கு வழிகோலும் சமுதாய வானொலி
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை 41
❖ நாங்கள் மக்கள் பக்கம்! மக்கள் எங்கள் பக்கம்! வெற்றி எங்கள் பக்கம்!
– மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில்
ஆற்றிய பதிலுரை 45
❖ மத்திய அரசின் வரி வருவாயில் மாநில அரசுகளுக்கு 50 சதவிகிதம்
நிதி ஒதுக்க வேண்டும்
–12ஆவது நிதிக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை 67
❖ தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை 74
❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் விளையாட்டு வீரர் சந்திப்பு 75
❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் 77
❖ புரட்சித்தலைவியை வாழ்த்துங்கள்! உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்
– கவியரசர் இளந்தேவன் கவிதை 78
❖ மீனவர்களுக்கு உயிர்காப்புக் கவசங்கள் வழங்க
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆணை 80

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசு

மேதகு ஆளுநர்
திரு. பெ.சூரீ. ராமமோகன்ராவ் அவர்கள்

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் துவக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. இந்திய மக்கள் நாடாளுமன்றத்திற்குத் தங்களுடைய பிரதிநிதிகளை விரைவில் தேர்ந்தெடுக்க உள்ளனர். வளர்ச்சி மற்றும் வளமான வாழ்க்கைப் பாதையில் வழி நடத்தவல்ல ஓர் அரசைத் தேர்ந்தெடுப்பதில், இந்திய மக்கள் அனைவரையும் மக்களவைக்கான இத்தேர்தல்கள் ஒன்று சேர்க்கின்றன. வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் இந்திய மக்கள், குறிப்பாக, தமிழக மக்கள் அரசியல் மதிநுட்பத்தையும், விவேகத்தையும் எப்போதும் கையாண்டு வந்துள்ளனர். அவர்கள், விரைவில் இதற்கான மற்றொரு வாய்ப்பைப் பெறவிருக்கின்றனர். வளமானதும் உயிரோட்டமிக்கதுமான நமது ஜனநாயக மரபுகளைத் தொடர்ந்து பேணிக்காத்து, அமைதியான முறையில் தங்களுடைய வாக்குகளை அளிக்குமாறு தமிழ்நாட்டு மக்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இலக்கை நோக்கி விரைந்த செயல்பாடு

3. புதிய உறுதியுடனும், வரவிருக்கின்ற வளமையான வருங்காலம் பற்றிய நம்பிக்கையுடனும் தமிழ்நாடு

புத்தாண்டை வரவேற்றது. வளர்ச்சியின்மையையும் முடங்கிவிட்ட நிதிநிலையையும் கொண்ட கடந்தகால நிலைமைகளை மாநிலம் புறத்தே ஒதுக்கித் தள்ளிவிட்டது. 2003 ஆம் ஆண்டு வியக்கத்தகு திருப்புமுனையாக அமைந்துள்ளது. சீர்திருத்த முன்னுரிமைகளை வளர்ச்சிக் கோட்பாடுகளுடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, அவற்றிற்கும் மேலாக வறியோர்களின் நலன்களை முன்னிறுத்துவதன் மூலம் மாநிலங்களிடையே முதலிடத்தைப் பெறவேண்டும் என்ற தனது நெடுநாளைய இலக்கை நோக்கி விரைந்து செயல்படும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகி உள்ளது. குறுகிய காலத்தில் இந்த வியக்கத்தக்க, ஈடு இணையற்ற சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும்.

4. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய மிகவும் இடர்ப்பாடான நிதி நிலைமையையும், அதனால், 2001–2002–இல் திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 5,200 கோடிக்குக் குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதையும் இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அன்று நிலவிய நிதி இடர்ப்பாட்டின் தன்மை மற்றும் கடுமையின் பின்னணியில் வருங்காலமே இருண்டதாகத் தோற்ற மளித்தது. முதலமைச்சர் அவர்களால் உறுதிப்பாட்டுடனும் மனோதிடத்துடனும் மேற்கொள்ளப்பட்ட ஒரு துணிகரமான பொருளாதாரச் சீரமைப்புத் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 7,000 கோடிக்கு உயர்த்தவும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் பாராட்டுக்குரிய வகையில் ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டுடன் வகுக்கப்படவும் உதவியுள்ளது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையமொன்று வகுக்கப்பட்டு, வலுப்படுத்தப் பட்டுள்ளது. பொது மக்களுக்கு பெருமளவில் சேவைப் பணிகளை நல்கும் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு போக்குவரத்து நிறுவனங்கள் போன்றவை சீரான நிதி நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. ரூபாய் 4,000 கோடி அளவிற்குத் தொகை கொடுக்காமல் முந்தைய அரசு விட்டுச்சென்ற பெருஞ்சிக்கலான நிலைமை திறமையாக சமாளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வியக்கத்தக்க இந்தத் திருப்பம் ஒரு பெரும் அற்புதம் என்றே கூறலாம்.

5. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசின் பொருளாதாரச் சீரமைப்பு முன்னுரிமைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் நிதிநிலையைத் திருத்தி நிலைப்படுத்துவதற்கான நிதிச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப் பணிகளை மேம்படுத்துதல், வறுமையை ஒட்டு மொத்தமாகக் குறைப்பதற்கான திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். இம்மாநில அரசு, நிதி நிலைமைச் சீரழிவு அபாய நிலையை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தி, அதே நேரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், இந்தச் சிக்கலான சீர்திருத்த நடைமுறை, ஏழை எளிய மக்களின் நலனை முதன்மையாக மனதில் கொண்டு மனித நேயத்தோடு மேற்கொள்ளப்பட்டது.

உலக வங்கியின் பாராட்டு

6. தமிழ்நாட்டிற்கு நிதியுதவி செய்வதிலிருந்து கடந்த காலத்தில் ஒதுங்கிவிட்ட உலக வங்கி, தற்போது, மாநில அரசுக்கு, அதன் பொருளாதாரச் சீர்திருத்தச் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவுவதில் மீண்டும் விருப்பம் காட்டிவருகிறது. இச்செயல் திட்டத்திற்கான உலக வங்கியின் நிதி உதவி கணிசமான கால அளவிற்கு தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதியுதவி குறிப்பான திட்டங்களுக்கான நிதி உதவிக்கும் மேலாக கூடுதலாகக் கிடைக்கும். இந்த அரசு முதன்மைத் துறையில் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகளையும், முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்காக, 2003 செப்டம்பரில் புதிய தொழில் கொள்கைகளில் அறிவித்துள்ள இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்களையும் உலக வங்கி வெகுவாகப் பாராட்டியுள்ளது. முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான திட்டமாகிய ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்குவதில் தமிழ்நாடே முதன்மையாகத் திகழ்கின்றது என்பதை உலக வங்கி ஏற்றுக் கொண்டுள்ளது.

7. பெரும் நிதி இடர்ப்பாடுகளிடையே, பாதகமான பருவநிலை மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து நிலவி 2002–2003 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களையும் பாதிக்கும்வகையில் எப்போதுமில்லாத அளவிற்கு உச்சகட்டத்தை எட்டிய வறட்சிநிலையை அரசு எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. இந்த அச்சமூட்டும் சவால் வேறு எந்த ஒரு அரசையும் மனம் தளரச் செய்திருக்கும். நிதிச் சீரமைப்பு நடைமுறையினை மேற்கொண்ட அதே வேளையில், ஒவ்வொரு நெருக்கடியையும் சந்திக்க ஆயத்தமுடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஏழை எளியவர்களைச் சென்றடையும் வகையில் நிவாரணமும், இடருதவியும் வழங்குவதை இவ்வரசு உறுதி செய்தது. இதற்கான பாராட்டுதல்கள் அனைத்தும் முதலமைச்சர் அவர்களையே சாரும்.

8. 2002 ஆம் ஆண்டில் கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய பங்கிற்கு தண்ணீர் வழங்க மறுத்ததைத் தொடர்ந்து காவிரி வடிநில மாவட்ட நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் போதுமான வேலையின்றி பாதிக்கப்பட்டபோது, இந்த அரசு ரூபாய் 210 மதிப்புடைய உணவுப் பொருட்கள் அடங்கிய பைகளை 10 இலட்சம் குடும்பங்களுக்குப் பரிசாக வழங்கியது. இத்திட்டம், ரூபாய் 21 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பசிப்பிணி போக்குவதற்காக, ஊரகப் பகுதிகளில் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஆகஸ்டு வரையில் ஒவ்வொரு மாதமும் தேவையின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. 9.71 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூபாய் 115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பண்ணை வருவாய் பாதிக்கப்பட்டபோது, ரூபாய் 146 கோடி செலவில், கூட்டுறவுத் துறையிலிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்வதற்கான பெருந்திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தியது. கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்காக சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளைத் தள்ளுபடிசெய்து, 2003 ஆம் ஆண்டு மே மாதம் ரூபாய் 20 கோடி செலவில் அரசு அறிவித்த திட்டம், விவசாயிகளுக்கு அவர்களது கடினமான சூழ்நிலையில், மிகப் பெரிய நிவாரணத்தை அளித்தது. பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்ட போது, இந்த அரசு உடனடியாகச் செயல்பட்டு ரூபாய் 1.19 கோடி செலவில் 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கியது. மோசமான நிதி நிலைமையை எதிர்கொண்ட இடர்ப்பாடான நேரங்களிலும், ஏழை எளியவர்களுக்கு நிவாரணமும், ஆதரவும் அளிப்பதில் இந்த அரசு உரிய நேரத்தில் தலையிட்டுச் செயல்பட்டுள்ளதுஎன்பதற்கு இவை சான்றுகளாகும். இந்த அரசு கனிவுடன் ஆக்க நடவடிக்கைகளை எடுத்துமக்கள் நலனில் எப்போதும் அக்கறை காட்டுகிறது என்பதையும் இவைகள் எடுத்துக் காட்டுகின்றன.

முதலமைச்சருக்கு நன்றி கூறும் ஏழை எளிய மக்கள்

9. மக்களுக்கு உண்மையான பயன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட சமூகச் சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்றுவதில் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நிற்கின்றார்கள். லாட்டரிச் சீட்டுகளைத் தடைசெய்தது பெருவாரியாக வரவேற்கப்பட்டுள்ளது. வாழ்க்கையைச் சீரழிக்கும் கொடுமையிலிருந்து ஏழை–எளியவர்களை மீட்கும் முக்கியமான நடவடிக்கை இதுவெனத் தற்போது உணரப்படுகிறது. பெரும் பரிசைப் பெறும் கானல்நீர் ஆசை உறுதிமொழிகளினால் கவரப்பட்டு இதுவரை மொத்த வருமானத்தையும் லாட்டரிச் சீட்டுகள் வாங்குவதற்குச் செலவிட்டு ஏழ்மையுற்ற இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள், தங்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்குத் தற்போது நன்றி கூறியவண்ணம் இருக்கின்றனர். கந்துவட்டிக்காரர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு, பூதாகரமான நிலையினை அடைந்தது.

அளவிற்கதிகமான வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்தவும், சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளை வழங்கிடவும் அரசு தக்க சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்தது. பாராட்டத்தக்க இச்சட்ட நடவடிக்கை, ஊரகக் குடும்பங்களுக்கு, அதிலும் குறிப்பாக வறட்சியின் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த குடும்பங்களுக்குப் பெரும் நிவாரணம் அளித்தது. இந்நடவடிக்கைகள் அண்மையில் தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைகளை மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாட உதவின. வறட்சியினாலும், மோசமான பருவநிலைகளினாலும் தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பாதிக்கப்பட்ட போதிலும், தமிழ்நாடு பெரும்பாலான ஏனைய மாநிலங்களைப் போலல்லாது இந்த நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து தேவையேற்பட்ட ஒவ்வொரு சமயத்திலும் நிவாரணமும், தேவையான உதவியும் நல்கியுள்ளது.

முதலமைச்சரின் நேரடி தலையீட்டால் வெளிநாட்டில் வாடிய தமிழர்கள் மீட்பு

10. முதலமைச்சர் அவர்களின் தக்க நேரத்திலான நேரடித் தலையீட்டினால், வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரகங்கள், மலேசியா மற்றும் மாலத்தீவு சிறைகளில் அடைக்கப்பட்டு ஆதரவின்றி வாடிக்கொண்டிருந்த தமிழர்களுக்கு விழிப்புடன் சட்ட உதவி அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதேபோல முதலமைச்சர் அவர்களின் நேரடித் தலையீட்டினால் ஸ்ரீலங்கா கடற்படையினால் பிடிக்கப்பட்ட 380 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், 47 இயந்திரப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

11. பன்னிரெண்டாவது நிதிக்குழு தனது தமிழ்நாட்டு வருகையை அண்மையில் நிறைவு செய்துள்ளது. பொது நிதி அமைப்புகளை முற்றிலுமாகச் சீரமைத்து, மாநிலங்களுக்கு உரித்தான பங்குகளை அளிப்பதன் அவசியம் பற்றி முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். மத்திய வரித் தொகுப்பிலிருந்து மாநிலங்களின் பங்கை, தற்போதுள்ள அளவான 29.5 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு உயர்த்தி, மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலான நிதிப் பகிர்வு மாற்றங்கள் செய்யுமாறு இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. பதினோராவது நிதிக்குழு தமிழ்நாட்டிற்கு இழைத்துள்ள அநீதியை, பன்னிரெண்டாவது நிதிக்குழு முற்றிலுமாக மாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். சிறந்த முறையில் செயல்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கான நிதியுதவி, அவற்றின் திறமையான செயல் பாட்டினையும் நல்லாட்சியையும் பாராட்டும் வகையில் அமையவேண்டும். கடன் குறைப்பு மற்றும் சீரமைப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் இயற்கைச் சீற்ற நிவாரணச் செலவுக்கான நிதியுதவி அளித்தல், போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்த விரிவான கருத்துருக்கள் இந்நிதி ஆணையத்திடம் கொடுக்கப்பட்டுள்ளன. அரசு நிருவாகத்தை நவீனமயமாக்குவதற்கும் தமிழ்நாட்டின் சிறப்புப் பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பதற்கும், அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு நிதியுதவி அளிக்குமாறு நிதியாணையத்திடம் கோரப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் பெருமளவிற்கு இம்மாநில மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

திறமையான நிருவாகம்

12. சட்டம், ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிப்பது வளர்ச்சிப் பணியின் அடித்தளம் என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் அவர்களது வலுவான தலைமையானது, துரோக சிந்தனை மற்றும் பிளவு நோக்குகொண்ட சக்திகளை ஒடுக்கிவைத்து தமிழ்நாட்டில் முழுப் பாதுகாப்பு நிலவுவதை குடிமக்கள் உணரும்வண்ணம் உறுதிப்படுத்தியுள்ளது. வலுவான தலைமை, திறமையான காவல் பணிகள், சட்டம்–ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரித்தல் போன்றவைகளுக்கும் அவற்றினால் அமையப்பெறும் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் அமையப் பெறுவதற்கும் உள்ள தொடர்பு, தமிழ்நாட்டைப் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவிலேயே மிகச் சிறந்தது தமிழக காவல் படை

13.முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய ஒட்டுமொத்தச் செயல்திட்டம், தமிழ்நாட்டை, இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்காவாக மாற்றியுள்ளது. புதிய கட்டிடங்கள், புதிய வாகனங்கள், நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள், வீட்டுவசதி மற்றும் காவலர் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய காவல் துறை நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் காவல் துறையை நவீனப்படுத்துவதன் மூலம் அதன் திறமையை மேம்படுத்துவது ஆகிய முதலமைச்சரின் செயல் திட்டங்கள், தமிழ்நாடு காவல் துறையை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநில காவல்

படையாக மாற்ற உதவி செய்துள்ளன. காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் ஏற்பட்டிருந்த பெரும் பின்னடைவைப் போக்க, ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு, நடப்பாண்டில் 8,431 நிலை–II ஆண் காவலர்களும், 2,306 நிலை–II பெண் காவலர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு வருகின்றனர்.

மகளிர் அதிரடிப்படை - தமிழக காவல்துறைக்கு ஒரு மைல்கல்

14.பாலின நேர்மை நெறி பேணுதல் மற்றும் மகளிருக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த முதலைமைச்சர் அவர்களின் செயல்திட்டம் பின்பற்றப் பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதியாண்டு முடிவடைவதற்குள் மாநிலம் முழுமையிலும் 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். அனைத்து மகளிர் அதிரடிப்படை மற்றும் அனைத்து மகளிர் காவல்படை எனத் தனியாக ஏற்படுத்தப்பட்டிருப்பது தமிழகக் காவல் துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், மாநிலக் காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய வளாகம் கட்டப்படும்.

காவலர்கள் பயன்பெற புதிய வசதிகள்

15. காவலர்களுக்கு வசதிகளையும் பயன்களையும் அளிப்பதுடன் மட்டுமல்லாது, அவர்களுடைய குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து களைவதன்மூலம் காவல் படையின் ஒழுக்க நெறியை உச்சநிலையில் இருக்கச் செய்ய முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவித் தரங்களில் உள்ளவர்களுடன், ஐந்துமுறை விரிவான கூட்டங்களை நடத்தியுள்ளார்கள். இது காவல் துறையின் ஒழுக்க நெறியை உயர்த்தியுள்ளதுடன், அத்துறையை எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார்படுத்தியுள்ளது. காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான அமைப்பு முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டு, மிகவும் பொருள் பொதிந்ததாக மாற்றப்பட்டுள்ளது. மகளிர் காவலர்களின் குழந்தைகளுக்காக 6 காவல்துறை ஆணையர் அலுவலகங்களில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மொத்தம் ரூபாய் 241.61 கோடி செலவில் காவலர்களுக்கு 6,000 வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

16. புழலில், ரூபாய் 77.09 கோடி மதிப்பீட்டுச் செலவில், 3,000 கைதிகளை இடமமர்த்தக் கூடிய நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய சிறைவளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2003–2004–ல் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக ரூபாய் 19.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள கிளைச் சிறைச்சாலைகள் மாவட்டச் சிறைச்சாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன. சிறைச்சாலைகளுக்கும் நீதிமன்றங்களுக்குமிடையே தொலைதூரக்காட்சித் தொடர்பு (வீடியோ கான்பரன்சிங்) வசதி, ரூபாய் 8.61 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

17.மதுரையில் ரூபாய் 55.59 கோடி செலவில், நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள உயர் நீதிமன்றக் கிளை 13.4.2004 ஆம் நாளன்று திறக்கப்படும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் 49 விரைவு விசாரணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் கிட்டத்தட்ட 65,000 வழக்குகளுக்குத் தீர்வுகண்டு சாதனை படைக்க முடிந்தது. தேனி மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

18. பருவமழை பொய்த்ததைத் தொடர்ந்து, 2002 ஆம் ஆண்டில், வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதனால் பெரும் நிவாரணத் திட்டம் ஒன்றை அரசு நிறைவேற்றியது. இந்த நடவடிக்கை, பெருமளவில் பாராட்டினைப் பெறும்வகையில், வறுமை மற்றும் கையறு நிலையிலிருந்து மக்களைப் பாதுகாத்தது. 2003 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை முந்தைய ஆண்டைக் காட்டிலும் சிறிதளவு கூடுதலாக இருந்தாலும் எதிர்பார்த்த அளவைவிடக் குறைவாகவே இருந்தது. மாநில இயற்கை சீற்ற நிவாரண நிதி ஏற்கெனவே முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது. தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,584 கோடி நிதியுதவி கோரியும், வேலைக்கு உணவு திட்டத்திற்காக 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கக் கோரியும் மத்திய அரசிடம் வறட்சி குறித்த விரிவான அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு கணிசமான நிதி உதவி அளிக்குமென்று அரசு நம்புகிறது. இதற்கிடையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது.

காவிரி நீரில் உரிய பங்கைபெற நடவடிக்கை

19. இம்மாநிலத்திற்கு, காவிரி நீரில் நியாயமாக உரிமையுள்ள பங்கினை கர்நாடக அரசு விடுவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், தமிழ்நாட்டில் வறட்சி நிலை மேலும் கடுமையாகியுள்ளது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படியான 193.59 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ அல்லது காவிரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியான 89.771 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில், 2004 ஜனவரி வரை மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமேயாகும். அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கூட்டு அமைப்புகளான, உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் அதிகார மன்றம், காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் உத்தரவுகளை கர்நாடக அரசு ஏற்றுச் செயல்பட திரும்பத் திரும்ப மறுப்பது ஆரோக்கியமான முன்னுதாரணம் அல்ல. காவிரி ஆற்றிலிருந்து தனது நியாயமான பங்கினைத் தமிழ்நாடு பெற இயலும் வகையில், தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் தன்னுடைய முயற்சியில் இந்த அரசு ஒருபோதும் தளராது.

கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலும் ஒழிக்க நிரந்தரத் திட்டம்

20. 2002 ஆம் ஆண்டிலும், 2003 ஆம் ஆண்டிலும் பருவமழை பொய்த்துப் போனதனால், சென்னை மாநகர் தொடர்ந்து கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையை சந்தித்து வருகிறது. இதனால் நகரின் நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு கடந்த 55 ஆண்டு கால வரலாற்றில் கண்டிராத, மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதற்கான நீண்ட காலத் தீர்வுகளைக் காண்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபாய் 730 கோடி செலவிலான சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்) திட்டமிட்டவாறு 2004 ஆம் ஆண்டு மே மாதம் முடிக்கப்படும். சென்னையின் நீண்டகாலக் குடிநீர்ப் பற்றாக் குறைக்கான ஒரே நிரந்தரத் தீர்வாக கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 700 கோடி வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். மத்திய அரசு ஏற்கெனவே ரூபாய் 50 கோடிக்குத் தொடக்க நிதியுதவியை அறிவித்துள்ளது. மத்தியக் குழு மதிப்பீடு செய்த பிறகு, மேற்கொண்டும் நிதியுதவி கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான அளவு தண்ணீரை வழங்குவதற்கு ஏதுவாக, லாரிகளில் தண்ணீர் வழங்குவது அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆரணியாறு, கொசஸ்தலையாறு பகுதிகளில் நிலத்தடி நீரைப் பெற்று, குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்கொண்டுள்ள இந்தச் சவாலைச் சமாளிக்க, அரசு இயந்திரம் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

21. ஆற்றுப் படுகைகளைப் பாதுகாப்பதற்கும், வகைதொகையில்லாமல் மணல் வெட்டி எடுப்பதன் காரணமாக ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியாக, பொதுப்பணித் துறையின்மூலம் மட்டுமே மணலை முறையாக வெட்டி எடுக்கும் சீரான திட்டத்தினை அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுவதையும் நமது நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவதையும், உறுதி செய்வதுடன் அரசுக்கு கூடுதல் வருவாயையும் ஈட்டித்தரும்.

22. மாநிலத்தின் வளர்ச்சிக்கான தொலை நோக்குப் பார்வையை உள்ளடக்கிய முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், தமிழ்நாட்டில் நேர்மை நெறியுடன் கூடியதும், முழுமையானதுமான வளர்ச்சியை உறுதிசெய்ய விழைகிறது. நடப்பு நிதி

ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூபாய் 7,000 கோடியை இந்த அரசு முழுமையாக எய்தும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 8,001 கோடி என்ற உயரளவிற்கு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் வேண்டி இந்த அரசு மத்தியத் திட்டக் குழுவை அணுகும். இது, 2003–2004 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

23. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மாற்றுப் பயிர் திட்டம், பண்ணைத் துறையைச் சீரமைப்பதற்கான வழிகாட்டிக் கோட்பாடாக அமைந்துள்ளது. புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும், ரூபாய் 7.21 கோடி செலவில் இந்நோக்கத்தை மேம்படுத்தும் துல்லிய பண்ணையியல் திட்டம் துவக்கப்பட உள்ளது. மிகக் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்திக் கூடுதலாக ஆதாயம் பெறும்வகையில் துல்லிய பண்ணையியல் நடைமுறையின் மூலம், மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்களைப் பயிரிடுவதை இவ்வரசு ஊக்குவிக்கும்.

24. இந்த அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், தரிசு நிலங்களைப் பொருளாதார ரீதியில் உற்பத்திக்கு உகந்த நிலங்களாகச் சீரமைப்பதில் ஒரு முன்னோடி முயற்சியென பாராட்டப்பட்டு வருகிறது. தொடர்ந்து வறட்சி நிலவியபோதிலும், இத்திட்டத்தின்கீழ் எய்திய சாதனைகள், மிகவும் பாராட்டத்தக்கவையாக உள்ளன. 2003 டிசம்பர் வரையில் சுமார் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு, சுமார் 1.19 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் உற்பத்திக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

25. ஊரக வேளாண் அடிப்படைத் தொழிலை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலான மற்றொரு தொலைநோக்குத் திட்டமான புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் விரைவான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. 369 வளர்ச்சி வட்டாரங்களில் மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 72 திட்டங்கள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

26. மாநிலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட அரசின் துணிச்சலான முயற்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்குப் புதிய வலுவூட்டியுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்குரிய நிலுவைத் தொகையான ரூபாய் 34.91 கோடி கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த அரசின் தலையீட்டின் காரணமாக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையான மொத்தம் ரூபாய் 123.74 கோடி, கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.

மீனவர் நலனுக்கு முன்னுரிமை

27. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் நலன் இந்த அரசின் மிக உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றுள்ளது. இந்த அரசு 2001 மே திங்களிலிருந்து மீனவர்களுக்காக ரூபாய் 35.87 கோடி செலவில் 11,389 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. ரூபாய் 1.73 கோடி ஒதுக்கீட்டில், சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் முதல்முறையாக சுமார் 30,192 மீனவப் பெண்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அவர்களின் பாதுகாப்பிற்காக ரூபாய் 1 கோடி செலவில் 10,000 உயிர் காப்புக் கவச உடைகளை அரசு வழங்கியுள்ளது.

நிலத்தடி நீரைப் பெருக்கிய மழைநீர் சேகரிப்புத் திட்டம்

28. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில், மழைநீர் சேகரிப்பிற்கான சீரிய வழிகாட்டி இயக்கத்தைத் தொடங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான், ஒவ்வொரு மாநகர், நகர், கிராமம் ஆகியவற்றிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பருவமழைக் காலத்திற்கு முன்னர் இத்திட்டத்தைக் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் உறுதிப்பாட்டினால் மட்டுமே இது சாத்தியமாயிற்று. ஊரகப் பகுதிகளில், மழை நீர் சேகரிப்பின்மூலம் நிலத்தடி நீரைப் பெருக்கும் திட்டம், தற்போது ஒரு பெருந் திட்டமாக உருவாகியுள்ளது. நீர்ப் பற்றாக்குறையுள்ள தமிழ்நாட்டில் அரிதான நீரைச் சேமித்துப் பாதுகாக்கும்வண்ணம் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

29. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், ஊரக வளர்ச்சிக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிதியுதவிகளைப் பயன்படுத்திக் கொண்டதில் தமிழ்நாடு முதல் நிலையில் உள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நமது அரசின் திறமையான செயல்பாட்டைக் கருதியே, 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், மாநிலத்தின் ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகைக்கும் அதிகமாக, மத்திய அரசு கூடுதலான நிதியை வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த குடிப்புரவு வளாகங்கள்

30. முழுமையான குடிப்புரவு இயக்கத்தின் கீழ், ரூபாய் 327.32 கோடி செலவில் 28 மாவட்டங்களில், அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில் அரசு செயல்பட்டுவருகிறது. மாநிலம் முழுவதிலுமுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்திலும், மொத்தம் ரூபாய் 268.13 கோடி

செலவில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 12,618 ஒருங்கிணைந்த குடிப்புரவு வளாகங்கள் இந்த ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும். மாநிலம் முழுவதிலும் கிராம நிருவாக அலுவலர்களுக்காக மொத்தம் ரூபாய் 77.89 கோடி செலவில் 12,506 அலுவலகங்கள் 2004 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

தமிழக சாலைகளின் தரம் உயர்த்த பெருந்திட்டம்

31. பேருந்துகள் ஓட இயலாத சாலைகளை உள்ளடக்கியு, எந்த ஒரு அமைப்பினாலும் பராமரிக்கப்படாத மொத்தம் 5,850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் தரம் உயர்த்தவும், புதுப்பிக்கவும், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுடன் கூட, மாநிலத்தின் ஊரகப் பகுதிகளிலுள்ள 6,492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைக் குறிப்பாகப் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த, அரசு ரூபாய் 336.05 கோடி அனுமதித்துள்ளது. இந்தப் பெருந்திட்டமானது மக்களுக்கு நிரந்தரமான பயனை அளிப்பதுடன் பெருமளவில் மக்களின் பாராட்டையும் பெறும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 2,500 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இரு கட்டங்களில் புதிய பேருந்துகள் விடப்படும். 6,000 பேருந்துகளில் பெரும் பழுதுகளைச் சீர்செய்ய ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வசதி

32. அரசு 2003–2004 ஆம் ஆண்டில், ரூபாய் 572.16 கோடி ஒதுக்கீட்டில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம், 2004 மார்ச் மாத இறுதிக்குள் கிட்டத்தட்ட 6000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும். நடப்பு நிதியாண்டில் கிட்டத்தட்ட 10,000 கைப்பம்புகள் ரூபாய் 60 கோடி செலவில் சிறு விசைப் பம்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன. 3912 ஊரகக் குடியிருப்புகள், 21 பேரூராட்சிகள், 5 நகராட்சிகளை உள்ளடக்கிய 5 பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மொத்தம் ரூபாய் 463.54 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முழுவேகத்துடன் செயல்படும் அனைவருக்கும் கல்வி திட்டம்

33. அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை என்ற இலக்கு, தொய்வின்றி முழு வேகத்துடன் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்த அரசு 1,112 தொடக்கப் பள்ளிகளையும், 1,075 நடுநிலைப் பள்ளிகளையும், 260 உயர்நிலை மற்றும் 300 மேல் நிலைப் பள்ளிகளையும் தொடங்கியுள்ளது. அரசு கடந்த இரண்டாண்டுகளில் 10,022 ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் வழங்கியுள்ளது. "அனைவருக்கும் கல்வி"

திட்டத்தின் கீழ் ரூபாய் 401.84 கோடி ஒதுக்கீட்டுடன் மாநிலத்திலுள்ள கல்வி கட்டமைப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதில் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் இந்த முயற்சிகளினால் 2001–2002 ஆம் ஆண்டில் 16 சதவீதமாக இருந்த தொடக்கக் கல்வியைப் பாதியில் நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை 2002–2003 ஆம் ஆண்டில் 12 சதவீதமாகக் குறைந்துள்ளது.

தமிழக விளையாட்டு வீரர்கள் உலக சாதனைகள் படைக்க ஊக்குவிப்புத் திட்டங்கள்

34. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பாராட்டத்தக்க சாதனைகள் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளைக் கௌரவிப்பதற்கான ரொக்க ஊக்க உதவி வழங்கும் பெரும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது. இதுவரை 123 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூபாய் 2.10 கோடி ரொக்க ஊக்கத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் திறனை அறிவதற்கான முயற்சியை விரிவுபடுத்துவதற்கும், பள்ளிகளில் விளையாட்டுப் பண்பை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உடல் திறன் பல்முனை தேர்வுமுறை ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. இதுவரை, 50–க்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் விளையாட்டுச் சாதனங்கள், தரமான சத்துணவு, உளவியல் மேம்பாடு, நிதியுதவி போன்ற வகைகளில் உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில், கட்டமைப்பு வசதி மேம்பாடு, திறமையைக் கண்டறிதல், பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து விளையாட்டு மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்படும். உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த அரசு, தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும் விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்றே தனித்தொரு புதிய பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதியுள்ளது.

மகத்தான மருத்துவ மேம்பாடு

35. இயன்ற செலவிலும் எளிதிலும் பெறத்தக்க சுகாதார வசதிகளை மக்களுக்கு வழங்கியதில் இந்த அரசு எய்திய சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 39.75 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 46.50 கோடி மொத்தச் செலவில் 93 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசு 5 மருத்துவக் கல்லூரிகளில் 315 இடங்களை கூடுதலாக ஏற்படுத்தியுள்ளது. 5 மருத்துவக் கல்லூரிகளில், தேவையான கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான முதற்கட்ட கட்டுமானப் பணிகள் ரூபாய் 10.01 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வேலூர், கன்னியாகுமரி, தேனி ஆகிய இடங்களில் 300 படுக்கை வசதி கொண்ட புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் பணியில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவ மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் இந்தியாவின் மருத்துவத் தலைமையிடமாகத் தற்போது உருவாகியுள்ளது. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் ரூபாய் 104.47 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டுவரும் புதிய வளாகம் விரைவில் திறக்கப்படும்.

உற்பத்தித்துறையில் புதிய தொழிற்கொள்கை

36. மாநில அளவில் உற்பத்தித் துறையிலுள்ள நமது வலிமைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கான செயல்திட்டம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ள, புதிய தொழிற் கொள்கை 2003 ஆம் ஆண்டு செப்டம்பரில் அறிவிக்கப்பட்டு அனைவரது பாராட்டுதலையும் பெற்றுள்ளது. உற்பத்தித் துறையில் 2003 அக்டோபர் இறுதியில், மொத்தம் ரூபாய் 46,795 கோடி என்ற உயரளவிற்குப் புதிய முதலீடுகளை தமிழ்நாடு பெற்றுள்ளது என்று இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (CMIE) அறிவித்துள்ளது. கண்ணாடித் தயாரிப்பில் உலகளவில் பெரிய நிறுவனமான 'செயின்ட் கோபென்' நிறுவனம் தமிழ்நாட்டில் தனது உற்பத்தியை விரிவுபடுத்தவிருக்கிறது என்பதனை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர். தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்சைடு (titanium dioxide) திட்டத்தைத் தொடங்க மாநில அரசுக்கும், 'டாடா ஸ்டீல்' நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து அந்நிறுவனம் அப்பகுதியில் தொடக்க ஆய்வுப் பணியை துவக்கியுள்ளது. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான திருப்பம் மற்றும் புதிய தொழிற் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள

இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களைச் செயல் படுத்தியதில் உள்ள முன்னேற்றம் மற்றும் விருப்பத் தேர்வு அடிப்படையில் தொழில் தொடங்குவதற்குத் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக விளங்குவது போன்ற காரணங்களால் பெருமளவில் புதிய முதலீடுகள் வர வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் பன்னாட்டு வல்லுநர்களின் கருத்தைப்பெற்று கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்பு கொள்கை ஒன்று தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பம்

37. தகவல் தொழில்நுட்பம், தமிழ்நாட்டின் சேவைப் பணித் துறையின் உந்துவிசையாக உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தகவல்–தொழில்நுட்பத்துறை, 1.4 பில்லியன் டாலர் (ரூபாய் 7000 கோடி) அளவிற்கு ஏற்றுமதியைத் தாண்டிய நிலையிலும், 1000–க்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி நிறுவனங்கள் அமைந்த நிலையிலும், புதிய தொழில்களுக்கான வளமான வாய்ப்புகளைக் கொண்ட துறையாக உருவெடுத்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES), தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக் கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகள் (BPO) ஆகியவற்றுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கும் தொலைநோக்கிலான தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை, 1.5 மில்லியன் சதுர அடி பரப்பிற்கு இடவசதியுடனும், உலகத் தரம் வாய்ந்த கட்டுமான தரத்திலும் நிறுவுவதற்காக டிட்கோ நிறுவனம், சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர்கள் ஆஸ்சென்டாஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளது. அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) பற்றிய கருத்துரு இறுதியாக்கப்பட்டுள்ளது. இது சோளிங்க நல்லூரில் உருவாக்கப்படும். மத்திய கைலாசத்திலிருந்து மாமல்லபுரம் வரையில் 6 வழி தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதைக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். கலிபோர்னியாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப வளைகுடா பகுதியையும் விஞ்சும் வகையில், தகவல்–தொழில்நுட்பத்திற்கான வளைகுடா பகுதி (I.T. Bay Area) ஒன்றை சென்னையில் உருவாக்குவதில் இந்த முயற்சிகள் பெருமளவில் உதவும். மின்னணு தயார்நிலை–2003 அறிக்கையின்படி, தமிழ்நாடு, மின்னணு தயார் நிலையிலுள்ள முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைந்துள்ளது. சென்னையில் 7–வது தேசிய கணினி வழி நிருவாக மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. உலக வங்கி அதன் நிருவாக நடைமுறைகளைக் கையாளும் நிரந்தர அலுவலகத்தை இந்தியாவில் சென்னையில் நிறுவத் தீர்மானித்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை, தகவல் தொழில்நுட்பத் தொழிலில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய மாநகராக மாறியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

38. இந்த அரசு, உலகத் தரம்வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சாலைகள் குறித்த பணிகளுக்கு குறிப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும். ரூபாய் 2,116 கோடி திட்ட ஒதுக்கீட்டளவில் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டப்பணி உலக வங்கியின் நிதியுதவியுடன் துவங்கியுள்ளது. மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2,149 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ் சாலைகள், கரும்பு ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்து நிலையுயர்த்துவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

39. 5 இலட்சம் டன் கச்சா எண்ணெய் கையாளும் வகையில் நாகப்பட்டினம் துறைமுகம், ரூபாய் 100 கோடி திட்டச் செலவில் கூபீத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. கடலூர் துறைமுகத்தை ரூபாய் 250 கோடி மதிப்பீட்டுச் செலவில் விரிவாக்கி நிலையுயர்த்தும் திட்டத்தை தமிழ்நாடு கூல்சார் வாரியம் தயாரித்து வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனுமதியை மத்திய அரசு விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்உற்பத்தி

40. இந்த அரசு 2001 மே திங்களில் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரூபாய் 5,000 கோடிக்கு மிகப் பெரிய அளவில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதையும், மிக மோசமான நிதிச் சரிவைச் சந்திக்கும் நிலையில் இருந்தது என்பதையும் இந்த அவை உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இத்தகைய வேகமான நிதிச் சரிவைத் தடுத்து நிறுத்தி, தற்போது பயனீட்டாளர்களுக்குத் தரமான மற்றும் தடையில்லா மின் வழங்கலை வழங்கும் நோக்குடன் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மின் பகிர்வுத் திறனை உயர்த்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் கூடுதலாக 902 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய திட்டங்களான, வடசென்னையில் 1000 மெகாவாட் மின் திட்டமும், தூத்துக்குடியில் 1000 மெகாவாட் மின் திட்டமும், கூடங்குளத்தில் 2000 மெகாவாட் மின் திட்டமும் உறுதி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெரிய அளவில் மின் தடை என்பது கடந்த கால நிகழ்வாகிவிட்டது.

தமிழ்நாடு மின்வாரியம் அதன் பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட மொத்த ஒதுக்கீடான ரூபாய் 8,000 கோடியில் ரூபாய் 5,914 கோடியை மின் விநியோகக் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்திற்கான செயல்திட்டம் ஒன்று வகுக்கப்படும். நடப்பாண்டில் மின்வசதி இல்லாத 154 குக் கிராமங்களில் சூரிய ஒளிச் சாதனங்களின் மூலம் மின்வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

41. அரசின் பயன்திறன் அடிப்படையிலான சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால், விடுமுறையினைக் கழிப்பதற்கு, தென்னிந்தியாவில் அனைவரையும் கவரும் எழில்மிகு தேர்விடமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்காக சுற்றுலாத் துறையின் திட்ட ஒதுக்கீடு பெருமளவு அதிகரிக்கப் பட்டுள்ளது. சுற்றுலா மேம்பாட்டில் தனியார் துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதன் முறையாக 64 ஆம் "ஸ்கால்" (SKAL) உலக மாநாடு, 2003 அக்டோபரில் சென்னையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கான இடமாக சென்னை தெரிவு செய்யப்பட்டதால், நமது மாநிலம் பன்னாட்டு–சுற்றுலா வரைபடத்தில் இடம்பெற்றுவிட்டது.

42. சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக மத்திய அரசு விலை நிலைப்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சிறிய தேயிலை உற்பத்தியாளர்கள் தொடக்கத்தில் சிறிய தொகை ஒன்றை அளிப்பதன்மூலம் இத்திட்டத்தில் சேர்ந்து, விலைச்சரிவு ஏற்படும்போது விலை உத்திரவாதம் பெறுவதற்குத் தகுதியுடையவராவர். சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இந்நிதிக்கு 23,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சார்பில், தொடக்கப் பங்குத் தொகையாக, ரூபாய் 1.15 கோடியை வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. 'டீஷொவ்' என்ற புதிய மின்னணு தேயிலை ஏல மையத்தைத் தொடங்கியது, பொது விநியோக முறையின்மூலம் ஊட்டி தேயிலையை விற்பனை செய்தது ஆகியவை, தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க இந்த அரசு மேற்கொண்ட சில முக்கியமான நடவடிக்கைகளாகும்.

43. தமிழ்நாட்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது சில்லறை விற்பனையைத் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்தின் (டாஸ்மாக்) மூலம் மேற்கொள் வதென்ற அரசின் முடிவு, மாநிலத்தில் இதுநாள் வரையில் மதுவிற்பனையில் முழு ஆதிக்கம் செலுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய மதுவிற்பனை யாளர்களின் வணிகக் கூட்டணியை முறியடித்துள்ளது. இந்த முடிவு, டாஸ்மாக் நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகளில், தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பற்ற மொத்தம் 36,200 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவியுள்ளது.

சென்னைப் பெருநகர் மேம்பாடு

44. ரூபாய் 18,000 கோடி முதலீட்டிலான "சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்" என்கிற மாபெரும் கட்டமைப்பு முதலீட்டுத் திட்டம் ஒன்று பத்தாண்டு காலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், மின்சாரம், குடிநீர் வழங்கல், வடிகால், வாகனப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, வீட்டுவசதி போன்ற பல்வேறு திட்டப் பணிகளை உள்ளடக்கிய கட்டமைப்புப் பணிகளுக்கான முதலீடுகள் மொத்தம் ரூபாய் 1780.75 கோடி அளவிற்குத் திரட்டப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவாக நடந்தேறி வருகின்றன. உலகப் புகழ்வாய்ந்த மொனோ கடற்கரையின் இயற்கையழகு மீட்கப்பட்டு, அனைத்துவகையான பொதுக் கூட்டங்களின் பேரொலிகளிலிருந்தும், சமூகவிரோத சக்திகளின் தொல்லைகள் இன்றியும் தற்போது பொதுமக்கள் அலை கடலையும், கடல் மணலின் சுகத்தையும் அனுபவித்து மகிழலாம். விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டம்–இரண்டாவது கட்டத்தின் கீழ் ரயில் போக்குவரத்து அண்மையில் திருவான்மியூர் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளதை அறிந்து இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூபாய் 690 கோடியில் சுமார் 67 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூபாய் 1,700 கோடி செலவில் சென்னையிலுள்ள நீர்வழிகளை மேம்படுத்தும் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டச் செயல் பாடுகளின்மூலம், தென்னகத்தின் தலையாய நகரம் எனுமிடத்தை, சென்னை மாநகரம் பெறும் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

45. இம்மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு பலனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரூபாய் 575.30 கோடி செலவில், 3 மாநகராட்சிகளிலும் (திருச்சி, மதுரை, திருநெல்வேலி), 4 நகராட்சிகளிலும் (மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், கரூர்), விரிவான கழிவு நீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீர் அகற்று வசதிகளைப் பெறும்வண்ணம் ரூபாய் 844 கோடி மொத்தச் செலவிலான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

ஊட்டச்சத்துக் கொள்கை

46. முதலமைச்சரின் "ஊட்டச்சத்துக் குறைவில்லாத் தமிழ்நாடு" எனும் கொள்கை அனைவருக்கும் தரமான ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதில் அரசின் நிலையான உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. வைட்டமின் 'ஏ' குறைபாட்டைப் போக்க, மதிய சத்துணவு மையங்களில் அளிக்கப்பட்டுவரும் உணவில், முருங்கைக் கீரை மற்றும் கறிவேப்பிலைப் பொடி ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டமொன்றும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்றடைய முடியாத முடுக்குக ளிலுள்ள குக்கிராமங் களையும் சென்றடையும் வகையில், 4,297 கூடுதல் அங்கன் வாடி மையங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

பெண்ணுரிமை

47. முதலமைச்சர் அவர்களின் வலுவான தலைமையின் கீழ் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை செயல்பாட்டு நடவடிக்கைகள் புதிய இலக்குகளை எய்தி வருகின்றன. ஒரு குழந்தை, தன் தாயின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது பெற்றோர் இருவரின் பெயரிலுள்ள முதல் எழுத்துக்களையோ தனது பெயரின் முதல் எழுத்தாக வைத்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அரசின் புரட்சிகரமான கொள்கை பெண்ணுரிமையைப் பெருமளவு உயர்த்தியுள்ளது. 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரை உறுப்பினராகக் கொண்டுள்ள சுய உதவிக்குழு இயக்கத்தில் நம் மாநிலம் முன்னோடியாக உள்ளது. இந்தக் குழுக்களின் கணக்கிடப்பட்ட மொத்த சேமிப்பு ரூபாய் 393.64 கோடியாகும். தற்போது அளிக்கப்பட்டுள்ள கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இதுவரை 2.5 இலட்சம் மகளிருக்கு வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில், ரூபாய் 10 கோடி செலவில், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும். புரட்சிகரமான தொட்டில் குழந்தைத் திட்டம் 1,221 பெண் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உதவியுள்ளது. அவர்களில் 1,200 பெண் குழந்தைகள், வளர்ப்பு இல்லங்களைச் சென்றடைந்து, அங்கே அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த அரசு தொடங்கியுள்ள திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 12.48 கோடி மொத்தச் செலவில் 8,188 பேர் பயனடைந்துள்ளனர்.

ஆதிதிராவிடர் நலன்

48. இந்த அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள், பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடு அடையச் செய்வதில் உறுதிபூண்டுள்ளது. ரூபாய் 99.54 கோடி மொத்தச் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்காக படிப்படியாக 316 மாணவரில்லங்களைக் கட்டும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடரும். மேனிலைப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் திட்டம் மாபெரும் வெற்றியினைப் பெற்றுள்ளது. தகுதியுள்ள பயனீட்டாளர்களுக்கு மொத்தம் 1.44 இலட்சம் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவரில்லங்களில் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியின மகளிருக்குச் சாகுபடிக்கேற்ற நிலங்களை வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

49. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் உரிமை மேம்பாடு மற்றும் நலனுக்காக தொடங்கப்பட்ட திட்டங்கள் மேலும் வலுவூட்டப்படும். இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக மொத்தம் ரூபாய் 68.49 கோடி செலவில் 214 மாணவரில்லங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாணவரில்லங்களில் இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளை ஊக்குவிப்பதற்கான சிறப்பு ஊக்க உதவித் திட்டமானது நடப்பாண்டில் ரூபாய் 12 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

50. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த இந்த அரசு எப்போதுமே முக்கியத்துவம் அளித்துவந்துள்ளது. முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டமும், இலவச சீருடை வழங்கும் திட்டமும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளன. தொழில் திறனையும், கைத்தறியையும் மேம்படுத்துவதற்காக சிறப்புத் திட்டமொன்று ரூபாய் 25 கோடி முதலீட்டில் 13 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 25,000 நெசவாளர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும். பாலிகாட் சேலைகளையும், வேட்டிகளையும் இலவசமாக வழங்கும் புதிய திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. இச்சேலைகள் மற்றும் வேட்டிகளின் தரம் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 2.22 கோடி மக்கள் பயனடையும் வகையில் ரூபாய் 173 கோடி செலவில் 1.11 கோடி சேலைகள் மற்றும் 1.11 கோடி வேட்டிகள் வழங்க வகை செய்கிறது. மேலும், இத்திட்டம் மாநிலத் திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்குகிறது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடரப்படுவதுடன் சமூகப் பாதுகாப்பு வளையத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அமையும். இம்மாநிலத்தில் உள்ள விசைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து முதல்வர் அவர்கள் மத்திய நிதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள். இதுவரையிலும் விசைத்தறித் துறைக்கு அனுமதிக்கப் பட்டுவந்த விருப்ப ஆயத்தீர்வைமுறை தொடரப்பட வேண்டும் அல்லது சிறுதொழில் துறையில் உள்ளதைப் போன்று ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக விற்று முதல் உள்ள விசைத்தறிப் பிரிவுகளுக்கு மத்திய மதிப்புக்கூட்டு வரியிலிருந்து (சென்வேட்) முழு விலக்களிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். ஆண்டு விற்று முதல் ரூபாய் 35 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், முதலில் விற்பனை செய்யப்படும் ரூபாய் 25 இலட்சத்திற்கு விசைத்தறித் துறைக்கு, ஆயத்தீர்வை செலுத்துவதி லிருந்து மத்திய அரசு விலக்களித்துள்ளது. இது போதுமானதாக இல்லாததால், சிறு விசைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் விலக்களிக்கப் படுவதற்கான வரையறையை ரூபாய் 25 இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

யானைகள் புத்துணர்வு முகாம்

51. நூறு யானைகளுக்கு முதுமலை வனவிலங்கு சரணாலயத்திலும், 'டாப்சிலிப்'பிலும் மேற்கொள்ளப்பட்ட ஒருமாத ஓய்வு கொடுக்கும் திட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. யானைகளின் உடல் நலனுக்கு ஏற்ற,

குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் நடத்தப்பட்ட இந்தப் புத்துணர்வு முகாம், அவற்றிற்குக் கிடைத்த மகிழ்ச்சியான ஓய்வாகும்.

இது முதலமைச்சர் அவர்கள் விலங்குகள்மீது வைத்திருக்கும் அன்பினுக்கும் கருணைக்கும் உரிய சான்றாகத் திகழ்வதுடன், முழுமையான நமது உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும் சான்று பகர்கிறது.

52. தமிழ்மொழி, கலை மற்றும் பண்பாட்டினை மேம்படுத்துதல், மாநிலத்தின் வளஞ்செறிந்த பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல் ஆகியவை இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசு அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அனைத்து வகுப்புகளிலும் அறிவியல் தமிழை இக்கல்வியாண்டில் அறிமுகம் செய்துள்ளது. அறிவியல் தமிழ்ப்பாடப் புத்தகங்கள் ரூபாய் 5.42 கோடி செலவில் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. புதுதில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்கான 'இருக்கை' ஒன்று அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'சிட்டிசன்' (Citizen) என்னும் ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கின்றபோது, அதற்கு இணையாக "குடிமகள்" என்ற புதிய சொல் ஒன்றை உருவாக்கி ஆண்–பெண் இருபாலரும் சமம் என்ற கோட்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் புதிய உத்வேகம் அளித்துள்ளார்கள். புதுமைத் திட்டமான "அன்னதானத் திட்டம்" மாநில அளவில் 162 கோயில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. கும்பகோணத்தில் 2004 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவிருக்கும் மகாமகம் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் ரூபாய் 50 கோடி செலவில் விரைவில் முனைப்புடன் முடிக்கப்படும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 2,780 கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பெரிய கோயில்களின் பங்களிப்புடன், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள 6,000 சிறிய கோயில்களை, ரூபாய் 15 கோடி செலவில் புதுப்பிக்கக் கருதப்பட்டுள்ளது. நூற்றாண்டு விழாவையொட்டி, மொத்தம் ரூபாய் 4.60 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகம் ஒரு முக்கிய கற்றுலா மையமாக மாறியுள்ளது.

53. நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான மிகப்பெரிய முயற்சியாக, அரசு, மாநிலத் தலைமைச் செயலகத்திற்கும், மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இடையில் தொலைதூரத் தொடர்பு (வீடியோ கான்பரென்சிங்) வசதியினை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தை ஏற்படுத்துவதற்கான முடிவு அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. புதிய மாவட்டம் 9.2.2004–ல் தொடங்கிவைக்கப்படும். கணினி வழி நிருவாகத்தைக் கையாண்டு, பெருமளவு மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்றும் நிறுவனங்களில் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் செயல்பாடுகள் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் பெறுவதற்கான உரிமை குறித்த புதிய சட்டம் ஒன்றின் சிறப்பியல்புகள் குறித்து அரசு விரிவான ஆலோசனை நடத்திவருகிறது. இதற்குரிய வரைவு சட்டம், சட்டமன்றப் பேரவையில், விரைவில் அறிமுகப்படுத்தப் படும்.

54. அனைத்துத் துறைகளிலும், இந்த அரசின் குறிப்பிடத்தக்க சாதனைகளை பெருமையுடன் நினைவு கூரலாம் என்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான செயல்திறன் கொண்ட தலைமையின் கீழ், 2004 ஆம் ஆண்டில் அனைத்து நிலைகளிலும், தமிழ்நாடு அதன் சாதனைகளை விஞ்சும் என்று நாம் உறுதி கொள்ளலாம். இந்தப் பேரவையின் விவாதங்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியும் வளம் சேர்க்கும் வகையிலும் நற்கருத்துக்களைக் கொண்டதாகவும், சீர்தூக்கிப் பார்க்கக்கூடியதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வணக்கம்

மேதகு தமிழக ஆளுநர்
திரு.பெ.சீ. ராமமோகன்ராவ் அவர்கள்
4–2–2004 அன்று
தமிழ்நாடு சட்டப்பேரவையில்
ஆற்றிய உரை.

❖ ❖ ❖

அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

அழகு ஆட்சி செய்யும் மாவட்டம் இந்தத் தேனி மாவட்டம்! இந்தத் தேனி மாவட்டத்திற்கு வந்து என் அன்புக்குரிய மக்களாகிய உங்கள் அனைவரையும் கண்டு நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசுப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி உங்களோடு கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்து இருப்பது குறித்து நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் இதுவரை நான் 30 மாவட்டப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறேன். 28 மாவட்டங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு முறைதான் சென்று வந்திருக்கிறேன். ஆனால் தேனி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் மட்டும் தான் இரண்டு முறை பயணம் மேற்கொண்டிருக்கிறேன். அதற்கும் மேலாக, நான் மூன்றாம் தடவையாக வருகின்ற மாவட்டம் தேனி மாவட்டம்தான்! நான் வருகின்ற தொகுதி தேனி மாவட்டத்தில் உள்ள இந்த ஆண்டிபட்டித் தொகுதிதான்!

புதிய உத்சாகம்

நம்மைப் பார்க்க அம்மா அடிக்கடி வரவில்லையே என்று வருத்தப்படாதீர்கள்.

எத்தனை தடவை எத்தனை தொலைவு வானத்தில் பறந்தாலும் தாய்ப் பறவையின் எண்ணம் எல்லாம் அதன் கூட்டிலேயே இருப்பதைப் போல நான் எங்கு சென்றாலும் என்னுடைய எண்ணங்கள் ஆண்டிபட்டித் தொகுதியைச் சுற்றியே வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தான் மூன்றாம் முறையாக உங்கள் அன்பு முகங்களை எல்லாம் பார்ப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று இங்கு வந்திருக்கிறேன். இங்கு நான் வந்திருப்பது மூன்றாவது முறை. நான் அடிக்கடி இங்கே வர வேண்டும் என்று விரும்பினாலும் முதலமைச்சராக இருப்பதால் வேலைப் பளுவின் காரணமாக வர முடியவில்லை. அதனால்தான் உங்களை எல்லாம் கவனித்துக்கொள்ள நல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களை உங்களுக்கு நான் வழங்கி இருக்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அழகின் இருப்பிடமாய் அமைந்திருக்கும் மாவட்டம் ஆகிய இந்தத் தேனி மாவட்டத்திற்கு வருகிற போதெல்லாம் நான் புதிய உற்சாகத்துடன் வருகிறேன்.

புதிய திட்டங்கள்

சேர, சோழ, பாண்டிய மற்றும் நாயக்க மன்னர்கள் ஆண்ட பகுதி இந்தத் தேனி மாவட்டம்.

"தென்னிந்தியாவின் இரண்டாவது மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் தேனி நகரம் உட்பட பற்பல சிறப்புகளைக் கொண்ட ஊர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது தேனி மாவட்டம்.

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க தேனி மாவட்டத்திற்கு மொத்தம் 127 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளை அர்ப்பணித்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று ஆண்டிபட்டிக்கு வருகை தந்துள்ளேன். குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதிக்கு மட்டும் இன்று 46 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும் உதவிகளையும் வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நாளில் தேனி மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வண்ணம் 47 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 1076 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 20 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 424 பணிகள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி, பேரூராட்சி, ஊரக வளர்ச்சித் துறைகள் மூலமாக, 5 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், கலையரங்கம், சுயஉதவிக்குழு கட்டடங்கள், தொகுப்பு வீடுகள் போன்ற முடிவுற்ற பணிகளையும், கம்பம் நகராட்சியில் பேருந்து நிலையத்தினையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, பள்ளிக்கல்வித்துறை மற்றும் தாட்கோ மூலமாக 8 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட அருங்காட்சியகம், அலுவலகக் குடியிருப்புகள், கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள், மாணவர் விடுதிகள், வகுப்பறைக் கட்டடங்கள் போன்றவற்றையும் – சுகாதாரத் துறை மூலமாக 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆண்டிபட்டித் தொகுதியில் 8 துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் உட்பட 13 பணிகளையும் – தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் கண்டமனூரில் புதிய 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினையும் இன்று திறந்து வைத்ததில் நான் அகமிக மகிழ்கின்றேன்.

சீர் படும்பாடு பெரும்பாடு

ஒரு ஊரில் ஒரு புலவர் இருந்தார். அந்தப் புலவர் ராஜாவிடம் சென்று அவரைப் புகழ்ந்து அருமையாகக் கவிதை பாடினார். ராஜாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவரை இதற்கு முன் இப்படி யாரும் புகழ்ந்து பாடியதில்லை. அந்த மகிழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டு 'உமக்கு 2

ஏக்கர் நிலம் தருகிறோம்!' என்று சொல்லிவிட்டார். மற்றவர்களுக்கெல்லாம் மிகவும் ஆச்சரியம், ஏனென்றால் ராஜா சல்லிக் காசு கூட யாருக்கும் கொடுத்து அவர்கள் பார்த்ததில்லை.

ராஜா மந்திரியைக் கூப்பிட்டார். "இந்தப் புலவருக்கு 2 ஏக்கர் நிலம் தர வேண்டும். அதற்கான தானப் பத்திரம் எழுதிக் கொண்டு வாரும்" என்று சொன்னார். மந்திரி பத்திரம் எழுதிக் கொண்டு வந்து மன்னரிடம் கொடுத்தார். மன்னர் அதைப் புலவருக்குக் கொடுத்தார். புலவர் பயபக்தியுடன் அந்தப் பத்திரத்தை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டார். பத்திரத்தைப் படித்துப் பார்த்த புலவருக்கு மயக்கமே வந்துவிட்டது. ஏன்? கொடுத்தது வெறும் 2 ஏக்கர் நிலம். அந்த 2 ஏக்கர் நிலமும் எட்டு இடங்களில் சிதறிக் கிடந்தது. "எப்படி இந்த இடங்களுக்குப் போய் விவசாயம் செய்வது?" என்ற மலைப்பில் அவர் திகைத்துப் போய் நின்றுவிட்டார். ஒவ்வொரு இடத்திலும் கால் ஏக்கர் நிலம் இருக்கும்படி தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருந்தது.

இதை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், உதாரணத்திற்கு இப்படிச் சொல்லலாம்:–

அம்மாபட்டியில் ¼ ஏக்கர்

ஆண்டிபட்டியில் ¼ ஏக்கர்

கம்பத்தில் ¼ ஏக்கர்

கண்டமனூரில் ¼ ஏக்கர்

உப்பார்பட்டியில் ¼ ஏக்கர்

உத்தமபாளையத்தில் ¼ ஏக்கர்

தேனியில் ¼ ஏக்கர்

தேவதானப்பட்டியில் ¼ ஏக்கர்

– இப்படி 2 ஏக்கர் நிலத்தை எட்டு இடங்களில் தள்ளித்தள்ளித் தந்தால் எப்படி இருக்கும்? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! இப்படித்தான் அந்தப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது.

"என்ன புலவரே? என்னுடைய வள்ளல் தன்மையைப் பார்த்து சந்தோஷத்தில் ஊமையாகி விட்டீரா?" என்று கேட்டார் ராஜா.

"மகாராஜா, மந்திரி தள்ளித் தள்ளி எழுதியிருக்கிறார்" என்று பயந்து கொண்டே புலவர் சொன்னார். "என்ன? அப்படியா எழுதினீர்?" என்று ராஜா கேட்டார். "ராஜா நான் நெருக்கி நெருக்கித்தானே எழுதி இருக்கிறேன்? இதற்கு மேல் நெருக்கி எழுதினால் படிக்க முடியாது" என்றார் மந்திரி.

"இல்லை இல்லை! தள்ளித் தள்ளித்தான் எழுதியிருக்கிறார்! இதோ பாருங்கள்!" என்று சொல்லிப் பத்திரத்தை ராஜாவிடம் காட்டினார் புலவர்.

ராஜா பார்த்தார். 'நமக்கேற்ற மந்திரி இவர். நிலத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இப்படிச் செய்திருக்கிறார்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு புலவரைப் பார்த்துச் சொன்னார் – "எங்கே தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருக்கிறது, நெருக்கி நெருக்கித்தானே எழுதியிருக்கிறது? புலவரே நீர் பொய் சொல்லி விட்டீர்! உமக்கு நிலம் கிடையாது! நீர் போகலாம்!" என்று, புலவரை விரட்டாத குறையாக வெளியே போகச் சொல்லிவிட்டார் ராஜா. அந்தப் புலவர் தன் விதியை நொந்து கொண்டு வெளியே போனாராம்.

அந்த ராஜாவைப் போன்ற தலைவர்களும் அவரது மந்திரியைப் போன்ற குட்டித் தலைவர்களும் இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். 'வாய் ஜாலத்தால் எதையும் மாற்றிப் பேசலாம் – குதர்க்கப் புத்தியால் யாரையும் ஏமாற்றிவிடலாம்' என்று நினைத்துக் கொண்டிருக்கிற இவர்களிடம் மாட்டிக் கொண்ட சிலர் படும் பாடு பெரும் பாடு! இவர்களிடம் 'கூட்டு' என்று போனவர்கள், 'பொரியல்' ஆகி இன்று 'வறுவல்' ஆகி இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் சேர்ந்து உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு ஏற்படுத்திய தடைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவற்றை எல்லாம் மீறித்தான் உங்களுக்குப் பணியாற்றுவதில் நான் ஒய்வின்றி உழைத்து வருகிறேன்.

எனக்குத் தோன்றிய யோசனை

இன்று இங்கே இத்தனை இத்தனை பெண்களைப் பார்க்கின்ற போது உள்ளபடியே நான் பூரிப்படைகிறேன். இங்கே இருக்கின்ற பெண்கள் எல்லாம் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். முன்பெல்லாம் ஆண்டிபட்டி பகுதியைச் சேர்ந்த பெண்களைப் பார்த்தால் பாவமாக இருக்கும். ஆனால், இப்போது இந்தப் பெண்களை பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. இங்கே அமர்ந்திருக்கின்ற பெண்கள் முகத்தில் எவ்வளவு தன்னம்பிக்கை, எவ்வளவு தைரியம், எவ்வளவு உற்சாகம்! இதற்கெல்லாம் காரணம், நான் தொடங்கிய இந்த சுயஉதவிக் குழுக்கள் தான். பல முறை நான் இதைத் தான் திரும்ப திரும்ப எங்கே பேசினாலும் சொல்கிறேன். பெண்கள் நினைத்தால் அவர்கள் சாதிக்க முடியாதது எதுவுமே கிடையாது. பெண்களுக்கு தேவைப்படுவது வாய்ப்புகள்தான்.

காலம் காலமாக நம்முடைய சமுதாயத்தில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்தார்கள். காலம் காலமாக சில பெரியவர்கள்–ஆண்கள் இதைச் சொல்லி வைத்து விட்டார்கள். ஒரு பெண் பிறக்கின்ற போது குழந்தைப் பருவத்தில் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். பெரியவளானால், பின்னர் கணவரைச் சார்ந்திருக்க வேண்டும். வயதாகி விட்டால் மகனைச் சார்ந்திருக்க வேண்டும் என்று சொல்லி வைத்து விட்டார்கள். ஆண்களுக்கு என்னென்ன வேலைகள் செய்யப் பிடிக்காதோ அருவருப்பான வேலைகள் – வீட்டைக் கூட்டுவது, சாணித் தண்ணீரைத் தெளிப்பது, சமையல் செய்வது, துணி துவைப்பது, பாத்திரங்கள் தேய்ப்பது, கழுவுவது, துலக்குவது இப்படிப்பட்ட வேலைகள் எல்லாம், இதெல்லாம் பொம்பளை சமாச்சாரம் என்று ஒதுக்கி விட்டார்கள். இத்தகைய வேலைகளில் ஆண்கள் ஈடுபடவே மாட்டார்கள். ஆகவே, சம்பளம் இல்லாத வேலைக்காரிகளாகத் தான் பெண்கள் நடத்தப்பட்டு வந்தார்கள். நான் யோசித்தேன். ஆண்களோடு பெண்கள் சரி நிகர் சமானமாக வாழ வேண்டும் இந்த நாட்டிலே என்பது தான் இந்த அரசின் கொள்கை. என்னுடைய இலட்சியம். இதை எப்படி சாதிப்பது என்று சிந்தித்தேன். அப்போது எனக்கு தோன்றிய யோசனை இதுதான். பெண்கள் உண்மையிலேயே ஆண்களுக்கு சரி நிகர் சமமாக வாழ வேண்டும் என்றால் அவர்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரம் அடைய வேண்டும். அவர்கள் பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்திருக்க கூடாது. சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்றால் பெண்கள் சுயமாக சம்பாதிக்க வேண்டும். அதற்காகத் தான் 1992 ஆம் ஆண்டிலேயே முதல் முறை நான் முதலமைச்சராக இருந்த போதே நான் இந்த பெண்கள் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினேன். இன்று ஆலமரமாக அது வளர்ந்து தழைத்தோங்கி தமிழகம் எங்கும் இன்றைக்கு 25 இலட்சம் பெண்கள் சுயஉதவிக் குழுக்களில் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த சுயஉதவிக் குழுக்களில் இருக்கின்ற பெண்கள் சேமித்து வைத்திருக்கின்ற நிதி எவ்வளவு தெரியுமா? வங்கிகளில் இருக்கின்ற சேமிப்புத் தொகை ஏறக்குறைய 400 கோடி ரூபாய் ஆகும். நினைத்துப் பார்க்கிறேன்.

ஆரம்பத்தில் 1992இல் இந்த சுயஉதவிக் குழுக்களை, மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்குகின்ற போது எந்த வங்கியும் அதில் உறுப்பினர்களாக இருக்கின்ற தாய்மார்களுக்கு கடன் வழங்க முன் வரவில்லை, தயங்கினார்கள், பயந்தார்கள். இந்தப் பெண்களால் சம்பாதித்து மீண்டும் இந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியுமா என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். ஆனால், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு, இந்தக் கடன்களை எல்லாம் உடனுக்குடன் திருப்பிச் செலுத்தி, மீண்டும் அதைவிட பெரிய கடன் வாங்கி, மீண்டும் அதைவிட பெரிய தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியதைப் பார்த்த பிறகு, இன்றைய தினம் 400 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் தாய்மார்களிடம், பெண்களிடம் சேமிப்புத் தொகை இருப்பதை பார்த்து இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இன்று அதே வங்கிகள் தாய்மார்கள் பின்னால் சென்று, அவர்களைப் பின் தொடர்ந்து தாயே, அம்மா உங்களிடம் இருக்கின்ற சேமிப்புத் தொகையை எங்கள் வங்கியில் பிக்சட் டெபாசிட்டாக, டேர்ம் டெபாசிட்டாக போட்டு வையுங்கள். வைப்புத் தொகையாக போட்டு வையுங்கள் என்று தாய்மார்களிடம் போய் கேட்கின்ற ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற போது எவ்வளவு பெருமையாக இருக்கிறது.

அரசிபட்டியான ஆண்டிபட்டி

ஆண்டிபட்டியை பொறுத்த வரை இங்கே நான் தேர்தலில் நின்ற போது உங்களுக்கு எல்லாம் ஒரு வாக்குறுதி அளித்தேன். தமிழ்நாட்டில் ஆண்டிபட்டிதான் முதன்மையான தொகுதி என்ற அந்தஸ்தை அடையும்படி நான் செய்வேன் என்ற ஒரு வாக்குறுதி அளித்தேன். அதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு அந்த இலக்கை எட்டுகின்ற வகையில் இன்றைக்கு அனைவருமே ஆண்டிபட்டி, அரசிபட்டி ஆகிவிட்டது என்று சொல்லும் அளவிற்கு இந்த மாவட்டத்தில், இந்த தொகுதியில் பல வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எத்தனையோ புதிய திட்டங்களைத் தீட்டுகிறோம். எத்தனையோ தொழில் அதிபர்கள் என்னை வந்து சந்திக்கிறார்கள். அதிகாரிகளும் என்னுடன் ஆலோசனை நடத்துகிறார்கள். பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் என்னுடன் ஆலோசனை நடத்துகிறார்கள். விஞ்ஞானிகள் ஆலோசனை நடத்துகிறார்கள். ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தலாம். அதை பரிட்சார்த்தமாக எங்கேயாவது தொடங்கலாம் என்று சொன்னால் உடனேயே ஆண்டிபட்டியில் தொடங்குங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

அதைப் போலவே பரிட்சார்த்தமாக அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் ஒரு புதிய திட்டம் ஆண்டிபட்டியில் தொடங்கப் பட்டுள்ளது. அதை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது தான் வெணிலா பீன்ஸ் சாகுபடித் திட்டம். பரிட்சார்த்தமாக இப்போது தான் தொடங்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற பெண்களை குறிப்பாக கேட்டுக் கொள்கிறேன். இந்த வெணிலா பீன்ஸ் சாகுபடியை நல்ல முறையில் நீங்கள் மேற்கொண்டால் இந்த ஆண்டிபட்டி உண்மையிலேயே அரசிபட்டி ஆகிவிடும். வளம் கொழிக்கும் பூமியாக மாறிவிடும். நீங்களும் அரசிகளாக மாற முடியும். காரணம் இந்த வெணிலா பீன்ஸ் சாகுபடியால் ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டுக்கு 52 இலட்சம் ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆகவே, இதை நினைவில் நிறுத்திக் கொண்டு, இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நீங்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவிலே 75 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் 376 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இதில் ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் 24 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 151 பணிகள் அடங்கும்.

பொதுப்பணித்துறை மூலமாக 6 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள், மாணவ, மாணவியர் விடுதிகள், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்கட்டமைப்பு பணிகள், ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் வார்டுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் காவல்துறை மூலமாக 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்டக் காவல் அலுவலகம் மற்றும் ஏனைய காவல்துறை அலுவலகங்கள், ஆயுதப்படை வளாகம், அனைத்து மகளிர் காவல் நிலையம் போன்ற கட்டுமானப் பணிகளுக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். இதனை நிறைவேற்றும் வகையில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. மேலசொக்கநாதபுரம் ஊரக பேரூராட்சி மற்றும் கீழசொக்கநாதபுரம், தர்மத்துப்பட்டி, ரங்கநாதபுரம், கரட்டுப்பட்டி, அமராவதி நகர், மணப்பட்டி ஆகிய குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 11 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் நோக்கத்தில் 1 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மலசொக்கநாதபுரம் ஊரக பேரூராட்சி குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கெங்குவார்பட்டி, செங்குளத்துப்பட்டி, கோட்டார்பட்டி, மீனாட்சிபுரம், பாலபட்டி, ஸ்ரீராம் நகர் மற்றும் அம்சாபுரம் ஆகிய குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 44 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் திட்டத்தின் அடிப்படையில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'கெங்குவார்பட்டி ஊரக பேரூராட்சி குடிநீர்த் திட்டம்' முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் மொத்தம் 455 கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் 3 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பில் 148 கிராம குடிநீர்த் திட்டங்கள் ஆண்டிபட்டித் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதில் நான் மனநிறைவு அடைகிறேன்.

பழனிசெட்டிபட்டி குடியிருப்பில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 34 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் திட்டமாக ஒரு கோடி ரூபாய் மதிப்பில் 'பழனிசெட்டிபட்டி ஊரக பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு' இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், கடந்த இரண்டரை ஆண்டுகளில் தேனி மாவட்டம் ஊரகப் பகுதிகளில் 29 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களும்; நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 11 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களும் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டி காட்ட விரும்புகிறேன்.

தேனி மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 3 இலட்சம் மக்கள் பயன் அடையும் வகையில் 73 கோடி ரூபாய் மதிப்பிலான ஆண்டிபட்டி, சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நான் ஆணையிட்டதன் அடிப்படையில் அத்திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இத்திட்டம் முடிக்கப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டம்

நான் 16.9.2002 நாளன்று நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு இம்மாவட்டத்தில் முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டத்தினைத் துவக்கி வைத்தேன். சுயஉதவிக் குழுக்கள் அமைத்து குழு உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிப்பதுடன் தொழில் முனைவோர் பயிற்சி, தொழில் திறன் பயிற்சி, தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு தொழில் துவங்கி பொருளாதார நிலையினை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1973 குழுக்கள் உருவாக்கப்பட்டு 31,088 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு உள்ளனர். இதில் 479 குழுக்களுக்கு அரசின் பல்வேறு கடன் உதவித் திட்டங்களின் கீழ் 2 கோடியே 11 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு குழு உறுப்பினர்கள் பல்வேறு தொழில்கள் செய்து வருகின்றனர் என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1 கோடியே, 2 இலட்சம் ரூபாய் செலவில் 717 குழுக்களுக்கு, குழு உறுப்பினர் பயிற்சியும் – 866 குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சியும் – 1377 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சியும் – 465 மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியும் – 1278 மகளிருக்கு வேளாண் தொழில் திறன் பயிற்சியும் அளிக்கப் பட்டுள்ளது என்பதை அறிவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமன்றி தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள குடும்பங்களின் பொருளாதார நிலையினைக் கணக்கெடுத்து, ஏழைக் குடும்பங்களுக்கு அவரவருக்கு ஏற்ற தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாடு அடைய வழி வகுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் முன்னோடியாக ஆண்டிபட்டி வட்டாரத்தில் ஜி.உசிலம்பட்டி ஊராட்சியில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடடைய சாலை வசதிகள் மிகவும் இன்றியமையாதது ஆகும். இதன் அடிப்படையில் கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும் புதிய சாலைகளை அமைப்பதற் காகவும் சாலை மேம்பாட்டிற் காகவும் எனது தலைமையிலான அரசு இதுவரை மாநிலம் முழுமைக்கும் 2,518 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டித் தொகுதியில் முதலமைச்சரின் சிறப்புச் சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ் 86 இலட்சம் ரூபாய் செலவில் 26.40 கி.மீ. நீளத்திற்கு சாலைகளும், மற்ற தொகுதிகளில் 81.2 கி.மீ. நீள சாலைகள் 3 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டித் தொகுதியில் மிக முக்கிய புண்ணியத் தலமான மாவூத்து வேலப்பர் கோவிலுக்குச் செல்லும் சாலையில் பல்வேறு இடங்களில் பாலங்கள் இல்லாததால் மழைக் காலத்தில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாயினர். எனவே, ஆண்டிபட்டி – வேலப்பர் கோவில் சாலையில் 41 இலட்சம் ரூபாய் செலவில் 3 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பாலக்கோம்பை, தெப்பம்பட்டி மற்றும் ராஜதானியைச் சேர்ந்த ஊர் மக்கள் பயன் பெறும் வகையில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலக்கோம்பையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் மொத்தம் 10 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகளும் – கம்பம், காமய கவுண்டன்பட்டி சாலையில் மக்களின் நெடுநாளைய கோரிக்கையான பாலம் கட்டும் பணிகள் 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிபட்டித் தொகுதியில் முக்கிய சாலையான வைகை அணை – வருசநாடு ஒரு வழித்தடம் மற்றும் திண்டுக்கல் – தேனி சாலை ஆகியவற்றை, 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி, உறுதிப்படுத்தும் பணிக்காக இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலைத் திட்டத்தின் கீழ் சுற்றுலா வளர்ச்சி மற்றும் புண்ணியத் தலங்களைக் கருத்தில் கொண்டு பாளையம், சுருளிப்பட்டி, தேவாரம், கோம்பை, கம்பம்மெட்டு, கோகிலாபுரம், ஆனமலையான்பட்டி, ராயப்பன்பட்டி, நாகையகவுண்டன்பட்டி, காமயகவுண்டன் பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பயன்படும் வகையில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலைப் பணிகளும் பாலங்களும் தொடங்குவதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டிபட்டி வேலப்பர் கோவில் சாலையை மாவூத்து வேலப்பர் கோவிலின் முக்கியத்துவம் கருதி 84 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தவும், சுற்றுலா முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கும்பக்கரை அருவிக்குச் செல்லும் கிருஷ்ணமநாயக்கன் தோப்பு சாலை 32 இலட்சம் ரூபாய் செலவிலும்– கொடைக்கானல் – கொச்சி சாலை 95 இலட்சம் ரூபாய்செலவிலும் மேம்பாடு செய்யும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் அகமிக மகிழ்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, திண்டுக்கல் – குமுளி நெடுஞ்சாலையில் தேனி நகரில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டும் பணிக்கும், ஜெயமங்கலம் – ஆண்டிபட்டி சாலையில் குள்ளப்புரம் அருகே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலம் கட்டும் பணிக்கும் – மயிலாடும்பாறை – பொன்னம்படுகை சாலையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மயிலாடும் பாறை அருகே பாலம் கட்டும் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு திட்டத்தின் கீழ் 17 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 41 சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணிகள் நிறைவேற்றுவதற்காகவும் – ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக பாரதப் பிரதமர் கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 11 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கவும் இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக 3 கோடியே 22 இலட்சம் மதிப்பில் பாலங்கள் கட்டும் பணிகளுக்கும் சாலை புதுப்பித்தல் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

உதவிபுரிய ஓடோடி வருகிறேன்

தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியின் தேவைகள் என்னென்ன என்பதை அறிந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கு திட்டங்கள் தீட்டி அவற்றை உடனுக்குடன் நான் செயல்படுத்தி வருகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னிடம் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்றைக்கும் வீண் போகாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஓர் ஊரில் நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. விவசாயிகள் பயிர்செய்ய இயலவில்லை. தண்ணீர் இல்லாமல் மக்கள் வாடினார்கள். ஊரின் வறட்சியைப் போக்குவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் ஒரு முனிவர் அந்த ஊருக்கு வந்தார்.

''நீங்கள் எல்லோரும் ஏன் வாடி இருக்கிறீர்கள்?'' என்று முனிவர் கேட்டார்.

''சாமி, ஊரிலே சில ஆண்டுகளாக மழை இல்லை. அதனால் பயிர் இல்லை. மனைவி மக்களுக்கு உணவு இல்லை. மாடு கன்றுகளுக்குத் தீவனம் இல்லை. எங்கள் வறுமையைத் தீர்க்க வழி இல்லை. என்ன செய்வது என்றும் தெரியவில்லை!'' என்று ஊரிலே இருந்த பெரியவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதை எல்லாம் கேட்ட முனிவர் சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்தார். பிறகு தீர்க்கமான குரலில் முனிவர் அவர்களிடம் சொன்னார்.

''நாளை விடியற்காலை 5 மணிக்கு ஊர் மக்கள் எல்லோரும் இந்த இடத்திற்கு வர வேண்டும். நான் இதே இடத்தில் இருப்பேன். அப்போது மழை பெய்யும். அந்த மழையால் உங்கள் பஞ்சம் தீரும். இது உறுதி! ஆகவே, காலையில் கட்டாயம் வாருங்கள்! இப்போது நீங்கள் போகலாம்! ''என்று கூறிய முனிவர் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் விடியற்காலை 4 மணியில் இருந்தே ஊர் மக்கள் வரத் தொடங்கி விட்டார்கள். 5 மணி அளவில் ஏறத்தாழ எல்லா மக்களும் வந்து விட்டார்கள். முனிவர் கண்களை மூடியபடியே இருந்தார். திடீரென்று பெரு மழை பொழியத் தொடங்கியது. ஊர் மக்கள் அனைவரும் மழையில் நனைவதைக் கூட பொருட்படுத்தாமல் முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

''சாமி, உங்கள் கருணையே கருணை! உங்கள் அருளால் எங்கள் துன்பம் நீங்கப் போகிறது! நாங்கள் உங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்'' என்று மக்கள் முனிவரிடம் கூறினார்கள்.

அப்போது முனிவர் சொன்னார். ''மழை என்னால் வரவில்லை. அங்கே பாருங்கள் ஒருவரை, அவரால் தான் மழை வந்தது'' என்று சுட்டிக் காட்டினார். எல்லோரும் அவர் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தார்கள். அங்கே ஒருவர் குடையுடன் நின்று கொண்டிருந்தார்.

''பார்த்தீர்களா அந்த மனிதரை? நான் மழை வரும் என்று சொன்னதில் உங்களுக்கு சந்தேகம் இருந்தது. இருந்தாலும் என்ன நடக்கின்றது என்று பார்க்கலாம் என்று வந்தீர்கள். ஆனால், அங்கு நிற்கும் மனிதரோ நான் சொன்னதில் மாபெரும் நம்பிக்கை வைத்தார். அதனால் தான் மழை பெய்யும் என்று சொன்னதும் அதை உறுதியுடன் நம்பிக்கையில் குடையுடன் வந்திருக்கிறார். அவரது நம்பிக்கையால் தான் இப்போது மழை பெய்தது. இன்னும் மழை பெய்யும். அப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கும் வேண்டும்'' என்று முனிவர் சொன்னாராம்.

அப்படிப்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கையை என்னிடம் நீங்கள் கொண்டிருப்பதால் தான் உங்களுக்கு

உதவி புரிய நான் ஓடோடி வருகிறேன் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

நலத்திட்ட உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தேனி மாவட்டத்தில் உள்ள 9,051 பயனாளிகளுக்கு 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை இந்த விழாவில் வழங்குவதிலும், குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 89 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,608 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதிலும் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 32,000 ரூபாய் மதிப்பில் 40 பயனாளிகளுக்கு உதவியும் – பொது சுகாதாரத் துறை மூலமாக 83,000 ரூபாய் மதிப்பில் 166 கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு நிதி உதவியும் – மின்சார வாரியத்தின் மூலமாக 1 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 1,784 பயனாளிகளுக்கு இலவச மின் இணைப்பும் – தோட்டக்கலைத் துறை மூலமாக 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் 25 பயனாளிகளுக்கு விசைத் தெளிப்பான் மற்றும் மானிய உதவியும் – பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, சமூக நலத்துறை மூலமாக 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் 569 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரம் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி உதவியும் – தொழில் வணிகத் துறை மூலமாக 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் 35 பயனாளிகளுக்கு மானியமும் – ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலமாக 8 இலட்சம் ரூபாய் மதிப்பில் 493 பயனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், காது கேளாதோர் கருவி, கல்வி உதவித் தொகைகள் போன்ற உதவிகளும் – வருவாய்த்துறை ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,602 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை, விபத்து நிவாரணம், நலிந்தோர் உதவித் தொகை, நிலப்பட்டா போன்ற பல்வேறு உதவிகளும் – கிராமத் தொழில் வாரியம், தாட்கோ, மகளிர் திட்டம், நகராட்சி, ஊரக வளர்ச்சி; கூட்டுறவு மற்றும் வனத்துறை மூலம் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3,377 பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு, சுழல் நிதி மற்றும் கடன் உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஓர் ஊரில் ஒரு அரசர் இருந்தார். அவருடைய நாட்டில் சில பெரிய மனிதர்கள் இருந்தார்கள். உண்மையில் அவர்கள் பெரிய மனிதர்களே அல்ல. போலிப் பெரியவர்கள். அவர்கள் அரசருக்கு எதிராக எதையாவது செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் ஊர் மக்களுக்கு இது தெரியாது. அவர்கள் அந்தப் போலிப் பெரிய மனிதர்களை நல்லவர்கள் என்றே நம்பி வந்தார்கள்.

அந்தப் போலி மனிதர்கள் பொல்லாதவர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி என்று அரசன் யோசித்தார். யோசித்த பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஊரிலே ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த ஊர்ப் பொது விழாவுக்கு வசதியுள்ளவர்கள் நன்கொடை அளிக்கலாம் என்று அறிவித்தார். பணக்காரர்கள் பலரும் அரண்மனைக்கு வந்தார்கள். என்ன பொருளைத் தாங்கள் அளிக்கலாம் என்று அரசரிடம் கேட்டார்கள். அரசர் ஒவ்வொருவருக்கும், அவர்கள் கொடுக்க வேண்டிய பொருளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அப்பொழுது போலிப் பெரிய மனிதர்கள் வந்தார்கள். எதைச் செய்தாலும் அவர்கள் கூட்டாகத் தான் செய்வார்கள். அவர்கள் அரசரிடம் அடக்கத்துடன் நின்று கொண்டு ''அரசே! நாங்கள் என்ன தர வேண்டும் என்று உத்தரவிடுகிறீர்களோ அதை உடனே தரத் தயாராய் இருக்கிறோம். பொன்னைத் தரவா? மணியைத் தரவா? வைர வைடூரியங்களைத் தரவா? எது வேண்டுமானாலும் தரத் தயாராய் இருக்கிறோம். ஆணையிடுங்கள் அரசே'' என்று கூறினார்கள்.

''இல்லை, பொன்னும், பொருளும் வேண்டாம். எல்லாப் பொருள்களையும் ஊர்ப் பொது இடத்தில் தரச் சொல்லியிருக்கிறேன். உங்கள் பங்காகப் பால் கொண்டு வந்து நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள்; அதுபோதும்'' என்று அரசர் சொன்னார்.

உடனே அந்தப் போலி மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு அண்டா பால் கொண்டு வருகிறோம்' என்றார்கள். அரசர், ''அவ்வளவு வேண்டாம். ஆளுக்கு ஒரு சொம்பு பால் கொண்டு வாருங்கள் அது போதும், ஊர் நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள் என்று சொன்னார்.

அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம். ''அப்பாடா! ஒரு சொம்பு பால் தானே? கொடுத்தால் போயிற்று? என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

விழா நாள் வந்தது. போலிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவரும் ''மற்றவர்கள் பால் கொண்டு சென்று ஊற்றும் போது நாம் ஒருவர் மட்டும் சொம்பு நிறைய தண்ணீரைக் கொண்டு போய் ஊற்றி விடுவோம். யாருக்குத் தெரியப் போகிறது?'' என்று நினைத்தார்கள். நினைத்தது மட்டும் அல்லாமல் இயல்பாகவே கருமிகளான அவர்கள் ஒவ்வொருவருமே அப்படி செய்தார்கள்.

எல்லோரும் ஊற்றி முடிந்ததும் அரசர் அமைச்சரை அழைத்து ''எவ்வளவு பால் இருக்கும் என்று அளந்து வாருங்கள்'' என்று சொன்னார்.

ஊரார் எல்லோரும் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் நடுவே வைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய பார்த்திரத்தை நோக்கி அமைச்சர் நடந்தார். பாத்திரத்தை எட்டிப் பார்த்த அமைச்சருக்கு பகீரென்றது. அமைச்சர் அங்கிருந்தே அரசரை நோக்கிச் சொன்னார். ''அரசே, இந்தப் பெரிய மனிதர்கள் நம்மை ஏமாற்றி இருக்கிறார்கள். பாத்திரம் முழுவதும் தண்ணீர்தான்! ஒரு சொட்டுப் பாலைக் கூட அவர்கள் ஊற்றவில்லை'' என்று உரக்கக் கூறினார். மக்களும் வந்து பார்த்தார்கள். ''ஆகா! இவ்வளவு நாளும், பெரிய மனிதர்கள் என்று நினைத்தோமே? இவர்கள் எல்லோருமே போலிப் பெரிய மனிதர்கள் தானா? இவர்கள் அரசரை ஏமாற்றினார்கள். நம்மை ஏமாற்றினார்கள். அதைவிடக் கொடுமை இவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் ஏமாற்றியுள்ளார்கள்! இதுவரை இவர்கள் நம்மை முட்டாள்களாகவே நினைத்திருக்கிறார்கள். நாமோ இந்த மண்ணாங்கட்டிகளைத் தங்கக் கட்டிகள் என்றல்லவா தவறாக நினைத்து விட்டோம்?'' என்று சொல்லி மக்கள் வெட்கப்பட்டார்கள்! வேதனைப் பட்டார்கள்!

போலிப் பெரிய மனிதர்களின் அடிப்படைக் குணமே சுயநலம் தான். அவர்கள் கூட்டணியாகச் செயல்பட்டு மற்றவர்களை ஏமாற்றுவார்கள். ஒருவரை ஒருவர் ஏமாற்றவும் தயங்க மாட்டார்கள்!

அந்த நாட்டுப் பொதுமக்கள் போலிப் பெரிய மனிதர்களின் சுயரூபத்தை சில காலம் கழித்து அடையாளம் கண்டு கொண்டார்கள்.

என் அருமைத் தமிழ் மக்களாகிய நீங்கள் கெட்டிக்காரர்கள்! அப்படிப்பட்ட போலிப் பெரிய மனிதர்களை எப்போதும் நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். அவர்களை நீங்கள் அடையாளம் கண்டால் மட்டும் போதாது. சரியான பாடம் புகட்டவும் வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு, நீங்கள் என்னிடம் கொண்டிருக்கும் மாறாத அன்புக்கும், எனக்குத் தருகின்ற ஆதரவுக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் நானே என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் 15 பேருக்கு மட்டும் மேடையில் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அதிகாரிகளும் இங்கேயே இப்போது உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அதுல் ஆனந்த் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
எனக் கூறி விடை பெறுகிறேன்.
நன்றி வணக்கம்.

– 5.2.2004 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

சென்னையில் கோலாகலமாக நடந்த குடியரசு நாள் விழா!

இந்தியத் திருநாட்டின் 55ஆவது குடியரசு நாள் விழாக் கொண்டாட்டங்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை கடற்கரை காமராசர் சாலையில் உள்ள மகாத்மா காந்தியடிகள் சிலை அருகே 26–1–2004 அன்று காலை 7.51 மணிக்கு சிறப்பாகத் தொடங்கியது.

காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் முன்னே அணிவகுத்து வர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள், வருகைதந்து, கடற்கரைச் சாலையின் இருபுறங்களிலும் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். தொடர்ந்து காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்துவர விழாவிற்கு வருகைபுரிந்த மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஹரீ.ராமமோகன்ராவ் அவர்கள், பார்வையாளர்கள் பகுதியில் சுற்றிவந்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களை அணிவணக்கம் ஏற்கும் மேடையருகில் வரவேற்றார். தொடர்ந்து ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் பரம்ஜித் சிங், வி.எஸ்.எம்., சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் டி.ஹரி, ஏ.வி.எஸ்.எம்., சென்னை தாம்பரம் வான்படை அதிகாரி ஏர்கமோடர் சபன்குமார் கர்மாகர், வி.எம்., தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.எஸ்.வி.வெங்கட கிருஷ்ணன், இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு.ஆர்.நடராஜ், இ.கா.ப., ஆகியோரை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

இதனையடுத்து காலை 8 மணிக்கு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அப்போது அரசு ஹெலிகாப்டர் தாழ்வாகப் பறந்துவந்து தேசியக்கொடி அருகே அணிவகுப்புப் பாதை வழியாக மலர் தூவிச் சென்றது. பிறகு கடலோரக் காவல்படையின் அதிவேக வானூர்திகளின் வான் அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து அணிவணக்க மேடைக்கு ஆளுநர் வருகை தந்தார். அணிவகுப்புத் தளவாய் ஸ்குவாட்ரன் லீடர் ஆர்.கே.சிங் தலைமையில் பல்வேறு படைப்பிரிவுகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

இராணுவப்படை, இராணுவக் கூட்டுக் குழல் முரசிசை, கடற்படை, வான்படை, வான்படை கூட்டுக்குழல் முரசிசை, சி.ஆர்.பி.எஃப் கூட்டுக்குழல் முரசிசை, சி.ஆர்.பி.எஃப் படை, முன்னாள் இராணுவத்தினர் படைப்பிரிவு, சி.ஐ.எஸ்.எப். கூட்டுக் குழல் முரசிசை, சி.ஐ.எஸ்.எப். படைப்பிரிவு, ரயில்வே பாதுகாப்புப்படை,

இவ்வாண்டு, மதநல்லிணக்கத்திற்காக அரிய சேவை புரிந்துவரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு.எம்.அகமதுகானை பாராட்டி, "கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ரூ.2,000மதிப்புள்ள பதக்கமும், ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையும் சான்றிதழும் இவருக்கு வழங்கப்பட்டது.

இவ்வாண்டு, மகாத்மா காந்தி காவல் பதக்கத்தை கிருஷ்ணகிரி மதுவிலக்கு அமல்

சென்னை மாநகர காவல் படை, காவல் குதிரைப்படை, சென்னை மாநகர காவல் கூட்டுக்குழல் முரசிசை, பெண்கள் கமாண்டோ படை, துரித நடவடிக்கை காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, தமிழ்நாடு கமாண்டோ படை, ரெஜிமெண்டல் மைய கூட்டுக் குழல் முரசிசை, கடலோரப் பாதுகாப்புக்குழு, நீலகிரி காவலர் படைப்பிரிவு, தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணித்துறை படை, ஊர்க்காவல் படை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, தேசிய மாணவர் படைப்பிரிவுகள், சாலைக்காப்பு சுற்றுக்காவல் படைப்பிரிவுகள், பாரத சாரண சாரணியர் படை ஆகியவை அணிவகுப்பில் இடம் பெற்றன. இந்த அணிகளின் அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இதனையடுத்து, மேதகு ஆளுநர் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களையும், மதநல்லிணக்கப் பணிக்கான கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கத்தையும், கள்ளச்சாராயத்தை தடுப்பதற்காகப் பணியாற்றிய காவல் துறையினருக்கு மகாத்மா காந்தி காவல்பதக்கத்தையும் வழங்கினார்கள்.

இந்த ஆண்டு "வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம்–2004–ஐ, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தைச் சேர்ந்த செல்வன் க. வீரமணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் வகுத்தாழ்வார்பட்டி ப. துரைமுருகன் ஆகியோர் பெற்றனர். இவ்விருது பெற்ற இவர்களுக்கு ரூ.2,000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கமும், ரூ.10 ஆயிரத்துக்கான காசோலையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.கருணாகரன், தென்காசி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.கோ.சக்ரவர்த்தி ஆகிய இருவரும் பெற்றனர். இவர்களுக்கு பதக்கமும் ரூ.10 ஆயிரம் ரொக்கத் தொகையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில், சென்னை ஜி.ஆர்.டி. மகாலட்சுமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பாரம்பரிய நடனம், குழந்தைகள் தோட்டம் மகளிர் மேல்நிலைப்பள்ளியின் மூங்கில் நடனம், பாலலோக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் மீனவர் நடனம், மகரிஷி வித்யாமந்திர் மேல்நிலைப்பள்ளியின் குஜராத்தி – கார்பா மற்றும் தான்டியா ராஸ், இராணி மேரிக்கல்லூரியின் நாட்டிய நாடகம், மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியின் ஒயிலாட்டம் மற்றும் கும்மி, எத்திராஜ் பெண்கள் கல்லூரியின் கிராமிய நடனம் ஆகியவை இடம் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த ஆந்திர மாநில கலைக் குழுவினரின் தப்பட்டே குல்லு, கர்நாடக மாநில கலைக்குழுவினரின் கருடி கொம்பே, குஜராத் மாநில கலைக் குழுவினரின் பல்லிஜாக் கார்பா, செய்தி மக்கள் தொடர்புத்துறை ஏற்பாடு செய்திருந்த மதுரை மாவட்ட கலைக் குழுவினர்கள் வழங்கிய கரகம், காவடி, மயில் மற்றும் பொய்க்கால் குதிரை ஆட்டம், நையாண்டி மேளம் , வேலூர் மாவட்ட கலைக்குழுவினரின் கொக்கலிக் கட்டை ஆட்டம் ஆகியவை இடம்பெற்றன.

பின்னர் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை ஏற்பாட்டில் நாதஸ்வர இசை முழங்க அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடந்தது. இதில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காவல்துறை, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, தோட்டக்கலைத்துறை, தொழில் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, சுற்றுலாத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை, சமூக நலத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை ஆகிய துறைகளின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள் காண்போரை ஈர்க்கும் வண்ணம் அணிவகுத்து அனைவரையும் கவர்ந்தன.

இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பை மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். கடற்கரை சாலையின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து குடியரசுத் திருநாள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

பூமி

★ *பூமி ஒவ்வொரு நாளும் தன்னைத்தானே ஒரு முறை மணிக்கு 1,500 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகிறது.*

★ *பூமி ஆண்டுக்கு ஒருமுறை 1,07,000 கிலோமீட்டர் வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது.*

★ *சூரிய மண்டலத்தில் பூமி உள்ளிட்ட 9 கோள்களும், நிலவு உள்பட 31 துணைக்கோள்களும், 10 இலட்சம் வால் நட்சத்திரங்களும் உள்ளன.*

★ *பூமியிலிருந்து சூரியன் 9,28,68,000 மைல் தூரத்தில் உள்ளது.*

சீனப்பெருஞ்சுவர்

உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை ஷ ஹீவாங்டி என்னும் மன்னர் கட்டினார். இதன் கட்டுமானப்பணி கிறிஸ்து பிறப்பதற்கு 238 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டது. இதை பல்லாயிரக் கணக்கான பணியாளர்கள் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி கட்டி முடித்தார்கள்.

செங்கல், கற்கள், மணல் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இச்சுவரில் ஒவ்வொரு நூறு கெஜம் இடைவெளியில் உயரமான பாதுகாப்பு கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளது.

இதில் மொத்தம் 20 ஆயிரம் பாதுகாப்பு கோபுரங்கள் உள்ளதாம்.

நம்மால் சாதிக்க முடியும்! என்னும் நினைப்பே நம்மைக் குன்றின் உச்சியில் ஏற்றி வைக்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



மகளிர் சிறப்புக் காவல் அணியின், தொடக்க நாளாகிய இந்நாள் தமிழ்நாட்டின் காவல் துறை வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னாள்! இந்த இனிய நாளிலே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்னும் சிறப்பைத் தமிழகம் அடைய நான் எடுத்து வரும் முயற்சிகளை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு துறையிலும் தமிழகம் முதலிடம் பெறுவதற்கான முயற்சிகளில் நாம் படிப்படியாக வெற்றிப் பெற்று வருகிறோம். அந்த வகையிலே இந்தியாவிலேயே சிறப்பு மிக்க காவல் துறையாகத் தமிழ்நாடு காவல் துறை விளங்குவது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறை பெறுகின்ற சிறப்பு காவல் துறைக்குப் புகழ் சேர்ப்பதோடு நின்று விடாது. அந்தச் சிறப்பு பல்வேறு துறைகளின் சிறப்புகளுக்கும் அடித்தளமாக அமையும் என்பது எனது நம்பிக்கை !

சிறப்பான காவல் துறை செம்மையான பணி ஆற்றும் ! அந்தச் செம்மையான பணியால் உண்மையான அமைதி உண்டாகும் ! அந்த உண்மையான அமைதியில் தான் உறுதியான வளர்ச்சி உண்டாகும் !

எனவே பிற துறைச் சாதனைகள் கூட காவல் துறையின் செம்மையான செயல்பாட்டிலேதான் சாத்தியமாகும் என்பது மறுக்க முடியாத உண்மை !

இன்று தமிழ்நாட்டின் 6¼ கோடி மக்களும் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்றால் அது ஒரு இலட்சம் காவலர்களை மட்டுமே கொண்ட தமிழகக் காவல் துறையின் உழைப்பினால்தான் என்பதை இதயமுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள்.

கடந்த 2003–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருந்தது என்பதும்; கடந்த ஆண்டில் இனக்கலவரங்களாலோ அல்லது தொழிலாளர் தகராறினாலோ எந்த ஒரு பெரிய அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்பதும் நாம்



பெருமைப் படத்தக்க உண்மைகளாகும். சில அரசியல் கட்சிகளால் நடத்தப்பட்ட போராட்டங்கள் காவல் துறையின் கட்டுப்பாட்டையோ மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பையோ ஏற்படுத்தாத வண்ணம் தமிழ்நாடு காவல் துறை மிகுந்த எச்சரிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் பணிபுரிந்தது என்பதைப் பெருமிதத்தோடும் மன நிறைவோடும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவலர்களின் பணி சிறக்க வேண்டும் என்றால் காவலர் நலன் காக்கப்பட வேண்டும் என்பதில் நான் மிகுந்த கவனத்துடன் இருக்கிறேன். அவர்களுக்காக நல்ல திட்டங்களை எனது அரசு சிந்தித்துச் செயல்படுத்தி வருகிறது.

காவல் துறை திறம்பட செயல்படுவதற்காக **2003–2004**–ஆம் ஆண்டுக்கு மட்டும் **134** கோடியே **61** இலட்சம் ரூபாயைக் காவல் துறையை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் நான் ஒதுக்கியுள்ளேன் என்பதை பெரும் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

காலம் காலமாகப் பெண்களை 'மெல்லியலார்' என்று உலக சமூகங்கள் அழைத்து வந்திருக்கின்றன. உள்ளத்து உறுதியில் அவர்கள் இமயங்களைப் போன்றவர்கள் என்னும் உண்மை உணரப்படவில்லை; உணரப்பட்டாலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை; ஒப்புக் கொள்ளப்பட்டாலும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை.

இந்த சமூக அநீதியைச் சகித்துக் கொண்டு வந்த தமிழகப் பெண்களுக்கு உணர்வூட்டி உரிய இடம் அளித்து உயரிய சிறப்பை அவர்கள் பெறுவதற்காக நான் நாளும் உழைத்து வருகிறேன் என்பதற்கு காவல் துறையே தக்கதொரு சான்றாக விளங்குகிறது.

ஆண்களும் பெண்களும் இணைந்து பணிபுரியும் பல துறைகள் இருந்த போதும் காவல் துறையில் இவ்விரு பாலரும் இணைந்து பணி செய்யும் வகையில் தமிழகக் காவல் துறையில் **4,777** பெண் காவலர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும் **1,599** பெண் காவலர்கள் சிறப்புக் காவல் படையில் இணைக்கப்பட்டுள்ளனர். பெண்களின் நலன் கருதி அவர்களுடைய குறைகளைக் கனிவுடன் கேட்டு மனித நேயத்துடன் செயல்படும் நோக்கில் முற்றிலும் மகளிரைக் கொண்டே நடத்தப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நான் முதன் முதலாக அறிவித்துச் செயல்படுத்திய போது அண்டை மாநிலங்கள் மட்டும் அன்றி அண்டை நாடுகளும் அதைப் பின்பற்றியதை நீங்கள் அறிவீர்கள். பெண்களின் குறைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டன. இன்று தமிழகத்தில் **148** அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது இத்திட்டத்தின் மிகப் பெரிய வெற்றிக்குச் சான்றாகும்.

காவலர்களின் நியமனத்திலும் கூட இந்த அரசு மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ் நாடு காவல் துறைக்கு என விரைவில் **2,308** பெண் காவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர். மேலும் அனைத்துக் காவல் நிலையங்களிலும் பெண் சார் ஆய்வாளர் இருத்தல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு **961** பெண் சார் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்பதையும்; கருணை அடிப்படையில் **49** பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அணியைச் சார்ந்த வீராங்கனைகளும் மற்ற சிறப்புக் காவல் அணிகளைப் போலவே சட்டம் – ஒழுங்குப் பிரச்சினைகள், மற்றும் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன். "ஆண்களோடு



ஆண்களுடன் பெண்களும் இணைந்து ஒரே துறையில் பணிபுரியும் போது அவர்கள் இடையே எந்தவித ஏற்றத் தாழ்வு மனப்பான்மையும் இருந்திடக் கூடாது பெண்கள் எல்லா வகையிலும் ஆண்களோடு சரி சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் அனைவரது மனதிலும் பதிய வேண்டும் என்பதற்காகப் பாலின நிகர் நிலைப் பயிற்சி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். தமிழகக் காவல் துறையில் இயக்குநர் முதல் காவலர் வரை அனைவருக்கும் இந்தப் பாலின நிகர்நிலைப் பயிற்சி அளிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் ஆண்களுக்குச் சமமாக மட்டுமல்ல வாய்ப்புக் கிடைத்தால் ஆண்களை விடச் சிறப்பாகவும் பணி ஆற்ற வல்லவர்கள். கடந்த ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட பெண் கமாண்டோக்கள் பிரிவே இதற்குச் சரியான எடுத்துக் காட்டு.

இன்று இன்னும் ஒரு படி மேலே சென்று காவல் துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணியைத் தொடங்கி வைக்கிறேன்.

பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே" என்று பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதியின் கனவு இன்று இங்கு நனவாகிறது என்றால் அது மிகையாகாது.

முறத்தால் புலியை விரட்டி அடித்த புறநானூற்றுத் தமிழ் பெண்ணின் வீரத்தை இன்று நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாக இந்தப் பெண் காவலர்களின் அணி வகுப்பு நடந்தேறியுள்ளது. எத்தனை இன்னல்கள் எதிர்நோக்கினும் அவற்றை வீழ்த்தி இன்று போல் என்றும் நம் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கும் காவல் துறை பணிகளில் எங்களுக்கும் பெரும் பங்கு உண்டு என்று கட்டியம் கூறி நிற்கின்றார்கள் இந்தப் பெண் காவலர்கள். இந்தச் சிறப்பு அணி வகுப்பு மிகவும் சிறப்பாக அமைந்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொண்ட அனைத்து அதிகாரிகளையும் இத்தருணத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

நான் கடந்த வருடம் தொடங்கி வைத்த பெண் கமாண்டோ பிரிவும் இந்த அணியிலே ஒரு அங்கம் என்று நினைக்கும் போது என் உள்ளம் பூரிக்கிறது. வேறு எந்த அணிக்கும் இல்லாத ஒரு சிறப்பு இந்த அணிக்கு உண்டு. இந்த அணியின் அனைத்து வீராங்கனை

களுக்கும் குதிரையேற்றம் அதிநவீன துப்பாக்கிகள் கையாளும் முறைகள் மலையேற்றம் ஆகியவைகளை உள்ளடக்கிய கமாண்டோ பயிற்சி அளிக்கப்படும் என்பது இந்த அணிக்கு ஒரு தனிச் சிறப்பு ஆகும். இதன் தொடர்ச்சியாகத் தான் இரண்டாம் கட்ட கமாண்டோ பயிற்சி இந்த அணியைச் சேர்ந்த 100 வீராங்கனைகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அணிக்கு Colours என்று சொல்லப்படும் அணிக் கொடியினை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் இந்தக் கொடி உயரப் பறந்து உங்கள் வீரத்தை எட்டுத் திக்கும் எடுத்துச் சொல்லட்டும்!

வளை ஏந்திய கைகள்,

வாளேந்தட்டும் !

தொட்டில் ஆட்டும் கைகள்,

எந்திரத் துப்பாக்கிகளை ஏந்தட்டும் !

வளைக் கரத்தின் வலிமையை இந்த வையகம் புரிந்து கொள்ளட்டும் !

இந்த நேரத்தில் சிறிய கதை ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் பாதி தண்ணீரால் நிரப்பப்பட்ட ஒரு கிண்ணம் இருந்தது.

ஒரு கிண்ணத்தை வைத்திருந்தவன் அழுது கொண்டிருந்தான். 'ஏன் அழுகிறாய் ?' என்று கேட்டார் கடவுள். 'நீ இரக்கம் இல்லாதவன்; கொடுமைக்காரன்; என் கிண்ணத்தைப் பாதி காலியாக விட்டு விட்டாயே' என்று திட்டினான் முதல் மனிதன்.

இரண்டாவது கிண்ணத்தை வைத்திருந்தவன் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டிருந்தான். 'ஏன் சிரிக்கிறாய் ?' என்று கடவுள் கேட்டார்.

'நீ கருணை உள்ளவன்; என் கிண்ணத்தில் பாதியளவு ஆவது தண்ணீரால் நிரப்பியுள்ளாயே; அதனால் மகிழ்ச்சியால் சிரிக்கிறேன்' என்று சொல்லி நன்றி தெரிவித்தான் இரண்டாம் மனிதன்.

இரண்டு கிண்ணங்களின் நிலையும் ஒன்று தான். ஆனால் அவற்றை வைத்திருந்தவர்களின் நினைப்பு ஒன்றாக இல்லையே ! என்ன காரணம் ?

நிலை வேறாக இருந்தால் நினைப்பு வேறாக இருக்கலாம் – அது சரி ! இங்கு இருவரிடமும் உள்ள பொருட்களின் நிலை ஒன்றாக இருந்தும் இருவரின் நினைப்பும் வேறாக இருக்கிறதே என்ன காரணம் ?

மனம் தான் காரணம் ! குறையுடையவர் என்னும் நினைப்பே ஒருவரைக் குன்றச் செய்து விடும்.

'நமக்கென்ன குறை ? நம்மால் சாதிக்க முடியும் !' என்னும் நினைப்பே நம்மைக் குன்றின் உச்சியில் ஏற்றி வைக்கும்.

தன்னிடம் உள்ளது போதாது இன்னும் எதையாவது நிரப்பினால் தான் முழுமை அடைய முடியும்; அதனால்

தான் தனக்கு வலிமை கிடைக்கும் என நினைத்தான் முதல் மனிதன்.

தன்னிடம் உள்ளதே போதும்; தனக்கு அதனால் குறைவில்லை என்று நினைத்தான் இரண்டாம் மனிதன்.

நீங்கள் குறையுள்ளவர்கள் என்று நினைத்தால் குறையுள்ளவர்கள் தான் ! நீங்கள் நிறைவானவர்கள் என்று நினைத்தால் நிறைவானவர்கள் தான் !

இந்த மகளிர் சிறப்புக் காவல் அணியில் உள்ள அனைத்து வீராங்கனைகளுக்கும் நான் ஒன்றை எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உள்ளத்தின் உறுதி, உடல் வலிமை, சிந்தனைத் தெளிவு — இந்த மூன்றையும் நீங்கள் உங்களுடையதாக்கிக் கொண்டால் இந்த உலகம் உங்கள் முன் கை கட்டி ஊழியம் செய்யும். எனவே நீங்கள் உங்கள் பணியில் துணிவோடும் அதே நேரத்தில் மக்களிடம் கனிவோடும் செயல்பட வேண்டும் என்று உங்களை இந்த மகத்தான வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மகளிர் அணியினைத் துவக்கி வைக்கும் இந்த இனிய நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்ட 1,033 குடியிருப்புகள், 39 காவல் நிலையங்கள், 4 நாய்க் கொட்டில்கள், 1 தகவல் தொடர்பு வளாகம், 1 ஓய்வு இல்லம் மற்றும் 5 ஓய்வு அறைகள் ஆகிய 1,083 கட்டடப் பணிகளை நான் இந்த இனிய நேரத்தில் திறந்து வைப்பதில் பெருமைப் படுகிறேன். மேலும் 1,091 குடியிருப்புகள், 16 ஓய்வு அறைகள், தடய அறிவியல் துறையின் ஒரு வட்டார அலுவலகம் ஆகிய 1,108 கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டடங்கள் எண்ணிக்கையில் மட்டுமன்றி தரத்திலும் மிகவும் சிறப்பானதாய் அமைந்தபடியால் ISO 9001 – 2000 சான்றிதழ் காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருப்பது தமிழக அரசிற்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. இதற்குக் காரணமான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத் தலைவர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறி வரும் உலகின் வேகத்துக்கு ஏற்ப காவல் துறை விரைந்து செயல்பட வேண்டியது அவசியம். அதற்குக் கணினி கட்டாயம் தேவை. எனவே எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு 67 மடியமர் கணினிகளை அதாவது Laptop Computer-களை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். அவற்றுள் 15 மடியமர் கணினிகளை இந்த விழாவில் வழங்குகிறேன்.

வெற்றிகரமான இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கும் காவல் துறைத் தலைமை இயக்குநர் உட்பட அனைத்துக் காவலர்களுக்கும் எனது பாராட்டுதல்கள்.

வெல்லப் பிறந்தது பெண்மை !
இதை உணர்ந்தால் யாவர்க்கும் நன்மை !
என்ற முழக்கத்துடன்,
அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க !
எனக் கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

– தமிழ்நாடு காவல் துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணித் தொடக்க விழா, காவல் துறை அலுவலகங்கள், குடியிருப்புகள் தொடக்க விழா மற்றும் புதிய கட்டடங்கள் அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை – 30.1.2004

❖ ❖ ❖

ஆயிரம் கதவு அரண்மனை

கொல்கத்தாவிலிருந்து 219 கி.மீ. தொலைவில் உள்ளது மூர்ஷிதாபாத் என்னும் நகரம். இங்குள்ள "ஹசார் துவாரி" என்னும் ஆயிரம் கதவு அரண்மனை வரலாற்றுப் புகழ் கொண்டதாகும்.

450 அடி நீளம், 200 அடி அகலம், 40 அடி உயரம் கொண்ட இந்த பிரம்மாண்டமான அரண்மனையை 1837 ஆம் ஆண்டு ஹீமாயூன்ஜான் என்பவர் கட்டினார்.

இது ஆயிரம் கதவு அரண்மனை என்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் இதில் 1,200 கதவுகள் உள்ளனவாம். இவற்றில் 200 கதவுகள் போலிக் கதவுகளாம். 41 பெரிய கூடங்கள், ஏராளமான அறைகள் கொண்ட இந்த அரண்மனையில் ஐநூறுக்கும் அதிகமான வண்ண ஓவியங்கள் உள்ளன. சலவைக் கல்லால் ஆன ஒரு அரியணையும், 300 ஆண்டு பழமையான ஒரு அரியணையும் இங்கு இருக்கின்றன.

மகாத்மா காந்தியடிகள் நினைவுநாள்

மகாத்மா காந்தியடிகளின் 57ஆவது நினைவுநாளையொட்டி 30.1.2004 அன்று சென்னை காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பெ. ஸ்ரீ. ராம மோகன்ராவ் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்தநாள்

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 87ஆவது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னையில் அமைந்துள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலைக்கு 17.1.2004 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 108ஆவது பிறந்தநாளையொட்டி 23.1.2004 அன்று சென்னை காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து சிறப்புச் செய்தனர்.

தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழா



"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப் பாடினார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். 'திருவள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் இந்த வையகமே' எனப் புகழ்ந்துரைத்தார் பாவேந்தர் பாரதிதாசன். திருக்குறளின் சீர்மையைச் சிறப்பித்துரைத்த நாமக்கல் கவிஞரோ பின்வருமாறு புகழ்ந்துரைத்தார். "உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களுள் நம்முடைய திருக்குறள் காலம், இடம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து எங்கெங்கும் உள்ள எல்லா மனிதருக்கும் எக்காலத்திலும் பயன்தரக்கூடிய அறிவுரை நிரம்பிய அறநூல்" என்பது அவர்தம் புகழ்ந்துரை. பேரறிஞர் அண்ணா அவர்கள், "வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழர்க்கு மட்டுமல்லாமல் பண்புடன் வாழ விரும்பும் அனைவருக்கும் ஓர் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது'' என எடுத்துரைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "வாழ்வாங்கு வாழட்டும் வள்ளுவர்தம் இணையற்ற பெரும்புகழ்! நின்று நிலைக்கட்டும் வள்ளுவர் வகுத்தளித்த நெறிமுறைகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனால் தான் நமது திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது. தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ் மக்களின் சீரிய வரலாறு முதலியவற்றை உலகறியும் வண்ணம் செய்து தமிழ் மக்களின் – தமிழ்நாட்டின் – தமிழ்மொழியின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தியது திருக்குறள் என்பதில் ஐயம் இல்லை, திருக்குறள் மட்டுமே பல்வேறு இந்திய, உலக மொழிகளில் எண்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் தனிச்சிறப்பு மிக்கதாகத் திகழும் திருக்குறளின் பெருமையை – அதனை இயற்றிய திருவள்ளுவப் பெருந்தகையின் புகழைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 'திருவள்ளுவர் திருநாள்' விழாவைக் கொண்டாடி வருகிறது. ஆண்டுதோறும் தைத் திங்கள் இரண்டாம் நாள் கொண்டாடப்படும். திருவள்ளுவர் திருநாள் விழா 16–1–2004 அன்று சென்னையில் தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டது. காலை 9.00 மணிக்கு சென்னை கடற்கரை, காமராசர் சாலையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும்

அரசு அலுவலர்கள் என பலரும் மாலை அணிவித்தனர். மாலை 5.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் திருவள்ளுவர் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு.சி.பொன்னையன், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை ஆகியோரும், தமிழறிஞர்களும், எழுத்தாளர்களும், பொதுமக்களும், அரசு அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளுவர் விருது

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் தமிழறிஞர் ஒருவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது. திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப் படும், அந்த வகையில் 2004ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரும், திருக்குறள் நெறி பரவிடப் பல்வகையிலும் தொடர்ந்து தொண்டாற்றி வருபவருமான திரு.இரா.முத்துக் குமாரசாமி அவர்களுக்கு இவ்விழாவில் வழங்கப்பட்டது. இவ்விருது ஒரு இலட்சம் ரூபாய் பணமும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் கொண்டதாகும்.

சிறந்த நூல்களுக்குப் பரிசு

தமிழில் வெளிவரும் நூல்களுள் சிறந்த நூல்களைத் தெரிவுசெய்து, திருவள்ளுவர் திருநாளில் ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறும் ஒவ்வொரு நூலையும் எழுதிய நூலாசிரியருக்கு ரூ.10,000 பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார் ஒவ்வொருவருக்கும் ரூ.2,000 பரிசும் பாராட்டுச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன. அவ்வகையில் 2002ஆம் ஆண்டில் வெளிவந்து பரிசுப் போட்டிக்குக் கலந்துகொண்ட நூல்களுள் 26 தலைப்புகளில் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு நூல் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்த 26 நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் இந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார் ஒவ்வொரு-வருக்கும் ரூ.2,000 பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் திருவள்ளுவர் திருநாள் விழாவில் வழங்கப்பட்டன.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஐம்பத்தெட்டு வயது நிறைவடைந்தும் ஆண்டு வருமானம் ரூ.4,800க்கு மேற்படாமலும் உள்ளவர்களுக்கு அவர்கள் ஆற்றியுள்ள தமிழ்ப்பணித் தகுதியினடிப்படையில் இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தெரிவு செய்யப்படுவோர் அவர்களின் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் 500 ரூபாய் நிதியுதவி பெறுவர். இத்திருவள்ளுவர் திருநாளில் ஐந்து தமிழறிஞர்களுக்கு இந்நிதியுதவி அரசாணைகள் வழங்கப்பட்டன.

மேற்கண்ட வகையில் திருவள்ளுவர் விருதினை வழங்கியும், சிறந்த நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத் தார்க்கும் பரிசுகள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியும், அகவைமுதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கியும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் இவ்விழாவில் சிறப்புரையாற்றினார். விழாவிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை செயலாளர் திரு.பு.எ.இராமையா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். விழா நிறைவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் நன்றி கூறினார்.

டெல்லி இரும்புத்தூண்

டெல்லியிலுள்ள மொஹ்ராலி என்னும் இடத்தில் குதுப்மினார் அருகில் ஒரு இரும்புத்தூண் உள்ளது. இத்தூண் நான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. 25 அடி உயரமுள்ள இத்தூணின் அடிப்பரப்பு விட்டம் 16 அங்குலம் ஆகும். மேல்நோக்கி செல்லச் செல்ல குறுகிக்கொண்டே சென்று உச்சியின் கற்றளவு 12 அங்குலமாக முடிகிறது. எவ்வித இணைப்புமில்லாமல் ஒரு வார்ப்பில் செய்யப்பட்டது இத்தூண் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் எடை 6 டன்களுக்கு சற்று அதிகமாகும். 1,500 ஆண்டு களுக்கு மேலாக திறந்த வெளியில் வெயில், மழை, பனி போன்றவற்றால் தாக்குதலுக்குள்ளாகியிருந்தாலும் இதுவரை சிறிய அளவு கூடத் துருப்பிடிக்காமல் இருப்பதுதான் பெரிய விந்தையான செய்தியாகும்.

❖ ❖ ❖

சாலைகளை இணைப்பது – இதயங்களை இணைப்பதாகும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



இந்தியாவின் தென்கோடியாம் இந்தக் கன்னியாகுமரியில் இன்று நடைபெறும் மகத்தான விழாவிலே கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் இணைக்கப்படுகின்ற திருநாள் இது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் முன்மொழியப் பட்டுள்ள வடக்கையும் தெற்கையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி – மதுரை நெடுஞ்சாலைப் பிரிவை நான்கு வழிப் பாதையாக்கும் பணிக்கு பூமி பூஜை நிகழ்த்தி அடிக்கல் நாட்டுகின்ற இந்த மகத்தான நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். தரம் வாய்ந்த சாலைகள் இல்லை என்றால் நமது திட்டங்களும் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளும் நாம் எதிர்பார்க்கின்ற பலனை நமக்கு அளிக்காது. நல்ல சாலை வசதிகள் என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டிக் காக்கவும் பேருதவி புரிகின்ற மிக இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஊரகப் பொருளாதாரத்துக்கு உந்துதல் அளிப்பதுடன் சிறப்பான சாலைத் தொடர்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் தொழிற்சாலைகள் பெருமளவில் பெருகிடவும் விரைவான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் புதிய சாலை அமைப்புகள் வகை செய்கின்றன.

தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து ஒரு மாபெரும் வளர்ச்சி வீதத்தை எட்டியுள்ளது என்றால் அது மிகையாகாது. 100 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சாலைகளின் தேசிய சராசரி அளவு 74.9 கிலோ மீட்டர் நீளம் தான். ஆனால், தமிழ்நாட்டில் இந்த அளவு 100 சதுர கிலோ மீட்டருக்கு, 115.8 கிலோ மீட்டர் நீளமாக உள்ளது. இது தேசிய சராசரியை விட 60 சதவிகிதம் அதிகம் என்பதைக் குறிப்பிடுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

சாலைகளின் அகலம் அதிகமாகி ஒற்றை வழிச்சாலை இரட்டை வழியாக மாறும்போதும் இரட்டை வழிச் சாலையை நான்கு வழிகளாக மாற்றும் போதும் அந்தச் சாலைகளில் பயணம் செய்யும் வாகனங்களை இயக்குவதற்கு ஆகும் செலவு வெகுவாகக் குறைகிறது என்பதை மறந்து விட முடியாது.

ஒற்றை வழிச் சாலையிலிருந்து நடுத்தரச் சாலையாக அகலப்படுத்தும் பணியினால் வாகனங்களை இயக்குவதற்கான செலவில் 7 சதவிகிதம் முதல் 27 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிப்பு ஏற்படுகிறது. நடுத்தரச் சாலைகளை இரட்டை வழிச் சாலைகளாக அகலப்படுத்தும்போது 19 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிப்பு ஏற்படுகிறது. ஒற்றை வழிச் சாலைகளை, இரட்டை வழிச் சாலைகளாக அகலப்படுத்தும்போது 14 முதல் 40 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிக்கப்படுகிறது.

சில முக்கியமான சாலைகளை – தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளாக அறிவிப்பது, தேசிய நெடுஞ்சாலையோடு இணையும் குறுகலான சாலைகளைத் தவிர்ப்பது, ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல் மற்றும் அகற்றுவது, நெடுஞ்சாலைகளைப் புதிதாக அமைப்பது, பராமரிப்பது மற்றும் மேம்படுத்துவது ஆகிய இவற்றோடு தொடர்புடைய பல பணிகளைச் செயல்படுத்துவதற்காக புதிய தமிழ்நாடு நெடுஞ் சாலைகள் சட்டம் எனது தலைமையிலான அரசால் இயற்றப்பட்டு, அது 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்துள்ளது.

மக்கள் தொகை ஆயிரத்துக்கும் மேலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமான இணைப்புச் சாலை வசதி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2004 ஆம் ஆண்டு முடிவதற்குள் மக்கள் தொகை 500–க்கும் மேலுள்ள அனைத்துக் கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு முழுமையான எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமான இணைப்புச் சாலைகளை ஏற்படுத்த எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கினை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் எனது அரசு எடுத்து வருகிறது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் 2,160 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் உள்ள முக்கியச் சாலைகளை மேம்படுத்த எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 750 கி.மீ. சாலைகளை மேம்படுத்தவும், 2,000 கி.மீ. நீளமுள்ள மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைப் பராமரிப்பதற்கும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 14 புறவழிச் சாலைகள் அமைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

எனது அரசு பொறுப்பேற்றபோது இதற்கு முன் எப்போதும் இருந்திராத கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும் மாநிலத்தில் பெரிய மற்றும் சிறிய பாலங்கள் மற்றும் சாலைகள் அமைப்பதற்காக 2,518 கோடி ரூபாயை நான் ஒதுக்கீடு செய்திருக்கிறேன். மேலும், வழக்கமான வருடாந்திர நிதிநிலை ஒதுக்கீட்டிற்கு மேல் சாலை மேம்பாட்டிற்காக சிறப்புத் திட்டப் பணிகளும் சமீப காலத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அரசு, கிராமப்புறத்தில் போக்கு வரத்து வசதிகளை அதிகப்படுத்துவதற்காக 6,492 கிலோ மீட்டர் நீளத்திற்கு இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது. அது போல, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 221 கோடி ரூபாய்

மதிப்பீட்டிற்கு எனது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் இந்த ஆண்டு மே மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த இரண்டு மாதத்தில் 122 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 715 கிலோ மீட்டர் நீளமுள்ள 275 கிராமச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அண்மையில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருக்கும் 7,389 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகளை 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த, நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும் இந்த வேளையில் பெரு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களின் தலைமையின் கீழ், இந்திய அரசு, பல வளர்ச்சிப் பணிகளை ஆற்றி வருகிறது. நான்கு பெருநகரங்களையும் இணைக்கின்ற, தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும், 'தங்க நாற்கர சாலைத் திட்டம், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான, வடக்கு தெற்குப் பகுதியையும், போர்பந்தர் முதல் சில்சார் வரையிலான மேற்கு கிழக்குப் பகுதியையும் இணைக்கும். தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்க திட்டங்கள் ஆகும். இந்தத் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 1,699 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப் படுவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடைய அரசு, இந்தத் திட்டத்தினை விரைவாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்து வதற்கான அனைத்து உதவிகளையும் அளிக்கும் என்று நான் உறுதிகூறுகிறேன்.

இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலுள்ள 61,125 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் தேசிய நெடுஞ் சாலையின் நீளம், 3,850 கி. மீ. தான். எனது அரசு

"தமிழ்நாட்டின் முதலமைச்சர்
ஜெயலலிதா அவர்கள்
தமிழ்நாட்டின்
முன்னேற்றத்திற்காக
அயராது உழைத்து வருகிறார்.

அவரது செயல்திறமையான
தலைமையின்கீழ்
சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்
தமிழகத்தில் மிகச்சிறப்பாக
நிறைவேற்றப்பட்டு வருகின்றன."

- விழாவில்
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

1,091 கி.மீ. நீளமுள்ள, போக்குவரத்து அதிகமுள்ள 8 சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றுவதற்கான கருத்துருக்களை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளது. இதற்கு இந்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நீண்டநாள் கனவு சேது சமுத்திரத் திட்டம். இந்தத் திட்டம், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியையும் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியையும் துரிதப்படுத்தும் என்பதால் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இந்த வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளை இணைப்பது, இதயங்களை இணைப்பதாகும்.

எனவே, உண்மையான தேசிய ஒருமைப் பாட்டுக்கு உறுதுணையாகச் சாலைகளை இணைப்போம்!

அதன் மூலம் புதிய சாதனைச் சகாப்தம் படைப்போம்!

கன்னியாகுமரியையும் காஷ்மீரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி – மதுரை நெடுஞ்சாலைப் பிரிவை நான்கு வழிப் பாதையாக்கும் பணிக்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி விழாவைச் சிறப்பித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு எனது இதயங் கனிந்த நன்றியை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து தொடங் கியதற்காக தமிழக மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க !

என கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
2-2-2004 அன்று
கன்னியாகுமரியில் நடைபெற்ற
தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்
கன்னியாகுமரி – காஷ்மீரை இணைக்கும்
நான்கு வழிச்சாலைக்கான அடிக்கல்
நாட்டுவிழாவில் ஆற்றிய உரை.

மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கு சமுதாய வானொலி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

"இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய வானொலி ஒலிபரப்பு தொடக்க விழாவில் இந்திய துணைப்பிரதமர் எல்.கே.அத்வானியுடன் இந்த மேடையில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

பல்கலைக்கழகத்திற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்வேறு மெச்சத்தக்க சாதனைகளை தன்னகத்தே கொண்டுள்ளது அண்ணா பல்கலைக்கழகம். இந்தியாவிலேயே முதன் முறையாக அண்ணா பல்கலைக்கழகம்தான் இது போன்ற சமுதாய வானொலி உரிமத்தை முதன் முதலாகப் பெற்றுள்ளது என்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சமாகும். இந்த உரிமத்தை வழங்கியதற்காக மத்திய அரசிற்கு மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, இந்திய துணைப்பிரதமர் மற்றும் மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் ஆகியோர் சமுதாய வானொலி சேவையைத் தொடங்குவதற்குத் தேவையான உரிமத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கைகளை விரைவுப்படுத்தியதற்காகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நேரம் தமிழ்நாட்டில் மிகவும் பெருமைப் படக்கூடிய நேரங்களில் ஒன்றாகும். நாங்கள் மக்களின் நல்வாழ்வில் அக்கறையுடன், குறிப்பாக சமூகத்தின் மிகவும் நலிவுற்ற நிலையில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் மிகவும் தைரியமாக, திடமாக பல்வேறு புதிய நடவடிக்கைகளை செயல்படுத்தி வருவதில் முன்னிலையில் உள்ளோம்.

இந்த வானொலி ஒலிபரப்பை வருங் காலத்தில் 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு விரிவுபடுத்தி அதன் மூலம் கல்வி, உடல்நலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழல் மற்றும் சமூக மேம்பாட்டுக்குப் பயன்படுத்த உள்ளதாக அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமி என்னிடம் தெரிவித்தார்.



இந்த சமுதாய வானொலி ஒலிபரப்பு குறைந்தபட்ச வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் உள்ள மாணவர்களின் வளர்ச்சிக்கு ஆசிரியராக செயல்பட்டு, இதனுடைய முழுப் பயன்களும் சென்றடையும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தின் சாலக்ட்ரானிக் மீடியா பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள் தங்கள் துறைகளில் ஆய்வு முயற்சிகளுக்கு இந்த வானொலி ஒலிபரப்பு நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சமுதாய வானொலி நிலையம் பல்வேறு துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்த தகவல்களை மக்களிடையே பரப்ப உதவி செய்வதுடன் பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் மக்களை ஆயத்தம் செய்வதற்கும் காரணமான ஓர் அமைப்பாகவும் செயல்படும். கிராமப்புறங்களில் வாழும் மக்களின் சமூக வளர்ச்சியில் வானொலி உண்மையிலேயே முக்கிய பங்காற்றி வருகிறது என்பது எதார்த்தமான உண்மை.

வளர்ச்சிப்பாதையின் கடைக்கோடியிலுள்ள சமுதாயத்தினரையும் எளிதில் வானொலி சென்றடைகிறது. மேலும் வானொலி, படிக்க, எழுதத் தெரியாத மக்களையும் எளிதில் சென்றடைகிறது. மக்கள்தொகை மற்றும் உயரிய வாழ்க்கை நிலை என்ற தனிக்குழு வானொலி எந்த அளவிற்கு மக்களைச் சென்றடைகின்றது என்பதை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கல்வியறிவின்மையின் முழு விளைவு என்ன என்பதைக் கல்வியறிவு பெற்றவர்கள் கூட உணர்ந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளனர்.

தற்போது இந்த உலகில் இயங்கி வரும் எழுதப்பட்ட சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றை படிப்பறிவில்லா தவர்கள் உண்மையிலேயே தெரிந்து கொள்ள இயலாதது அவர்களுடைய வளர்ச்சிக்கு மிகவும் தடையாக உள்ளது. இது அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது. மேலும் கல்வியறிவின்மையின் விளைவால் மக்களுக்கு மிகவும் இழிந்த நிலை மற்றும் மிகவும் குறைவான ஊதியம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளே கிடைக்கப்பெறுகின்றன.

கல்வியறிவின்மையின் மற்றொரு விளைவாக வேளாண் விதைப் பொருள் பைகளில் உள்ள தகவல்களைப் படிக்க முடியாமலும் பால் பவுடர் டின்களில் உள்ள தகவல்கள் குறித்து அறிய முடியாமலும் கருத்தடை மாத்திரைகளின் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள இயலாத நிலையில் மக்கள் உள்ளனர். மேலும் அவர்களால் செய்தித்தாள்கள், சாலைக் குறியீடுகள் மற்றும் எச்சரிக்கை குறியீடுகள் ஆகியவற்றையும் படித்து அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர். மேலும் தங்களுக்குரிய சட்ட உரிமைகள் குறித்தும் கூட புரிந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். மேற்கண்டவற்றின் விளைவால் அவர்கள் சுரண்டப்படுவதும், ஏமாற்றப்படுவதும் நடைமுறையில் உள்ளது.

வறுமை நிலையிலுள்ள ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு சமுதாய வானொலி சேவை என்ற வகையில் இது மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தகவல் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் வளர்ச்சி மற்றும் அதன் சக்தி என்ன என்பதைக் கண்கூடாக பார்த்துள்ளேன். இது கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் பல்வேறு வளர்ச்சிகளையும், மாற்றங்களையும் உருவாக்கியுள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவிலுள்ள உலகுப்பிச்சான்பட்டி என்ற கிராமத்தில் பாதிக்கப்பட்ட காய்கறியின் மாதிரியை வெப் (Web) புகைப்படக் கருவியின் மூலம் அவ்வூரிலுள்ள மையத்தின் (Kiosk) ராசி இணையதளத்தின் உதவியுடன் ஓர் இளம்பெண் மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இதனை ஆராய்ச்சி செய்த

மாண்புமிகு முதலமைச்சருக்கு துணைப்பிரதமர் பாராட்டு

"அண்ணாவின் பாதையைப் பின்பற்றுபவராக இன்றைக்கு ஜெயலலிதா திகழ்கிறார். அண்ணாவுக்குப் பிறகு சமூகப் பொருளாதார வளர்ச்சியில், தமிழகத்தை அதன் உச்சிக்கு எடுத்துச்செல்லும் உன்னதத் தலைவராக ஜெயலலிதாவை தமிழகம் பெற்றிருக்கிறது."

- விழாவில்
மாண்புமிகு இந்திய துணைப்பிரதமர்
திரு. **எல்.கே. அத்வானி** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

மதுரை வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த நோய் தாக்கியதற்கு அறிவியல்பூர்வமான தீர்வு ஒன்றை அனுப்பியதன் மூலம் சுமார் ரூ.1.5 இலட்சம் மதிப்புள்ள காய்கறிகளில் நோய் தாக்குதல் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் கிராமப்புறங்களிலுள்ள பெண்களின் வளர்ச்சிக்கும் ஒரு மிகச்சிறந்த உதாரணமாகும்.

தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையிலான அரசு, மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் திட்டம் தற்போது மேலும் வளர்ச்சி அடைந்து ஒரு மிகப்பெரிய இயக்கமாக தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது. தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களில் சுமார் 25 இலட்சம் பெண்கள் 1.52 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கீழ் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் சேமிப்பின் தொகை ரூ.393.64 கோடியாகும்.

தற்போது அதிக அளவில் இந்த மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு இணைய தளத்தைப் பயன்படுத்தும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றன. இந்த கூட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதை சமுதாய வானொலி நிலையங்கள் செய்ய முடியும். இதன் மூலம் சந்தை அறிவு மற்றும் சமூக வளர்ச்சியில் மக்களை ஒருங்கிணைத்து ஒத்த கருத்தை உருவாக்குவது ஆகியவை குறித்து அறிய சமுதாய வானொலி நிலையங்கள் உதவும். மேலும் இதே போன்று மீனவர்கள், நீர் உபயோகிப்பாளர் சங்கங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றைக்கூட இணைப்பதில் சமுதாய வானொலி நிலையங்கள் ஈடுபடலாம். மேலும் இது போன்று சமுதாய வானொலி நிலையங்கள் எண்ணற்ற துறைகளில் செயல்படுவதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. வழக்குச் சொற்கள் சமுதாய வானொலி நிலையங்களின் மூலம் ஒலிபரப்பப்படுவதை விட இரு தரப்பிலும் கலந்துரையாடும் வகையான நிகழ்ச்சிகள் வருமானால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மிகவும் அதிகப்படியான பலன்களைப் பெறுவதற்கு விரைவான செயல்பாடுகளில் இறங்குவதுடன் இணையதளத்தையும் வானொலியையும் இணைத்து செயல்பட வைப்பதன் மூலம் எதிர்பார்த்த பலனை விரைந்து அடைய முடியும். தகவல்களை இணைய தளத்தின் மூலம் பெறுவதுடன், இணையதள தொடர்பு கொண்ட சமுதாய வானொலிகளை ஏற்படுத்துவதன் மூலம் பன்முகப் பலன்களைப் பெறுவதற்கு இயலும்.

மக்கள் நீதிபதிகளாக இருந்து நம்மை எடைபோடுவது நம்முடைய தரமான மற்றும் சிறந்த நிருவாகத்தைப் பொறுத்துத்தான். சிறந்த அரசு என்பது மக்களோடு நெருங்கி இருக்கும். குறிப்பாக கிராமப்புற மக்களோடு இணைந்து இருக்கும். சமுதாய வானொலி நிலையங்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையே உறவுகளை ஏற்படுத்தித் தருவதில் முக்கியப் பங்காற்றிட முடியும். சிறந்த நிருவாகத்தை அளிப்பதற்கேற்ற வகையில் பொது இணையதள பயன்பாட்டு வசதிகளை அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வகையில் வலுவான சமுதாய வானொலி இணைப்பை மாநில அரசுகள் உருவாக்கிட மத்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நாட்டிலேயே முதன் முறையாக தலைசிறந்த தொழில்நுட்ப வசதிகள் கொண்ட சமுதாய வானொலி நிலையத்தை சென்னையில் அமைப்பதற்கும் அதனை சென்னை மக்களுக்கு அர்ப்பணிப்பதற்கும் வருகை தந்துள்ள இந்திய துணைப் பிரதமர் மற்றும் செய்தி ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் ஆகியோருக்கு எனது நன்றியை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இது போன்ற ஒரு முன்னோடியான, பிறருக்கு வழிகாட்டும் புதிய முயற்சிகளை மேற்கொண்ட அண்ணா பல்கலைக்கழகத்திற்குப் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கின்றேன்."

(1.2.2004 அன்று நடைபெற்ற சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்தியாவின் முதல் சமுதாய வானொலி ஒலிபரப்புத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)

நாங்கள் மக்கள் பக்கம்! மக்கள் எங்கள் பக்கம்! வெற்றி எங்கள் பக்கம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான் பதிலுரை வழங்கும்போது இப்படி வெளிநடப்பு செய்வார்கள் என்பது நான் எதிர்பார்த்தது தான். ஆனால், சொல்லிவிட்டுப் போவார்கள் என்று எதிர்பார்த்தேன். சொல்லாமலேயே, சொல்லிக் கொள்ளாமலேயே இப்படி ஓடிப்போவது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

நேற்றைய தினம் கூட இந்த அவையில் பேசிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள், இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது, இன்றைக்காவது முதலமைச்சர் அவையில் இருந்து எங்கள் கருத்துக்களை எல்லாம் கேட்க வேண்டாமா? இன்று கூட வரவில்லையே, என்றெல்லாம் ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். ஒன்றை இந்த நேரத்தில் அவருக்கும், அனைவருக்கும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். 2001-இல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, இந்த சட்டப்பேரவை கூடும் போதெல்லாம் ஒரு நாள் கூட தவறாமல் இந்த அவை நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்ட நேரத்திலிருந்து அவை கலையும் வரை நான் தவறாமல் இந்த அவையில் இருந்து, அவையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று, பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கேள்விகள் கேட்டாலும் உடனடியாக பதில் அளித்து, என்ன பிரச்சினைகள் எழுப்பினாலும் உடனடியாக அவற்றிற்கு தக்க விளக்கங்களை அளித்து, நான் மிகுந்த ஆர்வத்துடனும், இதய சுத்தியுடனும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த முறை ஆளுநர் உரை வழங்கிய பிறகு நடைபெற்ற, கடந்த சில நாட்களாக நடைபெற்ற, இந்த கூட்டத் தொடரில்

ஏற்கெனவே ஒப்புதல் அளித்த மிக முக்கியமான அரசு நிகழ்ச்சிகள் இருந்ததால் என்னால் இந்த அவைக்கு தினந்தோறும் வர முடியவில்லை. புதிய மாவட்டத் தொடக்க விழா என்பது மிகவும் முக்கியமான ஒரு அரசு நிகழ்ச்சி. மக்களுக்கு நன்மை பயக்கின்ற ஒரு நிகழ்ச்சி என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே தான் இது ஏற்கெனவே ஒப்புதல் அளித்து ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதால் நான் இந்த அவைக்கு வர முடியவில்லை.

ஆனால், இப்படியெல்லாம் ஆதங்கப்பட்டுக் கொள்ளும், குறைபட்டுக் கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர்கள் நான் இந்த அவைக்கு வந்து பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லிக்கொள்ளாமலேயே இப்படி ஓடிப் போகிறார்கள். மக்கள் இதை கவனிக்க வேண்டும். நிச்சயமாக மக்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். 2001–இல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, இந்த புதிய சட்டப் பேரவை அமைந்த பிறகு, எந்த ஒரு முக்கிய நிகழ்வின் போதும் எதிர்க்கட்சித் தலைவர்களோ, உறுப்பினர்களோ இந்த அவையில் இருந்ததே கிடையாது. அது ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, ஆளுநர் உரையின் மீது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் அளிக்கும்போதும் சரி, நிதியமைச்சர் அவர்கள் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போதும் சரி, எந்த ஒரு முக்கிய நிகழ்வின் போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்து தாங்கள் ஆற்றவேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றவில்லை. மக்கள் எதற்காக அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பினார்களோ அந்தக் கடமையை அவர்கள் புறக்கணித்து விட்டு, மறந்துவிட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது. இதற்கெல்லாம் மக்கள் அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கடந்த 5.2.2004 முதல் நடைபெற்ற விவாதத்திற்கு தற்போது எனது பதிலுரையை அளிக்க விழைகின்றேன்.

நாம் பிறர்க்கு நல்லவர் ஆகும் போது நமக்கும் நல்லவர் ஆகிறோம் என்பது மிகச் சிறந்த வாழ்வியல் உண்மை ஆகும். ஆனால் தங்களுக்குத் தாங்களே நல்லவர் ஆகாதவர்கள் தமிழகத்தில் உண்டு. ஏனென்றால் அவர்கள் மற்றவர்களுக்கு நல்லவர்கள் இல்லை. தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பாராமல் அந்த மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சில தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களுக்கும் நல்லவர்கள் இல்லை; அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கும் அவர்கள் நல்லவர்கள் இல்லை. இது தான் இந்தச் சட்டப் பேரவையைப் பொறுத்த வரையில், இதுவரை நிரூபணமாகி இருக்கின்ற உண்மை.

இவர்களுடைய அர்த்தமற்ற கூச்சல்களும், நியாயமற்ற வெளிநடப்புகளும் நாட்டு மக்களுக்கு சலிப்பையும், வெறுப்பையும் உண்டாக்கி இருக்கின்றன. இவர்களுக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது. எனக்கும் ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது.

என்னுடைய ஒரே நோக்கம் எவ்வாறெல்லாம் தமிழக மக்களுக்கு நன்மை செய்யலாம் என்பது!

அவர்களுடைய ஒரே நோக்கம் எனக்கு எந்த வகையிலும் நல்ல பெயர் வந்துவிடக் கூடாது என்பது! அதற்கு இவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள். மக்களிடத்தில் தங்கள் செல்வாக்கு குறைவது பற்றி இவர்களுக்கு கவலை இல்லை. மக்கள் தங்களை கேவலமாக நினைப்பார்களே என்பது பற்றிக் கூட இவர்களுக்குக் கவலை இல்லை. நமது குறிக்கோள் முதலமைச்சரை எதிர்ப்பதே என்ற ஒரே முடிவோடு செயல்படுகிறவர்கள் இவர்கள். தி.மு.க. உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்தாலும் அந்த நோக்கத்தோடு தான் செயல்படுகிறார்கள். அவர்கள் டெல்லியில் இருந்தாலும் இதே நோக்கத்தோடு தான் செயல் படுகிறார்கள். டெல்லியிலே மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தி.மு.க. மந்திரிமார்கள் ஒவ்வொரு வேளையும் தொல்லை, ஒவ்வொரு நாளும் ஒரு முட்டுக்கட்டை என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தார்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும். ராணிமேரி கல்லூரி வளாகத்தில் தலைமைச் செயலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று ஜெயலலிதா திட்டம் இடுகிறாரா? அதை எப்படித் தடுப்பது? கோட்டூர்புரத்தில் தலைமைச் செயலகத்தை அமைக்க ஜெயலலிதா விரும்புகிறாரா? கூடாது, கூடாது! எப்படியும் அதைத் தடுத்தே ஆக வேண்டும் என்று அவசர அவசரமாகச் சட்டம் தீட்டுவதே இவர்களது சிந்தனையாக இருந்தது! ஏனென்றால் எனக்கு அதனால் நல்ல பெயர் எதுவும் வந்துவிடக் கூடாதாம்.

தமிழகத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முன்மொழியப்பட்ட பைக்காரா இறுதிநிலை புனல்மின் திட்டத்தை செயல்படுத்த தேவையான சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையின் தடை நீக்கச் சான்றிதழை வழங்கிட வேண்டும் என்று மைய அரசிற்கு கோரிக்கை மேல் கோரிக்கை விடுத்தும் அது ஏற்கப்படாமல் தாமதிக்கப்பட்டு வந்தது. இது குறித்து நான் கடந்த

ஆண்டு நவம்பர் மாதத்தில் பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். இதனைத் தொடர்ந்து தி.மு.க. மத்திய அமைச்சரவையை விட்டு விலகிய பின் 30.1.2004 அன்று கருத்தளவில் இதற்கான தடையில்லாச் சான்றிதழை மைய அரசு வழங்கியுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு மைய அரசில் அங்கம் வகித்து மத்திய அமைச்சர்களாக பதவி வகித்த திமுக–வினர் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் எத்தகைய துரோகம் இழைத்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஒரு நிகழ்வே தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

மத்திய அரசில் திமுக அங்கம் வகித்த காலம் வரை தமிழ்நாட்டிற்கு நன்மை பயக்கும் இது போன்ற திட்டங்களை நிறைவேற்றிட அவர்கள் உதவிடவில்லை என்பது மட்டுமல்ல; முட்டுக்கட்டைகளாக இருந்து அந்த திட்டங்களை நிறைவேற்றாமல் தடுக்க என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார்கள். தமிழகத்தின் நலனுக்கு கருப்புப் புள்ளிகளாக விளங்கிய இவர்கள் மத்திய அரசிலிருந்து விலகிய அடுத்த நொடியிலிருந்து தமிழகத்திற்கு நல்லது நடக்கிறது. தமிழக மக்களுக்கு நன்மை விளைகிறது. என்னுடைய முயற்சியால் இவை யாவும் நிறைவேறுகின்றன என்ற நிதர்சனமான உண்மையை இந்த அவை மூலமாக தமிழக மக்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

காவேரித் தண்ணீர் தமிழகத்திற்கு கிடைத்து விடக் கூடாது என்பதில் கர்நாடகத்தை விட இவர்கள் தீவிரமாக இருந்தார்கள்.

எனக்கும், எனது கட்சிக்கும், நான் தலைமை ஏற்றிருக்கின்ற இந்த அரசுக்கும் எதிராக என்னென்ன செய்யலாம் என்பதைத் தவிர, தங்களைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களுக்கு என்ன செய்யலாம் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்ததே இல்லை; அதற்கு நேரமும் இல்லை. ஏனென்றால் உள்ள பொழுதெல்லாம் எனக்கு உபத்திரவம் தருவதற்காகவே என்ற உன்னத லட்சியத்தோடு அவர்கள் செயல்பட்டார்கள்.

இன்னொரு கட்சி; அந்தக் கூடாரத்தில் குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. 'யாரோடு கூட்டு என்பது படைத்தவனைத் தவிர யாருக்குத் தெரியும்? யாம் அறியோம் பராபரமே!' என்ற தத்துவ விசாரத்தில் மூழ்கி இருக்கும் கட்சி அது. தனக்கு என்ன நிலைப்பாடு என்று தனக்கே தெரியாத ஒரு தடுமாற்றத்தில் அது எப்போதும் இருக்கும். தேர்தலுக்கு முன் ஓடிப் போகலாமா; இல்லை தேர்தல் முடிந்த பின்பு ஓடிப் போகலாமா என்பதே அதன் கொள்கை கீதமாக இருந்தது. மொத்தத்தில் ஓடிப்போவது என்பதில் மட்டும் அது உறுதியாக இருந்தது. அந்த விஷயத்தில் மட்டும் அது மிகவும் தெளிவாக இருந்தது. நாள் ஒன்றுக்கு 24 மணி நேரமும் குழப்பத்தில் இருக்கும் இவர்களுக்கு அத்தனைக் குழப்பத்திலும் ஓடிப் போவது என்பதில் மட்டும் ஓர் உறுதிப்பாடு இருக்கிறது.

இன்னொரு சாரார் இருக்கிறார்கள். இவர்களுடைய நிலைப்பாடும் செயல்பாடும் ஆச்சரியப் படத்தக்கவை. இவர்களது அரசியல் பல்லவியே இது தான்!

'எவரோடும் கூட்டு!
எங்களுக்குள் வேட்டு!'

இது தான் இவர்களது அரசியல் பால பாடம்!

"கொஞ்சமோ பிரிவினைகள்;
ஒரு கோடி என்றால் அது குறைவாமோ"

என்று பாரதி பாடியது இவர்களைப் பற்றித் தான்.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை உள்ளூர்த் தலைமை இவர்களுக்கு ஒத்துக் கொள்ளாது.

ஒரு காலத்தில் அந்நியரை விரட்டத் தான் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கோ

"அந்நியரில்லாமல்
புண்ணியம் இல்லை"

என்பதே இவர்களுக்கு வேத போதமாகவும், நாத கீதமாகவும் ஆகி இருக்கிறது.

இவர்கள் சட்டப் பேரவைக்குள் நுழையும் போதே எப்போது வெளியே போவது என்ற ஒரே சிந்தனையில் இருப்பார்கள். இருக்கும் காலத்தில் என்னை இழித்துப் பேசுவதும், பழித்துப் பேசுவதும் மட்டுமே இவர்களது தேசியப் பணியாக இருக்கும்.

இவர்களுக்கு இன்னும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. இவர்கள் கூட்டணி கொள்கைக் கூட்டணியாகவே இருக்கும். அதாவது தங்களது தலைவரைக் கொன்றவர்களின் கூட்டாளிகளோடு மட்டும் தான் இவர்கள் கூட்டு வைத்துக் கொள்வார்கள். இவர்களை இவர்களது தலைவரின் ஆன்மா தான் மன்னிக்க வேண்டும்!

இன்னொரு பிரிவினர் இருக்கிறார்கள்! உண்மையைச் சொன்னால் ஒரு பிரிவுக்குள்ளேயே இரு பிரிவாக இருப்பவர்கள் இவர்கள்! வலதுக்குள் இடது; இடதுக்குள் வலது; இவற்றில் எது சிறந்தது என்ற பட்டி மன்றம் உலக அளவில் நிறுத்தப்பட்டு விட்டாலும், உள்ளூரில் அதை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் இவர்கள்! தாங்கள் ஆளுகின்ற மாநிலங்களைப் பொறுத்த வரை ஒரு நிலைப்பாடும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு நிலைப்பாடும் என்ற இரண்டு நிலையில் இருப்பவர்கள் இவர்கள்.

எதிர்ப்பு என்பது எதிர்ப்புக்காகவே என்ற சித்தாந்தச் செம்மல்களாகிய இவர்கள், எதற்காக எதிர்க்கிறோம் என்பதைப் பற்றி எப்போதும் கவலைப்பட்டது கிடையாது. துருவங்களோடு கை கோர்த்துக் கொண்டு தங்களது குதர்க்கங்களுக்கு கொள்கை முலாம் பூசிக் கொண்டிருக்கிற கோமான்கள் இவர்கள்!

இவர்கள் எல்லாம் எதில் ஒன்றுபட்டு நிற்காவிட்டாலும், ஒரே ஒரு விஷயத்தைப் பொறுத்த வரை ஒன்றுபட்டு நிற்பார்கள். அதாவது வெளிநடப்பு செய்வது என்ற விஷயத்தில் மட்டும் இவர்களிடத்தில் அபாரமான ஒற்றுமை உண்டு.

'நீ முன்னாலே போ; நான் பின்னாலே வருகிறேன்'

என்று பேசி வைத்துக் கொண்டே பேரவைக்குள் நுழைகின்ற பெருமக்கள் இவர்கள். சட்டசபைக்குள் உட்கார்ந்திருந்து ஆக்கப்பூர்வமான முறையில் விவாதித்தால், முதலமைச்சர் முறையான பதிலைச் சொல்லும் போது நாம் முகத்தை எங்கே வைத்துக் கொள்வது? மேலும் முதலமைச்சர் சரியான பதிலைச் சொல்லி, அது பதிவாகி, வெளியே இருக்கிற மக்களும் அதைத் தெரிந்து கொள்வார்களேயானால் ஒட்டுமொத்த தமிழகமும் முதலமைச்சருக்கு அல்லவா ஆதரவாகப் போகும் என்று பயந்து எந்த வாதமும் செய்யாமல், பிடிவாதமாக வெளிநடப்பு செய்வதே இவர்களுக்குப் பிழைப்பாகப் போய்விட்டது.

ஆளுநர் தமது உரையை வாசிப்பதற்கு முன்னாலேயே, எழுதி வைத்துக் கொண்டு வந்ததை அரைகுறையாகப் படித்துவிட்டு வெளிநடப்பு செய்து விட்ட வீராதி வீரர்கள் இவர்கள். பொது மக்களைப் பற்றி, அவர்களது நலனைப் பற்றி சற்றேனும் கவலை இல்லாத சுயநலப் புலிகள் இவர்கள்!

இவர்கள் இழைத்திருக்கும் இன்னல்களையும், இடர்களையும் தாண்டி நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை துறைவாரியாக நிகழ்த்தப்பட்ட முக்கிய சாதனைகள இப்போது நான் தொகுத்துரைக்க விரும்புகிறேன்.

அரசு அலுவலர்கள்

அரசு ஊழியர்கள் பிரச்சனை பற்றி இப்போது சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

2001 ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது இந்த அரசின் நிதிநிலை, மிகவும் அதல பாதாளத்தில் இருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். முந்தைய திமுக ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டால் ஏழை எளியவர்களைப் பாதிக்கும் வகையில் அரசின் செலவினங்கள், குறிப்பாக, திட்டம் சாராத மற்றும் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் செலவினங்கள் மிகவும் அதிகரித்திருந்தன. இதன் விளைவாக, ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரும் சில திட்டங்களை, நிறுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டோம்.

2001–2002 ஆம் ஆண்டில், முந்தைய அரசு கொடுக்காமல் விட்டுச் சென்ற பணப் பாக்கிப் பட்டியல்கள் 4,000 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தன. தமிழ்நாடு மின்சார வாரியம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது 2001–2002ஆம் ஆண்டில், 5,000 கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறையை சரி கட்ட இயலாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. கடந்த கால திமுக ஆட்சியின் நிருவாக சீர்கேட்டால், போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நட்டத்தில் முடங்கிக் கிடந்தன. மேலும் அரசு அலுவலர்களுக்கும், ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கும், 5வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை சுமார் 1,800 கோடி ரூபாயை கொடுக்காமல் 31.3.2003 வரை முந்தைய திமுக அரசு தள்ளி வைத்தது. இது மட்டுமின்றி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி மீதான உரிமத் தொகை சுமார் 250 கோடி ரூபாய் அளவிற்கு மார்ச் 2001–லேயே முந்தைய திமுக அரசு முன் பணமாக பெற்றுவிட்டது. அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் அளவு ஏற்கெனவே மிக அதிக அளவை எட்டி இருந்தது. கூடுதல் வரி வருவாய் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இல்லாத நிலை இருந்தது. செலவினங்களைக் கட்டுப்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லாத ஒரு இக்கட்டான நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் வேறு வழியின்றி மிகவும் மன வேதனையுடன், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியில் 10 கிலோவிற்கான விலையை அதிகப்படுத்துவதற்கும், இலவச வேட்டி சேலை திட்டத்தை நிறுத்தி வைப்பதற்கும், முடிவெடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை கடந்த கால திமுக ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இத்தகைய, முந்தைய திமுக ஆட்சியால் உருவாக்கப்பட்ட ஒரு நிதி இடர்பாட்டை பொது மக்களே பகிர்ந்துகொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கும் போது, அரசு அலுவலர்களும் இதில் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை நான் வலியுறுத்தினேன். பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பின், இறுதியாக அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை நான் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி 552 கோடி ரூபாய் அளவிற்கு சலுகைகள் வழங்கினேன். இதற்கு மேல் அரசால் வழங்க இயலாத சூழ்நிலையையும் தெளிவாக எடுத்துக் கூறினேன். இதில் உள்ள நியாயத்தை பிடிவாதமாக உணர மறுத்த அரசு அலுவலர் சங்கத் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் 2003, ஜூலை 2ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அரசு எதிர்கொள்ளும் இத்தகைய நிதி இடர்பாட்டில் பொதுமக்களுடன், அரசு ஊழியர்களும் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தினை வலியுறுத்தி இந்த அரசு இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை எதிர்கொண்டது. எனினும், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில், அவர்களின் அரசியல் ரீதியான ஆதரவைப் பெற்ற சில அமைப்புகள் நீதிமன்றங்களை அணுகின. இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில் அரசு ஊழியர்களின் பணி நீக்கம் சம்மந்தமாக ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகளின் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பல்வேறு அரசு அலுவலர்கள் தாங்கள் திசைமாறி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும், எனவே தங்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்றும், என்னிடம் பல முறை கோரிக்கைகள் விடுத்துள்ளனர். எனக்கு எப்பொழுதும் எவர் மீதும் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ, பகைமையோ இருந்தது இல்லை. எதிர்கட்சித் தலைவர்களின் தூண்டுதலாலேயே, இவ்வாறு திசைமாறிப் போய், பாதிப்பிற்குள்ளான ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களையும் மன்னித்து அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த அடிப்படையில்–

1) பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களும் மீண்டும் பணியில் அமர்த்தப் படுவார்கள். பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களின் தண்டனை நான்கு வருட திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

2) பதவி இறக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பதவி இறக்கம் எனும் தண்டனை, ரத்து செய்யப்படும். அவர்கள் அனைவரும் தாங்கள் ஏற்கெனவே வகித்திருந்த பதவியை மீண்டும் பெறுவார்கள்.

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி இறக்கம் எனும் தண்டனை ரத்து செய்யப்பட்டு, அது இரண்டு வருட திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக், குறைக்கப்படும்.

3) மூன்று வருடங்களுக்கு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை வழங்கப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அத்தண்டனை ஒரு வருடம் திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

பெரும்பான்மையான மாநிலங்கள் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான அகவிலைப் படியை தங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்க இயலாத நிலையில் உள்ளன. 1.7.2003 முதல் இந்த அரசு, அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 52 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கி வருகிறது. பெரும்பான்மையான மாநிலங்கள் இதைவிடக் குறைவான அகவிலைப் படியையே தங்கள் அலுவலர்களுக்கு வழங்கி வருகின்றன. ஆசிரியர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள் உட்பட சமுதாயத்தின் அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட தாயுள்ளம் கொண்ட நான் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1.2.2004 முதல் 3 சதவிகிதம் கூடுதல் அகவிலைப்படி வழங்க முடிவு செய்துள்ளேன் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், தொகுப்பு ஊதியத்தில் உள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் தற்பொழுது பின்பற்றி வரும் முறைப்படி கூடுதல் அகவிலைப்படி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படக் கூடிய கூடுதல் செலவு சுமார் 201 கோடி ரூபாய் ஆகும். அனைத்து அரசு அலுவலர்களும் பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு தங்கள் பணியை மேலும் திறம்பட செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்போது வருவாய்த் துறை சம்பந்தமாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

வருவாய்த் துறை

தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவ மழை தொடர்ந்து பொய்த்து வந்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 745.7 மி.மீ. ஆகும். இது இயல்பான மழை அளவை விட 24 சதவீதம் குறைவானதாகும். கடந்த 30 ஆண்டுகளில் இதுவே மிகக் குறைவான மழை அளவு ஆகும். இதன் காரணமாக வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

வரலாறு காணாத இந்த வறட்சியின் கொடுமையைக் குறைக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். சென்னையைத் தவிர மற்ற 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என அரசு அறிவித்தது. தமிழ்நாடு முழுவதும் சென்ற பசலி வருடத்திற்கான நிலவரி, உள்ளூர் தல வரி, உள்ளூர் தல மேல் வரி ஆகியவற்றை இந்த அரசு முழுமையாக தள்ளுபடி செய்து அதற்குண்டான 50 கோடி ரூபாய் இழப்பை அரசே ஏற்றுக் கொண்டது.

24.6.2002 அன்று தஞ்சாவூருக்கு நானே நேரடியாகச் சென்று வறட்சி நிலையை ஆய்வு செய்து 164 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலான வறட்சி

நிவாரணத் திட்டங்களை அறிவித்தேன். அவை சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டன.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதி அதாவது – National Calamity Contingency Fund–லிருந்து 332 கோடியே 9 இலட்சம் ரூபாயை மாநில அரசு பெற்றது. இந்த அளவிற்கு மத்திய அரசு நிவாரணம் வழங்கியது இதுவே முதன் முறை. இந்த 332 கோடியே 9 இலட்சம் ரூபாய்க்கு மேலாக மாநில அரசு மேலும் 335 கோடியே 45 இலட்சம் ரூபாயை அதாவது மொத்தம் 667 கோடியே 54 இலட்சம் ரூபாயை துயர் துடைப்பு பணிகளுக்காக 1.4.2002 முதல் 31.12.2003 வரை செலவிட்டுள்ளது.

மேலும், குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க 2002–2003 ஆம் ஆண்டில் 168 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் 30,372 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003–2004 ஆம் ஆண்டில் இதுவரை 111 கோடியே 8 இலட்சம் ரூபாய் குடிநீர் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் எதிர்பார்க்கப்படும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க மாவட்டங்களுக்கு 50 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட, 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, 21 கோடி ரூபாய் செலவில் பரிசுப் பைகள் வழங்கப்பட்டதையும்; முதலில் இலவச மதிய உணவும், பின்னர் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ வீதம் 7 மாதங்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டதையும்; விவசாயிகளுக்கு 323 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டதையும்; இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி 310 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்ய நான் ஜூன் 2001–ல் உத்தரவிட்டேன்.

2003 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை ஓரளவு இயல்பாகப் பெய்தாலும், தமிழ்நாட்டின் முக்கிய மழை பருவமாகிய வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 11 மாவட்டங்களில் குறைவான அளவே மழை பெய்துள்ளது. அதிலும், சென்னை மாநகரில் 54% அளவுக்கு மழை குறைவாக பெய்துள்ளது. எனவே, சென்னை மாநகரம் இதுவரை காணாத கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளது. ஏனைய 10 மாவட்டங்களில் 20% முதல் 44% வரை குறைவான மழை பெய்துள்ளது. இந்த ஆண்டிலும் காவேரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் காவேரி பாசனப் பகுதிகளில் வேளாண் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் வரும் கோடைக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

சென்னையை எதிர் நோக்கியுள்ள மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை எடுத்துக் கூறி இந்த நிலைமையைச் சமாளித்திட மத்திய அரசு National Calamity Contingency Fund என்னும் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 700 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு வாஜ்பாய் அவர்களுக்கும் மாண்புமிகு துணைப் பிரதமர் திரு எல்.கே. அத்வானி அவர்களுக்கும், 14.1.2004 அன்று கடிதங்கள் எழுதி கோரிக்கை விடுத்தேன். இந்தக் கோரிக்கையினைப் பரிசீலனை செய்த மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்கள், சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சனையைச் சமாளிக்க உடனடியாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். மேலும் நிலைமையை ஆய்வு செய்ய மத்தியக் குழு ஒன்றை அனுப்புவதாகவும், அந்தக்குழு நேரில் பார்வையிட்ட பின் மீதி நிதியை வழங்குவதாகவும் துணைப் பிரதமர் உறுதி அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்திட வேண்டும் என்று முழு முனைப்புடன் நான் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவே இது சாத்தியமாகி உள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையைத் திறம்படச் சமாளிப்பதற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 1,584 கோடி ரூபாயும், வேலைக்கு உணவு திட்டத்தை மேற்கொள்வதற்கு 10.8 இலட்சம் டன் அரிசியும் தேவைப்படும் என்று கணக்கிட்டு, இதற்கான விரிவான அறிக்கையை 1.2.2004 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கும், துணைப் பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி உள்ளேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 267 கோடியே 92 இலட்சம் ரூபாயும்; பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க 32 கோடியே 4 இலட்சம் ரூபாயும்; மழை குறைவினால் நீர் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்திற்கு இழப்பீடாக 336 கோடி ரூபாயும்; கூட்டுறவு சங்கங்களில் இருந்து விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்ய 300 கோடி ரூபாயும்; கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய வட்டி தொகையை ரத்து செய்வதற்கு 132 கோடியே 71 இலட்சம் ரூபாயும்; பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வேலைக்கு உணவு திட்டத்தை நிறைவேற்ற 210 கோடி ரூபாயும்; சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கு 265 கோடியே 82 இலட்சம் ரூபாயும்; கால்நடைத் துறையினருக்கு 13 கோடியே 34 இலட்சம் ரூபாயும்; வறட்சியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனுக்காக 25 கோடியே 90 இலட்சம் ரூபாயும்; ஆக மொத்தம் 1584 கோடி ரூபாயும் 10.8 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலையை விளக்கமாக எடுத்துக் காட்டி, இதனைச் சமாளித்திட 1,584 கோடி ரூபாய் நிதி உதவியினையும், 10 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானியமும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 1.2.2004 அன்று கடிதம் அனுப்பினேன். அன்றே சென்னைக்கு வருகை தந்திருந்த துணைப் பிரதமர் திரு அத்வானி அவர்களிடம் நேரில் அதே கடிதம் வழங்கி தமிழகத்தின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டேன்.

இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட மத்திய அரசு, தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட மத்தியக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக்குழு, மிக விரைவில் தமிழகத்திற்கு வருகை தந்து, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட பின் தமிழகத்தின் சார்பில் கோரப்பட்டுள்ள நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்று உறுதியுடன் நம்புகிறேன்.

இயற்கை பொய்த்துவிட்டதாலும், காவேரி நீரைக் கர்நாடகம் தராததாலும், ஏற்பட்ட வறட்சியின் கொடுமை விவசாயப் பெருமக்களைத் தாக்காத வண்ணம் இந்த அரசு கேடயமாக இருந்து வருகிறது. அதற்கு நான் இதுவரை தந்துள்ள விபரங்களே சான்று. இந்த ஆண்டிலும் உரிய வறட்சி நிவாரணம் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும். விவசாயிகளின் நலனைக் காப்பதில் இந்த அரசு எப்போதும் எவரைக் காட்டிலும் முன்னிற்கும் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவரி தள்ளுபடி

விவசாயிகளின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்ட எனது அரசு, விதிமுறைகளின்படி நிலவரியைத் தள்ளுபடி செய்ய முடியாது என்றாலும், தொடர்ந்து பருவமழை பாதிக்கப்பட்டுள்ளதால், நிலவரி தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஜூலை 2003 முதல் ஜூன் 2004 வரை உள்ள நடப்பு பசலி ஆண்டுக்கு (1413), அனைத்து மாவட்டங்களிலும் நிலவரி முழுவதையும் தள்ளுபடி செய்ய நான் ஆணையிடுகின்றேன். உள்ளூர் தலவரி (Local Cess) மற்றும் உள்ளூர் தலமேல் வரி (Local Cess Surcharge) ஆகியவைகளும் தள்ளுபடி செய்யப்படும். இதனால் அரசுக்கு 60 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்றாலும், விவசாயிகளின் நலன் கருதி அதனை ஏற்றுக் கொள்வதில் இந்த அரசு மன நிறைவு அடைகிறது.

காவேரி நீர்

காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டவில்லை என்று கீறல் விழுந்த பழைய கிராமஃபோன் ரெக்கார்டு போல எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரே பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடி வருகின்றனர். ஆனால் உண்மை நிலை என்ன என்று இந்த அவையில் நான் பலமுறை எடுத்துக் கூறி இருக்கிறேன். காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில், காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உள்ள சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டுவதில் என்னுடைய தலைமையிலான அரசு 100 சதவிகிதம் முழுமையான பங்காற்றி இருக்கிறது என்பதை யாரும் மறுத்திடவோ, மறைத்து விடவோ முடியாது.

காவேரிப் படுகை மாவட்டங்களை வளப்படுத்தி, விவசாயிகளுக்கு வாழ்வளித்து, தமிழக மக்களுக்கு வளமும் நலமும் வழங்கும் காவேரி நதியைக் கர்நாடக அரசு தன்னுடைய வசதிக்காக நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்தி வருகிறது. இதனைத் தடுத்து தமிழகத்திற்கு உரிய நியாயமான பங்கை வழங்குவதற்காக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி காவேரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையை நிறைவேற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் 11.8.1998 அன்று காவேரி ஆணையம் – CAUVERY RIVER AUTHORITY உருவாக்கப் பட்டது.

காவேரி ஆணையத்தின் கூட்டங்கள் இதுவரை 6 முறைகள் நடைபெற்றுள்ளன. எங்களுடைய அரசு 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நான்கு முறை ஆணையத்தின் கூட்டங்கள் நடந்துள்ளன. இந்த நான்கு முறைகளில் நான் நேரடியாக இரண்டு முறை பங்கேற்றுள்ளேன். 10.10.2001 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பங்கேற்றுள்ளார். அதற்கு அடுத்து 27.8.2002 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நான் நேரடியாகப் பங்கேற்றேன். இதற்கு அடுத்த கூட்டம் 7.9.2002 அன்று நடைபெற்ற காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து 23 மணி நேர அவகாசம் கூடத் தரப்படாமல் கர்நாடகத்தின் நெருக்குதலின் காரணமாக, திடீரென அதற்கு அடுத்த நாளே, அதாவது 8.9.2002 அன்றே கூட்டப்பட்டதால் நான் அதில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இவ்வாறு காவேரி ஆணையக் கூட்டம் திடீரென கூட்டப்படுகின்ற தகவல் எனக்கு கிடைக்கப் பெற்றதும் வேறொரு கூட்டம் தொடர்பாக அன்றைய தினம் புது டெல்லி சென்றிருந்த நிதி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களை உடனடியாகத் தொ[illegible] தொடர்பு கொண்டு அந்த [illegible] கலந்து கொள்ளுமாறு

தெரிவித்தேன். மேலும் காவேரி நீரில் தமிழகத்திற்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய கருத்துக்களையும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையையும் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறி அதை காவேரி ஆணையத்தின் முன் வைக்குமாறு தெரிவித்தேன். இதன் பிறகு 10.2.2003 அன்று கடைசியாக நடைபெற்ற காவேரி ஆணைய கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்.

இந்த அனைத்துக் கூட்டங்களிலும் தமிழ் நாட்டிற்கு நியாயம் வழங்குங்கள் என்று தான் கேட்டோம். கடைசி வரை இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட எந்த ஒரு முடிவையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை. கர்நாடக அரசு தன் கையிருப்பில் தமிழகத்திற்கு கொடுக்கக்கூடிய அளவிற்குத் தண்ணீரை இருப்பு வைத்திருந்த நேரத்திலும், காவேரி ஆணையத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து விட்டது. தமிழ்நாடு அரசு தனது நியாயமான கோரிக்கைகளை சட்டப்பூர்வமான உரிமைகளை காவேரி ஆணையத்தின் முன்னர் எடுத்து வைத்த போதிலும் கர்நாடக அரசின் இணக்கமற்ற போக்காலும், சுயநலமிக்க தன்மையாலும், நியாயத்தை ஏற்க மறுக்கும் இயல்பாலும் காவேரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கு நமக்குக் கிடைக்கவில்லை.

காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி 2003 ஜூன் மாதம் முதல் 2004 ஜனவரி மாத இறுதி வரை தர வேண்டிய 196.10 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ; அல்லது காவேரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியான 90 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில்; 2004 ஜனவரி வரை மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமே ஆகும் என்பதை நான் இங்கு நினைவு கூர விரும்புகிறேன். அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அமைப்புகளான உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம், காவேரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுவதற்கு கர்நாடக அரசு திரும்பத் திரும்ப மறுத்து வருவது வேதனைக்குரியது. அது மட்டுமன்றி, இந்திய அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம், காவேரி நதி நீர் ஆணையம் ஆகிய அதிகார அமைப்புகளின் அதிகார மையங்களின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்து தனி நாடு போல கர்நாடகம் தன்னிச்சையாக நடந்து கொள்வது கண்டனத்திற்கு உரியதும் ஆகும். இதை நாம் பலமுறை சுட்டிக்காட்டியும் பயனில்லை. காவேரி ஆற்றிலிருந்து தனக்குரிய நியாயமான பங்கினை தமிழ்நாடு பெற்றே தீரும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் எனது அரசு ஒரு போதும் தளராது, ஓயாது என்பதை இந்தப் பேரவைக்கு மீண்டும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி டெல்டா விவசாயிகளின் துயரைத் துடைக்கின்ற வகையில், காவேரி நீரில் நமக்குள்ள உரிமையை நிலை நாட்டுகின்ற வகையில், நான் எத்தனை முயற்சிகள் எடுத்திருக்கிறேன் என்பதை ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் சொல்லியாயிற்று. காவேரி நதி நீர் ஆணையத்தின் நான்கு கூட்டங்களிலும் நாங்கள் பங்கு பெற்றிருக்கிறோம். அதே சமயத்தில் டில்லியில் மத்திய அரசில் நாற்காலி போட்டு அமர்ந்து மந்திரிகளாக இருந்தார்களே – அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்! அவர்கள் கையில் அதிகாரம் இருந்தது. அவர்கள் நினைத்து இருந்தால் காவேரி நீரைத் தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசை வற்புறுத்தி இருக்க முடியும். ஆனால் காவேரி நீர் தமிழகத்திற்கு கிடைக்க ஏற்பாடு செய்தார்களா? மத்திய அரசை வற்புறுத்தினார்களா? குறைந்தபட்சம் குரலாவது கொடுத்தார்களா? இல்லை! அவர்களது தலைவரோ இதற்கு மேல் ஒரு படி சென்றார். 'ஆட்சி செய்வது நீங்கள், காவேரிக்குப் போராட வேண்டியது நாங்களா?' என்று கேட்டார். அதாவது தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால் தான், காவேரிக்கு குரல் கொடுப்பாராம். ஆட்சிப் பொறுப்பில் அவரை மக்கள் அமர்த்தாவிட்டால் விஷமத்தனத்தோடு வேடிக்கை பார்ப்பாராம்! அவரது வாதத்தின்படி வைத்துக் கொண்டால் கூட மத்திய அரசில் இவரது கட்சிக்காரர்கள் மந்திரிகளாக இருந்தார்களே அப்போது அவர்கள் என்ன செய்தார்கள்? போராட வேண்டாம். குறைந்தபட்சம் குரலாவது கொடுத்திருக்கலாம் அல்லவா? அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள் எனது அரசு முனைப்புடன் செயல்படவில்லையாம்! எப்படி இருக்கிறது நியாயம்?

இன்றைக்கு காங்கிரஸ்காரர்களும் மனசாட்சி இல்லாமல் இதே குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். கர்நாடகத்தை நேற்று ஆண்டதும், இன்றைக்கு ஆண்டுகொண்டிருப்பதும் காங்கிரஸ் கட்சி தானே? அந்த காங்கிரஸ் ஆட்சியை காவேரி நீரை வழங்குமாறு வற்புறுத்தியிருக்கலாம் இல்லையா? டில்லியிலிருக்கும் அவர்கள் கட்சித் தலைமை தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கலாம் இல்லையா? ஏன் செய்ய வில்லை? என்றைக்காவது இந்தக் கேள்விகளுக்கு தமிழ்நாடு காங்கிரசார் பதில் சொன்னதுண்டா? போகட்டும்! இப்போதாவது கர்நாடக காங்கிரஸ் அரசை அல்லது டில்லித் தலைமையைக் கேட்கின்ற துணிச்சல் இவர்களுக்கு உண்டா? துணிச்சலும் கிடையாது! தமிழக நலனைக் காக்கும் உணர்வும் கிடையாது!

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி– கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

என்று பாரதியார் பாடினாரே அது இவர்களைப் பற்றித் தானா?

'நடிப்புச் சுதேசிகள்' என்று பாரதியார் அழைத்தது இவர்களைத் தானா?

சிலரைப் பல நாள் ஏமாற்றலாம். பலரைச் சில நாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல. காவேரிப் பிரச்சினையில் தங்களை ஏமாற்றிய இவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

நாங்கள் தி.மு.க. காரர்களைப் போல் வாய்ச் சொல் வீரர்கள் அல்ல! காங்கிரஸ்காரர்களைப் போல் நடிப்புச் சுதேசிகள் அல்ல! யார் குரல் கொடுத்தாலும், குரல் கொடுக்காவிட்டாலும் நாங்கள் குரல் கொடுப்போம். யார் போராடினாலும், போராடாவிட்டாலும் நாங்கள் போராடுவோம்! காவேரிப் பிரச்சினையில் விரைவில் வெற்றி பெற்றே தீருவோம். நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் நாங்கள் அமர்வோம். இதுவரை ஏற்படாத மாறுதலை நாங்கள் கொண்டு வந்தே தீருவோம்! கர்நாடகத்தின் கதவுகளைத் திறந்து கொண்டு காவேரி தமிழகத்திற்குள் காலெடுத்து வைப்பதை எவராலும் தடுக்க இயலாது. இறுதி வெற்றி பெறும் வரை நாங்கள் ஓய மாட்டோம் என்பதை அறுதியிட்டு, உறுதியுடன் இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை

எனது தலைமையிலான அரசு, வேளாண்மைத் துறையில் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குறைவாக பெறப்பட்ட பருவமழை நீர்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் குறைவான நீர் இருப்பு அண்டை மாநிலத்திலிருந்து நீர் திறந்து விடப்படாத நிலை மற்றும் குறைந்து விட்ட நிலத்தடி நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த குறுவைப் பட்டத்தில் நெல் பயிரிட முடியாத விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தினை கடந்த ஆண்டில் நான் அறிவித்தேன். கடந்த ஆண்டில், 2003 குறுவையில் 75,165 ஏக்கரில் குறைந்த நீர் தேவைப்படும் சிறு தானியங்கள் பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றை மாற்றுப் பயிராக விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

தோட்டக்கலைப் பிரிவில், பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு, விலை மதிப்புள்ள காய்கறிப் பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும்

7 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம்" – அதாவது – Precision Farming என்ற சிறப்பு திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் 1000 ஏக்கர் நிலங்களில் அவர்களின் தீவிர பங்கேற்புடன் மரவள்ளி, சீமை வெள்ளரி, பேபி கார்ன் போன்ற பயிர்களின் சாகுபடி உயர் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினை தோட்டக்கலைத் துறையின் மேற்பார்வையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுத்தும்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், 'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்' Tamil Nadu Horticulture Development Mission – கடந்த ஆண்டு என்னால் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான பணிகளை 11.2.2004 அன்று சென்னையில் நான் துவக்கி வைக்க உள்ளேன்.

13 கோடி ரூபாய் செலவில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமான SIPCOT வளாகத்தில், ஒரு உணவு பூங்கா – FOOD PARK – அமைப்பதற்கான ஆணையை நான் பிறப்பித்துள்ளேன். இதற்காகவே ஏற்படுத்தப்படவுள்ள ஒரு சிறப்பு முகமை – Special purpose vehicle மூலம் இது அமல்படுத்தப் படவுள்ளது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமும் SIPCOT–ம் பங்கேற்கும்.

ஈரோடு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் மொத்தம் 36 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் நவீன உள் கட்டமைப்பு வசதிகளான ஏல மையம், தகவல் தொடர்பு மையம், பரிவர்த்தனைக் கூடங்கள், வங்கி தரக் கட்டுப்பாடு ஆய்வகம்,

விவசாயிகள் ஒய்வு எடுக்க வசதி போன்றவை இடம் பெறும்.

தமிழ்நாட்டிலுள்ள வளமற்ற தரிசு நிலங்களைச் சீர்திருத்துவதன் மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதுடன், வேளாண் மற்றும் வேளாண்மையைச் சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், தரிசு நில விவசாயிகளின் வருவாய் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முடியும். விவசாயிகளின் ஒட்டு மொத்த நலனை இலக்காகக் கொண்டு, தரிசு நிலங்களை 5 ஆண்டு காலத்தில் சீர்திருத்தி பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்வதற்காக, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை 2001 ஆம் ஆண்டில் நான் அறிவித்தேன். மண் மற்றும் ஈரப் பதத்தைப் பாதுகாப்பதை முன்னிலைப்படுத்தி, மிகச் சிறிய நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்தும் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் பங்கேற்பு அணுகுமுறையில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டு ஆண்டு காலமாக கடும் வறட்சி நிலவிய போதிலும், இதுவரை 70 இலட்சம் மரக் கன்றுகள் 1.19 இலட்சம் ஏக்கர்களில் நடப்பட்டுள்ளன. வரும் ஆண்டு நல்ல பருவ மழையை எதிர்பார்த்து, 1,50,000 ஏக்கர் நிலத்தில் மரக் கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

உலக வங்கி உதவியுடன் திருநெல்வேலி மாவட்டம் ஹனுமான் நதி ஆற்று பாசன பகுதிகளில் சுமார் 7,413 ஏக்கர் பரப்பில் நவீன நீர்ப் பாசன வசதிகளான தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், குழாய் மூலம் பாசனம் போன்ற முறைகளை கையாண்டு வேளாண்மைத் துறையால் 22 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன்.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்

எனது அரசு தமிழகத்தில் 1.10.2002 முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

நடப்பு சம்பா 2004 பருவத்தில் 15.12.2003 முதல் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள் முதல் திட்டத்தின்படி, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையான சன்ன ரக Fine Variety நெல் குவிண்டால் ஒன்றிற்கு 580 ரூபாய்க்கும்; பொது ரக Common Variety நெல் குவிண்டால் ஒன்றிற்கு 550 ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய நான் ஆணையிட்டேன்.

தற்போது மொத்தம் 501 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போது, நாள்தோறும் சுமார் 2,500 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. 9.2.2004 வரை, அதாவது நேற்று வரை, மொத்தம் 17,246 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் வரத்தைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் பேரில், தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாகத் திறக்க என்னுடைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சில பகுதிகளில் சாகுபடி செய்யத் தேவையான நீர்வரத்து இல்லாத காரணத்தால் தானியங்கள் முதிராத நிலையைக் கருத்தில் கொண்டு, தர நிர்ணயங்களில் சலுகைகள் வேண்டுமென விவசாயப் பெருமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை, உடனடியாக ஏற்று, தர நிர்ணய திரிபுகளில் குறிப்பாக முதிராதது சுருங்கியது மற்றும் குறுகியது ஆகியவற்றை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தும்படி மைய அரசுக்கு என்னுடைய அரசு பரிந்துரை செய்துள்ளது. அக்கோரிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மைய அரசின் உத்தரவு கிடைத்தவுடன் விவசாய பெருமக்கள் விரும்பியவாறு தர நிர்ணயங்களில் சலுகைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைக் குடிநீர்

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு, எந்தெந்த வழிகளில் எல்லாம் இயலுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் முயன்று வருகிறது எனது அரசு!

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கக் கூடிய நீர் நிலைகளான பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 7,412 மில்லியன் கன அடி. அவற்றில் தற்போதைய நீர் இருப்பு 213 மில்லியன் கன அடி ஆகும். இது ஏரிகளின் மொத்தக் கொள்ளளவில் 2 விழுக்காடே ஆகும். தற்போது உள்ள நீர் இருப்பு கடந்த 51 ஆண்டுகளில் இதே நாளில் இருந்த நீர் இருப்பை விட மிகக் குறைவானதாகும்.

2003 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை குறைந்த அளவே பெய்தது. ஆகவே நவம்பர் 2003-ல் நான் சென்னை நகரத்திற்குப் போர்க்கால அடிப்படையில் கூடுதலான குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி, சென்னை நகர மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் திட்டங்கள் தீட்டுமாறு சென்னை குடிநீர் வாரியத்திற்கு ஆணையிட்டேன்.

எனது ஆணையின் அடிப்படையில் சென்னை குடிநீர் வாரியம் இந்த ஆண்டு நிலவி வரும் வரலாறு காணாத குடிநீர்த் தட்டுப்பாட்டினை சமாளிக்கவும்; சென்னை நகரில் வாழும் 55 இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையைச் சமாளிக்கவும்; பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

பல்வேறு கிணற்றுத் தளங்களில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, குழாய்கள் மூலம் நகரத்திலுள்ள குடிநீர் பகிர்மான நிலையங்களுக்குக் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தனியார் விவசாயக் கிணறுகளில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 50 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் லாரிகளில் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது.

சென்னை நகரில் நாள்தோறும் 8,500 லாரி நடைகள் இயக்கப்பட்டு, 10,350 குடிநீர்த் தொட்டிகள் மூலமும் 4,700 தெருக்களில் நேரடியாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் கோடைக் காலத்தைக் கணக்கில் கொண்டு, மேலும் 2,000 நீர்த் தொட்டிகளை நிறுவவும்; தேவையான அளவு டாங்கர் லாரிகளின் எண்ணிக்கை யையும், லாரி நடைகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி நகரில் குடிநீர் விநியோகத்தைச் சீராகத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விநியோகம் செய்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன். என்னால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளினால், சென்னை நகருக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீர் பெரும்பாலும் நிலத்தடி நீரைக் கொண்டே விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதர நீர்த் தேவைகளுக்காக, சென்னை நகரில் 5,730 இந்தியா மார்க்-II ஆழ்துளை பம்புகள் - India Mark-II - அமைக்கப்பட்டு அவற்றை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 800 இந்தியா மார்க்-II ஆழ் துளைப் பம்புகள் கடந்த இரண்டு மாதங்களில் நிறுவப்பட்டுள்ளன. வரும் கோடைக் காலத்திற்கு முன்பு மேலும் 1,000 ஆழ்துளைப் பம்புகள் நிறுவிட தற்போது ஆணையிட்டுள்ளேன்.

தற்போது கிணற்றுத் தளங்களிலிருந்து எடுக்கப்படும் தினசரி 103 மில்லியன் லிட்டர் என்ற அளவு, எதிர் வரும் கோடைக் காலத்திலும் தொடர்ந்து கிடைத்திட ஏதுவாக சுமார் 110 விவசாயக் கிணறுகளிலிருந்து நாளொன்றிற்கு 32 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

இப்பணிகள் அனைத்திற்கும் சுமார் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் எனத் திட்டமிடப் பட்டுள்ளது.

பூண்டி கிணற்றுத் தளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 125 கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, அதன் மூலம் பெறப்படும் நீரை செங்குன்றத்திலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்ப ஏதுவாக, பூண்டியிலிருந்து புழல் ஏரிக்கு இணைப்புக் கால்வாயினை ஒட்டி 1,000 மி.மீ. விட்டமுடைய இரும்புக் குழாய் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

சுமார் 116 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது செயலாக்கப்பட்டு மே 2004-லிருந்து பயன்பாட்டிற்கு வரும்.

தற்போது 4,900 லாரி நடைகளில் கொண்டு வரப்படும் நீரின் அளவான 49 மில்லியன் லிட்டர் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு, 7,500 நடைகள் மூலம் 75 மில்லியன் லிட்டர் எனக் குடிநீரை சென்னை நகருக்குக் கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறான ஏற்பாடுகளை அடுத்த வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தொடங்கும் காலமான 2004 செப்டம்பர் மாதம் முடிய நடைமுறைப்படுத்திட ஆணையிட்டுள்ளேன். இப்பணிகளுக்கான மொத்தச் செலவு 306 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

1991-96 இல் எனது தலைமையிலான அரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, அதனை உலக வங்கி நிதி உதவியுடன் 1638 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றிட ஒப்புதல் அளித்துத் திட்டம் தொடங்கப் படவிருந்த சூழ்நிலையில் ஆட்சி மாறியதையும்; பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. அரசு சென்னை மாநகரின் குடிநீர் தேவையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அத்திட்டத்தை ரத்து செய்து விட்டதையும்; மாண்புமிகு உறுப்பினர்களும் சென்னை மாநகர் வாழ் பொதுமக்களும் நன்கறிவர். என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தற்போதைய குடிநீர்த் தட்டுப்பாடு சென்னைக்கு ஏற்பட்டிருக்காது. எனினும், எதிர்காலத்தில் இது போன்ற

குடிநீர்த் தட்டுப்பாடுகள் ஏற்படாதவாறு தடுக்க 2001 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டாம் முறையாகத் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்ற உடனேயே எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்தது.

தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட புதிய வீராணம் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இத்திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் இந்த ஆண்டு மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும்.

புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்படுவதால், ஏரியின் பாசனம் பாதிக்கப்படும் என்ற தவறான அச்சத்தை ஏற்படுத்தச் சிலர் முயன்று வருகின்றனர். இந்த அச்சம் தேவையற்றது, தவறானது என்பதை இந்த அவையில் ஏற்கெனவே விளக்கமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளேன்.

வீராணம் ஏரியின் பாசனப் பகுதிகளில் பாசனம் பாதிக்கப்படாதவாறு, சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டு செல்லும் வண்ணம் இத்திட்டம் நிறைவேற்றப் படுகிறது. இந்த திட்டம் பிரபல கலந்தாலோசனை நிறுவனமான M/s Tata Consulting Engineers – ஆல் நன்கு ஆய்வு செய்யப்பட்ட பின்பே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். அவர்களுடைய ஆலோசனையின்படி வீராணம் ஏரியின் கரை 0.6 மீட்டர் உயர்த்தப்பட்டதன் மூலம் வீராணம் ஏரியின் கொள்ளளவு 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கொள்ளிடம் நதியின் குறுக்கே உள்ள கீழ் அணையிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் கொண்டு வரும் வடவாறு கால்வாயின் கொள்ளும் திறனும் வினாடிக்கு 1,400 கன அடியிலிருந்து வினாடிக்கு 2,300 கன அடியாக உயர்த்தப் பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவேற்றப் பட்டதால், இயல்பான ஆண்டில் முன்னர் கிடைத்த மொத்த நீரின் அளவான 11.06 டி.எம்.சி அடி என்பது தற்போது 14.45 டி.எம்.சி அடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது கூடுதலாக ஆண்டிற்கு 3.39 டி.எம்.சி அடி நீர் கிடைக்கும். புதிய வீராணம் திட்டத்தில் 2.45 டி.எம்.சி அடி நீர் தான் ஆண்டு முழுவதும் எடுக்கப்படவுள்ளது. இத் திட்டம் நிறைவேறுவதால், இயல்பான ஆண்டில் விவசாயத்திற்கு 1 டி.எம்.சி. அடி அளவில் கூடுதலாக நீர் கிடைக்கிறது என்பது தான் உண்மை.

விவசாயிகளின் நலனில் என்னுடைய தலைமையிலான இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அவர்கள் நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக 110.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் ஏரி, வடவாறு கால்வாய், மற்றும் பாசனக் கால்வாய்கள் மேம்பாட்டிற்காகத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதையும் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகரில் தற்போது நிலவி வரும் மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் வண்ணம், கடலூர் மாவட்டம் நெய்வேலிப் பகுதியில், கெடிலம் ஆற்றிற்கும், வெள்ளாற்றிற்கும் இடையிலான 40 கிலோ மீட்டர் நீளமுள்ள நிலநீர்ப் படுகையில் 45 ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, அவற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 60 மில்லியன் லிட்டர் நீரை எடுத்து நடப்பாண்டில் மே மாதம் முதல் அடுத்த பருவமழை காலம் வரை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு 49 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தினை மே 2004–இல் முடிக்கும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வேல்முருகன், ஜி.கே.மணி, புகழேந்தி மற்றும் ஞானசேகரன் ஆகியோர் சென்னை நகரில் தற்போது நிலவி வரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு திட்டமிட்டுள்ள நெய்வேலிப் பகுதியில் இருந்து 45 ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலிப் பகுதியில், வெள்ளாற்றிற்கும், கெடிலம் ஆற்றிற்கும் இடையே உள்ள 40 கி.மீ தொலைவில் 45 ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றிலுமிருந்து நாளொன்றிற்கு சுமார் 2 மில்லியன் லிட்டர் அளவு மட்டும் நீர் எடுக்கப்படவுள்ளது. ஒரே நேரத்தில், 30 ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து மட்டுமே கிணற்றிற்கு 2 மில்லியன் லிட்டர் வீதத்தில் மொத்தம் 60 மில்லியன் லிட்டர் நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 கிணறுகள் தேவையானால் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக standby ஆக இருக்கும். மேலும் வறட்சி ஏற்படும் காலங்களில் மட்டுமே இவ்வாறு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது.

புதிய வீராணம் திட்டத்திற்கு மேலும் வலுவூட்டவும்; வீராணம் ஏரியில் தேங்கி நிற்கும் நீரினை மட்டுமே நம்பி இல்லாமல், ஆண்டு முழுவதும் இத்திட்டத்தின் மூலம் 180 மில்லியன் லிட்டர் நீர் கொண்டு வர ஏதுவாக மாற்றுத் திட்டம் ஒன்றினையும் ஆய்வு செய்திட ஆணையிட்டேன். இதற்கென அமைக்கப்பட்ட வல்லுனர்கள் குழு, கொள்ளிடம் ஆற்றில், கீழ் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நாள் ஒன்றிற்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் நீரை தொடர்ந்து ஆண்டு முழுவதும் எடுக்க முடியும் என்றும், இதனால் ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படாது என்றும் விளக்கித் தனது அறிக்கையினை அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றிட சுமார் 200 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை, மேலும் ஆராய்ந்து நிறைவேற்றிட இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

இந்த புதிய வீராணம் திட்டத்தைச் சார்ந்து நிறைவேற்றப்படவுள்ள கூடுதல் பணிகளுக்கான திட்ட மதிப்பு 249 கோடி ரூபாய் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, சென்னை நகரில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்ப் பற்றாக் குறையை உடனடியாகச் சமாளிக்கும் வகையிலும்; ஆனால் அதே சமயம் இதன் மூலம் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் எதிர்வரும் காலத்திலும் குடிநீர் தொடர்ந்து வழங்குவதற்கு வழி வகை செய்யக் கூடிய வகையிலும் தீட்டப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 700 கோடி ரூபாய் ஆகும். மேலும், இம்மாதம் 4 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்த போது, மாண்புமிகு நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவர்கள், தமது உரையில் சென்னை உட்பட்ட பெருநகரங்களில் துரிதப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டத்தினை நிறைவேற்றிடவும், அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை தரும் வண்ணம் மத்திய அரசில் தற்போதுள்ள பெருநகரக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதியினைக் கூடுதலாக்கவும்; பாரதப் பிரதமர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்தத் திட்டம் மார்ச் 1 ஆம் தேதி முதலே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தேசிய அளவிலான இந்தப் பெருநகரங் களுக்கான விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு எனது முயற்சியே காரணமாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும் பருவமழை பெய்வதையும், நீர்த்தேக்கங்களில் நீர் பெறுவதையும், நிலத்தடி நீரையும் பொறுத்தே அமைந்துள்ளன. ஆனால் பருவமழை பொய்த்து விட்டால் இத்திட்டங்களால் நிரந்தரத் தீர்வு இல்லை என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆகவே சென்னை மாநகருக்குக் கடல் நீரினைக் குடிநீராக மாற்றும் திட்டமே ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். கடல் நீரிலிருந்து குடிநீர் பெறுவதற்கான அனைத்து வசதிகளும் சென்னைப் பெருநகரில் அமைந்துள்ளன. கடல் நீரிலிருந்து நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டு இதனை 2.2.2004 அன்று நடந்த சந்திப்பில் மத்திய அரசின் 12–ஆம் நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நான் எடுத்துக் கூறி, இந்தச் செலவு முழுவதையும் மத்திய அரசு மானியமாக அளித்திட வேண்டும் என வலியுறுத்திக் கூறி அதற்கான அறிக்கையையும் அளித்துள்ளேன். எனது கோரிக்கையை மத்திய அரசு கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யும் எனப் பெரிதும் நம்புகிறேன்.

திரு. துரைமுருகன் பேசும் போது, கொள்ளிடம் ஆற்றில் கிணறுகள் அமைத்து அவற்றில் இருந்து நீர் எடுத்து வடவாறு வாய்க்கால் மூலம் கொண்டு வந்தால் விவசாயிகள் பாசனத்திற்கு நீர் கேட்கக் கூடிய சூழ்நிலை எழும் என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்.

கொள்ளிடம் ஆற்றில் கீழ் அணைப் பகுதியில், நீர் சேர்க்கும் கிணறுகள் அமைத்து எடுக்கப்படும் நீரை வடவாறு கால்வாய் மூலமாக, எடுத்துச் செல்லும் திட்டம் இல்லை. இந்த நீரானது வீராணம் ஏரிக்குள்ளும் செல்லாது; குழாய்கள் மூலம் நேரிடையாக, சேத்தியாதோப்பில், வீராணம் ஏரியின் வடக்கு முனையில் அமைக்கப்பட்டு வரும் நீர் ஏற்று நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து புதிய வீராணம் திட்டத்தின் கீழ், அமைக்கப்படும் குழாய்கள் மற்றும் கட்டமைப்பு வாயிலாக சென்னை நகருக்கு கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்கு முன்னுரிமை அளிப்பதைப் போன்றே, கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் குடிநீர் வழங்க முனைப்புடன் பல்வேறு குடிநீர் திட்டப் பணிகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் நிலையை அறிய, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் மொத்தம் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், 11,790 குடியிருப்புகளில் போதிய அளவிற்கு குடிநீர் வசதி இல்லாத நிலை கண்டறியப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத் தொகைக்கு ஈடாக மாநில அரசு மானியத் தொகை ஒதுக்குவது வழக்கமாகும். ஆனால் எனது தலைமையிலான அரசு, மத்திய அரசு அளிக்கும் மானியத்தை விட 7 மடங்கு அதிகமாகவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு 70 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 1,258 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் சுமார் 80 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளன.

கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிர்க்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கும்

வகையில் இந்த அரசு 2001–2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய சிறு மின் இறைப்பான் திட்டம் ஊரகப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும், பேராதரவையும் பெற்றுள்ளது. 2001–2003 ஆம் ஆண்டுகளில் 14,661 மின் இறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயலாக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் 10,000 சிறு மின் இறைப்பான் திட்டங்கள் ஊரகப் பகுதி வாழ் மக்கள் பயன்பெறுவதற்கெனச் செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றில் 4,000 சிறு மின்விசை இறைப்பான்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நிறுவப்படவுள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மத்திய அரசின் பகுதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ், மக்கள் பங்கேற்புடன் கோயம்புத்தூர், வேலூர், பெரம்பலூர் கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மார்ச் 2003 முடிய 6005 திட்டங்கள் 94 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் 53 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில், 2872 குடிநீர் திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. மேலும் மத்திய அரசின் 'ஸ்வஜல் தாரா' ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் மக்கள் பங்கேற்புடன் 22 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 835 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சென்னை மாநகராட்சி நீங்கலாக, மொத்தமுள்ள 718 நகரங்களில் 311 நகரங்கள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும்; எஞ்சிய 407 நகரங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும் உள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் 60 நகரங்களில் 26 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், 260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் துறை

தமிழ்நாடு முதலீடு செய்வதற்கு உன்னத மற்றும் விரும்பத்தக்க இலக்காகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. அக்டோபர் 2003 நிலவரப்படி, அந்நிய நேரடி முதலீட்டு ஒப்புதல்களில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும்; மொத்த முதலீட்டில் இரண்டாவது இடத்திலும்; உற்பத்தித் துறை முதலீட்டில் முதல் இடத்திலும் திகழ்ந்து வருகின்றது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேருவுவகை அடைவீர்கள். பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் புத்தாக்கத்தின் விளைவாக உற்பத்தித் துறையில் புதிய முதலீடுகளுக்கான ஆர்வத்தில் ஒரு மறுமலர்ச்சி கடந்த சில மாதங்களாகக் காணப்படுகிறது.

பிரான்சு நாட்டைச் சார்ந்த கட்டுமான மற்றும் கண்ணாடி உற்பத்தி செய்வதில் முன்னோடி நிறுவனமான திருவாளர்கள் செயின்ட் கோபேன் – Saint–Gobain – என்ற பன்னாட்டு நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவர்களது செயல்பாடுகளை மேலும் விரிவாக்கம் செய்வது குறித்து ஏற்கெனவே எடுத்த முடிவு பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் 450 கோடி ரூபாய் அளவில் கூடுதல் முதலீடு செய்வதன் மூலம், இவ்வளாகம் உலகத்திலேயே மிகப் பெரிய ஒருங்கிணைந்த கண்ணாடி உற்பத்தி வளாகங்களில் ஒன்றாக வளர்ச்சி பெறும் என்பது கண்கூடு.

தென்கொரிய நிறுவனமான திருவாளர்கள் ஹூண்டாய் மோட்டர்ஸ் – Hyundai Motors – தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலையைப் பெருமளவில் விரிவாக்கம் செய்து, அதை ஓர் உலக ஏற்றுமதி மையமாக்கிடத் Global Export Hub ஆக்கிடத் திட்டமிட்டுள்ளனர்.

பிரிட்டனின் மென்பொருள் பன்னாட்டு நிறுவனமான சான்சா – Xansa –என்ற நிறுவனம் தனது மிகப் பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையத்தை 24.7.2003 முதல் சிறுசேரியில் செயல்படுத்தி வருகிறது.

திருவாளர்கள் ஏசியன் பெயிண்ட்ஸ் – Asian Paints – மற்றும் இண்டோ ஆசாகி கிளாஸ் – Indo-Asahi Glass – ஆகியோர் சென்னைக்கு அருகில் தங்களது உற்பத்தி மையங்களைப் பெரும் முதலீட்டுடன் விரைவில் உருவாக்க உள்ளனர்.

டாட்டா கன்சல்டன்சி – Tata Consultancy Services – மற்றும் இன்ஃபோசிஸ் – Infosys – நிறுவனத்தார்கள் தங்களது பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையங்களை சென்னை நகரத்தின் அருகில் நிறுவ ஏற்கனவே முடிவு எடுத்துள்ளார்கள்.

1992 ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்த பொழுது தமிழ்நாட்டின் முந்தைய தொழில் வளர்ச்சிக் கொள்கை வடிவமைக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம்.

கடந்த 10 ஆண்டுகளில், இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரிவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, புதிய தொழில் வளர்ச்சிக் கொள்கையை இந்த அரசு 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அறிவித்தது. இந்தப் புதிய கொள்கை, தற்போதுள்ள வலிமைகளை ஒருங்கிணைத்துப் போட்டியிடும் திறன் வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலீடுகளை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுவதற்கான திட்டங்கள், பொதுத்துறை நிறுவனங்களைச் சீரமைத்தல், மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஊக்குவிப்புகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட ஒத்திசைவு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இரண்டாவது தகவல் தொழில் நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் அசெண்டாஸ் ASCENDAS நிறுவனத்துடன் ஜூன் 2003–இல் கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அடுத்த மூன்று மாதங்களில் இப்பூங்காவிற்கான பணிகள் தொடங்குமென இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். 450 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று கட்டங்களாக இந்த உட்கட்டமைப்பு நிறைவேற்றப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் ரப்பர் தொழில் பூங்கா அமைக்கவும்; ஈரோட்டில் முற்றிலும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய நெசவாலை அமைக்கவும்; ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு கண்ணாடி இழைத் தொழிற் சாலை அமைக்கவும்; தொழில் முனைவோர்களுடன் டிட்கோ கடந்த ஆறு மாதங்களில் கூட்டு முயற்சி ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது. 22.4.2003 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்ட "டைசல் பயோ பார்க்" – TICEL Bio Park – இன் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

சிறுசேரி தகவல் மற்றும் தொழில் நுட்பப் பூங்காவில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்குப் போதிய வீடு மற்றும் சமுதாய வசதிகளை அளிக்கும் வகையில், தனியார் துறையில் அந்நிய முதலீட்டு மேம்பாட்டுக் குழுமத்தால் (FIPB) அங்கீகரிக்கப்பட்ட முதல் தொழில் நகரியம் ஒன்றை அமைப்பதற்கு சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் லீ கிம் தா ஹோல்டிங்ஸ் Lee Kim Tah Holdings என்ற நிறுவனத்துடன் ஓர் ஒத்திசைவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் அடுத்த நான்கு மாதங்களில் தொடங்கப்பட்டு விடும்.

இம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைத் துறை சந்தித்து வரும் சிக்கல்களை உறுப்பினர்கள் அறிவீர்கள். பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் 15.7.2003 அன்று நிலுவையாயிருந்த 123 கோடியே 74 இலட்சம் ரூபாய் கரும்பு தொகை நிலுவை முழுவதும் பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. இந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு கூடுதல் கடன் உத்தரவாதமும், இணைப்புக் கடன் வசதியும் வழங்கப்பட்டன. இவை எல்லாம் இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் காரணமாகத் தான் நடைபெற்றுள்ளன என்பதை மன நிறைவோடு குறிப்பிட விரும்புகிறேன்.

2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெற்ற **"வியத்தகு இந்தியா 2003"**– Incredible India என்ற கண்காட்சியில் ஒரு பங்குதாரர் மாநிலமாக இம்மாநில அரசு கலந்து கொண்டது என்பதை அறிவதில் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். மாநிலத்தின் இந்தப் பங்கேற்பு, மலேசியாவில் நல்ல விளம்பரத்தைப் பெற்றதோடு, சிறந்த பாராட்டையும் பெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறை

2000–2001 ஆம் ஆண்டு 3,116 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி, 2002–2003 ஆம் ஆண்டில் 7,000 கோடி ரூபாயாக

உயர்ந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உலகப் புகழ் பெற்ற தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு வரவழைப்பதற்காக எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நாட்டின் தலை சிறந்த மூன்று தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களான Tata Consultancy Services, இன்ஃபோசிஸ் – Infosys மற்றும் விப்ரோ – Wipro ஆகியவை சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் வளாகங்களை அமைத்துள்ளன. இதன் மூலம் கூடுதலாக 25,000 வேலை வாய்ப்புக்கள் உருவாகும். .

சோழிங்கநல்லூரில் அறிவுசார் நகரிய – Knowledge Industrial Township –ற்கான முதல் கட்டப் பணி எல்காட் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறிவு சார் நகரியம் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு வணிகப் பள்ளிகள், வீட்டு வசதி மற்றும் பொழுது போக்கு போன்றவற்றிற்கு இட வசதிகளை அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலை நகரங்களை முன்னேற்றும் பொருட்டு எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பணி தொடங்கியுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்தில் பாரதியார் பல்கலைக் கழக – எல்காட் நகரம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்ப வளாகங்களுக்காக தமிழ்நாட்டில் மூன்றாம் நிலை நகரமான ஓசூரின் உள்ளாற்றலை அதாவது **potential** – ஐ மதிப்பீடு செய்ய ஓர் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகளுக்கான **IT Enabled Services**–க்கான வரைவு கொள்கையினை வலையில் இடம் பெறச் செய்த ஒரே அரசு தமிழ்நாடு அரசு தான்.

உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களான 'ஆரக்கிள்' – 'Oracle' போன்ற நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தங்கள் செய்துள்ளது. இது மின்–ஆளுமைக்கு e-Governance –க்கு ஒரு உந்துகையை அளிக்கும். ஆங்கிலம் தெரியாத மக்களும் மின்–ஆளுமையின் பயன் பெறும் வகையில் அனைத்து அரசு இணைய தளங்களும் எல்காட் மற்றும் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தால் இரு மொழி ஆக தமிழிலும் ஆங்கிலத்திலும் Bilingual –ஆக ஆக்கப்பட உள்ளன.

உள்துறை

நான் பதவியேற்ற பிறகு தமிழக காவல் துறையை அகில இந்திய அளவில் அதிநவீனமான, முதன்மையான காவல் துறையாகவும் இந்த நாட்டிலேயே மிக அதிகமான அளவில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பங்கேற்கும் ஒரு காவல் படையாகவும் அமைத்திட நான் முயற்சிகள் எடுத்தேன். இந்த முயற்சிகளே தமிழகத்தில் தற்போது நிலவும் செம்மையான சட்ட ஒழுங்கு நிலைமைக்கு அடித்தளமாக விளங்குகின்றன.

2001–2003 ஆம் ஆண்டுகளில் 272 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பு 2003–2004 ஆம் ஆண்டில் காவல்துறை நவீன மயமாக்குதல் திட்டத்தின் கீழ், 134 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது. அகில இந்திய அளவிலேயே, காவல் துறையினை மேம்படுத்தும் செலவினங்களைச் செம்மையாக மேற்கொள்ளும் ஒரு சில மாநில அரசுகளில் தமிழக அரசும் ஒன்று என்பதைப் பெருமிதத்துடன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையை நவீனப்படுத்த, நவீன ரக ஆயுதங்கள், ஜீப்புகள், அதி வேக நுண்ணலைத் தகவல் தொடர்பு சாதனங்கள், வீடியோ காமிராக்கள், LAPTOP கம்ப்யூட்டர்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

காவல் துறையில் பெண்களுக்கு உரிய இடத்தை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்குத் தக்கதொரு செயல்வடிவம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது. இனியும் அது தொடர்ந்து நிலை நிறுத்தப்படும். ஏற்கனவே தொடங்கிச் செயல்பட்டு வரும் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன், இந்த ஆண்டு மேலும் 40 மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இந்த நிதி ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டின் அனைத்து காவல் துறை உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்படும் திட்டம் நிறைவுபடுத்தப்படும். இந்தியாவிலேயே இந்த அளவிற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயக்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டுமே என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

துன்பத்திற்கு ஆளாகும் பெண்களுக்கு உடனடியாக உதவிக்கரம் நீட்டும் "பெண்கள் உதவி தொலைத் தொடர்பு வசதி" WOMEN HELP LINE, 121 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும்; குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க விரைந்து உதவிடும் "குழந்தைகள் உதவி தொலைத் தொடர்பு வசதி" CHILD HELP LINE 104 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு காவல் துறையின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க சாதனையாக தமிழ் நாடு மகளிர் சிறப்பு காவல் அணி WOMEN POLICE BATTALION 30.1.2004 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

கடுமையான பயிற்சிகளுடன் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சுடுதல் போன்ற திறன்களிலும் சிறப்பான தேர்ச்சி பெற்ற "பெண்கள் கமாண்டோ படை" 2003–ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தியாவிலேயே, தனியே மகளிர் சிறப்புக் காவல் அணி மற்றும் பெண் கமாண்டோக்கள் அணி ஆகியவற்றைக் கொண்ட ஒரே மாநிலக் காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான் என்பது பெருமைக்குரியது.

பெண்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிப்பதற்கென, தனியே ஆறு மகளிர் நீதிமன்றங்கள் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் தீவிர ரோந்துப் பணியை மேற்கொள்வதற்காக, நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட 80 டோயோடா குவாலிஸ் வாகனங்களை வழங்கி "நெடுஞ்சாலை ரோந்துத் திட்டம்" 23.8.2003 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. 80 முக்கியமான தொலை செய்யப்பட்ட தேசீய நெடுஞ்சாலைப் பகுதிகளில் 24 மணி நேரமும் ரோந்துப் பணிகள் மேற்கொள்வதற்காக 160 காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டன. விபத்திற்கான அவசர சிகிச்சை மையங்களுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ரோந்துப் பணியின் செயல்பாடுகள் மிகவும் திருப்திகரமாக அமைந்துள்ளன என்பதை மன நிறைவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அமர்வு நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை முடிப்பதற்காக, எனது அரசு 49 விரைவு நீதி மன்றங்களை FAST TRACK COURT – களை அமைத்துள்ளது. இந்த நீதி மன்றங்களுக்கு இதுகாறும் மாறுதல் செய்யப்பட்ட 95,129 வழக்குகளில் 30.11.2003 வரையில் 65,451 வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அகில இந்திய அளவில் இந்த விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு பாராட்டப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை மக்கள் நீதியைத் தேடி நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை என்பது தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் தனியாக மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க தொடர் செலவாக 85.07 இலட்சம் ரூபாயும்; தொடரா இனச் செலவாக 38.66 இலட்சம் ரூபாயும் அனுமதித்து ஆணை வழங்கப் பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்காக 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரையில் அமைப்பதற்காக தேவைப்படும் கட்டுமானப் பணிகளுக்கு 55 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் 13 ஆம் நாளன்று திறக்கப்பட உள்ள இந்த உயர் நீதியன்றத்தின் கிளை தென் மாவட்ட மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சாலை மேம்பாடு மற்றும் பராமரித்தலுக்கு தொலை நோக்குத் திட்டம் வகுக்கப்படாமல், உற்பத்தித் திறனற்ற செலவினங்கள் அதிகரிக்கப்பட்டு, சாலை பராமரிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதனால் சாலைகள் பழுது அடைந்து, பேருந்துப் போக்குவரத்திற்குத் தடை ஏற்படும் நிலை ஏற்பட்டது. கிராமப் புற மக்கள் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயினர்.

2001 ஆம் ஆண்டு என்னுடைய தலைமையிலான இந்த ஆட்சி பதவி ஏற்ற பின், தமிழத்தை மூதல் நிலை மாநிலமாக ஆக்கிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த ஆணையிட்டேன். இதில் முக்கியமானது சாலை மேம்பாடு ஆகும்.

1995 ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், தமிழகச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த திட்டமிட்டு செயல்பட்டேன். அதன் பின் வந்த திமுக ஆட்சி இதனைச் செயல்படுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தற்போது என்னுடைய அரசின் சீரிய அணுகு முறையால் 2160 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்திற்கு அண்மையில் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இருவழித் தடமாக மேம்படுத்தவும்; 2,000 கி.மீ. நீளமுள்ள மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைப் பராமரிப்பதற்கும்; நகரங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 14 புறவழிச் சாலைகள் அமைக்கவும்; வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க 12.2.2004 ஆம் நாளன்று உலக வங்கி குழுவுடன் இணைந்து திட்டச் செயலாக்கக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதன் பின்னர் பணிகள் உடனடியாக துவங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய கைலாஷ் முதல் மாமல்லபுரம் வரையிலான **47** கி.மீ. நீள சாலைப் பகுதியை, தகவல் தொழில் நுட்ப துரித வழிச்சாலை – IT Express Way – ஆக மேம்படுத்த நான் ஆணைகள் வழங்கியுள்ளேன். இந்த விரைவுப் பாதை **6** வழித் தடங்களைக் கொண்டதாகவும்; **2** மீட்டர் அகலம் கொண்ட மத்திய பகுதியுடன் வடி நீர்க் கால்வாய்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு சேவை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் சேவைக் குழாய்கள் மற்றும் உறுதியான புருவங்கள் கொண்டதாகவும் இருக்கும். உலகத் தரம் வாய்ந்த இந்த விரைவுச் சாலை பல கணினி மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் இம்மாநிலத்தில் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த **50** கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் **55** பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வரும் மார்ச் திங்களில், கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகருக்கு **24** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று பாலங்கள் உள்ளிட்ட **8.7** கி.மீ. நீளமுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணியும்; கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள **120** கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளை, **12** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியும்; போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **161** கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் துறைமுகம் மற்றும் சென்னைத் துறைமுகத்திற்கு வாகனங்கள் நெரிசல் இன்றி சென்று வரும் வகையில் உள் வட்டச் சாலை; மணலி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை; திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை; மற்றும் எண்ணூர் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின் கீழ், **716** கி.மீ. நீளச் சாலை மேம்படுத்தும் பணிகளும்; **20** பாலங்கள் கட்டும் பணிகளும்; நபார்டு நிதி உதவியுடன் **121** கோடியே **37** இலட்சம் ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளன.

முதலமைச்சரின் சிறப்பு சாலைப் பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் **275** கோடி ரூபாய் மதிப்பில் **5,549** கி.மீ. நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நடப்பாண்டில் பேருந்துப் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையிலுள்ள **3,000** கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை **150** கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தும் பணிகள் ஹட்கோ நிதி உதவியுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் பழுதடைந்த **3,492** கி.மீ. மாவட்ட இதர சாலைகளை **186** கோடி ரூபாய் மதிப்பிலும்; மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை மேம்படுத்திட **121** கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ் ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

நாட்டின் நான்கு பெருநகரங்களையும் இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மற்றும் வடக்கு – தெற்கு இணைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் **1,699** கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

நாகப்பட்டினம் துறைமுகத்தை **5** கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய முடிவெடுக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

தமிழக மக்களின் நீண்ட நாள் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பாரத பிரதமரிடம் **2.2.2004** அன்று கோரிக்கை வைத்தேன். இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாக மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1996 முதல் **2001** வரை ஆன கடந்த திமுக ஆட்சியில், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை **3,192** கோடி ரூபாய் தான். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் எனது அரசு செலவிட்ட தொகை **2,518** கோடி ரூபாய் ஆகும். மேலும் **2,160** கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பில் சிறப்புடன் செயல்பட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் தொழில் முனைவோரும், முதலீட்டாளர்களும் தமிழகத்தை முதன்மை இடமாகத் தெரிவு செய்து பெருமளவில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

1996 முதல் **2001** – ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் **561** மெகாவாட் அளவிற்கு தான் மின்சார நிறுவு திறன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. மேலும் எதிர்காலத்திற்குத் தேவையான உருப்படியான கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்படவில்லை. **2001** மே மாதம் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இது நாள் வரை **902** மெகாவாட் அளவிற்கு மின்சார நிறுவு திறன்

சேர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போல் கடந்த தி.மு.க. ஆட்சியில் **256** மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் மட்டுமே இயக்கி வைக்கப்பட்டன. எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரை **353** மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போதுமான அளவில், தரமான மின் உற்பத்தித் திறன் ஏற்பட இந்த அரசு வழிவகை செய்துள்ளதால் மின் வெட்டே இல்லாத மாநிலமாக தமிழ் நாடு திகழ்கிறது. எனவே, தொழில் முனைவோர் விரும்பி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

1,000 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் ஒன்றை வட சென்னையில் நிறுவ தேசிய அனல் மின் கழகத்துடன்– NTPC உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் **1000** மெகாவாட் திறன் உள்ள அனல் மின் நிலையம் ஏற்படுத்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்துடன் N.L.C – உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடங்குளத்தில் **2,000** மெகாவாட் திறன் உள்ள அணு மின் நிலையம் நிறுவ அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத **154** குக்கிராமங்களில் மொத்தம் **10** கோடியே **82** இலட்சம் ரூபாய் செலவில் சூரிய ஒளி சாதனங்கள் மூலம் சுமார் **7100** குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி விரைவில் செய்து முடிக்கப்படும். மேலும், மொத்தம் **17** கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில் சுமார் **250** குக்கிராமங்களில் உள்ள **10000** குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி செய்து தரும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்போது நான் சொல்வதை கவனமாக கேட்க வேண்டும். இதன் மூலம் **2012**–ல் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி என்ற தேசிய இலக்கினை தமிழ் நாடு **2005** ஆம் ஆண்டிலேயே அதாவது அடுத்த ஆண்டிற்குள்ளாகவே எய்திவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் **11** இலட்சத்து **93** ஆயிரத்து **135** பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு புதிய சாதனை ஆகும்.

- ஊரக வளர்ச்சித் துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக மத்திய அரசின் நிதி உதவிகளைப் பயன்படுத்துவதில் **2002–2003** ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசிடமிருந்து **71** கோடியே **47** இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட **13.40** சதவீதம் கூடுதலாகும்.
- ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், **12** கோடியே **61** இலட்சம் ரூபாய் கூடுதல் நிதியாகப் பெறப்பட்டது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட **6.64** சதவீதம் கூடுதலாகும்.
- ஸ்வர்ண ஜயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் பாராட்டத் தக்க செயல்பாடுகள் காரணமாக **5** கோடியே **92** இலட்சம் ரூபாய் கூடுதல் நிதியை அரசிடமிருந்து பெறப்பட்டது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட **16** சதவீதம் கூடுதலாகும். இப்போது நான் சொல்வதை கவனமாக கவனியுங்கள்.
- பிரதம மந்திரி சாலைகள் திட்டத்தின் கீழ், **119** கோடியே **78** இலட்சம் ரூபாய் கூடுதல் ஒதுக்கீடாகப் பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட **75** சதவீதம் கூடுதலாகும்.

இவை அனைத்தும் எனது அரசின் விரைந்த செயல்பாட்டுக்கும், சிறந்த செயல்பாட்டுக்கும் நிதர்சனமான நிரூபணமாகும்.

ஆதிதிராவிடர் நலத் துறை

கடந்த **2001** ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நேரத்தில் தமிழ் நாட்டில் மொத்தம் இருந்த **1,076** ஆதி திராவிட மாணவ – மாணவியர் விடுதிகளில் பாதிக்கும் மேலான விடுதிகள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், **574** விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை அறிந்தேன். சிறிய வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால், தண்ணீர் வசதி இன்றி, கழிப்பறை வசதி இன்றி, மின்சார வசதி இன்றி ஏற்படும் இன்னல்களை தீர்ப்பதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் **316** மாணவ மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் சொந்த கட்டடங்கள் உருவாக்க **99** கோடியே **54** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தேன். இவற்றில் **140** விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை விரைவில் முடித்திட வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் நிலையைத் தவிர்க்கவும்; அவர்கள் பள்ளிக்கு உரிய நேரத்தில் சென்றடைய ஏதுவாக, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் உன்னதமான திட்டத்தை கொண்டு வந்தேன். கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ், 22 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,52,698 மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பெண்கள் சமத்துவம் பெற வேண்டும் என்ற நோக்குடன் மானியம் மற்றும் கடன் உதவியுடன் 70 கோடி ரூபாய் செலவில் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினை எனது அரசு அறிவித்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், 6000 ஆதிதிராவிடர் மகளிரும், 1000 பழங்குடியின மகளிரும் ஆக மொத்தம் 7000 மகளிர் பயனடைவார்கள்.

இதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் அல்லது 2.5 ஏக்கர் வரை நன்செய் நிலம் வாங்க அதிகபட்சமாக ஒரு லட்ச ரூபாயும்; நிலத்தினை மேம்படுத்துதல், நீர் ஆதாரம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த பிற தொழில்களுக்காக அதிக பட்சமாக ஒரு இலட்ச ரூபாயும், ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாயில் பாதி மானியமாகவும், பாதிக் கடனாகவும் வழங்கப்படும்.

மேலும் நிலம் வாங்கும் பயனாளிகள் நிலத்தினைப் பத்திரப் பதிவு செய்யும் பொழுது முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தில் 75% விலக்கு அளிக்கப்படும். இத்திட்டப் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கும். அவ்வாறு வழங்கும் ஒவ்வொரு மின் இணைப்பிற்கும், தாட்கோ 10,000 ரூபாய் மானியமாக மின்சார வாரியத்திற்கு வழங்கும். இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட பழங்குடியின மகளிர் பொருளாதார மேம்பாடு அடைவதால், அவர்தம் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்து

13.12.2003 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் பேருந்தில் மன்னார்குடியிலிருந்து திருவாரூருக்குப் பயணம் செய்துகொண்டிருந்த மூன்று வயதுச் சிறுமி செல்வி கௌசல்யா மரணம் அடைந்த துயர சம்பவம் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதை முற்றிலும் தடுக்கும் வகையில், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனமும் 100 சதவிகிதம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும்; கண்டறியப்படும் பழுதுகள் உயர் அதிகாரிகளின் கண்காணிப்பில் பழுது பார்க்கப்பட வேண்டுமென்றும்; குறைபாடுள்ள அனைத்துப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை உடனடியாக வாங்க வேண்டுமென்றும் ஆணையிட்டேன். பயணம் செய்யும் பொதுமக்களின் பாதுகாப்பு எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்கப்படக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவையும் நான் வழங்கியுள்ளேன்.

அதன் அடிப்படையில் பயணம் செய்யும் பொது மக்களின் பாதுகாப்பினைக் கருதி, ஒவ்வொரு பேருந்தின் முழுத் தகுதிப்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு 6,000 பேருந்துகளின் இயந்திரப் பழுது மற்றும் கூண்டுப் பழுது பார்க்கும் பணிகளுக்காக போக்குவரத்துக் கழகங்களுக்கு 30 கோடி ரூபாய் என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடியாக அத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த பழுதுபட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கான உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். அதன்படி, 2005 மார்ச் மாதத்திற்குள் 2 கட்டங்களில் 2,500 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இவற்றில் முதல் கட்டமாக 1,050 பேருந்துகள் விரைவில் வாங்கப்படும்.

விளையாட்டுத் துறையில் வியத்தகு சாதனைகள்

வலிமை மிக்க தமிழகத்தை, அறிவாற்றல் மிக்க தமிழகத்தை உருவாக்கிட தமிழகத்தின் இளைஞர்கள் விளையாட்டுகளிலும், உடல் திறன் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கும் வகையில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குத் தனி அக்கறை காட்டி ஊக்கம் அளித்து வருகிறேன்.

விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் வாலிபால் அகாடமி, சென்னையில் ஸ்குவாஷ் விளையாட்டு அரங்கம் மற்றும் ஸ்குவாஷ் அகாடமி; சென்னை பேசின் பிரிட்ஜில் நலிந்த பிரிவு சமுதாயத்தினரிடையே மேஜைப் பந்து – TABLE TEN-

NIS விளையாட்டை மேம்படுத்த மேஜைப் பந்து அகாடமி; செய்லிங் அகாடமி, சென்னை புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி ஆகிய திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

கிராமப் பகுதிகளில் இளைய தலை முறையினரின் நேரத்தையும், சக்தியையும் ஒருமுகப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இளைஞர் மன்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று நான் அறிவித்து ஆணையிட்டிருந்தபடி, இதுவரை 300 இளைஞர் மன்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவிலான பள்ளிகளிடையே – Inter-School விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை இருந்து வந்த 9 வகையான விளையாட்டுகளுடன் இந்த ஆண்டில் புதியதாக ஸ்குவாஷ், குத்து சண்டை, வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீச்சல் முதலான ஐந்து விளையாட்டுகளை அறிமுகப்படுத்திப் போட்டிகள் நடத்தப்பட்டன. இது தொடரும் !

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், ஒலிம்பிக்ஸ் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெற்றால் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்க என்னுடைய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 123 விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு, இன்று வரை என்னுடைய அரசு 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளது.

பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், இதுவரை 28 தங்கப் பதக்கங்களையும், 14 வெள்ளிப் பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ்நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர். தேசிய அளவிலான போட்டிகளில், 134 தங்கப் பதக்கங்களையும், 98 வெள்ளிப் பதக்கங்களையும், 70 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ்நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர் என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சாதனைக்கு முக்கிய காரணம் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு எனது அரசு அளித்து வரும் ஆக்கமும் ஊக்கமுமே ஆகும்.

விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளை அங்கீகரிக்கும் வகையில் சீருடைப் பணித் துறைகளான காவல் துறை, சிறைத் துறை, வனத் துறை ஆகிய துறைகளின் பணிகளுக்கான தேர்வில் 10 சதவீத ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

சேம்பியன்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 53 விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பயன் அடைந்து வருகின்றனர். அவர்களுக்கு இதுநாள் வரை 21 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச ATP டென்னிஸ் போட்டிகள் சென்னையை விட்டு வேறு மாநிலத்திற்கு செல்லக் கூடிய அபாயம் உருவானதை அடுத்து, இந்தப் போட்டிகளைச் சென்னையிலேயே தொடர்ந்து நடத்த உரிய வசதிகளையும், வாய்ப்புகளையும் நான் உருவாக்கித் தந்துள்ளேன். இதற்கென ஆதரவாளர் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், தமிழ் நாடு அரசு இதில் இணை ஆதரவாளராக இருந்து ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் உதவி வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். இனிமேல் 'சென்னை ஓப்பன்' என்ற பெயரில் இந்த சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் தொடர்ந்து நடைபெறும்.

உலகத் தரத்துடன் கூடிய, விளையாட்டுக் கட்டமைப்புகளை நான் உருவாக்கியதன் விளைவாக, 'சாம்பியன்ஸ் கோப்பை' சர்வதேச ஹாக்கி போட்டி அடுத்த ஆண்டு, அதாவது 2005–இல் சென்னையில் நடைபெற உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் தமிழ் நாட்டில் உடற் பயிற்சிக் கல்வியையும், விளையாட்டு களையும் வளர்ப்பதற்கென்று இந்தியாவிலேயே முதன் முதலாகத் தனித்தொரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்க ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவச சேலை மற்றும்
வேட்டி வழங்கும் திட்டம்

15.8.2003 அன்று நடைபெற்ற 57 – ஆவது சுதந்திர தின விழாவின் போது, நிதி நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச வேட்டி சேலை திட்டம் நிதி நிலை ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில் 2004 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்தேன்.

இத்திட்டத்தின் மூலம் முதலில் 81 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும், 120 கோடி ரூபாய் செலவில் இலவசமாக வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருந்தேன். ஆனால், ஆங்காங்கே வாழுகின்ற மேலும் சில ஏழை ஏளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைப் பெறுவோர் பட்டியலில் தாங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று விடுத்த நியாயமான கோரிக்கை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைத் திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும்; ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்து விடக் கூடாது என்பதற்காகவும்; இத்திட்டத்தை மேலும் விரிவாக்க நான் முடிவு செய்தேன். இந்த அடிப்படையில், பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறும் கூப்பன் பெற்றுள்ள அனைவருக்கும் இலவச வேட்டி சேலைகளை வழங்குமாறு நான் உத்தரவிட்டேன்.

இத்திட்டத்தின் கீழ், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும் விநியோகம் செய்ய ஆணையிட்டு உள்ளேன். இதன் மூலம் 2 கோடியே 22 இலட்சம் ஏழை மக்கள் பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, 173 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கியுள்ளேன். இத்திட்டத்திற்கு தேவையான பாலிகாட் சேலைகள், கைத்தறித் துறையின் கீழ் இயங்கும் 350 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 85 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது நாள் வரை 76 இலட்சம் வேட்டிகளும், 74 இலட்சம் சேலைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள வேட்டி சேலைகளை 10.3.2004–க்குள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்களில் பங்கு பெற்று ஆக்கபூர்வமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். சிலர் குறை கூறியிருக்கிறார்கள். நான் இதுவரைக்கும் அளித்துள்ள விளக்கங்கள் எனது அரசின் நிலைப்பாட்டைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற சான்றுகளாகும். தமிழகம் வளர்ச்சிப் பாதையில் முதலிடம் நோக்கி விரைந்து செல்வதற்கு ஏற்ற நிரூபணங்கள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு இந்த உண்மைகளை ஒத்துக்கொள்ள மனம் இல்லா விட்டாலும், மக்கள் மன்றம் இவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறது; எனது தலைமையிலான அரசின் மீது மகத்தான நம்பிக்கை வைத்திருக்கிறது. அந்த நம்பிக்கையை முழுக்க முழுக்க நிறைவேற்றுவதே எனது குறிக்கோள் ! இந்த அரசின் குறிக்கோள் !

நாங்கள் என்றும் மக்கள் பக்கம் !
அதனால் மக்கள் என்றும் எங்கள் பக்கம் !
எனவே வெற்றி என்றென்றும் எங்கள் பக்கம் !

– என்று தெரிவித்துக் கொண்டு எனது உரையை நிறைவு செய்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

– தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 10.2.2004 அன்று ஆற்றிய உரை.

* * *

மத்திய அரசின் வரி வருவாயில் மாநில அரசுகளுக்கு 50 சதவிகிதம் நிதி ஒதுக்க வேண்டும்

– 12ஆவது நிதிக்குழுக் கூட்டத்தில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உரை

தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள 12ஆவது நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிதிக்குழுவின் முன்னிலையில் பொது நிதி நிருவாகம், மத்திய மாநில நிதி உறவுகள் மற்றும் தமிழ்நாடு எதிர் நோக்கியுள்ள சில குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் குறித்த எங்களுடைய கருத்துக் களையும் கருத்துருக்களையும் இக்குழுவின் முன் எடுத்து வைக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று. நீண்ட விளக்கமான குறிப்புகள் மற்றும் நிதிநிலை குறித்த சூழல் என்னவென்று நாங்கள் ஏற்கெனவே அளித்துள்ள எங்களுடைய அறிக்கையில் உள்ளது. அதில் குறிப்பிடப் பட்டுள்ளவை பற்றியே விவாதம் நடைபெறும் என்பதிலும் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த நிலையில் கடந்த 2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த கடுமையான நிதிப் பற்றாக்குறை பிரச்சினை குறித்து உங்கள் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வர விழைகின்றேன்.

கடந்த 1998ஆம் ஆண்டு 5ஆவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் அதனைத் தொடர்ந்து மாநில அரசின் 6ஆவது ஊதியக் குழு அறிக்கையின் அடிப்படையிலும் மிகப்பெரிய அளவில் நிதிச்சூழல் வீழ்ச்சி அடையத் துவங்கியது. இது கடந்த 2000–2001ஆம் ஆண்டு 11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் நிதிச் சூழ்நிலையை மோசமடையச் செய்து தமிழ்நாடு மிகவும் கடுமையான நிதிச் சூழலால் பாதிக்கப்பட்டது. கற்பனை செய்ய முடியாத அளவிற்குக் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதுபோன்ற நிதி நெருக்கடி முன்னெப்போதும் இருந்திராத வகையில் இருந்ததோடு உண்மையிலேயே அரசின் அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி வைக்கும் அளவிற்கு மிகவும் மோசமான சூழ்நிலையை உருவாக்கியது. நான் இந்த சூழ்நிலை குறித்து ஆராய்ந்து அதனைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு பரந்த அளவிலான நிதிச் சீர்திருத்தத் திட்டத்தை அமல்படுத்தினேன். இந்த பரந்த நிதிச் சீர்திருத்தத்தில் அத்தியாவசிய செலவினத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதில் மீண்டும்

ஒருமுறை ஆய்வு மேற்கொண்டு அவற்றை நெறிமுறைப்படுத்தியதோடு வருவாய் இனங்களுக்கான ஆதாரங்களை அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டேன். இந்த கடுமையான தைரியமான நடவடிக்கைகளின் விளைவாக வளர்ச்சிப் பாதையில் இருந்து விலகிய தமிழ்நாடு, திட்டமிட்ட வளர்ச்சிக்கான பாதையில் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

இதன் அடிப்படையில் நான் எடுத்த நடவடிக்கைகளின் விளைவுகளின் அடிப்படையிலும் நிதிச் சீர்திருத்தம் குறித்த மாநில முதல்வர்களின் மாநாடு கடந்த அக்டோபர் 18, 2002 அன்று புதுடெல்லியில் நடைபெற்றபோது இதுகுறித்து விவாதித்து, தேசிய அளவில் ஓர் ஒத்த கருத்து உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். ஆனால் துரதிருஷ்டவசமாக இதுவரை பல்வேறு வாய்ப்புகள், சூழ்நிலைகள் இருந்த போதிலும் அப்படி ஒரு முடிவுக்கு வரத் தவறிவிட்டோம். நிதிச்சீர்திருத்தத்தில் எங்களுடைய தனிப்பட்ட கொள்கைகளால் மட்டும் வெற்றி பெறவில்லை, மாறாக மிகப்பெரிய அளவில் இணைந்து எடுத்த முயற்சிகளின் விளைவாகவும் குறிப்பிட்ட அளவிற்கு நிலைமையை சீர்செய்ய முடிந்தது. இந்த நிதிச் சீர்திருத்தத்தில் எங்களுக்கு எவ்வித ஆதரவும் கிடைக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிதிச் சீர்திருத்தங்களை செய்வதற்கான வசதிகள் மற்றும் முகாந்திரங்கள் மிகவும் கடினமான அளவில் இருந்தன. இன்னும் சில இடைக்கால சீரமைப்புத் திட்டங்களைச் செயல் படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளோம். அவற்றையும் மற்ற பெரிய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு 12ஆவது நிதிக்குழு உதவும் என்று நான் நம்புகிறேன். நாட்டிலேயே நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அளவில் வரிவருவாய் உயர்ந்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதில் உங்களுக்கு எந்தவித சந்தேகமும் இருக்காது என்று நான் நம்புகிறேன். இதன்மூலம் நாங்கள் எந்த அளவிற்கு வரிச் சீர்திருத்தங்களை சிறப்பாக செய்திருக்கிறோம் என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

இந்தக் கடுமையான முயற்சியின் விளைவாக தற்போது வருவாய் பற்றாக்குறை கணிசமான அளவு குறைந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக நாங்கள் எடுத்த துணிச்சலான நடவடிக்கையின் காரணமாக செலவினங்களைக் கட்டுப்பாட்டில் கொணர்ந்துள்ளோம். இதனைச் செயல்படுத்துவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். எங்கள் முன்னால் கடுமையான சவால்கள் இருந்தபோது நாங்கள் எதையும் எதிர் பார்க்காமல் துணிச்சலாக அவற்றை செயல் படுத்தினோம். இதனைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு நிதிப் பொறுப்பு சட்டத்தை கொண்டு வந்ததோடு எதிர்காலத்தில் நிதிப் பற்றாக்குறை சூழல் உருவாவதைத் தடுத்துள்ளோம். இதோடு மட்டும் நின்றுவிடாமல் இன்னும் எங்கள் முன் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

சில அடிப்படையான பிரச்சினைகள் குறித்து தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவற்றில் முதன்மையானதும் முக்கியமானதும் மத்திய வருவாயை மாநில அரசுக்கு பகிர்ந்தளித்தலாகும்.துரதிருஷ்டவசமாக கடந்த சில நிதிக்குழுக்கள் மாநில அரசுகளின் ஆதாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாமல் சமச்சீர் இல்லாத வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன. காலம் தாழ்த்தாமல் இந்த செயல் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கடந்த 1991ஆம் ஆண்டு புதிய சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்திய பின்னர் ஒரு புதிய பரிணாம வளர்ச்சிக்கு நம்மை நாம் கொண்டு செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தோம். அதன் அடிப்படையில் வளர்ச்சித் திட்டப் பணிகளில் மாநில அரசுகளை அதிக அளவில் பங்கேற்கச் செய்வதுடன் மத்திய அரசு தன்னுடைய செயல்பாடுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஆகும். சமூகப் பாதுகாப்பு உறுதி வளையத்தை உருவாக்கித் தருவது, கல்வி, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு நலன் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளில் முதலீடு செய்வது, இரண்டாம் கட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி மாநிலத்தை வளர்ச்சியடையச் செய்வதோடு முதலீட்டுக்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவது மாநில அரசுகளின் கடமையாகும். மேலும் மாநிலங்கள் சர்வதேச தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான முதலீட்டை முதலீடு செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாநில அரசுகள் மக்களோடு மிக நெருங்கிய அளவில் அவர்களது அன்றாட வாழ்க்கையோடு இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

தற்போதைய நிதிக்குழுவால்கூட இவையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொள்ளப் படாதது துரதிருஷ்டவசமான ஒன்றாகும். நிதி ஆதாரங்களைப் பொறுத்தமட்டில் மாநில அரசுகளுக்கு ஆதாரங்கள் திரட்டுவதற்குண்டான எந்தவித வாய்ப்புகளும் விட்டு வைக்கப்படவில்லை. சேவை வரியைப் பொறுத்த

மட்டில் சட்டப்பூர்வமான சேவை வரி வசூலிக்கும் உரிமை மாநில அரசுகளுக்கு உரியது என்று அரசியலமைப்புச் சட்டத்தில் மாநில அரசுகளுக்கான பட்டியலில் இடம்பெற்றிருந்தாலும் அதையும் மத்திய அரசின் பட்டியலுக்கு மாற்றியுள்ளனர். இதனை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். மத்திய மாநில அரசுகள் புதிய வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான ஒரு மாதிரித் திட்டத்தை நாடு முழுவதும் ஒருங்கே இணைந்து செயல்படுத்தத் தேவையான முற்றிலும் கட்டுப்படுத்தப்படாத மறு ஆய்வினை மேற்கொண்டு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் உங்களை கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு முடிவு எடுக்கப்படும் பட்சத்தில் மத்திய அரசின் மொத்த வரி வருவாயிலிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாயின் அளவு 50 சதவிகிதமாக அமைவது தவிர்க்க முடியாததாக அமையும் என்பதில் நான் மிகுந்த உறுதியுடன் இருக்கிறேன்.

இரண்டாவது – அம்சமாக, வரிவருவாயை மாநில அரசுகளுக்கு அதன் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கும் முறையை அமல்படுத்த வேண்டும். 11ஆவது நிதிக்குழுவின் · 2000 –2005ஆம் ஆண்டுக்கான கலந்துரையாடல் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. மொத்த வரித் தொகுப்பில் எங்களுடைய பங்கை 1.252 சதவிகிதம் அதாவது ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் பார்க்கும்போது 18.86 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைத்திருப்பது மற்ற எந்த மாநிலங்களுக்கும் இதுபோன்ற ஒரு கடுமையான நிதிக்குறைப்பை செய்யவில்லை. இந்த நியாயமற்ற நேர்மையற்ற செயல்முறை எனக்கு முற்றிலும் மனவருத்தத்தை அளித்துள்ளது. இந்த முறை உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நிதிக்குழு என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் ஓர் அங்கமாகும். அது பாரபட்சமற்ற வகையில் தெளிவான நெறிமுறைகளின் அடிப்படையில் செயல்படவேண்டும் என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த காலங்களில் வளர்ச்சி பெறாத மாநிலங்களுக்கு அதிக ஊக்கமும் வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்குத் தண்டனையும் வழங்குவதற்கு ஏற்ற சூழல் இருந்து வந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 275ஆவது பிரிவின்படி மிகவும் பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்குவதற்கு நிதிக்குழுவுக்கு இந்த சட்டப்பிரிவு வழிவகை செய்கிறது. அரசியலமைப்புச் சட்டம் 270ன் கீழ் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்த பின்னரும் இதில் வழிவகை உள்ளது. அரசியலமைப்புச் சட்டம் 270ன்கீழ் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பதற்கான நெறிமுறைகள் நியாயமானதாகவும் மற்றும் எளிதான வகையிலும் உள்ளன.

இங்கே சில ஆலோசனைகளை வழங்கலாம் என்று நினைக்கிறேன்.

அதாவது, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 40 சதவிகிதமும்,

மாநில அரசுகளின் வரிவருவாய் அதனுடைய நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அளவின் அடிப்படையில் 40 சதவிகிதமும், தனி நபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவின் அடிப்படையில் 10 சதவிகிதமும், ஊக்கத்தொகை அடிப்படையில் 10 சதவிகிதம் என்ற வகையில் வழங்கலாம். ஒவ்வொரு மாநிலங்களுக்கும் ஒவ்வொரு வகையான காலச் சூழ்நிலைகள் ஏதுவாக அமைந்திருக்கும். ஆனால் என்னுடைய ஆலோசனைகள் எல்லாம் தேசிய நலனின் அடிப்படையிலானதுதான். சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவிப்பதும், மோசமாக செயல்படும் மாநிலங்களுக்குத் தங்களின் செயல்பாடுகள் மூலம் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கித் தரவும் வேண்டும்.

இந்தத் திட்டத்தின் தத்துவத்தையும் அதன் பின்னால் மறைந்திருக்கும் உண்மையையும் புரிந்து கொண்டால் நீங்கள் கண்டிப்பாக என்னைப் பாராட்டுவீர்கள். 11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில மாநிலங்களை மட்டும் வேற்றுமைப்படுத்துவது மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை உருவாக்கிவிடும் என்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலை 12ஆவது நிதிக்குழுவால் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாத பட்சத்தில் நம்முடைய அரசியலில் அது மிகவும் பயங்கரமான எதிர்விளைவுகளை உருவாக்கி விடும். இது தொடர்பாக டாக்டர் சிரங்கராஜன் எழுதிய இந்தியப் பொருளாதாரம் என்ற புத்தகத்தில் இருந்து ஒன்றை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். "மண்டலங்களுக்கு இடையேயான வேற்றுமைகள் வளரும் பட்சத்தில் அது தரமான நிருவாகத்தை வழங்குவது ஒரு சில இடங்களில் பாதிப்புகளை உருவாக்கிவிடும்" என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் தரமான நிருவாகம் ஏற்படாத பட்சத்தில் அம்மாநிலங்களுக்கு வழங்கப்படும் அதிகமான நிதி ஒதுக்கீடால் எந்தவித பலனும் ஏற்படாது என்பதுதான் நிதர்சனமான உண்மை நிலையாகும்.

தனிநபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவு என்ற காரணியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் திட்ட ஒதுக்கீடுகளின் நம்பிக்கை குறித்தும் இங்கு நான் உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். இந்த முறை கடந்த காலங்களில் செயல்படுத்தியதன் விளைவாக தாங்க முடியாத அளவுக்குக் கடுமையான விளைவுகளை உருவாக்கியுள்ளது. இருந்தாலும் இதனைப் பயன்படுத்துவது கடந்த காலங்களில் ஒரு வழக்கமாக இருந்து வந்துள்ளது. தனி நபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவு சராசரியைவிட சற்று உயர்வதற்கு ஒரு மாநிலத்தின் உற்பத்தித் துறை மற்றும் சேவைகள் துறை ஓரளவுக்கு சிறப்பாக செயல்பட்டால் போதுமானது. இது மக்களிடையே மிக அதிகப்படியான அளவில் வருவாய் வேற்றுமையை உருவாக்கிவிடும். உதாரணமாக நாட்டிலேயே மிக அதிகமான அளவில் வருமானம் ஏற்ற இறக்கங்களுடன் சமனற்ற முறையில் தமிழ்நாட்டில் காணப்படுகிறது. இந்தியாவிலேயே மிக அதிகப்படியான வேலைவாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. வளம் குன்றிய வறட்சிப் பகுதிகளில் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் தங்கள் அண்டை மாநிலங்களில் இதுபோன்ற சூழ்நிலையில் வாழும் மக்களைவிட மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். இத்தனைக்கும் அந்த மாநிலங்களில் போதுமான நீர்வள ஆதாரங்கள்கூட இல்லை.

தேசிய சராசரியைவிட மாநில நிகர உற்பத்தி சிறிதளவு குறைந்திருந்தாலும் அதற்கு மாற்றாக சிறந்த நீர்வள ஆதாரம் இருக்குமானால் இந்த நிலையை எளிதில் சீர்செய்ய முடியும். இப்படி ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டுக்கு இருக்குமானால் எளிதில் மாநிலத்தில் உள்ள வறுமையை சமாளிக்க இயலும். இந்த காரணிகளெல்லாம் மாநிலங்களின் நிகர உற்பத்தியில் விடுபட்டுள்ளன. சிறந்த நிருவாகம் என்பது என்ன? இதற்கு எந்தவித ஊக்குவிப்பும் இல்லையே ஏன்? மிக மோசமான இயற்கை ஆதாரங்களைக் கொண்டுள்ள மாநிலங்கள் தங்களின் கடுமையான உழைப்பின் காரணமாகவும், சிறந்த நிருவாகத் திறமையின் காரணமாகவும், மற்றும் நிதித்துறையில் விவேகத்துடன் செயல்படுவதாலும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் இதுபோன்ற மாநிலங்களைத் தொடர்ந்து தண்டித்து வருவதே நிதிக்குழுவின் வழக்கமாக இருந்து வருகிறது. இந்த நிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தனி நபர் மாநில நிகர உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் முக்கியத்துவமானது மிகவும் மோசமான எதிர்விளைவுகளை உருவாக்கிவிடும் என்ற வகையில் இப்பிரச்சினை குறித்து உங்கள் அனைவரின் கவனத்தையும் இந்நேரத்தில் ஈர்க்க விழைகிறேன்.

இதே முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படும் பட்சத்தில் இதற்குக் குறைந்தபட்ச முக்கியத்துவம் வழங்குவதுடன் 1971ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலும், பரிந்துரை களின் அடிப்படையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த முடியும்.

தற்போது நான் மாநிலங்கள் சம்பந்தப்பட்ட மற்றொரு முக்கியமான பிரச்சினை குறித்து உங்கள்

அனைவருடைய கவனத்தையும் ஈர்க்க விழைகிறேன். அதாவது மாநில அரசுகளின் கடன் சுமையைக் குறைப்பது மற்றும் கடன் முறைகளை சீரமைப்பது. தொடர்பான ஒருங்கிணைந்த கடன் குறைப்புத் திட்டம் குறித்த செயல்திட்டத்தை எட்டுவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மாநில அரசுகள் மிகவும் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கும் நிலையில் 11ஆவது நிதிக்குழு அறிவித்த கடன்சுமை குறைப்புத் திட்டமானது முற்றிலும் பயனற்றதாக மாநில அரசுகளுக்கு இருந்தது என்பது துரதிருஷ்டவசமானது. இந்த வகையில் 12ஆவது நிதிக்குழு இப்பிரச்சினையில் ஒருங்கிணைந்த வகையில் ஆராய்ந்து அதற்கு ஒரு சரியான நிரந்தரமான தீர்வை வரையறுப்பதுடன் மாநில அரசுகளுக்குத் தேவையான இழப்புத் தொகையை

வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்துள்ள கடுமையான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றின் விளைவாக கடனுக்கும் வருவாய் இனங்களுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உருவாகியுள்ளது. இது கடுமையான மிக உயர்ந்த நிதி நெருக்கடி ஏற்படுவதற்கான அறிகுறியாகும். பிரிவு வாரியாக நிதிச்சுமை பளுவைக் குறைப்பதுடன் வருவாய் பற்றாக்குறையையும் நிதிப் பற்றாக் குறையையும் சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எங்களுடைய அறிக்கையில் கடன்சுமையை குறைப்பது குறித்தும், கடன்சுமையை சீரமைப்பது குறித்தும் பல்வேறு வகையான ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளோம். இந்த ஆலோசனைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு சரியான பலன்தரக்கூடிய தீர்வுகளை மாநில அரசுகளுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்று உங்களை நான் இந்த நேரத்தில் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அது நடப்பு 2004 – 2005ஆம் ஆண்டிலேயே செயல்படுத்தப்பட இருப்பதால் இப்பரிந்துரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடன்சுமையை சீரமைப்பது குறித்த பிரச்சினையை மாநில அரசுகள் மனிதவளர்ச்சி மற்றும் முதலீட்டுச் சூழ்நிலை ஆகியவற்றில் ஆற்றியுள்ள செயல்பாடுகளின் விளைவுகளின் அடிப்படையில் அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து நிதியுதவிகள் அமைய வேண்டும். இந்த இரண்டு துறைகளிலும் தமிழ்நாடு மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான ஊக்குவிப்பு எங்களுக்கு கண்டிப்பாகக் கிடைத்தாக வேண்டும்.

12ஆவது நிதிக்குழுவின் தலைவரின் சிறப்பு கவனத்திற்கு ஒன்றை கொண்டுவர விழைகிறேன். அவர் ஏற்கெனவே இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்து பல்வேறு வகையான அனுபவங்களைப் பெற்றுள்ளவர் என்பதால் மாநில அரசுகளின் அதிகபட்ச வரிச்சுமையைக் குறைப்பது குறித்த முக்கிய பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வு காண

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்றும் முடியாத காரியமல்ல. மாறாக, ஒரு முறையான கருணை அடிப்படையிலான செயல்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநில அரசுகளின் வரிச்சுமையைக் குறைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். இப்பிரச்சினையில் இதுவரை எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

கடன்சுமையை அதிகரிக்கும் திட்டங்களில் ஒரு சில சிறுசேமிப்பு கடன் உதவிகளும் அடங்கும். இவற்றிலெல்லாம் மக்கள் நேரடியாக பாதிக்கப் படுகின்றனர். மற்ற கடன்களைப் பொறுத்தமட்டில் வெளி மார்க்கெட்டில் இருந்து வாங்கும் கடன்கள், திட்டக் கடன்கள், பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து குறிப்பாக ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொது ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றில் இருந்து வாங்கும் கடன்கள் ஆகியவற்றுக்கான வட்டி விகிதம் அதிக அளவில் உள்ளது. அது தற்போதைய சந்தையில் உள்ள வட்டி விகிதங்களைவிட மிக அதிக அளவில் உள்ளது. வர்த்தக வங்கிகள் மற்றும் இந்திய அரசு ஆகியவை மாநில அரசுகள் கடன் சுமையிலிருந்து மீள குறைந்தபட்ச அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் சில மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மாநில அரசுகள் இதுபோன்ற நிறுவனங்களில் இருந்து மானியம் எதிர்பார்க்க முடியாது. அதே நேரத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத வட்டி சுமைகளையும் சமாளிக்க இயலாது. மேலும் திறமையற்ற நிதி மேலாண்மையாலும் பிரச்சினைகள் உருவாவதை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய தொகுப்பிலிருந்து பஞ்சாயத்துகளுக்கு மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி ஆதாரங்களை மாநில அரசின் நிதிக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நெறிமுறைகளை வகுக்கத் தேவையான நடவடிக்கைகளை 12ஆவது நிதிக்குழு மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளின் அடிப்படையில் மாநில நிதிக்குழு பரிந்துரைகளைச் செய்யும். பல்வேறு மாநிலங்களில் பல்வேறு வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இதுதான் தற்சமயம் உங்கள் முன் உள்ள பிரச்சினையாகும். ஆனால் எல்லா மாநிலங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளுக்கும் நகராட்சிகளுக்கும் சமமான அளவில் நிதியைப் பகிர்ந்தளிக்கத் தேவையான உறுதியான ஒரு செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் அத்தியாவசியப் பணிகள் தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற உதவுவதுடன் ஒருங்கிணைந்த வளர்ச்சியும் தரமான வாழ்க்கை சூழலும் உருவாக்குவதற்கு இது உறுதியளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் விளைவுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தான எங்களுடைய ஆலோசனைகளையும் செயல் திட்டங்களையும் எங்களுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளோம். மேலும் இயற்கை சீற்ற நிதி மற்றும் தேசிய இயற்கை சீற்ற துயர்துடைப்பு நிதி ஆகியவற்றை பயன்படுத்துவதில் கடந்த கால வரலாற்றின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நிதி உதவி செய்ய வேண்டும். மாநில அரசுகள் தங்களுக்கென்றே தனியாக நிதி ஆதாரங்களை இதுபோன்று உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான நிதியுதவியினையும் மத்திய அரசு செய்துதர வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சி சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதற்குச் செலவிடப்பட்ட தொகையினை கணக்கில்கொண்டு தமிழ்நாட்டிற்கு தேவையான நிதியுதவிகளை தேசிய துயர்துடைப்பு நிதியிலிருந்து ஒதுக்க வேண்டும். இப்படி நிதிஒதுக்கி மாநில அரசுக்கு நிவாரணமும் உதவியும் செய்வதன் மூலம் தொடர்ச்சியாக ஏற்படும் வறட்சியை சமாளிக்க முடியும்.

இறுதியாக, தமிழ்நாட்டை நிருவாகத்தில் மேம்படுத்துவதற்குத் தேவையான தேவைகள் குறித்தும் சில முக்கிய பிரச்சினைகள் குறித்தும் உங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன். தமிழ்நாட்டின் நிருவாகத்தை முற்றிலுமாக நவீனப்படுத்தவும் தேவையான அளவு ஊழியர்களைப் பயன்படுத்தவும் சிறந்த நடைமுறைகளைப் புகுத்துவதும் அதேபோன்று நிருவாகத்தில் மின்ஆளுமையை பயன்படுத்துவதும் அவசியமாகிறது. இப்பிரச்சினையில் உடனடியாக கவனம் செலுத்தி சிறந்த நிருவாகத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் மாநில அரசுகள் விரைவான வளர்ச்சியை எட்டுவதற்கு இயலும். இல்லையெனில் அதற்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டும்.

தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகள் குறித்து உங்கள் அனைவரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் வருடாந்திர மழை அளவு 723 கன மீட்டராகும். இது தேசிய சராசரியான 1820 கன மீட்டரை விட குறைவானது. தேசிய

சராசரிக்குச் சமமான அளவில் தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த ஒரு செயல்திட்டத்தை அதாவது மழைநீர் சேகரிப்பு திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதியுதவியை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மற்றொரு முக்கிய பிரச்சினை சென்னை மாநகரில் தற்போது நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாடு ஆகும். கடந்த 55 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிகவும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. 12ஆவது நிதிக்குழு சென்னை நகரின் குடிநீர்த் தேவையை ஈடு செய்யும் அளவிற்குக் கடல்நீரை குடிநீராக்கும் நவீன திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான முழுத் தொகையையும் மானியமாக தர நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை மாநகரப் பகுதிகளில் நிலவிவரும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை குறித்து 12ஆவது நிதிக்குழு ஆய்வு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நோத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான பிரச்சினை சென்னை மாநகரப் பகுதிகளில் மற்றும் மற்ற நகரங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுவது, கடலரிப்புகளைத் தடுப்பதற்கும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் சிறப்பாகக் கவனத்தில் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய முக்கிய பிரச்சினைகள் மற்றும் திட்டங்கள் குறித்து உங்களிடம் தெரிவித்துள்ளேன். நான் என்ன விரும்புகிறேன் என்றால், கடந்த காலங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதன்மூலம்தான் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கும். தங்களுடைய ஆதாரங்கள் மற்றும் அறிவுத்திறன், உடல் உழைப்பு ஆகியவற்றைக் கொண்டு முன்னேறும் மாநிலங்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

நம் முன்னால் மிகப் பெரிய சவால்கள் எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில், பழைய திட்டங்களுக்கு ஒட்டுப் போடுவதனால் எந்தவித பலனும் கிடைக்காது. உங்களுடைய சென்னைப் பயணம் வசதியாகவும், பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்களுடைய பரிந்துரைகள்மீது மிகுந்த எதிர் பார்ப்புகளையும் நம்பிக்கையையும் கொண்டுள்ளேன். ஒருவேளை அவை எதிர்மாறாக இருக்குமேயானால் அது தமிழ்நாட்டிற்குக் கடந்த கால நிதிக் குழுக்கள் உருவாக்கிய மிகவும் மோசமான விளைவுகள் போல் அமைந்துவிடும்.

2.2.2004 அன்று நடைபெற்ற 12ஆவது நிதிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கும் வகையில், முன்னோடித் திட்டமான IT Expressway அதாவது, தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலையினை அமைத்திட 127.41 கோடி ரூபாய் மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் அளித்து பணிகளை உடனடியாகத் தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுக்கு பல்வேறு அரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். இந்த வகையில், ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை அடையாறு மத்திய கைலாஷில் தொடங்கி, டைடல் பார்க் (TIDEL PARK) – சிறுசேரி வழியாக மகாபலிபுரம் வரை IT Expressway – தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளார்கள். இதில் மத்திய கைலாஷில் தொடங்கி சிறுசேரி வரையிலான 22 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளை முதற்கட்டமாகவும், சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரையுள்ள 25 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளை இரண்டாம் கட்டமாகவும் 2004ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றிட உத்தரவிட்டு உள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், 2 மீட்டர் அகலமுள்ள மையத்தடுப்புடன் (Median) 6 வழி வாகனப் போக்குவரத்துக்கான சாலை (6 Lane carriage way) உலகத்தரத்தில் அமைக்கப்படும். சாலையின் முழு நீளத்திற்கும் நடைபாதை அமைக்கப்படும். இந்த நடைபாதைக்குக் கீழ், மூடப்பட்ட மழைநீர்க் கால்வாய் அமைக்கப்படுவதுடன், மின்சாரம், தொலைபேசி, கண்ணாடி இழைக்கம்பி வடங்கள் (Optic fibre cables) போன்ற மக்கள் பயன்பாட்டுக்கான அனைத்து கேபிள்களையும் கொண்டு செல்ல, தனியாக சேவைக் குழாய்கள் (Service duct) அமைக்கப்படும். இதன் மூலம், எதிர்காலத்தில் சாலையில் அடிக்கடி தோண்டுவது, குறுக்கே வெட்டுவது போன்ற செயல்கள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும். இந்த துரித வழிச்சாலையின் ஒருங்கிணைந்த திட்டமாக, மழைநீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். மாநகர துரித ரயில் போக்குவரத்துப் (MRTS) பயணிகளின் பயன்பாட்டுக்காக 5.5 மீட்டர் அகலத்திற்கு சேவைச் சாலையும் அமைக்கப்படும். சாலை விளக்கு, சாலைக் குறியீட்டுப் பலகைகள், சாலைக் குறியீடுகள் மற்றும் சாலைப் போக்குவரத்து தொடர்பான அனைத்து அம்சங்களும் கொண்டு, உலகத் தரத்துடன் இந்தச் சாலைகள் உருவாக்கப்படும்.

சாலைப் போக்குவரத்துத் தொடர்பான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் உலகத் தரத்துடன், அமையவுள்ள இந்தத் தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலையின் பயனாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தகவல் தொழில்நுட்பக் குழுமங்கள் இன்னும் அதிக அளவில் வெகுவாக ஈர்க்கப்பட்டு இப்பகுதி இந்தியாவின் "Bay Area" ஆக உருவாகும். தமிழ்நாட்டை இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப தலைநகரமாக மாற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் கடுமையாக உழைத்து சாதனைகள் படைத்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பத்தை ஈடேற்றும் திட்டமாக இத்திட்டம் அமையும். உலகத்தரத்துடன் உருவாக்கப்படும் தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலைப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் விளையாட்டு வீரர் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 4.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரும், சர்வதேச ATP - Association of Tennis Professionals டென்னிஸ் விளையாட்டு வீரர் குழுவின் முன்னாள் தலைவருமான திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் நேரில் சந்தித்து, ATP சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னை நகரில் தொடர்ந்து நடைபெற வழியமைத்துக் கொடுத்தமைக்காகவும், இனி "சென்னை ஒப்பன்" என்று அழைக்கப்பட உள்ள இந்த சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்த ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்க உத்தரவிட்டதற்காக, தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இதனை அடுத்து, பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரும், சர்வதேச ATP டென்னிஸ் விளையாட்டு வீரர் குழு முன்னாள் தலைவருமான திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். அப்போது, தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும், விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்று, இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழக அரசால் ஏற்படுத்தப்படும் தனித்தொரு புதிய பல்கலைக்கழகத்தில் திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் தனது முதிர்ந்த அனுபவம் பயன்படும் வகையில் ஈடுபடுத்திக் கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மேலும், திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தின்போது உலகத்தரத்துடன் உருவாக்கப்பட்ட நுங்கம்பாக்கம் டென்னிஸ் அரங்கில் கடந்த எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்த சர்வதேச ATP டென்னிஸ் போட்டிகள், தக்க ஆதரவாளர்கள் (Sponsors) கிடைக்காத காரணத்தால் தமிழகத்தை விட்டு வேறு இடத்திற்கு செல்லக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்தப் போட்டிகள் தொடர்ந்து சென்னையில் நடைபெறும் வகையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்க நிருவாகிகளும், பிரபல டென்னிஸ் வீரர் திரு.விஜய் அமிர்தராஜ் அவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் போட்டிகள் தடையின்றி தொடர்ந்து சென்னை மாநகரிலேயே நடத்தும் வகையில் அடுத்த ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இப்போட்டிகளை நடத்தும் வண்ணம் ஆதரவாளர் கூட்டமைப்பு (Consortium of sponsors) ஒன்றை அமைத்திட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ஒரு இணை ஆதரவாளராக (Cosponsor) இருக்கும் என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போட்டிகளைச் சிறப்புடன் நடத்திட ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிடவும் உத்தரவிட்டார்.

இப்பல்கலைக்கழகத்திற்கு வருகைப் பேராசிரியராக (Visiting Professor) இருக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இதற்கு மகிழ்வுடன் தனது இசைவைத் தெரிவித்துக் கொண்ட திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள், இப்பல்கலைக்கழகம் தரமிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்க தனது முழு ஒத்துழைப்பையும் அளிப்பதாக உறுதி அளித்தார். மேலும், டென்னிஸ் விளையாட்டில் சர்வதேச அளவுக்கு தமிழக வீரர்கள் சிறந்த இடத்தை எய்துவதற்காக தமிழக இளைஞர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி அளிக்க தாம் உத்தேசித்துள்ளதாகவும், அதற்காகவும் திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு, தமிழக இளைஞர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க முன்வருமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பன்னாட்டு அளவில் தமிழகத்தில் உள்ள இளைஞர்களுக்கு டென்னிஸ் விளையாட்டுக்கான சிறந்த பயிற்சியினைத் தான் மிகுந்த மகிழ்வுடன் வழங்குவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

* * *

மீனவர்களுக்கு இலவச வீடுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அந்த மீனவர்கள் தங்கள் குடும்பங்களோடு மனநிறைவுடன் வசித்திட இருப்பிட வசதி செய்து தரும் நோக்கத்துடன், இந்த ஆண்டு (2003-2004) மொத்தம் 4,000 வீடுகள் இலவசமாக கட்டித்தர ஆணையிட்டுள் ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மொத்தம் 15 கோடியே 40 இலட்சம் மதிப்பில் இந்த 4,000 வீடுகளையும் கட்ட ஒப்புதல் அளித்து பணிகளை உடனடியாகத் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மீது தனி அக்கறை கொண்டு, அவர்களுக்கு இருப்பிட வசதி செய்து தர வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்த ஆண்டு அதாவது 2003-2004ஆம் ஆண்டில் 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 4,000 வீடுகளை இலவசமாகக் கட்டித்தர ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மீது தனி அக்கறை காட்டி வரும் மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கட்டப்படும் இந்த 4,000 வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது நேரடிக் கண்காணிப்பின் கீழ், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த வீடுகளைத் தரமாகவும், விரைவாகவும் கட்டி முடிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖

உடல் ஊனமுற்றோர் நலனுக்காக 2003ஆம் ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த நீலகிரி மாவட்ட உள்ளூர் அளவிலான குழுவுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் 3.12.2003 அன்று புதுடில்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களிட-மிருந்து பெற்றுக் கொண்டார். மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அமலாக்கத் துறையின் டாக்டர் சத்யநாராயண் ஜாட்டியா உடன் உள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6,000 ஆதிதிராவிடர்கள் மற்றும் 1,000 பழங்குடியினர் ஆகமொத்தம் 7,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சொந்தமாக நிலம் பெறும் வகையில், 70 கோடி ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் கிராமங்களில் உள்ள நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சொந்த நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளும் போது, அவர்களின் பொருளாதாரம் மேம்பட்டு, சமூக அந்தஸ்து உயர்வதுடன், நிரந்தர வருவாய் பெறவும் வழி ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை' செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கு உரிமை அளித்து, அவர்களை நிலச் சொந்தக்காரர்களாக உருவாக்குதல், பொருளாதார ரீதியில் அவர்களை உயர்த்துதல், தரிசு நிலங்களை விவசாய விளை நிலங்களாக மாற்றுதல், விவசாய உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ், நிலம் வாங்குவதற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், நில அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சார மோட்டார் வாங்குதல், பால்பண்ணை, கோழிப்பண்ணை, ஆடு மாடுகள் வளர்த்தல் போன்ற வேளாண் உபதொழில்கள் தொடங்குதல் ஆகியவற்றிற்காக ஒரு இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம் ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சமாக 2 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதில் 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு மின்வாரியம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும். இந்த மின் இணைப்புகள் வழங்கப்படுவதற்கு எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது. மேலும், இந்தத் திட்ட பயனாளிகளுக்கு முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு கட்டணத்தில் 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படும். அவர்கள் செலுத்த வேண்டிய 25 சதவிகித கட்டணமும் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, இந்தத் தொகையும் கடனாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு பயனாளிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிராகவும், 18 வயதிலிருந்து 55 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும். நிலம் மகளிர் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படும். மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயனாளிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருக்க வேண்டும். நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை தாட்கோ நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகளுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தின் மூலம் விண்ணப்பங்கள் இலவசமாக வழங்கப்படும். தகுதி வாய்ந்த பயனாளிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அமைக்கப்படும் குழு தேர்வு செய்யும்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பொருளாதார மேம்பாடும், சமூக அந்தஸ்தும் பெற்று வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்துகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்தினை வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

புரட்சித்தலைவியை
வாழ்த்துங்கள்! உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்!

தென்றல் பிறந்த திருநாள் இதுதானா
இன்று புதுமலர்ச்சி எங்கேயும் காண்கிறதே!

புரட்சித்தலைவி எனும் பூங்காற்று பிறந்ததனால்
புலர்ந்தது புதுவானம்! பூத்ததொரு புதுவாழ்வு!

காலை இளந்தென்றல் கண்திறந்த கந்தர்வ
வேளைஇது என்பதனால் வெளிஎல்லாம் வாழ்த்தட்டும்!

சோலைக் குயில்வாழ்த்த, சுரும்புகளும் தாம்வாழ்த்த
வானம் பாடிகளே வாயார வாழ்த்துங்கள்!

இலைவாழ்த்த, கிளைவாழ்த்த, இந்தியத் தாமரையும்
தலைதாழ்த்தி வாழ்த்துகின்ற தமிழ்மகளை வாழ்த்துங்கள்!

கால்முளைத்த கம்பீரம் கண்எதிரே வருகிறது
பால்மனத்துத் தாய்மாரே பாசமுடன் வாழ்த்துங்கள்!

சிங்கம்நிகர் பெருந்தலைவி சீர்வாழ்த்திப் போர்வாழ்த்தித்
தங்கநிகர் இளைஞர்களே தமிழாலே வாழ்த்துங்கள்!

சாதிக்குத் தலைவணங்கும் தற்காலத் தமிழகத்தில்
நீதிக்குத் தலைவணங்கும் நிறைகுடத்தை வாழ்த்துங்கள்!

ஆமைக்குப் புயல்வேகம், அடிமைக்கு உரிமைவெறி,
ஊமைக்குப் போர்முழக்கம் தருபவரை வாழ்த்துங்கள்!

அடிமையல்ல பெண்மகளே, ஆணுக்கு நிகரான
'குடிமகள்'நீ என்றுரைத்த கோமகளை வாழ்த்துங்கள்!

காத்திருப்பாய் காவிரியே கங்கைவரப் போகிறது
சேர்த்துவைப்பேன் என்றுரைக்கும் திருமகளை வாழ்த்துங்கள்!

பன்மொழிகள் மத்தியிலே பைந்தமிழை எம்உயிரைச்
செம்மொழியாய் ஆக்கவந்த சீர்மகளை வாழ்த்துங்கள்!

உள்ளூர்த் தலைவியா, ஒருதேசத் தலைவியா,
உலகத் தலைவி என்று உளமார வாழ்த்துங்கள்!

வாழ்த்துங்கள் உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்
வாழ்த்தொலிகள் வானத்தின் எல்லைவரை கேட்கட்டும்!

கவியரசர் இளந்தேவன்

மீனவர்களுக்கு உயிர்காப்புக் கவசங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கட்டுமரம் மற்றும் வல்லம் ஆகியவை மூலம் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வாழும் பாரம்பரிய மீனவர்களின் (Traditional Fishermen) பாதுகாப்பையும், அவர்களது எதிர்காலக் குடும்ப நலனையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள அத்தகைய மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் (Life Jackets) வழங்கிட ஆணையிட்டு உள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின்படி, முதற்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான 10 ஆயிரம் உயிர் காப்புக் கவசங்களை 10 ஆயிரம் பாரம்பரிய மீனவர்களுக்கு உடனடியாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மீனவ சமுதாயத்தினர் மீது தனி அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவர்களது வாழ்க்கை வளமடைய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த வகையில் கட்டுமரங்கள் மற்றும் வல்லம் முதலான பாரம்பரிய மீன்பிடி சாதனங்களைப் பயன்படுத்தி மீன் பிடித்து வாழ்க்கை நடத்துகின்ற மீனவர்கள், எவ்விதப் பாதுகாப்பும் இன்றி, கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்று வருவதையும், அதனால் அவர்கள் வீடு திரும்பும்வரை அவர்களது குடும்பத்தினர் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்து வருவதையும் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அத்தகைய மீனவர்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களது குடும்பத்தினருக்குத் தன்னம்பிக்கையையும், துணிவையும் வழங்கும் வகையில், மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக 10 ஆயிரம் மீனவர்களுக்கு ஒவ்வொன்றும் 1,000 ரூபாய் மதிப்பிலான உயிர் காப்புக் கவசங்கள் வழங்கப்படும். இந்தக் கவசங்கள் வழங்கப் பெறும் பயனாளிகள் ஒவ்வொருவரும் தங்களது பங்காக 100 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதுமானது. மீதித் தொகையான 900 ரூபாயை அரசே ஏற்றுக் கொள்ளும். இதன் அடிப்படையில் 10,000 கவசங்கள் உடனடியாக வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பாரம்பரிய மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் வழங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்தப் புதிய திட்டம், கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும், பாதுகாப்பு அளிப்பதாகவும் அமையும்.

தமிழரசு
மார்ச் 2004



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
மாசி – பங்குனி, மார்ச் 2004
மலர் : 35 இதழ் : 9
விலை ரூ.10

முதல் பக்க அட்டை :

கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழா (6–3–2004)

இந்த இதழில்...

- இந்தியாவிலேயே முதன்முதலாக நவீன வசதிகளுடன் காவல் கட்டுப்பாட்டு மையம் 2
- தமிழகத்தின் வறட்சிநிலை – மத்தியக்குழு ஆய்வு 5
- விவசாயிகளுக்கான வட்டித்தொகை தள்ளுபடி – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை 7
- வேளாண்மைத் தொடு திரை கணினி மையம் 9
- 26 மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகள் 10
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திறந்துவைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 11
- வணிகவரித் துறையில் தகவல் பரிமாற்றக் குரல் பதிவுமுறை 13
- அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் 14
- தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் 16
- சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி 17
- மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சாதனைகளை விளக்கும் நூல் 18
- நீலகிரி மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன 19
- தமிழகத்தில் போலியோ ஒழிப்பு நடவடிக்கை 21
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் 23
- பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி, சேலை 25
- கணிதமேதை ஸ்ரீனிவாச இராமானுஜன் திருவுருவச்சிலை 27
- மகாமகம் திருவிழாவையொட்டி மகத்தான கலையரங்கம் 28
- கும்பகோணத்தில் புதிய புறவழிச்சாலை 29
- தேயிலை விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி 30
- புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் 31
- தோட்டக்கலைத் துறையின் தொடர் பணிகள் 33
- உங்கள் வலிமையே என் வலிமை! – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை 37
- நிதிநிலை அறிக்கை 2004–2005 45
- விரிவான தரிசுநிலத் திட்டம் 77
- தமிழ்த்தாத்தா உ.வே.சா. நினைவு இல்லம் 80

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

இந்தியாவிலேயே முதன் முதலாக நவீன வசதிகளுடன் காவல் கட்டுப்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில், 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில், இந்தியாவிலேயே முதன்முதலாகபல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய, புதிய சென்னை மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்ச்சியில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் முதற்கட்டமாக தெற்கு மண்டலத்தில் 23 பிரிவுகளில் அமைக்கப் பட்டுள்ள மின்ரோந்து முறையினையும் (e Beat System) ஒரு கோடி ரூபாய் மதிப்பில், சென்னை மாநகரின் முக்கிய சந்திப்புகளில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள உட்சுற்று தொலைக்காட்சி அமைப்பையும் (Closed Circuit Television for Junction Monitoring) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

நவீன மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகரின் காவல் பணிகளை கையாளும் வகையில் நவீன வசதிகளுடன் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம், இவ்வகையில் இந்தியாவிலேயே முதன்முதலான காவல் கட்டுப்பாட்டு மையம் ஆகும்.

இந்த நவீன காவல் கட்டுப்பாட்டு மையத்தில், 100 மற்றும் 103 ஆகிய தொலைபேசி எண்களுக்கு வரக்கூடிய பொதுமக்களின் அவசர அழைப்புகளை உடனடியாகப் பதிவு செய்தல், மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில் ரோந்துப் பணி மேற்கொண்டிருக்கும் ரோந்து வாகனங்களை உடனுக்குடன் தொடர்புகொண்டு அவற்றை அவசரமாக தேவைப்படும் இடங்களுக்கும் குற்ற நிகழ்வு இடங்களுக்கும் அனுப்பி வைத்தல் ஆகிய பணிகள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் ஏற்கெனவே தொடங்கிவைக்கப்பட்டு தற்போது

செயல்பாட்டில் உள்ள இடர்ப்பாட்டுக்கு உள்ளாகும் பெண்கள் மற்றும் சிறார் உதவி இணைப்புகளில் (முறையே தொலைபேசி எண் 1091 மற்றும் 1098) பெறப்படும் அவசர அழைப்புகளையும், போக்குவரத்து இடர்ப்பாடுகள் குறித்த அவசர அழைப்புகளையும், ஏற்று உடனடியாகச் செயல்பட இந்த மையத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதுவன்றி, புதிய மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் கையாள உள்ள

1. பொதுமக்கள் புகார் மற்றும் தகவல் தெரிவிக்க சிறப்புத் தொலைபேசி உதவி இணைப்பு.
2. இடர்ப்பாட்டிற்கு உள்ளாகும் முதியோர் புகார் தெரிவிக்க தனித் தொலைபேசி உதவி இணைப்பு.
3. காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறித்த புகார்களைத் தெரிவிக்க பசுமைத் தொலைபேசி உதவி இணைப்பு. (இந்த இணைப்புகளுடனும் தொடர்பு கொண்டு பேச தொலைபேசிக் கட்டணம் கிடையாது) மற்றும்
4. ரோந்து வாகனம் எங்குள்ளது என்பதை அறிய வகை செய்யும் (Automatic Vehicle Location) மோடம் கருவிகளை 50 ரோந்துவாகனங்களில் பொருத்தியும், மேலும் 10 வாகனங்களை உடன் தேவைப்படும் குறிப்பட்ட பணிகளுக்காகத் தயார் நிலையில் வைத்திருத்தல் ஆகிய மேலும் நான்கு புதிய சிறப்பு வசதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்தப் பணிகள் அனைத்தையும் மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும்.

மின்ரோந்து முறை (e Beat System)

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.2.2004 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ள புதிய e Beat System மின்னியல் ரோந்து முறையில், தற்போது ரோந்துப் பணி மேற்கொள்ளும் காவலர்கள், ஆங்காங்கு வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும் வைக்கப்பட்டுள்ள பட்டா புத்தகங்களில் கையொப்பம் இட்டு, தாங்கள் ரோந்து மேற்கொண்டதைப் பதிவு செய்கின்ற பழைய முறை முற்றிலுமாக நீக்கப்படும்.

மின்ரோந்து முறையில் ரோந்துப் பணியைப் பதிவு செய்திட முக்கிய இடங்களில் சுவர்கள் மீது மின்னியல் சில்லு electronic chip நிறுவப்படும். ரோந்துப் பணி மேற்கொள்ளும் காவலர்களுக்கு ரீடர் என்னும் சாதனம் வழங்கப்படும். இந்த ரீடர் சாதனம், 6 அங்குலத்திற்குள்ளாக வரும்போது ரோந்துக் காவல் சோதனை மேற்கொண்ட இடம் மற்றும் நேரம் ஆகியவற்றை மின்னியல் சில் பதிவு செய்துகொள்ளும்.

இந்தப் புதிய முறை ரோந்துப் பணி விவரங்களை உடனடியாக அறிய இயலுவதோடு, குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளப் பேருதவியாக அமையும். இந்தப் புதிய மின்னியல் ரோந்து முறை, முதற்கட்டமாக தெற்கு மண்டலத்தில் 23 பிரிவுகளில் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்டக் காவல் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து இந்தப் புதிய முறை கண்காணிக்கப்படும்.

உட்சுற்று தொலைக்காட்சி அமைப்பு மூலம் சாலைச் சந்திப்புகளில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணித்தல் (Closed Circuit Television for Junction Monitoring)

சென்னை மாநகரில் பெருகி வரும் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி ஓட்டுநர்கள் சாலை விதிகளை மீறாமல் தங்களது வாகனங்களை ஓட்ட வேண்டும் என்ற உணர்வைப் பெறும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக, சென்னை மாநகரில் முக்கிய சந்திப்புகளில் உட்சுற்றுத் தொலைக்காட்சி (Closed Circuit Television) மூலமாக வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18-2-2004 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அண்ணா சாலையில் ஸ்பென்சர், எல்டாம்ஸ் சாலை, அண்ணா மேம்பாலம், நந்தனம் சந்திப்புகள், ஈ.வெ.ரா. சாலையில் சென்ட்ரல் ரயில் நிலையம், ஈகா திரையரங்கு, கோயம்பேடு சந்திப்புகள், காமராஜர் சாலையில் காந்தி சிலை சந்திப்பு ஆகிய எட்டு முக்கிய சாலைச் சந்திப்புகளில் நவீன உட்சுற்று தொலைக்காட்சி அமைப்பு நிறுவப்படுகிறது. ஒவ்வொரு சந்திப்பிலும் அதன் தேவைக்கேற்ப மொத்தம் 4 அல்லது 5 ஒளிப்பதிவு சாதனங்கள் (camera) நிறுவப்படும். இவற்றில், ஓர் ஒளிப்பதிவுக்கருவி, அகன்ற, எப்பக்கமும் திரும்பக் கூடிய, தூரநோக்கு வசதி உடைய ஒளிப்பதிவு சாதனமாக (Pan, Tilt and Zoom - PTZ Camera) இருக்கும்.

இதன் மூலம், இந்த எல்லாச் சந்திப்புகளிலும் வாகனங்களின் போக்குவரத்து நேரடியாக ஒளிப்பதிவு செய்யப்படும். இந்தப் பதிவுகள், 2 Mbps (2 million bytes per second) - ஒரு விநாடிக்கு 20 இலட்சம் துடிப்பு) கொண்ட இணைப்பு மூலமாக, கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்பட்டு தொடர்ச்சியாக இந்த ஒளிப்பதிவு விவரங்கள் கண்காணிக்கப்படும். மேலும், ஒரே நேரத்தில் இந்த 8 சந்திப்புகளிலும் வாகனப் போக்குவரத்தைக் கண்காணித்திட இயலும். சென்னை மாநகரக் காவல் ஆணையரும் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளும் தங்களது கணினி மூலம் இதனை மேற்பார்வையிடும் வகையில் இந்த அமைப்பு இணையதளத்தில் இணைக்கப்படும்.

இந்தச் சந்திப்புகளில் சாலை விதிகளை மீறிச் செல்பவர்களைப் பற்றி உட்சுற்று தொலைக்காட்சி ஒளிப்பதிவு வாயிலாக அறிந்து, ஏற்கெனவே போக்குவரத்துக் காவல் அலுவலகத்தில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ள 55 இலட்சங்களுக்கும் மேலான முகவரிகளைக் கொண்ட வாகன விவர வங்கி (Vehicle Data Bank) உதவியுடன் அவர்களைப் பற்றிய முழு விவரம் எடுக்கப்பட்டு, குற்றப்பதிவு, அஞ்சல் மூலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதால், வாகன ஓட்டுநர்கள் சாலை விதிகளை மதித்து நடக்க, இந்த அமைப்பு சிறப்பாக உதவும்.

உட்சுற்று தொலைக்காட்சி மூலம் மாநகரச் சாலைச் சந்திப்பு போக்குவரத்தைக் கண்காணிக்கும் இந்த அமைப்பையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ள நவீன மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் ஒருங்கிணைத்து செயல்படுத்தும்.

★ ★ ★

என்.சி.டி.சி. நிருவாக இயக்குநர் திரு. தினேஷ் ராய் தலைமையிலான இந்தக் குழுவில், புதுடெல்லி மத்திய

தமிழகத்தின் வறட்சி நீலை - மத்தியக்குழு ஆய்வு

மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி சூழ்நிலை குறித்த விரிவான அறிக்கை ஒன்றினை மாநில அரசு தயார் செய்து மத்திய அரசிற்கு அனுப்பி வைத்தது. இந்த அறிக்கையில் ரூ.1,584 கோடியை தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து வழங்க வேண்டுமென்றும் மேலும் உணவுக்கு வேலை திட்டத்திற்காக 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது.

அதே போல சென்னை மாநகரில் நிலவி வரும் கடுமையான குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் விதத்தில் தமிழக அரசு ரூ.700 கோடி நிதியுதவி கேட்டு தனியாக மற்றொரு அறிக்கை மத்திய அரசிற்குச் சமர்ப்பித்தது. இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் பிரதமர், துணைப்பிரதமர் ஆகியோருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள்.

மேலும் இந்த உதவித் தொகைகளை உடனடியாக வழங்க வேண்டுமென்று துணைப்பிரதமர் அவர்களிடம் தனியாக மேலும் ஒரு அறிக்கையை வழங்கினார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசு பல்வேறு துறைகளைச் சார்ந்த உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை மாநிலத்தில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்து ஆராய அனுப்பியது. இந்தக் குழுவினர் 20.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள்.

கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத்துறை கூடுதல் ஆலோசகர் திரு. சி.கணபதி, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை உதவி ஆலோசகர் திரு. எம்.எஸ். நாராயணன், மத்திய வேளாண்மைத் துறையைச் சார்ந்த பயிர்கள் துறை இயக்குநர் (சாஸ்திரி பவன், சென்னை) திரு. கே.மனோகரன், புதுடெல்லி கிராமப்புற மேம்பாட்டு துறையின் சார்பு செயலாளர் (எஸ்.ஜி.ஆர்.ஒய்.) திரு.கே.விவேகானந்த், மத்திய திட்டக்குழு ஆராய்ச்சி அலுவலர் திரு. ஜிதேஷ் ஜான், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் (சி.சி.பி.எஃப், சென்னை) டாக்டர் ஏ.கே.சி.பட்னாயக், மத்திய தோட்டக் கலைத் துறை துணை ஆணையாளர் திருமதி. லில்லி மித்ரா ஆகியோர் 20.2.2004 அன்று சென்னை வந்தனர். இக்குழுவினர் மாநில அரசின் உயரதிகாரிகளுடன் இணைந்து மூன்று குழுக்களாகப் பிரிந்து சென்று வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை ஆய்வு செய்தனர்.

முதல் குழு சென்னை, திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களிலும், இரண்டாவது குழு நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை

மாவட்டங்களிலும், மூன்றாவது குழு தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் கடந்த 2000-2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் மழையளவு குறைந்துள்ளதை விரிவாக தம்மை சந்தித்த மத்தியக் குழுவினரிடம் விளக்கினார்கள். கடந்த 2002-ஆம் ஆண்டு மாநிலம் கடுமையான மழையின்மையால் இதுவரை சந்தித்திராத அளவிற்குக் கடுமையான வறட்சியை சந்தித்தது.

கடந்த 2003-ஆம் ஆண்டும் தென்மேற்குப் பருவ மழை 9 மாவட்டங்களில் குறைந்த அளவே மழைப்பொழிவு இருந்துள்ளது. மேலும் வட கிழக்குப் பருவமழைக் காலங்களிலும் 11 மாவட்டங்கள் பெற்ற மழையளவு பற்றாக் குறையாகவே இருந்துள்ளதை சுட்டிக்காட்டினார்கள். கடந்த காலங்களில் தொடர்ந்து ஏற்பட்ட மழைப் பொழிவு பற்றாக்குறையின் காரணமாக பூமியில் நீர் மட்டம் வெகு வேகமாகக் குறைந்துள்ளது.

மாநிலத்திலுள்ள 16 மிகப்பெரிய நீர்த்தேக்க நிலையங்களில் கடந்த ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தற்போது 13 மிகப்பெரிய நீர்த்தேக்க நிலையங்களில் உள்ள நீரின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்தியக் குழுவினரிடம் சுட்டிக் காட்டினார்கள்.

மேலும் மாநிலத்தில் 90 சதவிகித ஏரிகள் மற்றும் குளங்கள் வறண்டு போனதையும் சுட்டிக் காட்டினார்கள். அதே போல கர்நாடக மாநிலம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததால் ஏற்பட்டுள்ள மோசமான சூழ்நிலையும் விவசாய விளை பொருட்கள் மற்றும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஆகியவற்றின் சூழ்நிலைகளுக்கும் காரணம் என்பதை விளக்கினார்கள்.

ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பயிரிடப்படும் குறுவை நெல் சாகுபடியை டெல்டா பகுதி விவசாயிகள் தொடங்க முடியாமல் உள்ளனர். அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை பயிரிடப்படும் சம்பா சாகுபடி நிலப்பரப்பில் வழக்கமாக பயிரிடப்படும் 14 இலட்சம் எக்டேரில் பயிரிட முடியாமல் நடப்பாண்டில் 9.516 இலட்சம் எக்டேரில் தான் சம்பா சாகுபடி பணி நடைபெற்று வருகிறது.

மேலும் 13.88 இலட்சம் தென்னை மரங்கள் முழுவதுமாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மேலும் 22.44 இலட்சம் தென்னை மரங்கள் ஓரளவு பாதிப்புக்குள்ளாகி யுள்ளன. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் ஏற்பட்டுள்ள உற்பத்தி இழப்பு மொத்தம் ரூ.3,795.25 கோடி. வேளாண்மைத்துறையில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் 1,969 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மாநில அரசு வறட்சியின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழகத்திலுள்ள 29 மாவட்டங்களில் சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்துள்ளது. இதன் மூலம் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா மற்றும் குடிநீர் வழங்கல் பணிகள் ஆகிய சிறப்புத் திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்க இது வழி வகை செய்துள்ளது.

மேலும் மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியின் காரணமாக 1413 பசலி ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்தலவரி ஆகியவற்றையும் அரசு ரத்து செய்துள்ளதையும் மத்திய வறட்சிக் குழுவிடம் தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும் மாநில அரசு வறட்சியை சமாளிக்க எடுத்து வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்து மத்தியக் குழுவினரிடம் விவரமாக விளக்கிக் கூறினார்கள்.

மேலும் மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி சூழ்நிலையை கவனமாக முழுவதுமாக ஆராய்ந்து மத்திய அரசிற்கு உண்மையான தெளிவான நிலையை எடுத்துரைக்கும் அறிக்கையை அளிக்குமாறு மத்திய ஆய்வுக் குழுவை தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அப்போதுதான் மாநிலத்திற்குத் தேவையான முறையான நிவாரண உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மத்திய வறட்சி நிவாரணக் குழுவின் தலைவர் திரு. தினேஷ் ராய் தங்களுடைய ஆய்வு முடிந்தவுடன் உடனடியாக அறிக்கை மத்திய அரசிற்குச் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த ஆலோசனையின் போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையர் வருவாய் நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர், வேளாண்மைத்துறை செயலாளர், வருவாய்த்துறை செயலாளர் ஆகியோர் உடனிருந்தனர். இக்குழு 21, 22 ஆகிய தேதிகளில் 11 மாவட்டங்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்டது. ★

விவசாயிகளுக்கான வட்டித்தொகை தள்ளுபடி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளின் நலன் கருதி, நடப்பு குறுவை மற்றும் சம்பா பருவத்தில் குறுகிய காலக் கடனுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையான 62 கோடி ரூபாயை முழுமையாகத் தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உன்னதத் தொழிலான உழவுத் தொழில் செய்துவரும் விவசாயிகள் மீது தனி அன்பும், அக்கறையும் கொண்டு அவர்களது நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டுவதுடன், சலுகைகளையும் வழங்கி வருகிறார்கள்.

பருவ மழை தொடர்ந்து பெய்யாததாலும், கர்நாடக மாநிலத்தின் மனிதாபிமானமற்ற பிடிவாதத்தால் காவேரி நீர் கிடைக்கப் பெறாததாலும், தங்களது உழைப்பு வீணாகி, உற்பத்திச் சேதம், வருவாய் இழப்பு எனக் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளான தமிழக விவசாயிகள் மீது உள்ள அக்கறையின் காரணமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஜூன் 2001 இல் 310 கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவுக் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் 2002 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட 21 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பைகளை வழங்கினார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதலில் இலவச மதிய உணவு வழங்கியதுடன், பின்னர் அவர்களது வேண்டுகோளைக் கனிவுடன் பரிசீலித்து, மாதம் ஒன்றுக்கு 30 கிலோ வீதம் இலவச அரிசி வழங்கினார்கள். மேலும், விவசாயிகளுக்கு 323.56 கோடி ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.

வறட்சியின் கொடுமையிலிருந்து விவசாயிகளைக் காக்கும் பொருட்டு சென்னையை தவிர்த்த மற்ற 28 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் சென்ற பசலி ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர்த் தல வரி, உள்ளூர்த் தல மேல் வரி ஆகிய வரிகள் அனைத்தையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து, அதனால் ஏற்படும் 50 கோடி ரூபாய் இழப்பை அரசே ஏற்றுக்கொள்ள ஆணையிட்டார்கள். மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்கள் பெற்றிருந்த கூட்டுறவுக் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து 61 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்ற, முன் எப்போதும் விட, மிக அதிகமாக 332.09 கோடி ரூபாய் தொகையை மத்திய அரசிடமிருந்து நிவாரண உதவியாகப் பெற்றதுடன், அதற்கும் மேலாக மாநில அரசு மூலம் மேலும் 335.45 கோடி ரூபாய் வழங்கி மொத்தம் 667.54 கோடி ரூபாய் மதிப்பில் 1.4.2002 முதல் 31.12.2003 வரை துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டார்கள்.

கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து பருவ மழை பொய்த்ததாலும், காவேரித் தண்ணீரை கர்நாடக மாநிலம் தர மறுத்து வரும் நிலையிலும், பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் நலனுக்காக, ஜூலை 2003 முதல் ஜூன் 2004 வரையுள்ள நடப்புப் பசலி ஆண்டுக்கு அனைத்து மாவட்டங்களிலும் நில வரி முழுவதையும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதுடன், உள்ளூர்த் தல வரி, உள்ளூர்த் தல மேல் வரி ஆகியவற்றையும் தள்ளுபடி செய்து கடந்த 10.2.2004 அன்று சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். சென்னை தவிர இதர 29 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களாக அறிவித்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக விவசாயிகள் 2002–03 ஆம் ஆண்டில் பெற்ற 250 கோடி ரூபாய் அளவிலான குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள்.

வறட்சியின் பிடியில் சிக்கி அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் இன்னல்களை களைந்து, இடர்களை நீக்கிடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடப்பு குறுவை மற்றும் சம்பா பருவங்களில் கூட்டுறவு வங்கிகளில் இருந்து விவசாயிகள் பெற்ற குறுகிய காலக் கடன் தொகைக்கான வட்டித் தொகை 62 கோடி ரூபாயை தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 6 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

கடந்த 2002 குறுவைப் பட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்கள் மீதான வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது, குறுவை மற்றும் சம்பா பருவங்களில் அனைத்து விவசாயிகளும் கூட்டுறவு வங்கியில் இருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ ★ ★

இரத்தினக் கவசம்

கவச ஆடைக்குள் இறந்து போனவர்களின் உடலை வைத்துப் புதைப்பது பண்டைய சீனர்களின் பழக்கம். கி.மு.104 ஆம் ஆண்டு இறந்த சீன இளவரசி டோவான் என்பவரின் உடலையும், கி.மு. 113 ஆம் ஆண்டு இறந்த இந்த இளவரசியின் கணவன் லூவெஞ் என்பவரின் உடலையும் கவச ஆடைக்குள் வைத்துப் புதைத்துள்ளனர். இந்தக் கவச ஆடைகள் வெறும் உலோகத்தால் ஆனதல்ல. ஜேட் என்னும் ஒரு வகை விலை உயர்ந்த ரத்தின கற்களால் வேயப்பட்டது. பல வண்ண நிறமுடைய இந்தக் கற்களை தங்க நூல் கொண்டு கோர்த்தார்களாம். கணவன்-மனைவி இருவரது உடல்களையும் அருகருகே வைத்துப் புதைத்துள்ளனர். 1968ஆம் ஆண்டு இந்தச் சவப்பெட்டிகளைத் தோண்டி எடுத்தபோது, "ஜேட்" கற்களும், தங்கமும் அப்படியே இருந்தனவாம். ஆனால் அந்த இளவரசன், இளவரசியின் உடல்கள் மக்கி மண்ணாகியிருந்தன.

❖ ❖ ❖

வேளாண்மைத் தொடுதிரை கணினி மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் (Indian Farmers Fertilizer Co-operative Limited IFFCO) சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள

வேளாண்மைத் தொடுதிரை கணினி மையங்களைத் (IFFCO - Touch Screen Agri Portal Kiosks) திறந்து வைத்தார்கள்.

'இப்கோ' – IFFCO என்று அழைக்கப்படும் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு பாடுபடும் தேசிய அளவிலான நிறுவனம் ஆகும். இப்கோ நிறுவனத்தின் சார்பில், தமிழக விவசாயிகள் விவசாய உயர் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 5 கிராமக் கூட்டுறவு சங்கங்களில் அமைக்கப்படும் வேளாண்மைத் தொடுதிரை கணினி மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த வேளாண்மைத் தொடுதிரை கணினி மூலம், நேரடியாகவும், தொடர்புடைய இணைய தளங்களுக்குள் சென்றும் தமிழகத்தில் பயிரிடப்படும் 118 பயிர்கள் பற்றிய விவரங்கள், ரகங்கள், நிலத்தை நேர்த்தி செய்து விதைத்தல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, நீர் நிர்வாகம், அறுவடை தொடர்பான ஆலோசனைகள், குறிப்புகள் ஆகிய விவரங்களையும், பயிர்களுக்குத் தேவையான உரச் சத்துக்கள், அவற்றின் பயன்கள், பயிர்க் குறைபாடுகளின் அறிகுறிகள், அவற்றைச் சீர்செய்வதற்கு உரிய உரத்தைத் தேர்வு செய்யும் முறைகள் ஆகியவற்றையும் விவசாயிகள் அறிந்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி, தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன் இ.ஆ.ப., வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., இப்கோ நிறுவனத்தின் தலைவர் திரு.கே.சீனிவாச கவுடா, விற்பனை இயக்குநர் திரு.டி.கே.பட் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

26 மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழகத்தின் 26 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 1,388 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள 89,574 பணிகளைத் திறந்து வைத்து, மொத்தம் 1,012 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவுள்ள 12,156 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச் சென்று, அந்தந்த மாவட்டங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டப் பணிகளையும், கட்டடங்களையும் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அங்குள்ள மக்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இலட்சியப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். முதன் முதலாக தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் 15.4.2002 அன்று நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்று தேனி மாவட்ட மக்களுக்கு 140 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை வழங்கினார்கள். தொடர்ந்து 9.2.2004 அன்று வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று, 32 அரசு விழாக்களில் பங்கேற்று, புதிதாக கிருஷ்ணகிரி மாவட்டத்தைத் தொடங்கி வைத்து, மொத்தம் 3,030 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1 இலட்சத்து 43 ஆயிரத்து 98 பணிகளைத் திறந்து வைத்தார்கள். மொத்தம் 4,263 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 91 ஆயிரத்து 122 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், இந்த எல்லா மாவட்டங்களிலும் உள்ள 5 இலட்சத்து 31 ஆயிரத்து 784 பயனாளிகளுக்கு 326 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோபம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, திருவள்ளூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 26 மாவட்டங்களிலும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள 1,388 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 89 ஆயிரத்து 574 பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், இந்த அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்படவுள்ள மொத்தம் 1,012 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 12 ஆயிரத்து 516 பணிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்வின் போது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் மற்றும் அனைத்து அரசுத் துறைச் செயலாளர்கள் உடன் இருந்தனர். ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திறந்துவைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்துவைத்தார்கள்.

இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிருக்கு எதிரான குற்றங்களை முனைப்புடன் தடுப்பதற்காக, 1992–ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தித் தொடங்கி வைத்தார்கள். உலக அளவில் பாராட்டுப் பெற்ற இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தமிழகத்தில் இதுவரை 148 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சென்னை மாநகரக் காவல்கட்டுப்பாட்டு மையத் தொடக்கவிழா நிகழ்ச்சியில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் செயல்படவுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்துவைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்துவைத்துள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வருமாறு :–

சென்னை மாநகரம் – ராயபுரம், திருமங்கலம், திருவல்லிக்கேணி, கீழ்ப்பாக்கம், மயிலாப்பூர், சைதாப்பேட்டை, துறைமுகம், மகாகவி பாரதிநகர், வில்லிவாக்கம், திருவொற்றியூர், கிண்டி

- ★ திருச்சி மாநகர் – பொன்மலை
- ★ செங்கல்பட்டு – அம்பத்தூர், மாதவரம்
- ★ காஞ்சிபுரம் – மாமல்லபுரம்
- ★ திருவாரூர் – பொன்னேரி
- ★ விழுப்புரம் – கோட்டக்குப்பம்
- ★ கடலூர் – சேத்தியாத்தோப்பு
- ★ நாமக்கல் – வேலூர்
- ★ தருமபுரி – பென்னாகரம்
- ★ கோயம்புத்தூர் – பல்லடம்
- ★ ஈரோடு – பவானி, சத்தியமங்கலம்

★ நீலகிரி – உதகமண்டலம் ★ திருச்சி –மணப்பாறை (ஊரகம்), தேவலா

★ புதுக்கோட்டை – ஆலங்குடி ★ தஞ்சாவூர் – வல்லம்

★ திருவாரூர் – நன்னிலம் ★ மதுரை – திருமங்கலம்

★ விருதுநகர் – சாத்தூர், திருவில்லிபுத்தூர்

★ திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம்

★ தேனி – உத்தமபாளையம்

★ இராமநாதபுரம் – திருவாடானை, இராமேஸ்வரம்

★ சிவகங்கை – தேவகோட்டை

★ திருநெல்வேலி – திருநெல்வேலி (ஊரகம்), நாங்குநேரி

★ தூத்துக்குடி –விளாத்திகுளம்

பாதிப்புக்கு உள்ளாகும் பெண்கள் பயமோ, தயக்கமோ இன்றித் தங்களது குறைகளை எடுத்துக்கூறி அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் காவல் உட்கோட்டங்களிலும், ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும் என்று கடந்த 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்த 40 அனைத்து மகளிர் காவல் நிலையங் களுடன் தற்போது தமிழ்நாட்டில் 188 காவல் உட்கோட்டங் களிலும் ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

• • •

மாண்புமிகு தமிழக முதலமைச்சரி அவரிகளி வெளியிட்ட "சரிக்கரைத் தொழிலில் நிருவாகச் சவாலிகளி" - நூலி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 23.2.2004 அன்று சென்னையில், மாநிலத் தேர்தல் ஆணையர் டாக்டர் வி. பழனிச்சாமி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "சர்க்கரைத் தொழிலில் நிருவாகச் சவால்கள்" (Administrative challenges in Sugar Industry) எனும் நூலை வெளியிட்டார்கள்.

மாநிலத் தேர்தல் ஆணையராக பணியாற்றி வரும் டாக்டர் வி. பழனிச்சாமி தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், சர்க்கரைத் துறையின் ஆணையராகவும், பணியாற்றிய காலத்தில் கொள்கைகளை வகுப்பதிலும், அவற்றை செயலாக்குவதிலும் பெற்ற சிறப்பான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி மேற்கொண்டார். அப்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை நூல் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கான கொள்கை, நிருவாகம், அமைப்பு மற்றும் செயலாக்கம் ஆகியவை குறித்து விரிவாக இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும், நலிந்த சர்க்கரை ஆலைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதுடன், மற்றுமுள்ள சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்துவது, மாற்றுப் பணி மேற்கொள்வது ஆகியவை குறித்தும் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

டாக்டர் வி. பழனிச்சாமி அவர்களின் "சர்க்கரைத் தொழிலில் நிருவாகச் சவால்கள்" (Administrative challenges in Sugar Industry) நூலை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவரது அறிவார்ந்த முயற்சிக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

* * *

வணிகவரித் துறையில் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரித்துறையின் பல்வேறு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக, 1 கோடியே 25 இலட்ச ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்டுள்ள 36 புதிய வாகனங்களை நேரில் வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த புதிய வாகனங்களின் ஓட்டுநர்களிடம், அவர்களது வாகனங்களுக்குரிய சாவிகளை வழங்கினார்கள்.

இதனை அடுத்து, வணிகவரித்துறையில் 2002–2003 ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய வணிகவரி அலுவலர் திரு.இல.செல்லதுரை, துணை வணிகவரி அலுவலர் திரு.சையது அலி அகமது, செயலாக்கப் பிரிவு துணை வணிகவரி அலுவலர் திரு.வ.கலியமூர்த்தி, உதவி வணிகவரி அலுவலர் திரு.சி.முத்து ஆகியோருக்கு தலா ரூ.25,000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை, கோவை, திருநெல்வேலி, வேலூர், சேலம், திருச்சி ஆகிய வரிவிதிப்பு வட்டங்களைச் சேர்ந்த தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் 38 நபர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல உதவியாக தலா 20,000 ரூபாயும், 2 உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவியாக தலா 25,000 ரூபாயும் ஆக மொத்தம் 8 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

மேலும், இதே நிகழ்ச்சியில், பொதுமக்கள் தொலைபேசி மூலம் தெரிவிக்கின்ற வரி ஏய்ப்பு குறித்த ரகசியத் தகவல்கள், ஆலோசனைகள், குறைகள் மற்றும் புகார்களைப் பெற்று அதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வகைசெய்யும் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறையினையும் (Interactive Voice Recording System) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். வரி ஏய்ப்பு குறித்த ரகசியத் தகவல்களை கமுக்கமாக வழங்குகின்ற இந்த திட்டம் முதன் முறையாக தற்போதுதான் தொடங்கப்படுகிறது. இந்தத் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை சென்னை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் இயங்கும். இதற்கான தொலைபேசி எண்.044–28520535 ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தத் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு இந்த தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை சிறப்புடன் செயல்பட வாழ்த்தி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செ.ம.வேலுச்சாமி, வணிகவரித் துறைச் செயலாளர் திரு.எஸ்.ராஜரத்தினம், இ.ஆ.ப., வணிகவரித்துறை ஆணையர் திரு. எம்.அபுல்ஹசன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர். •

அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(18.2.2004)

விவசாயிகளின் நலனில் எனது அரசு எப்பொழுதுமே மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. 1998–ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதிய சட்டத்தை மைய அரசு இயற்றியது. இந்தச்சட்டத்தின் கீழ் முந்தைய தி.மு.க. அரசு 17.3.1999 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைத் தோற்றுவித்தது. அதன் பின்னர், சட்டப்படியாக பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப் படும் கட்டணத்தை சராசரி செலவு அடிப்படையில் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் மட்டுமே நிர்ணயிக்க இயலும்.

2001–ஆம் ஆண்டு மார்ச் திங்கள், முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (Accelerated Power Development Programme) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கான நிதி உதவியைப் பெற்றதால், வேறு வழியின்றி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களை நிறைவேற்றும் கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டது.

கடந்த தி.மு.க.அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 2003–ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான மின் கட்டண விகித ஆணையை பிறப்பித்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிறு மற்றும் குறு விவசாயிகள் உட்பட அனைத்து பயனீட்டாளர்களுக்கும் கட்டணம் விதித்து ஆணை பிறப்பித்தது. அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது பயனீட்டின் அடிப்படையில் யூனிட் ஒன்றுக்கு 20 காசு அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு 1 குதிரை விசைப் பம்பு செட்டிற்கு 250/– ரூபாய் வீதம் என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயித்தது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு விவசாயியும் இந்தக் கட்டணத் தொகையை இரண்டாகப் பிரித்து 6 மாதத்திற்கு ஒரு முறை கட்ட வேண்டும் என்று ஆணையிட்டது.

முந்தைய தி.மு.க. அரசு நிதி நிலைமையை மிகவும் சீர்கேடான நிலையில் விட்டுச் சென்ற போதிலும், கூடுதல் நிதிச் சுமையை ஏற்க இயலாத நிலையிலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காவது எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள கட்டணங்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்தும் வகையில் இந்த அரசே நேரடியாக அவர்களுக்குப் பண அஞ்சல் வாயிலாக பண உதவி அளித்து வருகிறது. இதனால், அவர்களுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைத்து வருகிறது.

இவ்வாறாக 3 குதிரை விசைப் பம்பு செட்டினைப் பயன்படுத்தும் ஒரு விவசாயி அரசிடமிருந்து நேரடியாக 1000/– ரூபாய் பண உதவி பெறுகிறார். பின்னர் அவர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 750/– ரூபாய் கொடுக்க வேண்டும். உண்மையில் அவர் நிகர உதவியாக 250/– ரூபாய் பண உதவி பெறுகிறார். இந்த அடிப்படையில், பம்பு செட்டின் குதிரைத் திறன் பொறுத்து, அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 1,250/– ரூபாயை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எனது அரசு வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ளஇந்தப்பண உதவியினால் முதல் அரையாண்டிற்கான கட்டணத்தை பெரும்பாலான விவசாயிகள் எளிதாகச் செலுத்திவிட்டனர். இதனால், 8.56 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இதற்காக அரசு ஏற்றுக் கொண்டுள்ள செலவு ஆண்டு ஒன்றிற்கு 90 கோடி ரூபாய் ஆகும்.

கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணத்தினால் 2.5 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கு மிகையாக வைத்துள்ள விவசாயிகளும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு அரசு பண உதவி செய்ய வேண்டும் என்றும் எனக்கு விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, சிறு மற்றும் குறு விவசாயிகளைப் போல் 6.76 இலட்சம் இதர விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படும். அதாவது, 3 குதிரை விசைப் பம்புசெட்டினை பயன்படுத்தும் ஒரு விவசாயிக்கு அரசிடமிருந்து நேரடியாக 1,000/– ரூபாய் பண உதவி வழங்கப்படும். பின்னர் அவர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 750/– ரூபாய் கொடுக்க வேண்டும். 5 குதிரைத் திறன் மற்றும் அதற்கு மேல் உள்ள பம்பு செட்டுகளைப் பொறுத்த வரை, அதிகபட்சம் ஆண்டு ஒன்றுக்கு 1,250/– ரூபாய் வழங்கப்படும். நடப்பு நிதி ஆண்டில், இரண்டாவது அரையாண்டு தவணை செலுத்துவதற்காக பண அஞ்சல் 6.76 இலட்சம் இதர விவசாயிகளுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும். இதனால், அரசுக்கு ஒரு ஆண்டிற்கு 81 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகும். நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 40.5 கோடி ரூபாய் செலவு ஆகும். ஆக மொத்தம் தமிழ்நாட்டில் பம்புசெட்டு வைத்துள்ள 15.32 இலட்சம் விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு 171 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விவசாய பம்புசெட்டுகளுக்கு வகுத்துள்ள மின் கட்டணம் மிகவும் குறைவானது. இந்தக் குறைவான கட்டணத்தைக் கூட அரசே உதவிப்பணம் வாயிலாக விவசாயிகளுக்கு செலுத்தி வருகிறது. இதனால், அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. மின்சார வாரியத்திற்கு ஆகும் உற்பத்திச் செலவை விட அரசு, விவசாயிகளின் சார்பாக செலுத்தக்கூடிய இந்தக் கட்டணம் மிகவும் குறைவான அளவில் உள்ளதால், ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2,500 கோடி ரூபாய் மானியச் சுமையை தாங்க வேண்டிய நிலையில் உள்ளது.

இருந்தபோதிலும், கிராமப்புறங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள நான், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில், இந்த சிறப்புப் பண உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி, இதன் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தர தற்போது ஆணையிட்டுள்ளேன்.

எவ்வளவோ நிதி நெருக்கடி இருந்த போதிலும், அனைவரும் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற 1998–இல் போடப்பட்ட மைய அரசின் சட்ட நிர்ப்பந்தம் இருந்த போதிலும், நான் அனைத்து விவசாயிகளின் நலனையும் பாதுகாக்கும் வகையில், இந்தச் சிறப்பான வழிமுறையை வகுத்து, அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க வழி செய்துள்ளேன். இதனை அனைத்து விவசாயிகளும் முழு மனதுடன் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

□ □ □

நலிவடைந்த கலைஞர்களுக்கு ஆயுட்காலம் வரை நிதி உதவி

– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு!

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிந்த நிலையில் வாழ்ந்து வருகின்ற 500 கலைஞர்களுக்கு, அவர்களது ஆயுட்காலம் வரை மாதந்தோறும் 500 ரூபாய் உதவித்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

"கலையை வளர்ப்பது என்பது கலை வல்லுநர்களை வளர்ப்பதே ஆகும். எனவே, கலை வல்லுநர்களின் நலனைக் காப்பதில் எனது அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது" என்று கடந்த 25.11.2003 அன்று நடைபெற்ற இயல், இசை, நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்ததற்கு இணங்க, தமிழகத்தில் கலைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் கலையையே தொழிலாகக் கொண்டு வாழ்கின்ற கலைஞர்களின் குடும்ப நலனைக் காப்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்.

இதன் அடிப்படையில் வாழ்நாள் முழுவதும் கலை ஒன்றையே தங்களது தொழிலாகக் கொண்டு தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிவடைந்து மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிற 500 கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் நலிவடைந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் அவர்களது ஆயுட்காலம் வரை மாதந்தோறும் 500 ரூபாய் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்திக்கு தமிழகத்திலுள்ள சாதகமான சூழ்நிலை களை உரிய முறையில் பயன்படுத்தி, அறுவடைக்குப்பின் மேலாண்மை மற்றும் சேமிப்பு ஆகிய இனங்களிலும் அதிக கவனம் செலுத்திடும் நோக்கில் தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ள 'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை' (Tamil Nadu Horitculture Development Mission) தொடங்கி வைத்தார்கள்.

சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல், தரமான நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும்

விநியோகத்தை சீராக்க உரிய வழி முறைகளை உருவாக்குதல், தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல் ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் செயல்படுத்தப்படும் புதிய தொழில் நுட்பங்கள் உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி சிற்றியக்கம் (Mini - Mission), தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் தொழில்நுட்ப செயலாக்கம் மற்றும் வளர்ச்சி சிற்றியக்கம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் விற்பனைத் தொடர்பை ஏற்படுத்தல் சிற்றியக்கம் ஆகிய மூன்று சிற்றியக்கங்களை உள்ளடக்கியுள்ளது. தமிழ்நாட்டில் பெருமளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்காக மாம்பழ வளர்ச்சி இயக்கம், வாழை வளர்ச்சி இயக்கம், காய்கறி மற்றும் மரவள்ளி வளர்ச்சி இயக்கம், முந்திரி வளர்ச்சி இயக்கம், மலர்கள் வளர்ச்சி இயக்கம், மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம் ஆகிய பயிர் வாரியான வளர்ச்சி இயக்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியிலும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையிலும் ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்கும்.

இதே நிகழ்வின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வேளாண்மை பொறியியல் துறையால் செயல்படுத்தப்பட உள்ள 30 கோடி ரூபாய் மதிப்பிலான நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டம், வேளாண் துறையின் மாவட்டத் தகவல் மற்றும் வழிகாட்டல் மையங்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு சிறு வேளாண் வணிகக் கூட்டமைப்பு (Small Farmers Agri Business Consortium) ஆகியவற்றையும் தொடங்கி வைத்தார்கள்.

இதுவன்றி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் (Precision Farming) திட்டத்தைச் செயல்படுத்திட தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும், தோட்டக்கலைத் துறையும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.அண்ணாவி, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சித் துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு.என். நாராயணன், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு.சி.ராமசாமி, வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு.கண்ணன், இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் திரு.தனவேல், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ★



சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரப் புத்தகக் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

பொதுமக்களும், புத்தக ஆர்வலர் களும் **அனைத்து நூல்களையும் ஒரே இடத்தில் பார்வையிட்டு தங்களுக்குத் தேவையான நூல்களைத் தேர்வு செய்து வாங்குகின்ற வகையில் சென்னை** மாநகரில் **தற்போது ஆண்டுதோறும்** ஜனவரி மாதத்தில் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் புத்தகக் கண்காட்சி குறிப்பிட்ட சில நாள்கள் மட்டுமே நடைபெறுவதால் பெரும் பாலானோர் பயன் அடைய வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒரே இடத்தில் அனைத்து நூல்களும் இடம் பெறும் நிரந்தரப் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்தால் ஆண்டு முழுவதும் பொதுமக்கள் பயனடைய முடியும் என்பதுடன் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் சென்னைக்கு வரும்போது ஒரே இடத்தில் தங்களுக்குத் தேவையான நூல்களை வாங்கிக் கொள்ள முடியும் என்னும் நோக்கத்துடன் பதிப்பாளர்கள் உதவியுடன் சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சியை அமைத்திட ஆணையிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையின்படி தற்போது சென்னை கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தில் 3,000 சதுர அடி பரப்பளவில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புத்தகக் கண்காட்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தக் கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்பாளர்கள் பங்கு பெற்றிருப்பதாகவும், மொத்தம் 30,000க்கும் அதிகமான அனைத்து வகை நூல்களும் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன என்றும் கல்வித்துறைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார். இதைக்கேட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த நிரந்தரப்புத்தகக் கண்காட்சி சிறப்புடன் நடந்திட தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள நிரந்தரப் புத்தகக் கண்காட்சியின் பயனாக பொதுமக்கள் தங்களுக்குத் தேவைப்படும் நூல்களைத் தேடி சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள பதிப்பகங்களுக்கோ, கடைகளுக்கோ செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் ஒரே இடத்தில் அவற்றை வாங்கிக் கொள்ளலாம். இந்தப் புத்தகக் கண்காட்சியின் மூலம் பொதுமக்களிடம் புத்தகங்கள் வாங்கும் ஆர்வம் தூண்டப்படுவதுடன் படிக்கின்ற பழக்கமும் வெகுவாக அதிகரிக்கும். பொதுமக்களும், புத்தக ஆர்வலர்களும் பயன்பெறும் வகையில் அனைத்து பதிப்பாளர்களும் பங்கேற்க, அரசின் சார்பில் புத்தகங்களுக்கென்றே நிரந்தரக் கண்காட்சி அமைவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு.செ.செம்மலை, பள்ளிக் கல்வித்துறை (பொறுப்பு) செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத் தலைவர் திரு. இரா. முத்துக்குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். ❖

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் சாதனைகளை விளக்கும் நூல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றிய முழு விவரங்கள், முன்னேற்றம் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை விளக்கும் வகையில், சமூக நலத்துறைச் செயலர் திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., மற்றும் டாக்டர் எஸ்.கே. வெட்டிவேல் ஆகியோர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக'' (`Women's Own') என்ற நூலை வெளியிட்டார்கள்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர மகளிர் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று, தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழு என்ற புதுமையான திட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் மக்களின் பேராதரவைப் பெற்று, தமிழகத்தில் உள்ள 30 மாவட்டங்களிலும் மொத்தம் 1,55,022 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படும் மேலான நிலை உருவாகி உள்ளது. இந்தக் குழுக்களில் தற்போது மொத்தம் 26,30,438 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். வங்கிகளில் உள்ள இவர்களது மொத்தச் சேமிப்பு ரூபாய் 407.54 கோடி ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தின் பரிணாமத்தை விளக்கும் வகையில், மகளிர் இயக்கத்தின் செயல்பாடுகளை சரியான கண்ணோட்டத்தில் ஆய்வுசெய்து, அறிவியல் அடிப்படையில் அந்த மதிப்பீட்டு அனுபவங்களைத் தொகுத்து, சமூகநலத் துறையின் செயலாளர் மற்றும் டாக்டர் எஸ்.கே. வெட்டிவேல் ஆகியோர் "மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக'' (`Women's Own') எனும் பெயரில் ஆங்கிலத்தில் நூல் வடிவில் உருவாக்கி உள்ளனர். இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதுடன் இத்தகைய இயக்கத்தில் ஆர்வமுடையவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய கிராமப்புற மகளிரின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்குகின்ற மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் உந்து சக்தியாக இருந்து, அவர்களது கண்ணீரைத் துடைத்து மகளிர் தங்கள் வாழ்வில் நம்பிக்கையும், முன்னேற்றமும் பெற்றிட அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் "மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக''(`Women's Own') என்னும் இந்த நூலை 25.2.2004 அன்று வெளியிட்டார்கள். முதல் பிரதியை தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிறப்பான இந்த முயற்சியை மேற்கொண்டமைக்காக திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., அவர்களுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., நூல் ஆசிரியர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திரு. பா. ஆனந்த், பொது மேலாளர் திரு.நா.மாரிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர். ❖

நீலகிரி மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன

தமிழக அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் 3–ஆவது திட்டம் நீலகிரி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 334 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகிறது. இவற்றில் 50 மையங்களை நர்சரி பள்ளிகளாக உயர்த்தி இயங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி உதகை வட்டத்திலுள்ள 17 அங்கன்வாடி மையங்களும், குன்னூர் வட்டத்திலுள்ள 7 அங்கன்வாடி மையங்களும், கூடலூர் வட்டத்திலுள்ள 17 அங்கன்வாடி மையங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள 9 அங்கன்வாடி மையங்களும் ஆக மொத்தம் 50 அங்கன்வாடி மையங்கள் இனி நர்சரி பள்ளியாக இயங்கும்.

நீலகிரி மாவட்டத்தில் 13.1.2004 முதல் இவ்வாறு அறிவிக்கப்பட்ட உதகை வட்டத்திலுள்ள கல்லக்கொரை, சோலூர் ஒசட்டி, கோட்டட்டி, மேல்கவ்வட்டி, கொதுமுடி, அணிக்கொரை, கீழ் தலையாட்டிமந்து, முள்ளிக்கொரை, தக்கர்பாபாநகர், போர்த்தியாடா, உல்லத்தி, நடுவட்டம், சின்னகுன்னூர், கோடப்பமந்து, இடுஹட்டி, நுந்தளா, பிக்கட்டி ஆகிய இடங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களும், குன்னூர் வட்டத்திலுள்ள கிருஷ்ணபுரூர், கேத் தொரை, அனியாடா, டொராமியா, அளக்கரை, தூதூர்மட்டம், இளித் தொரை ஆகிய இடங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களும், கூடலூர் வட்டத்திலுள்ள அத்திப்பள்ளி, கல்லிங் கரை, பாண்டகாப்பு, தொரப்பள்ளி, மசினகுடி, அம்பலவயல், பொன்னூர், தேவாலா, காந்திநகர், தேவர்சோலை, நந்தாட்டி, வண்டிப்பேட்டை, பக்கனா, சூண்டி, நாடுகாணி, அம்பலமூலா, மேபீல்ட் ஆகிய அங்கன்வாடி மையங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள ஜெகதளா, காமராஜ்நகர், சோலூர் மட்டம், இட்டக்கல், கன்னிகாதேவிகாலனி, காக்காசோலை, ஓம்நகர், கெடாமட்டம், கொட்டக்கம்பை ஆகிய அங்கன்வாடி மையங்களும் ஆக மொத்தம் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக இயங்கும்.

13.1.2004 அன்று காலை 10 மணிக்கு உதகையில் கீழ்தலையாட்டிமந்து அங்கன்வாடி மையத்தை நர்சரி பள்ளியாக உயர்த்தி அதன் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தனது தலைமையுரையில் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:–

"நீலகிரி மாவட்டத்தில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நான்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களில் மொத்தமாக 334 அங்கன்வாடி மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றது. இவைகளில் இம்மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்களை நர்சரி பள்ளிகளாக உயர்த்தி செயல்படவும், மாநில அளவில் 5000 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தி செயல்படவும், அரசு அனுமதித்துள்ளது. நம் தாய்மொழி தமிழ்மொழியாக இருப்பினும் ஆங்கில மொழியையும் குழந்தைகளுக்கு முறையாகக் கற்றுக் கொடுக்கவும், பெற்றோர்களுக்கு பணச்சுமை இல்லாமலிருக்கவும், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைத்து தர குழந்தைகளும் ஆங்கிலக் கல்வியைக் கற்கவுமே அரசு இப்புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாம் தினசரி பயன்படுத்தும் ஆங்கிலச்

விளையாட்டு வீரருக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சர்வதேச கையுந்துபந்து (Volley Ball) விளையாட்டு வீரரும், தேசிய பயிற்றுநருமான திரு ஜி.இ. ஸ்ரீதரன் அவர்களுக்கு பரிசாக 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்புக்கு உரிய சாவியினையும், டேபிள் டென்னிஸ் பயிற்றுநர் திருமதி பி. புவனேஸ்வரி அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையையும் நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

சர்வதேச கையுந்துபந்து விளையாட்டு வீரரும், தேசிய பயிற்றுநருமான தமிழகத்தைச் சேர்ந்த திரு. ஜி.இ.ஸ்ரீதரன், 250 சர்வதேச விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்று விளையாடி உள்ளார். திரு. ஜி.இ. ஸ்ரீதரன் அவர்கள் 1982 ஆம் ஆண்டில் விளையாட்டு வீரருக்கான "அர்ஜுனா விருது'' வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும், தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் 1982 ஆம் ஆண்டு இவருக்கு "மாமல்லன் விருது'' வழங்க கௌரவித்தது. இவர் இந்திய இளைஞர் கையுந்துபந்து விளையாட்டு அணிக்குத் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டு இவரது சீரிய தலைமையின் கீழ் இந்திய இளைஞர் கையுந்துபந்து அணி ஆசிய இளைஞர் கையுந்துபந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், 2003 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இளைஞருக்கான உலக கையுந்துபந்து சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் வென்றது. திரு. ஜி.இ. ஸ்ரீதரன் அவர்களின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை வில்லிவாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத்தால் கட்டப்பட்டுள்ள "உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்பில்'' 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு இல்லத்தை அவருக்குப் பரிசாக வழங்கி அந்த வீட்டிற்குரிய சாவியை 27.2.2004 அன்று நேரில் அளித்துப் பாராட்டினார்கள்.

டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரரான திரு. எஸ். இராமன் அவர்கள் 2002 ஆம் ஆண்டில் இங்கிலாந்து மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் கலந்துகொண்டு இரண்டு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றார். தமிழக அரசால் இவருக்கு உயர் ஊக்கத்தொகையாக ரூபாய் 20 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டது. விளையாட்டு வீரருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையில், 15 சதவிகிதத் தொகை அவரது பயிற்றுநருக்கு வழங்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திரு. எஸ். இராமன் அவர்களின் பயிற்றுநரான திருமதி. பி. புவனேஸ்வரி அவர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையை ஊக்கத் தொகையாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2004 அன்று நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

பரிசாக வழங்கப்பட்ட வீட்டிற்குரிய சாவியைப் பெற்றுக் கொண்ட திரு. ஜி.இ. ஸ்ரீதரன், ஊக்கத்தொகையைப் பெற்றுக்கொண்ட திருமதி பி. புவனேஸ்வரி ஆகியோர் தங்களது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர். ✶

சொற்களை அனைத்து குழந்தைகளும் கிளிப்பிள்ளை போல் கூறாது, வார்த்தையின் அர்த்தம் புரிந்து ஐம்புலன்களால் உணர்ந்தும் கற்றுக் கொள்கின்றனர்.

எனவே தமிழக அரசால் நடத்தப்படும் நர்சரி பள்ளிகளுக்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தினமும் காலை 9.30 மணிக்கு தவறாது தாங்களே அனுப்பி அதன் முழுப்பயன்களையும் அடையுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 18 அம்சத் திட்டங்களில் தமிழகத்தை ஊட்டச்சத்து பற்றாக்குறையில்லாத மாநிலமாக உருவாக்குதல் முக்கியம் வாய்ந்த ஒரு திட்டமாகும். இதனடிப்படையில் நீலகிரி மாவட்டத்தை முழுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையில்லாத மாவட்டமாக உருவாக்கிட அங்கன்வாடி மையங்கள் மூலம் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே நீலகிரி மாவட்டம் முழுமையான ஊட்டச்சத்து பற்றாக் குறையில்லா மாவட்டமாக உருவாக்கிட தாங்கள் தங்கள் மேலான ஒத்துழைப்பினை நல்கிடுமாறும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதகை நகராட்சி ஆணையாளர் திரு.பொன்முனிராஜ், யு.எஸ்.எஸ்.எஸ். அரசு சாரா நிறுவனத்தலைவர் அருட்தந்தை அலெக்சாண்டர் மேத்யூ, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் திரு.போஸ், அனைவருக்கும் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. தா.குணசேகரன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.மு.ஞானகுரு, மாவட்ட பொது சுகாதார செவிலியர் திருமதி. மாலைமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி தா.இராமுத்தாய் அனைவரையும் வரவேற்றார். ❖

தமிழகத்தில் போலியோ ஒழிப்பு முடிவுக்கு வந்தது

இந்த ஆண்டிற்கான இரண்டாம் சுற்று பல்ஸ் போலியோ சிறப்பு முகாம் 22.2.2004 ஞாயிறு அன்று நடைபெற்றது. முதலாம் சுற்று முகாமில் ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இரண்டாம் தவணையாக 22.2.2004 அன்று மீண்டும் சொட்டு மருந்து கொடுக்க பொது சுகாதாரத்துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தது. மேலும் முதலாம் சுற்று முகாமின் போது ஏதோ ஒரு காரணத்தினால் சொட்டு மருந்து போடாமல் விடுபட்ட குழந்தைகளுக்கும் மற்றும் புதிதாகப் பிறந்துள்ள குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

[illegible]

பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் பங்கேற்று முதல் சுற்று முகாமை வெற்றி பெறச் செய்தனர். இதற்கு அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் ஒத்துழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட டிப்ஸ்டிக் (DIPSTICK SURVEY) ஆய்வின்படி, ஒரு சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மேலும் கூடுதல் சொட்டு மருந்து தேவையில்லை என்று கருதுவதாகத் தெரியவந்துள்ளது. போதுமான அளவு விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் பெற்றோர்களிடையே இன்னும் சில சந்தேகங்கள் இருந்துவருகின்றன. எனவே பொதுமக்கள் கவனத்திற்கு கீழ்க்கண்ட விளக்கங்கள் அவசியமாகிறது.

[illegible] போலியோ [illegible]?

ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பது போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் நோக்கமாகும். பாதுகாப்பான வேக்ஸின் கொடுக்கப்படும்போது, நோய் பாதிப்புக்கு ஏதுவாகும் குழந்தைகளின் குடல்களிலுள்ள போலியோவை உண்டாக்கும் கொடிய நுண்கிருமிகள் இரத்தத்திற்குள் செல்லவிடாமல், மலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு, சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுகிறது. வழக்கமாகக் கொடுக்கும் தடுப்பு மருந்தின் மூலம் போலியோ நோய் பரவாமல் தடுக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நுண்கிருமிகள் பரவாமல் சுற்றுச் சூழலிலிருந்து அறவே ஒழிக்க முடியும். ஆகவே, ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

[illegible]

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.
2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்த பாதிப்பும் இல்லை.
3. ஒரிரு நாள்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாள்களில் மீண்டும் கொடுக்க வேண்டும்.
4. முகாம் நாள்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.
5. வயிற்றுப் போக்கு, சளி, காய்ச்சல் மற்றும் பிற சிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாள்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.
6. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு [illegible] நாள்களில் சொட்டு மருந்து கொ[illegible] அவசியமாகும்.
7. முதல்முறை முகாமின்போது விடுபட்ட குழந்தைகளுக்கும் இரண்டாம் முறை முகாமில் தவறாமல் சொட்டுமருந்து கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களுக்கு அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி

– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வகையிலும், கடனைத் திருப்பி செலுத்திட அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று, திரும்ப செலுத்த வேண்டிய தவணையைச் செலுத்தத் தவறியவர்கள் 1.10.2003 அன்று நிலுவையில் உள்ள தங்களது தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.4.2004–க்குள் முழுமையாகச் செலுத்தினால், அதற்குரிய அபராத வட்டியோ, சேவைக் கட்டணமோ, அவர்கள் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல, முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் 1.10.2003 அன்று நிலுவையில் உள்ளவாறு, தமிழ்நாடு வீட்டுவசதி இணையத்திற்கு தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்தினால், அந்தச் சங்கங்களும் அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய தேவை இல்லை.

இந்த ஆணையின்படி தமிழகம் முழுவதும் உள்ள 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்கள் பயன் அடைவார்கள். அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டிய 125 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களின் கடன் சுமையைக் குறைத்து, தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்திட அவர்களை ஊக்குவிக்கும் இத்திட்டத்தின் மூலம் புதிய கடன்கள் வழங்கவும், அதன்மூலம் வீட்டுவசதி பெருமளவில் பெருகிடவும் வாய்ப்பு உருவாகும்.

முதல் முறையைப் போலவே இரண்டாம் சுற்றிலும், தமிழ்நாட்டில் சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாள்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

சுமார் 72 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்றனர். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத் துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இரண்டாவது முகாமிலும் ஈடுபட்டார்கள். சொட்டு மருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை கண்டு விரலில் "ஜென்ஷன் வயலட்" என்ற அடையாள திரவம் வைக்கப்பட்டது. குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்த திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை "P" என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. போலியோ நோய் ஒழிப்பில் நாம் இறுதி கட்டத்தை அடைந்துள்ளோம். இருந்தபோதிலும் சமீபத்தில் திருச்சியிலும் சென்னையிலுமாக இரண்டு குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அதிக அளவில் குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளதால், போலியோ சிறப்பு முகாமை முனைப்புடன் செயல்படுத்தியுள்ளது தமிழக அரசு. ஒரு குழந்தை கூட விடுபடாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டால் மட்டுமே போலியோ நோயை முற்றிலுமாக நமது மாநிலத்திலிருந்து ஒழிக்க முடியும்.

வருங்கால இளைஞர்களை ஊனமில்லாமல் காப்பது நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஊனமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்.

–சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு

வலுவான பொருளாதாரத்தை அமைப்பதற்கு அடித்தளமாக விளங்குவதே உள்கட்டமைப்பு தான். தமிழ் நாட்டிலுள்ள உள்கட்டமைப்புகளை உலகத் தரம் வாய்ந்தவையாக மேம்படுத்திட தமிழ்நாடு அரசு விரிவாக்கத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. உலக வங்கியின் கடன் உதவியுடன் பல திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் அவற்றில் முதன்மையான, மிகப் பெரிய திட்டமாகும். சாலைகளின் தரத்தை மேம்படுத்தி, சாலைப் போக்குவரத்து பாதுகாப்பாகவும், விரைவாகவும், சிக்கனமாகவும், சொகுசாகவும் அமைத்து, தொழில்களும், வேளாண்மையும் வளர்ச்சியடையவும், மீன் முதலான கடல் சார்ந்த பொருட்கள் எளிதாகக் கொண்டு செல்லப்படவும் சுற்றுலாவை மேம்படுத்திடவும் வழி வகுப்பதே இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

உலக வங்கியுடன் கடன் ஒப்பந்தம் 2003–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டம் 450 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூபாய் 2,160 கோடி) செலவில் செயலாக்கப்படவுள்ளது. இதில் உலக வங்கி 348 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூபாய் 1,670 கோடி) கடன் அளிக்கும். இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும். இத்திட்டம் இப்போது செயலாக்கப்பட ஆயத்த நிலையில் உள்ளது. இத்திட்டத்திற்காகப் பணியாற்றுவோர் யாவரும் தங்களது கடமைகளையும், தாங்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் நன்குணர்ந்து செயலாற்றி, காலதாமதமும், நிதி இழப்புமின்றி இத்திட்டத்தைச் செயலாக்கும் வழிமுறைகளை எடுத்துரைக்கும் பொருட்டு திட்டப் பயிலரங்கம் 2004–ஆம் ஆண்டு பிப்ரவரி 12–ஆம் நாள் நடத்தப்பட்டது.

சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று பாகங்கள் உள்ளன.

சாலை மேம்பாடு

14 புறவழிச்சாலைகள் மற்றும் 9 சாலை மேம்பால கட்டுமானப் பணி உட்பட 750 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, உறுதியாக்கப்படுவதே சாலை மேம்பாட்டின் தலையாய குறிக்கோளாகும். மேலும் தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு கூட்டு சேர்ந்து சாலைகளையும் பாலங்களையும் துணைத் திட்டங்கள் மூலம் அமைக்கவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. சாலை மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்கண்டவாறு ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

ஒப்பந்தத் தொகுதிகள் மற்றும் சாலைகள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் – 01 (393 கி.மீ.) – 1. ஆற்காடு–திருவண்ணாமலை – திருக்கோவிலூர்–இலவனாசூர், 2. போளூர் – செங்கம், 3. விருத்தாச்சலம் – ஜெயங்கொண்டம் –கும்பகோணம்–திருவாரூர், 4. அரியலூர் – செந்துறை – ஜெயங்கொண்டம்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் – 02,03 மற்றும் 04.(334 கி.மீ.) – 1. நாகப்பட்டினம் – கட்டுமாவடி, 2. கட்டுமாவடி – இராமநாதபுரம், 3. இராமநாதபுரம் – தூத்துக்குடி.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –(05 17 கி.மீ.)– கும்பகோணம் புறவழிச்சாலை (தொடர்ச்சிப் பகுதி) மற்றும் இராமநாதபுரம் புறவழிச்சாலை.

சாலைப் பராமரிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகள்

மாநிலச் சாலைகளில் இலகுவாகவும், பாதுகாப்பாகவும், தங்கு தடையின்றியும், போக்குவரத்து நடைபெற வழிவகுத்திட காலமுறைப் பராமரிப்புப் பணிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு சார்ந்த சிறு பணிகள் செய்யப்படுவது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,000 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் நான்கு ஆண்டு காலத்தில் செப்பனிடப்படும். சாலைப்பாதுகாப்பு முறைகள் தான் இத்திட்டப் பாகத்தின் முதன்மைக் குறிக்கோளாகும்.

இத்திட்டப் பாகத்தின் மூலம் சாலை விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, சுமார் 100 இடங்களில் தகுந்த நிவரணப் பணிகள் வடிவமைக்கப்பட்டு, செயலாக்கப்படும்.

துறை நிருவாகச் சீரமைப்பும், கொள்கைகளை உருவாக்குதலும்

நெடுஞ்சாலைத்துறையின் நிருவாக முறைகளைச் சீர் திருத்தி, புதுமைகளைப் புகுத்தி, உறுதிப் படுத்துவதே இத்திட்டப் பாகத்தின் குறிக்கோள். இத்துறைக்கான தகவல் தொழில்நுட்பத்தை உருவாக்கி, கணினி மயமாக்கப்பட்ட சாலைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை சாதனத்தைத் தயாரிப்பதும் இத்திட்டத்தில் அடங்கும். சாலைப் போக்குவரத்துக் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அரசுத் துறையுடன் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க வழிகோலுவது மற்றொரு நோக்கமாகும்.

சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் சீர்திருத்தங்கள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏராளமான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. சாலை மேம்பாட்டில் சீர்திருத்தங்களைச் செய்வதில் தமிழ்நாடு அரசுதான் இந்தியாவிலேயே முதன்மை யானதாகத் திகழ்கிறது. சாலைப் பராமரிப்பு நிதி மற்றும் வாரியம் ஆகியவற்றை நிறுவுதல், பிற சட்டமுறைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது இலட்சியத்தை நிறைவேற்றிட இத்திட்டம் பெரிதும் துணைபுரியும். ❖

துன்புறுத்தப்பட்ட ஒட்டகங்களை மீட்டு பராமரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவு

இயற்கையின் ஓர் அங்கமான விலங்குகள் மீது தனி அன்பு காட்டிவரும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் சரியான உணவு வழங்கப்படாமலும், முறையாகப் பராமரிக்கப்படாமலும் துன்புறுத்தப்பட்ட இரண்டு ஒட்டகங்களை மீட்டு வண்டலூர் உயிரியல் பூங்காவில் வைத்து பராமரித்திட ஆணையிட்டுள்ளார்கள்.

இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல், விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் உள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு, மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய அனைத்து உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவையே என்னும் அடிப்படையில், விலங்குகளிடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனி அன்பும், கருணையும் கொண்டுள்ளார்.

சென்னை மெரினா கடற்கரையில் உல்லாச சவாரிக்குப் பயன்படுத்தப்படும் குதிரைகள் மிகவும் மோசமான நிலையில், தக்க பராமரிப்பின்றி நடத்தப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததும், அரசு கால்நடை மருத்துவர்களை அனுப்பி, அந்தக் குதிரைகளை மீட்டு தக்க மருத்துவ சிகிச்சை அளித்ததுடன், இத்தகைய விலங்குகளை வணிக ரீதியில் பயன்படுத்துவதையும், தக்க பராமரிப்பின்றி கொடுமைப் படுத்தப்படுவதையும் உடனடியாகத் தடுத்து நிறுத்த தக்க ஆணைகளைப் பிறப்பித்தார். மயிலாப்பூரில் ஒரு யானை அதனுடைய பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும், அந்த யானை முறைகேடாக பிச்சையெடுக்க பயன்படுத்தப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்கு வந்தவுடன், உடனடியாக அந்த யானையை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைத்து, மருத்துவ சிகிச்சையும், அடைக்கலமும் அளித்திட ஆணையிட்டார். மேலும், தமிழ்நாட்டில் கோயில்களிலும், தனியார் பொறுப்பிலும் உள்ள 100 யானைகளுக்கு புத்துணர்வு அளித்து உடல்நலமும், மனநலமும் பேணும் வகையில், முதுமலையில் ஒரு மாத காலம் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் நடத்தினார். விலங்குகள்பால் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டுள்ள அன்புக்கும், அக்கறைக்கும் இந்த நிகழ்ச்சிகள் ஒரு சில உதாரணங்கள் ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் இரண்டு ஒட்டகங்கள் தக்க உணவு வழங்கப்படாமலும், முறையான பராமரிப்பின்றியும், வணிக ரீதியில் பலன் பெறுவதற்காக அதன் உரிமையாளர்களால் துன்புறுத்தப்படுவதைத் தொலைக் காட்சி செய்திகள் வாயிலாக அறிந்தார்கள். தங்களது குறைகளை வாய்விட்டுச் சொல்ல முடியாத இத்தகைய விலங்குகளுக்கு எவ்வகையான துன்பமும் இழைக்கப்படக் கூடாது என்றும், இவை தக்க உணவளிக்கப்பட்டு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடனடியாக இந்த ஒட்டகங்களை மீட்டு மருத்துவ சிகிச்சையும், அடைக்கலமும் அளிப்பதற்காக வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைக்க ஆணையிட்டார்.

இதன்படி, இந்த இரண்டு ஒட்டகங்களும் மீட்கப்பட்டு, முறையாகப் பராமரிக்கப்படும் வகையில், வண்டலூர் உயிரியல் பூங்கா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

* * *

பொங்கல் திருநாளையொட்டி, தமிழ்நாட்டில் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15-8-2003 அன்று நடைபெற்ற 57ஆவது சுதந்திர தின விழாவின்போது, ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி சேலை வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கேற்ப வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு 81 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் வழங்கப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப் பட்டது.

ஊரகப் பகுதிகளில் 15-1-2004 முதல் 25-1-2004 வரையிலும் நகர்ப்புற பகுதிகளில் 1-2-2004 முதல் 10-2-2004 வரையிலும் இலவச வேட்டி சேலை வழங்கும் பணி நடைபெற்றது. 15-1-2004 பொங்கல் திருநாளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இலவச வேட்டி சேலை திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு ஏழை எளிய மக்களும் பயன்பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன், ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காகவும், இத்திட்டத்தினை மேலும் விரிவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, அதன்படி தமிழ்நாட்டில் பொது விநியோக முறையில் அரிசி கூப்பன் மூலம் அரிசி வாங்கும் அனைத்துப் பிரிவு ஏழை எளிய மக்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட அடையாள சீட்டுகளை வழங்கி

தகுதியுள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் பயன்பெறத்தக்க வகையில் ஆணையிட்டார்கள்.

இதன்படி, 1,07,02,530 வேட்டிகளும் 1,07,02,530 சேலைகளும் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ.173 கோடி ஆகும். இதனால் 2 கோடியே 22 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிறார்கள். அரிசி கூப்பன் வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தகுதியின் அடிப்படையில் தலா ஒரு வேட்டி ஒரு சேலை வழங்கப்பட வேண்டுமென்றும், முதற்கட்டமாக ஊரக மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் இலவச வேட்டி சேலை விநியோகத்தை 20-2-2004-க்குள் முழுவதுமாக செயல்படுத்தி முடிக்கவும், நகர்ப்புற மற்றும் மாநகரப் பகுதிகளில் 21-2-2004 அன்று தொடங்கி 29-2-2004க்குள் சிறப்புற செயல்படுத்தி முடிக்க வேண்டுமெனவும், ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் செயலாக்கப் பட்டது.

இலவச வேட்டி/சேலை கிராமங்களில் உள்ள பொது விநியோகக் கடைகளில் கிராம நிர்வாக அலுவலர் தலைமை கொண்ட மூன்று நபர் குழுவினால் வழங்கப்பட்டது.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை : *சென்னை – 4,98,931, கோயம்புத்தூர் – 6,50,433, கடலூர் – 4,18,881, தருமபுரி – 5,47,507, திண்டுக்கல் – 3,17,439, ஈரோடு – 3,48,938, காஞ்சிபுரம் – 4,92,129, கன்னியாகுமரி–3,69,914, கரூர்–1,58,105, மதுரை –4,57,738, நாகப்பட்டினம் – 2,87,337, நாமக்கல் –1,73,224, பெரம்பலூர் – 2,58,927, புதுக்கோட்டை–2,58,618, இராமநாதபுரம் – 2,43,204, சேலம் – 4,16,900, சிவகங்கை – 2,40,162, தஞ்சாவூர் – 4,07,258, நீலகிரி – 1,75,157, தேனி – 2,24,692, தூத்துக்குடி –2,38,672, திருச்சிராப்பள்ளி – 4,04,596, திருநெல்வேலி – 4,97,990, திருவள்ளூர் – 4,30,332, திருவண்ணாமலை – 4,29,170, திருவாரூர் – 2,23,556, வேலூர் – 6,26,948, விழுப்புரம் –6,17,607, விருதுநகர் – 2,88,075.*

இலவச வேட்டி, சேலைகள் பெற்று மனமகிழ்ச்சியுடன் பொங்கல் திருநாளைக் கொண்டாடிய ஏழை, எளிய மக்கள், இந்த அரிய திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உலகப் புகழ் பெற்ற கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜன் அவர்களது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

1887–ஆம் ஆண்டில் எளிய குடும்பம் ஒன்றில் பிறந்த திரு ஸ்ரீனிவாச இராமானுஜன் தனது அளப்பரிய கணிதத் திறமையால் உலக நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்களின் கவனத்தை ஈர்த்தார். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பயின்ற திரு.ஸ்ரீனிவாச இராமானுஜன் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார், இதனை அடுத்து, கேம்பிரிட்ஜ் தத்துவயியல் கழகத்தின் உயர் உறுப்பினராகவும், லண்டன் ராயல் குழு உறுப்பினராகவும், கேம்பிரிட்ஜ் டிரினிடி கல்லூரி உயர் உறுப்பினராகவும் தேர்வு பெற்று புகழ் அடைந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இத்தகு பெருமையும், சிறப்பும் கொண்டு உலக நாடுகளின் பார்வையை இந்தியாவை நோக்கித் திருப்பி தமிழகத்திற்கு தனிப் பெருமை சேர்த்த கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜன் அவர்களுக்கு சிறப்பு செய்திடும் வகையில், மகாமகம் திருவிழாவை ஒட்டி, அவரது திருவுருவச் சிலையை கும்பகோணம் அரசினர் கல்லூரியில் அமைத்திட ஆணையிட்டார்.

இதன்படி, கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நிறுவப்பட உள்ள, கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜனின் மார்பளவு வெண்கலச் சிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்வின் போது மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., உயர் கல்வித் துறைச் செயலாளர் திரு.கே.ஞானதேசிகன், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு.முத்துவீரகணபதி ஆகியோர் உடனிருந்தனர். ❖

கணிதமேதை எஸ். இராமானுஜன் எண்ணறிவியலில் இந்தியாவைத் தலை நிமிரச் செய்தவர். 1887 டிசம்பர் 22 ஆம் நாள் பிறந்த இவரது பெற்றோர் கே. சீனிவாச அய்யங்கார் – கோமளத்தம்மாள். படிப்படியாகக் கல்வி பயின்று சென்னை கணக்கு தணிக்கை அலுவலகம், சென்னை துறைமுகம் என பணியாற்றி பின்னர் கணித ஆய்வில் ஈடுபடும் பொருட்டு பணியிலிருந்து விலகினார். இவரது கணித ஆற்றலைக் கண்ட அறிஞர்கள் இவரை இலண்டனுக்கு வரவழைத்தனர். அங்கு 5 ஆண்டுகள் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் உடல்நிலையைக் கருதி சென்னை திரும்பினார். பெர்னௌலிஸ் எண்களின் தன்மைகள், டைவர்ஜென்ட் சீரிஸ், நூற்றுக்கும்மேற்பட்ட தேற்றங்கள் உள்ளிட்ட பல கணித வகைகளைக் கண்டறிந்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ராயல் அறிவியல் கழகம், டிரினிடி கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் போன்றவை கணிதமேதை இராமானுஜனைப் பெருமைப்படுத்தியுள்ளன.

இளம் வயதிலிருந்தே கணித ஆற்றல்கள் நிரம்பப் பெற்ற இராமானுஜன் தமது 33ஆம் வயதில் 26.04.1920 அன்று காலமானார்.

மகாமகம் திருவிழாவையொட்டி மகத்தான கலையரங்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் திராவிடப் பாரம்பரிய கலை நுணுக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தை திறந்துவைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரில் மகாமகத் திருவிழா இந்த ஆண்டு 6.3.2004 அன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மகாமகத் திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களும், இப்பகுதியில் வாழ்கின்ற மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் 4.5 ஏக்கர் பரப்பளவில் 20 ஆயிரம் சதுர அடியில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தினை 20.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் திறந்துவைத்தார்கள்.

பெரிய அளவிலான விழாக்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தக்கூடிய வகையில் பரந்த மேடையும், அதன் இருபக்கங்களிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒப்பனை அறைகளும் இந்தக் கலையரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தில் ஆயிரம் நபர்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணும் வகையில் இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மாபெரும் கலையரங்கம் 2003 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தொடங்கப்பட்டு ஏறத்தாழ 100 நாட்களில் பொதுப்பணித் துறையால் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு ஒ. பன்னீர் செல்வம், பொதுப்பணித்துறை செயலாளர் நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு. ஜெயச்சந்திர மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கும்பகோணத்தில் புதிய புறவழிச்சாலை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மகாமகத் திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு 24 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 8.76 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலை, காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 2 உயர்மட்டப் பாலங்கள் மற்றும் அரசலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு உயர்மட்டப் பாலம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் கொண்டாடப்படும் மகாமகத் திருவிழாவிற்கு வடமாநிலத்தில் நடைபெறுகின்ற கும்பமேளா திருவிழாவிற்கு இணையாக இந்தியா முழுவதிலும் இருந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். அதுமட்டுமன்றி ஏராளமான திருக்கோயில்களைத் தன்னகத்தும், தன்னைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொண்டுள்ள கும்பகோணம் நகருக்கு நாள்தோறும் பெருவாரியான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இவ்வாறு மிகப் பெரிய அளவில் வாகனங்களில் வருகின்ற பக்தர்களின் நலன் மற்றும் வளர்ந்து வரும் கும்பகோணம் நகரின் போக்குவரத்து மேம்பாட்டை கருத்தில் கொண்டு, கும்பகோணம் நகரத்திற்கு ஒரு புறவழிச்சாலை அமைத்திட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நெடுநாளைய கோரிக்கை ஆகும்.

இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எதிர்வரும் மகாமகத் திருவிழாக் காலத்தில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கின்ற வகையில் தற்போதுள்ள கும்பகோணம் சாலைகளும், மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாலைகளும் இல்லை என்பதால், இதற்கென 24 கோடியே 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து கும்பகோணம் புறவழிச் சாலை அமைக்கும் பணியினைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றிட ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையை ஏற்று சாதாரணமாக ஒரு ஆண்டு காலம் பிடிக்கும் இந்தப் பணி நான்கு மாதங்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க



சாதனையாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள கும்பகோணம் புறவழிச் சாலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று திறந்துவைத்தார்கள். அப்போது இந்தச் சாதனையைப் படைத்த நெடுஞ்சாலைத் துறை பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்தப் புறவழிச் சாலையின் மொத்த நீளம் 8.76 கி.மீட்டர் ஆகும். சாலையின் இருபுறமும் 2.5 மீட்டர் அகல புருவங்களோடு, 7 மீட்டர் அகலமுடைய ஒடுதளத்துடன் இந்த புறவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புற வழிச் சாலையின் பாதையில் குறுக்கிடுகின்ற காவேரி ஆற்றின் குறுக்கே உமாமகேஸ்வரபுரம் மற்றும் பாபராஜபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும், அரசலாற்றின் குறுக்கே வலையப்பேட்டையிலும் மொத்தம் மூன்று உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இவைமட்டுமின்றி, புறவழிச் சாலை செல்லுகின்ற பாதையில் 17 குழாய் பாலங்களும், 28 சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு ஒ. பன்னீர் செல்வம், நெடுஞ்சாலைத் துறைத் செயலாளர் திரு. பா. இராமமோகன்ராவ், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேயிலை விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி

–மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறட்சியினாலும், கடந்த பல ஆண்டுகளாக தேயிலை விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள தேயிலை விவசாயிகளின் நலன் கருதி, அவர்கள் செலுத்த வேண்டிய தவணை கடந்த கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளார்கள். நீண்டகாலக் கடனுக்காக தள்ளுபடி செய்யப்படும் வட்டி மற்றும் அபராத வட்டி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஆகும். குறுகிய காலக் கடனுக்காகத் தள்ளுபடி செய்யப்படும் வட்டி மற்றும் அபராத வட்டி 60 இலட்சம் ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேயிலை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உலகச் சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சியினால் பச்சை தேயிலை விலை குறைந்துள்ளது. எனவே, தேயிலை விவசாயிகள் போதிய வருவாய் இன்றி இன்னலுற்றனர். இவ்வாறு பாதிக்கப் பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துன்பத்தைப் போக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.8.2001 அன்று முதல், தயாரிக்கப்பட்ட தேயிலையை, ஏல மையங்களில் 'INDCOSERVE' நிறுவனம் வாங்கி, தேயிலையைப் பதப்படுத்திப் பாக்கெட்டுகளில் அடைத்து, நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். 'ஊட்டி டீ' என்னும் பெயரில் இந்தத் தேயிலை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், வணிக நடவடிக்கைச் செலவை 40 சதவிகிதம் குறைக்கும் அளவிலும், இடைத் தரகர்களை ஒழித்திடும் வகையிலும், தேயிலை விவசாயிகளின் தேயிலைக்கு சரியான விலை கிடைப்பதற்காகவும் "TEA SERVE" என்னும் மின்னணு ஏல மையத்தை 13.9.2003 அன்று ஊட்டியில் தொடங்கி வைத்தார்கள். மேலும், இந்த மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாடு விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரியில் 50 சதவிகிதம் வரிச் சலுகையும் வழங்கினார்கள். மேலும், சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக, மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட விலை நிலைபாட்டு நிதிக்கு தேயிலை விவசாயிகள் செலுத்த வேண்டிய தொடக்க பங்குத் தொகையான 1 கோடியே 15 இலட்சம் ரூபாயை மாநில அரசே வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

தற்போது நிலவி வரும் வறட்சியாலும், கடந்த பல ஆண்டுகளாக தேயிலையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அதனால் கூட்டுறவு வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை உரிய தருணத்தில் செலுத்த இயலவில்லை என்பதாலும், தவணை கடந்த கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தேயிலை விவசாயிகள் கோரிக்கை வைத்திருந்தனர். தேயிலை விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 31.12.2003 அன்று வரை நிலுவையில் உள்ள தவணை தவறிய கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்கள். நீண்ட காலக் கடன்களுக்கான தவணை தவறிய வட்டி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஆகும். குறுகிய கால கடன்களுக்கான தவணை தவறிய வட்டி 60 இலட்சம் ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவிற்கு 31.12.2003 அன்றைய நிலுவைப்படி உள்ள காலம் தவறிய வட்டி மற்றும் அபராத வட்டியினை தேயிலை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.2.2004 அன்று உத்தரவிட்டார்கள்.

* * *

தமிழ் தாத்தா உ.வே.சா அவர்களின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் 19.2.2004 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டமான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் நகர்புறங்களில் 334, ஊரகப் பகுதிகளில் 4,435 ஆக மொத்தம் 4,769 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 78,972 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 33,441 மகளிர் ஆதிதிராவிடர்கள். இக்குழு உறுப்பினர்கள் சேமிப்பு நிதியாக ரூ.10.22 கோடி வைத்துள்ளனர். மொத்தம் 3,139 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.11.14 கோடி வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. வங்கிக் கடன் பெற்ற சுயஉதவிக் குழுக்கள் பெரும்பாலோருக்கு ஏற்கெனவே தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப் பட்டிருப்பதால், அவர்கள் பல்வேறு சுயதொழில்களைச் செய்து வருகின்றனர்.

விராலிமலை ஒன்றியம் குமாரமங்கலம் ஊராட்சி மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த வீரசக்தி சுயஉதவிக் குழு 7–12–2001இல் தொடங்கப்பட்டது. 15 உறுப்பினர்கள் கொண்ட இக்குழுவினர் ரூ.29,100 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். ரூ.25 ஆயிரம் சுழல் நிதியாக வங்கியிலிருந்து பெற்று ஆயத்த ஆடைகள், ஊறுகாய், வடகம், வத்தல் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாதம் ஒன்றிற்கு ரூ.10,000 மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர்.

அறந்தாங்கி ஒன்றியம் குருந்திராக்கோட்டை ஊராட்சியில் செயல்பட்டு வரும் சாரதா அம்மையார் சுயஉதவிக்குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். ரூ.40,500 சேமிப்பு நிதியாகக் கொண்டுள்ள இக்குழுவினர் பொருளாதாரச் செயல்பாட்டிற்காக எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் ரூ.2.5 இலட்சம் மற்றும் வங்கிக் கடனாக ரூ.30,000 பெற்று ஆடு வளர்ப்பு, பால் மாடு வளர்த்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவரங்குளம் ஒன்றியம் கீரமங்கலம் பேரூராட்சியில் ஓசோன் தொண்டு நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட பிஸ்மி சுயஉதவிக் குழுவின் 20 உறுப்பினர்கள் ரூ.32,400 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். நபார்டு வங்கியிலிருந்து ரூ.1 இலட்சம், தொண்டு நிறுவனம் மூலமாக ரூ.1.80 இலட்சம் கடனுதவி பெற்று மளிகைக் கடை நடத்தி வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கும்பங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கல்லுக்குடியிருப்பு கிராமத்தில் காசா தொண்டு நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட செவந்தி சுயஉதவிக் குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.47,270 சேமிப்பு நிதி வைத்துள்ளனர். கடந்த 2½ ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இக்குழுவினர் நபார்டு வங்கி மூலம் ரூ.76,000, சுழல் நிதி ரூ.25,000, இணையத்தின் மூலம் ரூ.2,00,000 மற்றும் மாவட்ட வழங்கல் விற்பனை சங்கத்தின் மூலம் ரூ.50,000 ஆயிரம் கடனுதவி பெற்று நர்சரி மற்றும் காய்கறி பயிரிடும் தொழிலில் ஈடுபட்டு மாதந்தோறும் ரூ.10,000 இலாபம் ஈட்டி வருகின்றனர். தஞ்சாவூர், மதுரை, விழுப்புரம் மாவட்டங்களிலிருந்து வரும் விவசாயிகள் மரக்கன்றுகள், செடிகளை வாங்கிச் செல்கின்றனர்.

அறந்தாங்கி ஒன்றியம் பால கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகாநதி சுயஉதவிக் குழுவில் உள்ள 20 உறுப்பினர்கள் ரூ.78,000

உலமாக்களுக்கு ஓய்வூதியத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

உலமா ஓய்வூதியத் திட்டம் தமிழக அரசால் 1981–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளிவாசல்களில் பணிபுரியும் பேஷ், இமாம் மோதினார், மதரசாக்களில் பணிபுரியும் அரபி ஆசிரியர் மற்றும் தர்காக்களில் பணிபுரியும் முஜாவர் ஆகியோர் இத்திட்டத்தின்படி உலமாக்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கு நிவாரணம் வழங்குமுகமாகவே அரசு இத்திட்டத்தை துவக்கியது. 60 வயது நிரம்பிய 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேஷ், இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் போன்ற உலமாக்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள். இவர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் இவர்கள் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழு விண்ணப்பதாரர்களை நேரில் வரவழைத்து விண்ணப்பங்களைப் பரிசீலித்த பின் 2003–2004ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முழுவதும் 188 பயனாளிகளுக்கு உலமா ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்போது பயனடைந்து வருவோர் எண்ணிக்கை 1,825 ஆக உயர்ந்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி ரூ.1,20,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியப் பயனாளிகளுக்கு 18.2.2004 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் வக்ஃபு அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் உலமா ஓய்வூதிய ஆணைகளை நேரில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைவி ஜனாபா பதர் சயித், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. ஏ. நர்கராஜன் இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் திரு. இ. முகமது ஜமாலுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். ✱

சேமிப்பு நிதி வைத்துள்ளனர். இக்குழு வங்கியிலிருந்து சுழல் நிதியாக ரூ.25,000 தொண்டு நிறுவனம் மூலமாக ரூ.36,000 கடனுதவி பெற்றுள்ளனர். இக்குழுவினர் கயிறு திரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கைகுளான்வயல் ஊராட்சி புதுப்பட்டி கிராமத்தில் செயல் பட்டு வரும் ஜான்சிராணி சுய உதவிக்குழுவில் 17 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் சேமிப்பு நிதியாக ரூ.37,450 வைத்து உள்ளனர். நபார்டு வங்கியின் மூலம் ரூ.1.40 இலட்சம், சுழல் நிதியாக ரூ.25,000, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் ரூ.50,000 கடன் பெற்று பேக்கரி மற்றும் ஹாலோ பிளாக் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மாதத்திற்கு பேக்கரித் தொழிலின் மூலம் ரூ.4,100/–ம், ஹாலோ பிளாக்குகள் தயாரிப்பின் மூலம் ரூ.3,600/–ம், இலாபம் ஈட்டி வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கே.ராயவரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அன்னை தெரஸா மகளிர் சுயஉதவிக் குழுவினர் ரூ.67,580 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். இக்குழுவினர் ரூ.5.50 இலட்சம் கடனுதவி பெற்று திருமண நிகழ்ச்சிகளுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் வாடகைக்கு அளிக்கும் தொழிலில் கடந்த 2 மாத காலமாக ஈடுபட்டு வருகின்றனர். மாத வருமானமாக ரூ.4,000 வரை பெறுகின்றனர்.

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் குழு தொடங்குவதற்கு முன்னர் விவசாயக் கூலிகளாகவும்

குழு தொடங்கிய பின்னர் சேமிப்பு பழக்கம் ஏற்பட்டதுடன், ஒய்வு நேரத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் மாத வருமானம் ஈட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் இவர்கள் பொருளாதார மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

இதுபோன்று ஏராளமான சுயஉதவிக் குழுக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு பொருளாதாரப் புரட்சிக்கு வழி வகுக்கப் பட்டு வருகிறது.

– துரை. தாமரைச்செல்வம்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

❖ ❖ ❖

தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் நிலவும் பல்வேறு வேளாண் பருவநிலை காரணமாக அனைத்து தோட்டக்கலைப் பயிர்களும் விளையக்கூடிய உகந்த சூழ்நிலை நிலவுகிறது. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 130 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் நிகர சாகுபடி செய்யப்படும் பரப்பு 53 இலட்சம் எக்டேர். இவற்றில் சுமார் 8.57 இலட்சம் எக்டேர் பரப்பில் பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், நறுமண சுவைப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள், மலர்கள் ஆகியன சாகுபடி செய்யப்படுகின்றன. மாநிலத்தின் நிகர சாகுபடிப் பரப்பில் 16 சதவிகிதம் தோட்டக்கலைப் பயிர்களாகும்.

தேசிய அளவில் தமிழ்நாட்டின் பங்கு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவில் 5.7 விழுக்காடும் உற்பத்தியில் 7.7 விழுக்காடாகவும் உள்ளது.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

அண்மைக்காலத்தில் வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும், இவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களின் உற்பத்திக்கும், இவைகளை சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை" அறிவித்துள்ளது.

1. சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல்.
2. தரமான நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சீராக்க உரிய வழிமுறைகளை உருவாக்குதல்.
3. தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
4. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
5. நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல் ஆகியவை இந்த இயக்கத்தின் குறிக்கோள்களாகும்.

மேலும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் பல்வேறு உட்கூறுகளை உள்ளடக்கி கீழ்க்கண்ட மூன்று சிற்றியக்கங்களை கொண்டுள்ளது.

சிற்றியக்கம்– 1 – தொழில்நுட்பப் பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி

2 – தொழில்நுட்பச் செயலாக்கம் மற்றும் வளர்ச்சி

3– அறுவடைக்குப் பின்பு மேலாண்மை மற்றும் விற்பனைத் தொடர்பை ஏற்படுத்துதல்

விரிவான தரிசு நிலத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றிட தமிழ்நாடு அரசு விரிவான தரிசு நிலத் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. தரிசு நிலத்தில் நடவு செய்யத் தேவையான தரமான நடவுச் செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. மா, கொய்யா, சப்போட்டா, முந்திரி, நெல்லி, எலுமிச்சை போன்ற தோட்டக்கலைச் செடிகள் 2002–2003ஆம் ஆண்டில் 8,500 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டது. 2003–2004ஆம் ஆண்டிலும் இது வரையில் 15,000 எக்டேர் பரப்பில் தோட்டக்கலைச் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்றுமதி வாய்ப்பை கருத்தில் கொண்டு 2002–2003ஆம் ஆண்டில் 3 வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலங்கள் ஒசூர் மற்றும் நீலகிரியிலும் மாவிற்காக ஒரு ஏற்றுமதி மண்டலம் தேனியிலும் (மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியது) 2003–2004ஆம் ஆண்டில் வாழைக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டமும் முந்திரிக்காக கடலூர் மாவட்டமும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களாக அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் தொழில் முதலீடு, வேலைவாய்ப்பு போன்ற இனங்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ரூ.1 கோடி

முதலீட்டில் சிறு அளவிலான தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது ஆகும். இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பொருட்கள் பதப்படுத்துதல், மலர்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள் ஆகிய இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலை பண்ணை அமைத்தல்

தருமபுரி மாவட்டத்தில், தமிழக அரசின் சிறப்புத் திட்டமான "தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலைப் பண்ணையம்" அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. விவசாயிகளின் நிலங்களில் 1,000 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள், சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் ஆகிய நவீன தொழில்நுட்பங்களில் சாகுபடி செய்யப்படும். இத்திட்டம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தர மேம்பாடு மற்றும் மாற்றுப்பயிர் மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் தரத்தினை மேம்படுத்தி அதன்மூலம் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வழி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தேயிலை வாரியமும் தோட்டக்கலைத்துறையும் இணைந்து தேயிலை தர மேம்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்குவதற்காக கிராம அளவிலான விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்காக இதுவரையில் ரூ.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலையுடன் தகுந்த மாற்றுப்பயிர்களையும் பயிரிடுவது அவசியமாகிறது.

எனவே, புதிய வகைப்பயிர்களின் 'பீக்காநட்' மற்றும் 'மெகடாமியா' போன்ற பயிர்களை அறிமுகப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பல அடுக்குப் பயிர்கள் முறை, அதாவது தேயிலை தோட்டத்தில் சில்வர் ஓக், மிளகு, ஏலக்காய், ஆரஞ்சு போன்ற பயிர்களை நடவு செய்தல் போன்ற முறைகள் விவசாயிகளால் பின்பற்றப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு 2003–2004ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் திட்டத்தினை மேம்படுத்த ரூ.50 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

மாநிலத் திட்டங்கள்

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்
4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய - மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்கள்

1. ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழங்கள் அபிவிருத்தித் திட்டம்
3. ஒருங்கிணைந்த நறுமண சுவைப் பயிர்கள் திட்டம்
4. காய்கறிகள் மற்றும் வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள்
5. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்
6. ஒருங்கிணைந்த கோக்கோ அபிவிருத்தித் திட்டம்
7. வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்
8. காளான் அபிவிருத்தித் திட்டம்
9. தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் பயன்பாடு
10. தோட்டக்கலை அபிவிருத்திக்கான புதுமைத் திட்டங்கள்

மாநிலத் திட்டங்களில் தோட்டக்கலைச் செடிகள், வீரிய ஒட்டு காய்கறி விதைகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள் போன்றவைகள் 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்கும் நோக்கிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் தோட்டக்கலைச் செடிகள் 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்யப் படுகின்றன. மேலும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கவும் நிதி உதவி வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களே பெரும்பங்கு வகித்து வருவதால் இம்மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்களில் முந்திரி, மா, பலா, கொய்யா, எலுமிச்சை போன்ற பல்லாண்டுப் பயிர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கான தரமான செடிகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டன. கொய்மலர்கள் (Cut Flowers) மற்றும் கனகாம்பரம், செவ்வந்தி போன்ற மலர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கும் கோக்கோ பரப்பு விரிவாக்கத்திற்கும் 25 சதவிகித மானிய விலையில் செடிகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன. மேலும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு விவசாயிகளின் நிலங்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இவைகள் தவிர, உயர் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொள்ளும் பொருட்டு கீழ்கண்டுள்ள இனங்கள் 2003–2004ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.

உயர் தொழில்நுட்ப செயல்விளக்கப் பண்ணை அமைத்தல்

உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. 20 எக்டேர் பரப்பில் விவசாயிகளின் சம்மதத்துடன் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலங்களை தேர்வு செய்து இந்தப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் காய்கறி பயிர்களில் இப்பண்ணைகள் அமைக்கப்பட்டன.

விரிவாக்கப் பணியாளர்களுக்கான பயிற்சி

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் புகுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைய விரிவாக்கப் பணியாளர்களின் பங்கு இன்றியமையாதது. தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு நமது மாநிலத்திலும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலும் உள்ள தோட்டக்கலை மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டன.

விவசாயிகள் பயிற்சி

நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிக்காக விவசாயிகள் நமது மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் நிலங்கள் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளார்கள். இந்த நிதியாண்டு முடிவிற்குள் 10,000 விவசாயிகளுக்கு இவ்வித பயிற்சி அளிக்கப்படும்.

தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம்

விரிவாக்கப் பணிகளில், புதிய கண்டுபிடிப்புகள் விவசாயிகளைச் சென்றடைவது மிக முக்கியமான ஒன்றாகும். எனவே, செயல்விளக்கம் அமைத்தல் மற்றும் பயிற்சி அளிப்பதுடன், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை அச்சிட்டு புத்தக வடிவில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதுதவிர விழிப்புணர்ச்சி முகாம்கள், கருத்தரங்குகள் ஆகியவைகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சிக்கென மேற்கூறிய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இவ்வாறு கடந்த 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004 (டிசம்பர் முடிய) ஆகிய காலகட்டத்தில் மாநிலத் திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.28 கோடியும், மத்திய மாநில அரசுகள் பங்குபெரும் திட்டங்களின் கீழ் ரூ.40 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

– இயக்குநர்
தோட்டக்கலை மற்றும்
மலைப்பயிர்கள் துறை.

உங்கள் வலிமையே என் வலிமை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்டு அமையும் இந்த கிருஷ்ணகிரி மாவட்டத் தொடக்க விழாவில் கலந்துகொண்டு என் அன்புக்குரிய கிருஷ்ணகிரி மக்களாகிய உங்கள் அனைவரையும் காண்பதற்கு இன்று எனக்குக் கிடைத்து இருக்கும் இந்த இனிய வாய்ப்பு குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாவட்டத்தின் தொடக்க விழா இன்று என்றாலும், இந்தப் பகுதி 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டது என்பதில் மாவட்டத்து மக்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சுவாரஸ்யமான வரலாற்றைக் கொண்டது. 18–ஆம் நூற்றாண்டிலேயே கிருஷ்ணகிரி மாவட்டம் செயல்பட்டிருக்கிறது.

இப்போது 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறுபடியும் கிருஷ்ணகிரி மாவட்டம் செயல்பட தொடங்குகிறது.

இடைக்காலத்தில், கிருஷ்ணகிரியிலிருந்து தலைநகரம் தருமபுரிக்கும், 1830இல் சேலத்துக்கும், பின்னர் ஓசூருக்கும், மீண்டும் 1860 ஆம் ஆண்டு சேலத்துக்கும் மாற்றப்பட்டு, 1965 ஆம் ஆண்டு சேர்வராயன் மலைக்கு வடக்கே உள்ள பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு தருமபுரி மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது.

200 ஆண்டுகளுக்கு முன் மாவட்டத் தலைநகராயிருந்து, அந்தத் தகுதியைப் பின்னால் இழந்துவிட்ட கிருஷ்ணகிரி, இன்றைக்கு உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் மறுபடியும் மாவட்டத் தலைநகரம் என்னும் தகுதியைப் பெறுகின்றது என்பது உங்களைப் போல எனக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.

"தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துப் புதியதாக ஏற்படுத்தப்படும் மாவட்டம், கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும்" என்று எனது அரசின் 2001 – 2002 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்தோம். எனினும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளைப் புதிதாக வரையறை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணையம் இதுவரை உள்ள நிருவாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றக் கூடாது என்று தடை விதித்து இருந்ததால் இந்த அறிவிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த இயலவில்லை. தருமபுரி மாவட்டத்தைப் பிரிப்பதற்கான

பிறப்பு அறுமதி இந்த ஆகையத்தில் இருந்து அன்னையில் பெறப்பட்ட பின், அதற்கான அசானகை 20.11.2003இல் வெளியிடப்பட்டு, இன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தொடக்க விழா சீரோடும் சிறப்போடும் நடந்து நகை பெறுகிறது.

புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தியதின் பல ஆண்டுகளுக்குப் பின்பு அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுவது கடந்த கால வரலாறு. அரசு அலுவலகங்கள் பல்வேறு

முன்னோற்பாடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் புதிதாக உருவாக்கப்படுவதால், தருமபுரி மாவட்டம் புறக்கணிக்கப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமோ என்று எனது அன்புக்குரிய தருமபுரி மாவட்டத்து மக்கள் அஞ்சத் தேவையில்லை என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வீட்டில் இரட்டைக் குழந்தைகள் இருந்தாலும், அவற்றைத் தாய், பேதம் பிரித்துப் பார்ப்பதில்லை. அதைப் போலவேதான்,

ஆட்சியாளர்கள் மாவட்டங்களில் செயல்படுவதால், மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். எனது அன்னை சத்தியவாணி முத்து மக்களுக்கு இதுவேண்டும் என்பதற்காகவே, மாவட்டத்தின் வளர்ச்சிக்காக அயராது 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஆணைகள் பிறப்பித்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருபெரிய மாவட்டம் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்படும்போது, மாவட்ட நிருவாகம் மற்றும் மாவட்ட மக்கள் ஆகிய இரு தரப்புக்கும் பயன் விளைகிறது. மாவட்டம் சிறியதாக இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட அலுவலர்கள் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அடிக்கடி சென்று மக்களின் தேவைகளை அறிந்து, விரைவாற்ற முடியும். மாவட்ட மக்கள், மாவட்டத் தலைநகருக்கு எளிதில் சென்று மாவட்ட அலுவலர்களைச் சந்திக்க இயலும்; பயணச் செலவும் குறையும். எனவே தான் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் சமூகப் பொருளாதார

தாய் உள்ளம் கொண்டு உங்கள் அனைத்து தேவைகளையும் நான், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்ட மக்களுக்கும் சேவையாளர் அமைவதற்கு வசதிகளையும் ஏற்படுத்தி வருகிறேன் என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இந்த மாவட்டம் 2 நகராட்சிகள், 10 பேரூராட்சி ஒன்றியங்கள், 7 பேரூராட்சிகள், 337 ஊராட்சிகள் ஆகியவற்றோடும் 2 வருவாய்க் கோட்டங்கள், 5 வருவாய் வட்டங்கள் ஆகியவற்றோடும் தனி மாவட்ட மாண்பு புதிய வரலாற்றை இன்று தொடங்குகிறது.

இன்று புதிதாகத் தொடக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் தருமபுரி மாவட்டத்து மக்கள் பயனடையும் வண்ணம் மொத்தம் 101 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 18,568 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட

உதவிகளையும் வழங்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்பு விழாவில் புதிதாக இரண்டு துவக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 23 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட 3.754 வளர்ச்சிப் பணிகளையும், தருமபுரி மாவட்டத்தில் 17 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட 3.314 பணிகளையும் இன்று திறந்து வைத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் கல்வித்துறை மூலமாக, 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில், பள்ளி வகுப்பு அறைகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதிகள், பாலங்கள், ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் பணி, அரசு வியத்து சிகிச்சை மையம், அலுவலை சிகிச்சை அரங்கம் போன்ற பல்வேறு பணிகளையும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 4 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட தனி மின் விசைத் திட்டம், சிறு மின் விசைத் திட்டங்கள் போன்ற குடிநீர்ப் பணிகளையும், தடுப்பு அணைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாப்பர்த்தி குட்டி கவுண்டனூரில் கட்டி முடிக்கப்பட்ட 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினையும் இன்று திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நகராட்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சி மற்றும் வளத்துறை மூலமாக, 22 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்களையும், பட்டு உற்பத்தி மையம், தார்ச் சாலைகள், கதிர் அடிக்கும் களங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், சிறு பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடம், புதிய பேருந்து நிலையம், வணிக வளாகம் போன்ற பல்வேறு பணிகளையும் இன்று திறந்து வைத்ததில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மிகப்பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். பிரம்மாண்டமான மாளிகை! பதினைந்து கார்கள்! வங்கியில் ஏகப்பட்ட பணம்! அந்த நகரத்திலேயே அவர்தான் பெரிய பணக்காரர்!

ஒருநாள் ஒரு நண்பர் அவரைப் பார்க்க வந்தார். அப்பொழுது அந்தப் பணக்காரர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"என்ன சார், கப்பல் கவிழ்ந்து விட்டது மாதிரி கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்து விட்டீர்கள்! அப்படி என்ன கவலை உங்களுக்கு?" என்று நண்பர் கேட்டார்.

"கப்பல் கவிழ்ந்திருந்தால் கூடப் பரவாயில்லையே! இக்கரையில் பணமாவது கிடைத்திருக்கும். இது அதுகூடக் கிடையாதே!" என்றார் பணக்காரர்!

"ஓ அவ்வளவு சோகமான விஷயமா?" என்று நண்பர் கொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டே கேட்டார். "ஆம்! என் மனைவி பணம் கேட்கிறாள்" என்றார் பணக்காரர். பல ஆண்களுக்கு மனைவி பணம் கேட்பதே சோகமான விஷயம்தான். நண்பர் நினைத்துக் கொண்டார். நிச்சயம் பல இலட்சம் ரூபாயாவது பணக்காரரின் மனைவி கேட்டிருக்க வேண்டும். "ஆமாம், அவ்வளவு உதாரியா உங்கள் மனைவி?" என்று கேட்டார் நண்பர். "அதை என் கேட்கிறீர்கள்? முந்தாநாள் 5 ரூபாய் கேட்டாள்; நேற்று 10 ரூபாய் கேட்டாள். இன்றைக்கு (சொல்லும்போதே துக்கம் தொண்டையை அடைக்க) இன்றைக்கு காலையில், 15 ரூபாய் கேட்டாள்!" என்று பணக்காரர் ஆதங்கத்தோடு பதில் சொன்னார். நண்பராலும் இந்த அநியாயத்தைத் தாங்க முடியவில்லை. எனென்றால் அவரும் அப்படித்தான்! அவர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி வேலை பார்க்கிறார். மனிதர் பொல்லாதவர். 1ஆம் தேதி பிறந்து விட்டால் மனைவி வாங்குகின்ற முழு சம்பளத்தையும் அப்படியே களையாக அவர் கையில் ஒப்படைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்த மனிதருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். கண்ணை மூடிக்கொண்டு கத்த ஆரம்பித்து விடுவார். அப்படிப்பட்டவர் அவர்! ஆகவே பணக்கார நண்பரின் மனைவி தன் கணவரிடத்தில் 15 ரூபாய் பணம் கேட்டது அவருக்கு பயங்கரமாகத் தெரிந்தது.

அவர் கேட்டாராம் – "அப்படி அவ்வளவு பணத்தை வாங்கிக் கொண்டு என்ன செய்கிறார்களாம் அந்த அம்மா?" பணக்காரர் பதில் சொன்னாராம். "எனக்கு எப்படித் தெரியும்? நான்தான் கொடுப்பதே இல்லையே!" என்றாராம். கேட்டது அதிகபட்சம் 15 ரூபாய்; கேட்டவர் கட்டிய மனைவி! பணக்காரக் கணவரோ 10 பைசாக் கூட கொடுக்கவில்லை. ஆனால் மனைவி பணம் கேட்ட சோகத்தை அவரால் தாங்க முடியவில்லை.

இந்த கோடீஸ்வரரைப் போன்ற கோமான்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்றால் அந்தக் கஞ்சப் பிரபுக்களுக்கு திடீரென்று மக்கள் மீது கரிசனம் பிறந்து விடும். என்றைக்காவது எதையாவது கொடுத்து விட்டு நாங்கள் இப்படித்தான் எல்லோருக்கும் கொடுப்பது வழக்கம் என்று நாக்கூசாமல் பொய் சொல்லுவார்கள்.

மக்கள், ஒரு கேலிச்சிரிப்போடு இந்த மகானுபாவர்களின் நன்கொடை நாடகத்தைப் பார்த்துக்

கொண்டிருக்கிறார்கள் என்பது பாவம் இவர்களுக்குத் தெரியாது.

அடிக்கல் நாட்டுதல்

இந்த இனிய விழாவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 25 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவிருக்கும் 373 பணிகளுக்கும், தருமபுரி மாவட்டத்தில் 21 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவிருக்கும் 263 பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தாட்கோ நிறுவனம் மூலமாக 14 கோடி ரூபாய் மதிப்பில் மாணவர் விடுதிகள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், பள்ளி வகுப்புஅறை கட்டடங்கள், மருத்துவமனை மற்றும் பள்ளிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கை வசதி, அறுவை சிகிச்சை அரங்கம், உயர்மட்ட பாலம், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளுக்கும், இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரக வளர்ச்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கல்வித் துறை மூலமாக 19 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், தார்ச்சாலைகள், சிறு பாலங்கள், கதிர் அடிக்கும் களங்கள், கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், குடிநீர்ப் பணிகள், பேருந்து நிலையம் ஆகியவை கட்டுவதற்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலமாக 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின் விசை, சிறுமின் விசை திட்டப் பணிகள், தடுப்பு அணை போன்ற பணிகளுக்கும், எம்.செட்டி அள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் மின்சார வாரியத்தின் மூலமாக ஆலப்பட்டியில் 1 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கவும் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

விவசாயம் மற்றும் தரிசு நில மேம்பாடு

தமிழக மக்கள் தொகையில் 62 சதவீதத்தினரின் வாழ்க்கைக்கு வேளாண்மையே ஆதாரமாக அமைந்துள்ளதால் வேளாண்மைத் தொழிலுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

தமிழக விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு நீர் ஆதாரங்களைப் பெருக்கவும், தற்போதுள்ள நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும் கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மொத்தம் 10 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் 10 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ள நான் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளேன்.

இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப் பட்டி வட்டத்தில் உள்ள 18 ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் 86 இலட்சம் ரூபாய் செலவில் பொதியம்பள்ளம் அணைக்கட்டினை சீரமைத்து நவீனப்படுத்துவதற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கப்பல்வாடி அணைக்கட்டில் இருந்து சென்றாயநாயக்கன் ஏரி, சோழன்குட்டை ஏரி,

மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் வரத்துக்கால்வாய்களை ஆழப்படுத்தும் பணிகளுக்கும், போச்சம்பள்ளி வட்டம், பெனுகொண்டபுரம் ஏரியின் வாய்க்காலில் இருந்து அத்திப்பள்ளம் ஏரி வாய்க்காலுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் இணைப்பு வாய்க்கால் அமைக்கும் பணிக்கும் இன்றைக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் 1.021 எக்கர் நிலம் பயன்பெறும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வேளாண் பொறியியல் துறையின் மூலமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாய்க்கால் அமைத்தல் மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டு அவற்றை இன்று நான் திறந்து வைத்துள்ளேன். 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் கால்வாய் அமைத்தல் மற்றும் மண் வளப்

பாதுகாப்புப் பணிகளுக்காக அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1000 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர் துல்லியப் பண்ணையம்

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில், தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை வெகுவாக மேம்படுத்தும் வகையில் உயரிய தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு 1000 ஏக்கர் நிலப்பரப்பில் 7 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் தோட்டக்கலைப்பயிர்களுக்கான துல்லியப் பண்ணையம் அதாவது Precision Farming அமைத்துச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலைப் பணிகள், வேளாண் பொறியியல் பணிகள், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி Post Harvest Measures ஆகியவற்றை மேற்கொள்வதுடன் விவசாயிகளுக்கும் உரிய ஆலோசனைகளும் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தற்போதைய உற்பத்தித் திறன் 40 விழுக்காடு அதிகரிக்கும். தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியையும், பெரும் வளர்ச்சியையும் இது உருவாக்கும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து தரிசு நிலங்களையும், விவசாயப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தோடு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை நான் கொண்டு வந்தேன். இத்திட்டத்தின் கீழ் பயிரே செய்யப்படாமல் வீணாகக் கிடக்கும் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்படும். அரசின் தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், சிறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்குக் குத்தகைக்கு விட நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனியாரிடம் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்றப் பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

வறட்சிக்கு இலக்கு ஆகி வரும் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மானாவாரி சாகுபடியில் உற்பத்தியினை உயர்த்திடவும், நீர் மற்றும் மண்

வளத்தினைப் பாதுகாத்திடவும், 2 இலட்சத்து 70 ஆயிரத்து 574 ஏக்கர் நிலம் பயனடையும் வகையில், 57 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சமூகப் பொருளாதாரத் திட்டம்

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுக் கிடந்தன. கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தின்போது நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கிவிட்டன. தற்போது தருமபுரி மாவட்டத்தில் இருந்த நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளை எனது அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கி இம்மாவட்ட மக்கள் அச்சமின்றி வாழ வழிவகை செய்துள்ளது.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுச் சூழ்நிலைகள் காரணமாக இளைஞர்கள் நக்சலைட்டுகள் போன்ற தீவிரவாத இயக்கங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் இளைஞர்களின் வாழ்வு வளம்பெற 5 கோடி ரூபாய் செலவில் சமூகப் பொருளாதாரத் திட்டம் ஒன்றினை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

100 கிராமங்களில் இளைஞர் குழுக்கள் அமைத்து விளையாட்டுத் திறனை மேம்படுத்துதல், அறிவை வளர்க்கும் வகையில் நூலகங்கள் அமைத்தல், பட்டு வளர்ச்சித் தொழிலில் ஈடுபடப் பயிற்சி அளித்தல்; காவல் துறை மற்றும் ராணுவத்தில் சேர்ந்திட சிறப்புப் பயிற்சிகள் வழங்குதல்; மற்றும் வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்குதல்; துணைச் சுகாதார மையங்கள் அமைத்தல்; சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கூடுதல் தெருவிளக்குகள் அமைத்தல்; இளைஞர்களுக்குச் சுகாதாரப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது ஆணைக்கு இணங்க தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தொழில் முனைவோர் பயிற்சிகள், திறன் நுட்பப் பயிற்சிகள் மற்றும் தொழில் தொடங்க கடன் உதவி வழங்க 716 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து நான் மனநிறைவு அடைகிறேன்.

உழைப்பால் உயர வேண்டும்

ஒருவருக்கு ஏகப்பட்ட நிலம் இருந்தது. 7000 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்து கிடந்தது அந்த நிலம். ஆனால் எல்லாம் பொட்டல் வெளி. கொஞ்சம் தண்ணீர் வசதி இருந்தது என்றாலும் பயிர் பக்கை விளையாத கட்டாந்தரையாக நிலம் இருந்ததால் வேளாண்மை செய்யவில்லை; வருமானத்துக்கும் வழியில்லை.

"இந்த நிலத்தை விற்று விட்டால்தான் என்ன?" என்று நினைத்தார்.

அவருடைய நாட்டம் எல்லாம் எங்காவது வைரச் சுரங்கத்தைக் கண்டுபிடித்து பெரும் பணக்காரராக ஆக வேண்டும் என்பதில் இருந்தது.

ஒரு நாள் வந்த விலைக்கு நிலத்தை விற்றுவிட்டு வைரச் சுரங்கத்தைத் தேடி நாடு நாடாகத் திரிந்தார். ஆப்பிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், அவர் தேடாத இடம் இல்லை. ஆனால் வைரச் சுரங்கம் இருக்கும் இடம் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. கையில் இருந்த பொருள் எல்லாம் கரைந்து போய்விட்டது. ஏறத்தாழ பிச்சைக்கார நிலைக்கு வந்து விட்டார். மனதிலே பாரம். உடலிலே நோய்கள். கையிலோ காசில்லை. இவ்வாறு வறுமையிலும் மன வருத்தத்திலும் வாடிய அவர் ஆற்றிலே குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது நிலை அப்படியிருக்க, அவரிடம் நிலத்தை வாங்கினாரே அவர் என்ன செய்தார்? மேடு பள்ளத்தைச் சமமாய் ஆக்கினார்; நிலத்தடி நீரைக் கவ்விப் பிடித்து மேலே கொண்டு வந்தார். அவரது உழைப்பால் அந்த நிலத்தின் சிற்றோடைகளில் தண்ணீர் ஓடியது. ஒரு நாள் அந்த வழியாக ஒட்டகத்தில் வந்த ஒருவர், தண்ணீர் பருக அங்கே வந்தார்.

நீரோடைகளில் நீர் குடிக்கக் குனிந்தவர் அங்கே கிடந்த கற்களில் வான வில்லின் ஜாலம் தெரிவதைப் பார்த்தார்.

அனுபவசாலியான அவருக்கு உண்மை ஒரு நொடியில் விளங்கியது. அவர் பார்த்த கற்கள் அத்தனையும் வைரம்!

வழிப்போக்கர் விஷயத்தை நிலத்துச் சொந்தக்காரரிடம் சொன்னார்.

அந்த நிலம் முழுதும் வைரக் கற்கள் கிடைத்தன. அந்த நிலத்தின் உரிமையாளர் கோடி கோடியாகச் சம்பாதித்தார்.

நிலத்தை விற்று விட்டுப் போனவர் வெளிநாடுகளில் வைரத்தைத் தேடியே வாழ்வை முடித்துக் கொண்டார். அவரிடம் நிலத்தை வாங்கியவருக்கோ அந்த நிலம் முழுவதுமே வைர வயலாக அமைந்திருந்தது.

இதுதான் விதியா? சொர்க்கம் எங்கோ இருக்கிறது என்று நினைக்கிறான் சோம்பேறி மனிதன்.

அது தன் காலடியிலேயே இருக்கிறது என்பதைக் கண்டுகொள்கிறான் உழைப்பாளி.

உங்களிடம் உள்ள திறமையைக் கொண்டு உங்கள் உழைப்பால் அரசு தரும் உதவியைப் பயன்படுத்தி நீங்கள் வாழ்வில் உயர வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியான எனது வேண்டுகோள்!

நலத்திட்ட உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் விரைந்து சென்று அடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் உண்டு. என்னுடைய எண்ணத்தை ஈடேற்றும் வண்ணம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 8,385 பயனாளிகளுக்கு 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 10,183 பயனாளிகளுக்கு 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் இந்த மாபெரும் விழாவில் வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

ஊரக வளர்ச்சித்துறை, மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ நிறுவனம் மூலமாக 17,968 பயனாளிகளுக்கு, 12 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய வீடுகள், சுழல் நிதி மற்றும் தொழில் தொடங்க கடன் உதவிகள் போன்றவையும், வருவாய்த் துறை மூலமாக 463 பயனாளிகளுக்கு, 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிலப்பட்டா, வீட்டுமனைப் பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை போன்ற உதவிகளையும், சமூக நலத்துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக 48 பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவி, மூன்று சக்கர வண்டிகள், சலவைப் பெட்டி போன்ற உதவிகளையும், வேளாண்மைத் துறை மூலமாக 76 பயனாளிகளுக்கு 19 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு உதவிகளையும் வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

மக்கள் தீர்ப்பு

ஓர் ஆற்றில் நிறைய வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. அங்கே ஓர் மனிதர் வந்தார். ஆற்றைக் கடக்க வேண்டும் என்ன செய்வது என்று தெரியாமல் அவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஏற்கெனவே பயந்த சுபாவமுள்ள மனிதர். எனவே, அவர் எப்படி ஆற்றைக் கடந்து செல்வது, என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், ஒரு வலிமையான காளைமாடு வந்து கரையில் நின்றது. கண நேரத்தில் அது ஆற்றுக்குள் குதித்து நீந்தத் தொடங்கியது. அப்போது

கரை அருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் உடனே ஆற்றிலே குதித்தான். காளை மாட்டின் வாலை உறுதியாகப் பிடித்துக் கொண்டான். காளை மாடும் விரைவாக நீந்தியது. வாலைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனும் அதன் பின்னாலேயே போனான். காளைமாடு கரை ஏறியது. அந்தச் சிறுவனும் கரை ஏறினான்.

"ஓ, இப்படிக் கூட ஆற்றைக் கடக்கலாமோ?" என்று அந்த மனிதர் நினைத்தார். நமக்கு ஒரு காளைமாடு அகப்படாதா என்று தேடிப் பார்த்தார். அப்போது அந்தப் பக்கம் நாய் ஒன்று வந்துகொண்டிருந்தது.

நாய் ஆற்றுக்குள் குதித்தது. இந்த மனிதரும் உடனே ஆற்றுக்குள் குதித்தார்; குதித்து, நாயின் வாலை இறுகப் பிடித்துக் கொண்டார். நாய் தத்தளிக்கத் தொடங்கியது. அந்த மனிதரோ நாயின் வாலை விடவே இல்லை. எந்தச் சனியனோ தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று பயந்து போன நாய் கடிக்கப் பார்த்தது. அந்த மனிதர் நாய் வாலைப் பிடித்துத் தொங்கத் தொடங்கினார். அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்!

நடு ஆற்றுக்குள் வருகிறபோது நாய்க்கும் அந்த மனிதருக்கும் நடந்தது ஒரு ஜீவ மரணப் போராட்டம்! ஒரு சில நொடிகள் தான்! நாய் நீந்த முயற்சிக்க மனிதர் அதன் வாலைப் பிடித்துத் தொங்க, நாயையும் அந்த மனிதரையும் சேர்த்து ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டது.



நாய், தான் மட்டும் நீந்தியிருந்தால் ஒரு வேளை உயிர் பிழைத்திருக்கக் கூடும். பாவி மனிதர் அந்த நாயையும் நீந்த விடாமல் சாகடித்து விட்டார்.

இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? அகப்பட்டதை துணைக் கொண்டால் என்றைக்கும் ஆபத்து!

நாய் வாலைப் பிடித்துக் கரையேற நினைத்த மனிதருக்கு ஆற்றைக் கடக்க ஆசை இருந்த அளவுக்கு அறிவு இல்லை.பாவம்! அந்த நாயின் நிலைதான் பரிதாபத்துக்குரியது!

இந்தக் கதை எந்தெந்தக் கூட்டுகளையோ உங்களுக்கு நினைவூட்டலாம். அப்படி நினைவூட்டி அவர்கள் யார் யார் என்று நீங்கள் கற்பனை செய்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பு அல்ல. ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். "மக்கள் தீர்ப்பு" என்ற மகத்தான வெள்ளத்திலே அவர்கள் அடித்துச் செல்லப்படுவது உறுதி! உறுதி!

என்னைப் பொறுத்தவரையில், உங்கள் துணை – மக்கள் துணை – என்றென்றும் உண்டு. உங்கள் வலிமையே என் வலிமை என்பதால் எனக்கு எங்கும் வெற்றி தான்! எதிலும் வெற்றி தான்!

எனது முயற்சிகளில் எல்லாம் எனக்குப் பக்கபலமாக நிற்கும் உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம், நானே எனது கைகளாலேயே பயனாளிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்கையில் நலமும் வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.ஏ. சித்திக் அவர்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மங்கத்ராம் சர்மா அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் மற்றும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
எனக்கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

(9.2.2004 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட நலவாக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆற்றிய உரை)

நிதிநிலை அறிக்கை 2004 - 2005

தமிழக அரசின் நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2004 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன்வைத்து ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக் கிடும்பை படாஅ தவர்.

(துன்பம் வருங்கால் அதற்கு இரையாகாது, தளரா உள்ளத்துடன், எதிர்நோக்குபவர் முன் அத்துன்பமே நலிவுற்றுத் துயருற்று அஞ்சிப் பின்வாங்கிச் சென்று விடும்.)

சீரிய சிந்தனையும் மனஉறுதியும் தெளிந்த தொலை நோக்குப் பார்வையும் பேராற்றலும் கொண்டு தமிழ்நாட்டை வளமிக்க வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நிலை நிறுத்திய எனது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களது நல்லாசியுடன் 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு களையும், 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மாமன்றத்தின் முன்வைக்க நான் விழைகிறேன்.

2. தமிழ்நாடு கடந்த காலத்தில் எய்திய பெரும் புகழ், பலமுனை வளர்ச்சி மற்றும் வளமான நிலை ஆகியவற்றிற்கு மீண்டும் திரும்பும் என்கிற நம்பிக்கையுடன், தமிழ்நாட்டு மக்கள், 2001 மே திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பிரம்மாண்ட வெற்றியை அளித்து மீண்டும் பொறுப்பேற்கச் செய்தனர். இன்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளும், கனவுகளும் ஈடேறியுள்ளன. வளர்ச்சியினை ஒட்டுமொத்தமாக நிலைகுலையச் செய்து சீரழியச் செய்யும் நிதிச் சரிவுகண்ட துன்பம்மிக்க 1990 ஆம் ஆண்டுகளின் பின்பகுதியை தமிழ்நாடு கடந்து வந்துள்ளது. மிகப் பாதகமான சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதியான

முடிவுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெளிவான சிந்தனையுடனும் அரசின் நிதிநிலையைச் சீர்செய்ய மாபெரும் முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். இம்முயற்சியின் பயன்கள் வியக்கத் தக்க வகையில் அமைந்துள்ளன. தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வகையில் நிதிநிலை திருப்பத்தை எய்தியுள்ளது. வளர்ச்சிக் கோட்பாடுகள் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் மீண்டும்



முன்னிறுத்தப்பட்டுள்ளன. மூன்றாண்டுகளுக்கும் மிகக்குறைவான கால அளவுக்குள் இச்சாதனை எய்தப்பட்டுள்ளது. இது, எங்களுடைய தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் திறமைவாய்ந்த ஆற்றல்மிகு தலைமையின் கீழ் இந்த அரசு எய்திய குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

3. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் நிலவிய சரி செய்ய இயலாததாக தோற்றமளித்த நிதி நிலைமையினை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். தொடர்ந்து மூன்றாண்டுகளாக பருவமழை பொய்த்து அதன் விளைவாக, 2002–2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி, நிதி நிலைமையைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை மேலும் சிக்கலாக்கியது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், செயலிழக்கச் செய்யும் இத்தகைய இன்னல்களைக் கடந்து இம் மாநிலத்தை இருளிலிருந்து ஒளிமயமான பாதைக்கு தன்னிகரற்ற தலைவியாக முன்னின்று நடத்திச் சென்றார்கள்.

4. மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பொருளார்ந்த மேம்பாடுகளை உறுதிசெய்வதே, ஆளுகையின் முடிவான நோக்கமாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் கருத்தில் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், இந்நோக்கத்தை உள்ளடக்கியதாக இருப்பதுடன், இம்மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடும் வகையிலும் அமைந்துள்ளது. இவை அனைத்தும், நிதிச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப்பணிகளை மேம்படுத்துதல், வறுமைக் குறைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

5. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வலுவான தலைமையினாலும், ஒவ்வொரு நிலையிலும் சட்டம்–ஒழுங்கை நிருவகிப்பதில் அவர்கள் மேற்கொண்ட தனிக் கவனத்தினாலும் மட்டுமே, தமிழ்நாடு இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்கா எனப் போற்றப்படுகிறது. இதனால், நிதி நிலைமையை சரிசெய்து பொருளாதாரத்தைச் சீரமைக்க உதவுவதற்கேற்ற சிறந்த அடித்தளம் அமைந்துள்ளது.

நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம்

6. பொதுநிதியை முறையாக நிருவகிப்பதில் அரசு உறுதியாக இல்லையெனில், மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளை எய்துதல் மற்றும் மக்கள் நலன் பெருமளவு பாதிக்கப்படும் என்பதை, தமிழ்நாட்டிற்கு, 1996–2001 ஆம் ஆண்டுக்கால அளவில் ஏற்பட்ட

அனுபவம் காட்டுகிறது. 1990–களின் மத்திய காலம் வரை நிதிவகையில் நன்கு நிருவகிக்கப்பட்டிருந்த தமிழ்நாடு ஆழமான நிதி இடர்ப்பாடுகளில் சிக்கித் தவித்து, 2000–2001 ஆம் ஆண்டின் இறுதியில் சரிவுப் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டது என்பது காணப்பெற்றது. நிதி இடர்ப்பாடென்பது புதிதான ஒன்றல்ல என அடிக்கடி எண்ணப்பட்டு வருகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த எண்ணம் உண்மையானதல்ல; இம்முறை நாம் எதிர்கொண்ட நிதி இடர்ப்பாடு இதற்கு முன்னர் எப்பொழுதும் உணர்ந்திராத ஒன்றாகும். கடன் சுமை அச்சமூட்டும் அளவிற்கு உயர்ந்துவிட்டது, இந்த இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதற்குத் தேவையான கடன்பெற வாய்ப்பு அமையப் பெறவில்லை. ஒட்டுமொத்தச் சீர்குலைவைத் தடுக்க இந்த அரசு விரைவாகவும், தெளிவான முடிவுடனும் செயல்பட வேண்டியிருந்தது. வறியோர் மீது எவ்விதச் சுமையையும் ஏற்றாது, இது மதி நுட்பத்துடன் செய்து முடிக்கப் பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை யெனில் வளர்ச்சிக்கான புதிய உத்வேகம் அமையப் பெறாது.

7. 2001–2002 ஆம் ஆண்டிற்கான திட்ட முதலீட்டினை ரூபாய் 6,040 கோடியிலிருந்து ரூபாய் 5,200 கோடியாக குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். முந்தைய அரசு கொடுக்கத் தவறிய ரூபாய் 4,000 கோடிக்கு மேற்பட்ட செலவுப் பொறுப்பினையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தோடு, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ரூபாய் 1,800 கோடி 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்கு அப்பால் கொடுக்கப்படும்படி முடக்கப்பட்டிருந்தது. தமிழ் நாட்டிற்கு 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும் கிடைக்கப்பெற வேண்டியலிக்னைட் உரிமைத் தொகை ரூபாய் 250 கோடியையும் முந்தைய அரசு 2001 மார்ச் திங்களிலேயே முன்னதாகப் பெற்றுவிட்டது. ஆளுகையின் அடிப்படைக் கோட்பாடு இழக்கப் பட்டதுடன், மக்களின் அடிப்படை வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்வதில் மாநிலத்தின் நம்பகத் தன்மைகூட கேள்விக் குறியாக ஆகிவிட்டிருந்தது.

8. மூன்றாண்டுகளுக்கும் குறைவான கால அளவில், 2001ஆம் ஆண்டில் நிலவிய முன்னெப்போதும் இருந்திராத பிரச்சினைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாகத் தீர்வு கண்டுள்ளார்கள். முற்றிலும் புதிய, துணிச்சலான தொலைநோக்குப் பார்வை கொண்ட வளர்ச்சிப் பொருள்நிரல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலங்களிடையே தமிழ்நாடு தனக்குரிய முதலிடத்தை அடையச் செய்யும் வகையில் இதீ செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது நிதியை உரிய முறையில் நிருவகிப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதிப்பாட்டினால்தான் இச்சாதனைத் திருப்பம் சாத்தியமாகியுள்ளது. நம்பிக்கையற்றதென கைவிடப்பட்ட சூழ் நிலையைச் சீர் செய்தமைக்கு, தொலை நோக்குப் பார்வை கொண்ட எங்களது தலைவிக்கு இத்தருணத்தில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

9. கடந்த நிதியாண்டில், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். பொது நிருவாகத்தில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்வதற்கும், தகுந்த பொறுப்புடைமைக்கும் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ஆம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்ட இச்சட்டம் ஒரு வழிகாட்டிச் சின்னமாகிவிட்டது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் சீர்திருத்தங்களுக்கும் ஏற்ற தொரு செயல்திட்டத்தைக் கோடிட்டுக் காட்டும் நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கும் பொறுப்பை இச்சட்டம் அரசுக்குக் கொடுத்துள்ளது.

10. மேற்குறிப்பிட்ட பொறுப்பினை நிறைவேற்றும் வகையில், நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்று

தயாரிக்கப்பட்டு வரவு-செலவுத் திட்ட உரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்த மற்றும் வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

❑ இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையினை அறவே நீக்கிட இலக்கிட்டுள்ளது. ஆதாயமற்ற வருவாய் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் கூடுதலான வருவாய் வரவுகளை உறுதிசெய்வதன் மூலமும் இதனை எய்த வேண்டும்.

❑ அரசின் நிகரக் கடன் பொறுப்புகளைக் குறிக்கும் நிதிப் பற்றாக்குறையானது, நீடித்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான ஒரு வழிவகையாக, 2008-2009 ஆம் ஆண்டிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்குக் குறைவாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

❑ மூலதனச் செலவை 2002-2003 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 1891.50 கோடி என்ற அளவிலிருந்து தொடர்ந்து அதிகரிக்கச் செய்திட அரசு முயலும். சாலைகள், பாலங்கள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட இந்த முன்னுரிமைப்பாடு வகை செய்யும்.

❑ உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்களை சரிவரப் பராமரிப்பதை உறுதி செய்வதற்காக பராமரிப்பு மற்றும் இயக்கப் பணிகளுக்குக் கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படும்.

❑ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்த இவ்வரசு கொண்டுள்ள உறுதிப்பாடு இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும்.

❑ மொத்தத்தில், வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பொருளாதார சீர்திருத்தத் திட்டத்துடன் இணைந்த நடுத்தர கால நிதிநிலைத் திட்டமானது சமுதாயத்தில் வாய்ப்புரிமை இழந்தோர், வறியோர் ஆகியோரது நலனைப் பாதுகாத்து வளர்ச்சி நடைமுறைகளில் அவர்களுக்கு பங்கேற்பு உரிமையை அளிக்கும் வகையில் பொருளாதார உயர் வளர்ச்சி வீதத்தினை அடைய உதவும்.

❑ "அனைவருக்கும் வளர்ச்சி" என்பதே இச்சீர்திருத்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

11. இந்தியப் பொருளாதாரமும், தமிழகத்தின் பொருளாதாரமும் 2002-2003 ஆம் ஆண்டில் வறட்சியின் கடுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டன. நடப்புவிலை நிலவரத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2001-2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2002-2003 ஆம் ஆண்டில் 3.46 சதவிகிதம் ஆக இருந்தது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட முதன்மைத் துறையின் உற்பத்தி அளவுகளில் ஏற்பட்ட கடுமையான சரிவு, காவிரியில் நமக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கு நீரை விடுவிக்க மறுப்பதில் கர்நாடகத்தின் விட்டுக் கொடுக்காத போக்கு, அனைத்துத் துறைகளையும் பாதித்த உலக அளவிலான பொருளாதாரப் பின்னடைவு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவுக்குக் காரணங்களாகும்.

12. 2003-2004 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வாய்ப்புகள் ஊக்கம் அளிப்பதாக உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி 2002-2003 ஆம் ஆண்டில் இருந்ததைவிட தற்போதைய விலை நிலவர அடிப்படையில் 7.17 சதவிகிதமாக இருக்குமென்று தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட சீரழிவுகளிலிருந்து தற்போது பொருளாதாரம் மீண்டு வருகிறது என்பது தெளிவு. 2003 ஆம் ஆண்டில் பருவகாலச் சூழ்நிலைகள் முற்றிலும் திருப்தி அளிப்பதாக இல்லை யெனினும், பெரும் பிரச்சினைகளைத் திறம்படக் கையாண்டதால் பொருளாதாரம் மீண்டும் உயிரோட்டம் பெற்றுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சிக் கோட்பாடுகள்

13. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15-அம்சத் திட்டத்தின் வாயிலாக "அனைவருக்கும் சுகாதாரமான மற்றும் ஆக்க வளமுடைய வாழ்க்கைக்கான வாய்ப்புகளை" அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு, 2004-2005 ஆம் ஆண்டின் வளர்ச்சிப் பணிகளுக்கான பொருள் நிரலில் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும். இந்த வளர்ச்சிப் பணி குறித்த பொருள் நிரலில் பின்வருபவை அடங்கும்.

❑ புதிய மதிப்புக்கூட்டு நடைமுறைகளை கையாளும் மாற்றுப்பயிர்த் திட்டம், நீரைத் திறமையாகப் பயன்படுத்தல், துல்லிய பண்ணை முறை, புதிய பாசன ஆதாரங்களை உருவாக்க வேளாண்மையில் முதலீடுகள், வீட்டுப் பண்ணைத் திட்டத்தை ஊக்குவித்தல், மீனள மேம்பாடு, ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, 2003-2004-ஆம் ஆண்டில் முதன்மைத் துறையில் காணப்பட்ட பொருளாதார முன்னேற்றம் மேலும் வலுப்படுத்தப்படும்.

❑ முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை மேம்படுத்துவதற்கேற்ற சீர்திருத்தங்கள், குறிப்பாக உற்பத்தித் துறையில் சீர்திருத்தங்கள், மேற்கொள்ளப்படும். தரமான மின் வழங்கல், வரிவிதிப்பு சீர்திருத்தங்கள், தொழிலாளர்துறை சீர்திருத்தங்கள், நிருவாக நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பு மேம்பாடுகளுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதும் இதில் அடங்கும்.

❑ தற்போது முன்னேறி வரும் துறைகளான தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மேம்பாடு போன்றவைகளில் தமிழ்நாடு பெற்றுள்ள உள்ளார்ந்த வல்லமை (Core Competence) மேம்படுத்தப்படும்.

❑ மின்னணுவழி நிருவாகத்தின் மூலம் நல்லாளுமையை உறுதி செய்யும் ஒரு முக்கிய அங்கமாக, பொதுமக்கள் தொடர்பு மிருந்துள்ள பத்து முக்கிய சேவைப் பணிகளில் மேம்பாடு மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

❑ புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்காக மனிதவள மேம்பாட்டிற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.

❑ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் வலுவூட்டப்படும்.

❑ வறுமைக் குறைப்புக்கான புதியதொரு செயல் திட்டம் மேற்கொள்ளப்படும்.

ஆண்டுத் திட்டம்

14. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு (2002-2007) ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் மத்திய திட்டக் குழுவின் அனுமதியைப் பெற்றுள்ளார்கள். 2001-2002 ஆம் ஆண்டு பொது நிதியின் இடர்ப்பாடான நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இது ஒரு மாபெரும் சாதனையாகும். 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7,000 கோடியாக உயர்த்திப் பெற்றது இந்த அரசின் வியத்தகு சாதனை. இதனைத் தொடர்ந்து 2003-2004 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 7,000 கோடி என்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

15. இந்த வரவு-செலவுத் திட்டம் முன்னெப்போதுமிருந்திராத ரூபாய் 8,001 கோடி அளவிற்கான ஆண்டுத் திட்டத்தை உள்ளடக்கியுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 8,001 கோடி என்ற இந்த உயரளவு வளர்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலைப் பெற மத்திய திட்டக் குழுவினை நாங்கள் அணுகுவோம். 2001-2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடான ரூபாய் 5,200 கோடியுடன் ஒப்பிடும்போது, மாநில அரசின் வளர்ச்சிப் பணி குறித்த செலவு பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதை இது காட்டுகிறது.

பன்னிரண்டாவது நிதிக் குழு

16. 2005-2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதைத் தீர்மானிக்கும் கொள்கைகளைப் பரிந்துரை செய்வதில் பன்னிரண்டாம் நிதிக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. அண்மைக் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் வருவாய் ஆதார நிலைமை மற்றும் வளர்ச்சிப் பொறுப்புக்கள் ஆகியவற்றில் குறிப்பான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாநில அரசுகள் செயலாக்க வேண்டிய மேம்பாட்டுக் கடமைப் பொறுப்புகளை அதிகரிக்கச் செய்யும் திட்டவட்டமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவற்றிற்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்கள் அதற்கேற்ற அளவு அதிகரிக்கவில்லை. மாநிலங்களுக்கு நியாயமாக சேரவேண்டிய சேவைப் பணிகள் மீதான வரி மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இதனை நாங்கள் எதிர்த்துள்ளோம். மாநிலங்களுக்குக் கிடைக்கும் மத்திய அரசின் வரிகளின் பங்கீட்டுத் தொகுதியை நியாயமான மற்றும் கணிசமான அளவு அதிகரிக்கச்செய்ய வேண்டியதன் அவசியம் தற்போது முன்னிறுத்தப்பட வேண்டியதாகிறது. பகிர்ந்தளிக்கக் கூடிய மத்திய வரிப்பகிர்வுத் தொகுப்பில் மாநிலங்களுக்கிடையே

பிரித்தளிப்பதை நிர்ணயிக்கும் கொள்கைக் கூறுகளை முடிவு செய்வது இரண்டாவது பிரச்சினையாகும்.

17. மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்கு 6.637 சதவிகிதத்திலிருந்து 5.385 சதவிகிதமாக பதினோராம் நிதிக் குழு குறைத்ததால் தமிழ்நாடு கடுமையான பாதிப்பிற்குள்ளாகியது. இது 1.252 சதவிகிதக் குறைவு அல்லது ஆண்டிற்காண்டு வித்தியாச அடிப்படையில் 18.86 சதவிகிதக் குறைவு என்றாகிறது. இதன் விளைவாக 2001–2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு ரூபாய் 781 கோடி இழப்பு ஏற்பட்டது. மேலும் அவ்வாண்டில், மத்திய வரிகளிலிருந்து, இம்மாநிலம் இவ்வாறு குறைத்து நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் இறுதியாகப் பெற்ற தொகை ரூபாய் 512 கோடி. மொத்தக் குறைப்பு ரூபாய் 1,293 கோடியாகும். நிதி நிலை ஆதாரங்களில் இந்த அளவு குறைப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியினை எந்த ஒரு மாநிலத்தினாலும் தாங்கிக் கொள்ள இயலாது. இந்த மாபெரும் பின்னடைவை எதிர்கொள்வதற்கு நாங்கள் முயன்றுள்ளோம்.

18. விரிவான நிதி நிலைக் குறிப்பு, எதிர்காலக் கணிப்பு மற்றும் பன்னிரண்டாவது நிதிக்குழு கோரிய ஏனைய தகவல்களைக் குழுவிற்கு அளித்துள்ளோம். 2005–2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்தளிக்க வேண்டியதில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அதில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

19. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசுக்கும், 12–ஆவது நிதிக் குழுவின் தலைவர் பொருளாதார வல்லுநர் டாக்டர் சி. ரங்கராஜன் மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களுக்கும் இடையேயான கூட்டம் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று சென்னையில் நடைபெற்றது. மத்திய–மாநில அரசுகளுக்கிடையே நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிக் குழுவிடம் கோரியுள்ளார். பன்னிரண்டாவது நிதிக் குழுவிடம் இந்த அரசு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய அம்சங்களைக் கோடிட்டுக்காட்ட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விழைகிறேன்.

❑ மத்திய அரசு அதன் வரிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு: மத்திய வரித் தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகுதியின் அளவை தற்போதுள்ள 29.5 சதவிகிதம் என்பதிலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தி அளிக்குமாறு இந்த அரசு கோரியுள்ளது.

❑ மாநிலங்களுக்கிடையே மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்தல்: மத்திய வரிகளை மாநிலங்களுக் கிடையே பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு பன்னிரண்டாவது நிதிக்குழு கோரப்பட்டுள்ளது.

▪ 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்கள் தொகைக்கு 40 சதவிகிதம்.

▪ வரி நடவடிக்கைகளுக்கு 40 சதவிகிதம். (மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் வரிகளின் பங்கு சதவிகிதமாக)

▪ 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கில் கொண்ட தனிநபர் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு மாநிலங்களுக்கிடையேயான இடைவெளியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதற்கு 10 சதவிகிதம்.

▪ மத்திய வரியில் மாநிலத்தின் பங்கிற்கு 10 சதவிகிதம்.

❑ கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதிலும். வட்டிச் சுமையைக் குறைப்பதிலும் மாநிலத்திற்குப் பெரும் நிவாரணம் அளிக்கும் வகையிலான ஒட்டுமொத்தக் கடன் குறைப்புத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு பன்னிரண்டாவது நிதிக்குழுவிடம் கேட் கப்பட்டுள்ளது.

❑ இயற்கைச் சீற்றங்களின் போது மக்களுக்கு நிவாரணமும் உதவியும் அளித்திட மாநில அரசு உரிய நேரத்தில் பயனளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், பேரிடர் நிவாரண நிதியின் தொகையின் அளவினைக் கணிசமாக உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

❑ உள்ளாட்சி மன்றங்கள் வழங்கும் பணிகளின் அளவையும் தரத்தையும் மேம்படுத்த, ரூபாய் 4,881 கோடி நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

❑ மாவட்ட நிருவாகம், காவல் துறை, தீயணைப்பு–மீட்புப் பணிகள் துறை, சிறைச்சாலைகள், மின்னணு வழி நிருவாகம் போன்ற துறைகளோடு பிற துறைகளின் தரத்தினை மேம்படுத்த ரூபாய் 1,856.80 கோடி மானியம் வழங்குமாறு பன்னிரண்டாம் நிதிக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

❑ தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள தனிப்பெரும் பிரச்சினைகள் குறித்தும் குழுவிடம் தெரிவிக்கப் பட்டன. குளங்கள், குட்டைகள், ஊருணிகள் போன்ற நீர் ஆதாரங்களைப் புனரமைத்தல், சென்னையில் தொடர்ந்து நீடித்துவரும் குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல், குடிசைப் பகுதியினரை மறு குடியமர்த்தும் ஒட்டுமொத்தத் திட்டம் போன்ற தனிப்பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்க மாநில அரசுக்கு உதவிடும் வகையில் ரூபாய் 6,167.69 கோடி மானிய உதவி கோரப்பட்டுள்ளது.

20. பன்னிரண்டாம் நிதிக்குழு கூட்டாட்சி நிதி பகிர்வு கோட்பாடுகளில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் என்றும், தமிழ்நாட்டு மக்களின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அதன் பரிந்துரைகள் அமையுமென்றும் இந்த அரசு நம்புகிறது.

வறட்சி நிவாரண நடவடிக்கைகள்

21. மூன்றாண்டுகாலமாக மோசமான பருவநிலையைத் தொடர்ந்து 2002–2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியை எதிர்கொண்டு, நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு முன்னெப்போதும் காணாத உயரளவில் நிவாரணப் பணிகளை விரைந்து செயல்படுத்தியது.

22. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 310.50 கோடி அளவிற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி

மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யும் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். 47.83 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் இவ்வரசு ரூபாய் 324.32 கோடி நிதியுதவி அளித்துள்ளது. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இந்த நிதியுதவி அடுத்த சாகுபடிப் பணியை மேற்கொள்ள உதவியுள்ளது. சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் பெற்ற கடன்பேரிலான வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான திட்டம் ரூபாய் 20 கோடி செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதற்காக கூடுதலாக ரூபாய் 41.05 கோடி ஒதுக்கப்படுகிறது.

23. ரூபாய் 341.92 கோடி செலவில் வேலைக்கு உணவு அளிக்கும் பெரும் திட்டம் ஒன்றின் கீழ் ஊரகப் பகுதிகளில் தேவையின் அடிப்படையில் வறிய குடும்பங்களுக்கு உணவு மற்றும் வேலை பாதுகாப்பு



அளிப்பதை உறுதிசெய்துள்ளோம். 2003 ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து ஆகஸ்டு வரையில் ஒவ்வொரு மாதமும் தேவை அடிப்படையில் ஊரகக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கி உணவுப்பாதுகாப்பு அளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. ரூபாய் 115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 9.71 இலட்சம் குடும்பங்களுக்கு பயனளித்தது. 2002–2003 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக இந்த அரசு ரூபாய் 163.11 கோடி வழங்கியது. 2003–2004 ஆம் ஆண்டில் சென்னை உட்பட வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர் வசதி செய்துகொடுப்பதற்காக ரூபாய் 84.48 கோடி செலவிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

24. 2003 ஆம் ஆண்டில் பருவமழை அதற்கு முந்தைய ஆண்டைவிட நன்றாக இருந்தது என்றாலும்

திருப்தியளிப்பதாக இல்லை. சில மாவட்டங்கள் மீண்டும் பாதிப்புக்குள்ளாயின. இது குறித்து விரிவான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த விரிவான அறிக்கை ஒன்றை இந்த அரசு மத்திய அரசிற்கு அளித்துள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 1584 கோடி தொகையும், வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின்கீழ் 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் உடனடியாக வழங்குவதற்கான கோரிக்கையும் இதில் அடங்கும். கோடைக்காலத்தில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைகளைத் தீர்க்க, பல்வேறு மாவட்டங்களுக்கு குடிநீர் வழங்கும் வகையைச் செய்துகொடுக்க ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளோம். மத்திய அரசின் குழு ஒன்று அமைக்கப்பட்டு விரைவில் நம் மாநிலத்திற்கு வருகைதரவிருக்கிறது. இக்குழுவின் விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில், கூடுதல் நிவாரணப் பணிகள் ஏற்பளிக்கப்படும்.

25. சென்னை மாநகரம் தொடர்ந்து தண்ணீர்ப் பற்றாக்குறையின் பிடியில் சிக்கியுள்ளது. இந்த ஆண்டு நிலைமை மேலும் மோசமாக உள்ளது, பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், கடந்த 55 ஆண்டுக்கால வரலாற்றில் கண்டிராத மிகக் குறைந்த அளவிற்கு, நகரத்திலுள்ள நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு குறைந்துள்ளது. சென்னை மாநகரின் தற்போதைய குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையை உடனடியாகச் சமாளிக்கப் பெரும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். ஆரணியாறு, கொசஸ்தலையாறு நீர் ஆதாரங்களிலிருந்தும், பூவிருந்தவல்லி, மாமண்டூர், பாலூர் ஆகிய இடங்களில் உள்ள தனியார் வேளாண் கிணறுகளிலிருந்து வாடகை அடிப்படையிலும்,

தண்ணீர் பெற்று வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சுமார் 8,500 லாரி கொள்ளளவிற்கு சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைச் சமாளிப்பதற்காக, ஒவ்வொரு நாளும் சுமார் ரூபாய் 80 இலட்சம் செலவு செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாக சமாளிக்க உதவும் வகையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூபாய் 700 கோடி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்தியக்குழு மதிப்பீட்டிற்குப்பட்டு இந்த நிதியிலிருந்து ரூபாய் 50 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

26. ரூபாய் 720 கோடி செலவிலான சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்) விரைவாக முன்னேறி வருகிறது. இத்திட்டம், 2004 மே திங்களில் முடிக்கப்படும். சென்னையில் ஆண்டாண்டாக தொடர்ந்து வரும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கான நிரந்தரத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக அடுத்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொடக்க நிதியாக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஒட்டுமொத்த குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதென்று அறிவிக்கப் பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். சென்னையில் தொடர்ந்து வரும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கக்கூடிய நீண்டகால ஒட்டுமொத்தத் தீர்வுகாண இதனை நாம் பயன்படுத்துவோம்.

27. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதனால் ஏற்பட்ட சூழ்நிலையைச் சமாளிப்பதில் இந்த அரசு எத்தகைய தளர்வும் கொள்ளாது என்று இம்மன்றத்திற்கு நான் உறுதியளிக்கிறேன். இந்த அரசு, அடுத்த நிதியாண்டிலும், பல்வேறு நிவாரண நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலும் வகையில், வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 200.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காவல்துறை

28. குற்றம் புரிவதைத் திறமையாகத் தடுத்தல், சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துதல், சிறைச் சீர்திருத்தங்கள், கைதிகளுக்கு முறையான மறுவாழ்விற்கு வகைசெய்தல், நீதித் துறையில் விரைவான நடைமுறைகள் ஆகியவை, சட்டம்–ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதற்கான முக்கிய கூறுகளாகும். இந்த அரசு இவை அனைத்தையும் முறையாக முழுமையாக நிருவகித்துள்ளது.

29. நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 1,262.60 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,327.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 112 கோடியும் அடங்கும். ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், காவல் துறைத் தலைவரின் அலுவலக வளாகம் கட்டுவதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள்

30. சிறைச்சாலைகளுக்காக, இவ்வாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 76.80 கோடி நிதிஒதுக்கியிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 117.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

31. ரூபாய் 77.09 கோடி செலவில் புழலில் புதிய சிறை வளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கானப் பணி விரைவாக நடந்தேறிவருகிறது. இதற்காக ரூபாய் 47.09 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. சிறைநிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 11.19 கோடி நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

நீதித்துறை

32. இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான மொத்த ஒதுக்கீடு 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 140.99 கோடியிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 171.85 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தைக் கணினி மயமாக்குவதற்கும் ஏனைய நீதிமன்றங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நீதி ஒதுக்கியுள்ளோம். உச்சநீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் திருத்திய சம்பள வீதங்களையும் இந்த அரசு செயல்படுத்தியுள்ளது.

33. உயர்நீதிமன்றத்தைக் கணினிமயமாக்குவதற்கும் ஏனைய நீதிமன்றங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணைகளின் அடிப்படையில் தமிழ் நாட்டிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் திருத்திய சம்பள வீதங்களையும் இந்த அரசு செயல் படுத்தியுள்ளது. மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ந் தேதி துவக்கப்படும்.

புத்துயிர் பெற்ற முதன்மைத் துறை

34. முதன்மைத் துறைக்குப் புதிய நீடித்த வளர்ச்சி வேகத்தை முடுக்கிவிடுவதை நோக்கமாகக் கொண்ட துணிச்சலான பல்முனை வளர்ச்சி செயல் திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. இந்த அணுகுமுறையில் அடங்கியுள்ளவையாவன:

- மாற்றுப் பயிர்த் திட்டம்
- ஒட்டுமொத்த தரிகநில மேம்பாடு
- திறன்மிக்க நீர்ப்பயன்பாட்டை ஊக்குவித்தல்
- துல்லிய பண்ணையியல்
- புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல்
- தகவல்களை விரைந்து பகிர்ந்து கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தை கையாளுதல்.
- தாராள சந்தை மூலம் நல்ல விலை கிடைக்கச் செய்தல்.
- ஊரக பண்ணை சாராத் துறையில் கவனம் செலுத்துதல்
- கூட்டுறவுக் கடன் கட்டமைப்பிற்குப் புத்துயிர் அளித்தல்

35. இந்த அரசு, சுற்றுச் சூழலுக்கு ஏற்பில்லாத அதிக நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தும் பயிர் சாகுபடி முறையை மாற்றி, குறைந்த நீரைக் கொண்டு அதிக மதிப்புள்ள பயிர்ச் சாகுபடியை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி பெருமளவில் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. வீரிய ஒட்டுரக காய்கறிகள், தாவர



எரிபொருள் மரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்களின் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு துல்லிய பண்ணையம் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் வயல்வெளிப் பயிற்சி அளிக்கும் வகையில் வரும் நிதியாண்டில் மாதிரி தோட்டக்கலை கிராமங்கள் ஏற்படுத்தப்படும்.

36. இந்த அரசு மாநிலத்தின் பல பகுதிகளில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தி வருகிறது. வகைப்படுத்தப்பட்ட மலர்களின் ஏற்றுமதிக்காக ஓசூரில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 25 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மலர்களுக்கென நீலகிரியில் மற்றொரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 16 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. மாம்பழ ஏற்றுமதிக்கென ஆறு தென் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தேனியில் ரூ.25 கோடி மதிப்பில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ரூபாய் 13 கோடி மதிப்பில் ஓர் 'உணவுப் பூங்கா' அமைக்கப்படவுள்ளது. ஈரோட்டிற்கு அருகில் ஒரு மஞ்சள் வணிக வளாகம் ரூ.36.32 கோடி மதிப்பில் அமைக்கப்படும். 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூபாய் 707.95 கோடியாக இருக்க, 2004-2005 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூபாய் 882.41 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

37. ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. வரும் வேளாண் பருவத்தில் 1.50 இலட்சம் ஏக்கர் பரப்பில் மரவகைகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடிக்காக புதிய நடவு மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கென 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

38. 'நபார்டு' நிதியுதவியுடன், 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 57 கோடி திட்ட ஒதுக்கீட்டில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் உள்ளிட்ட திறன்மிக்க நீர்ப் பயன்பாட்டு உத்திகளை இந்த அரசு செயல்படுத்தும். மேலும் மாற்றுப் பயிர் சாகுபடி, சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்தல், சிக்கன சக்தி பம்புசெட்டுகள் வழங்குதல், துல்லிய பண்ணையம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தும் பம்புசெட் உரிமையாளர்கள் பங்கேற்கும் ஒரு முன்னோடித்திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் பம்புசெட்டுகள் வைத்துள்ள விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இது செயல்படுத்தப்படும்.

39. இந்த அரசு 2004-2005 ஆம் ஆண்டில் 45,000 பண்ணை பம்புசெட்டுகளுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்குவதை உறுதிசெய்யும். இதில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள கடைமடை மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படவுள்ள 15,000 இணைப்புகளும் அடங்கும். காவிரி நீரில் சட்டரீதியாக கிடைக்க வேண்டிய நமது பங்கினை கர்நாடக அரசு மறுத்து வருவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதற்கும், நவீன பாசனத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிப்பதற்கும் இத்திட்டம் வகை செய்யும்.

கால்நடை வளர்ப்பு

40. ஊரகக் குடும்பங்களுக்குத் துணை வருமானத்தை உயர்த்துவதற்குக் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் மிகவும் இன்றியமையாததாகும். கால்நடை சிறப்புப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 9,432 கால்நடை சுகாதார



முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மாநில அளவில் கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்தை மேம்படுத்த கடந்த இரண்டாண்டுகளில் மிக உயர் அளவாக 64.62 இலட்சம் செயற்கை முறையில் கருவூட்டலை செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக சாதனை படைத்துள்ளது.

41. தொடர்புப்பணி தம்பதியினருக்கு பயிற்சி அளித்துவரும் டானிடா நிதி உதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 1.41 கோடி ஒதுக்கீட்டுடன் தற்போதைய 17 மாவட்டங்களுடன் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ரூபாய் 3.87 கோடி செலவில் தற்போதுள்ள துணை மையங்களை மேம்படுத்தி 75 கால்நடை மருந்தகங்களை அமைக்கும் திட்டத்தை அவையின் உறுப்பினர் வரவேற்பர். வீட்டுப்பண்ணை பயிர் வளர்ப்பு முறைக்கு அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மீனவ மேம்பாடும் மீனவர் சமுதாயத்தின் நலனும்

42. ரூபாய் 40 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. பழவேற்காடு ஏரிப்பகுதியில் வசிக்கின்ற மீனவர்களின் வாழ்க்கை வளத்தை மேம்படுத்த பழவேற்காடு ஏரியில் சிப்பிகள், சிங்கெரால், நண்டுகள் ஆகியவற்றை வளர்க்கின்ற கடல்சார் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான பரவலாக்கப்பட்ட திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களில் கடல்சார் மீனவர்களுக்கு உதவுவதற்கான நிவாரணத் திட்டத்திற்காக ரூபாய் 29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் மீனவர்களுக்காக 4,000 வீடுகள் கட்டும்பணி

மேற்கொள்ளப்படும். இதற்காக ரூபாய் 15.65 கோடி நிதி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனம்

43. தமிழ்நாடு, தன்னுடைய நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்திவிட்டது. சிறிய அளவில் உள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களும், மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. காவிரி ஆற்றுநீரில் தமிழ்நாட்டின் நியாயமான பங்கினை விடுவிக்க மறுப்பதில் கர்நாடக அரசு காட்டிவரும் பிடிவாதமான போக்கினை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். காவிரி நீரில் நம்முடைய நியாயமான பங்கினைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் ஒருபோதும் தளரமாட்டோம். நீர் ஆதாரங்கள் அனைத்தையும் தேசியமயமாக்கி நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்துதல் ஒன்றே நடைமுறைக்கு ஏற்ற நீண்ட காலத் தீர்வாகும். மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை தீபகற்ப நதி இணைப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு திட்ட தயாரிப்பை விரைவுபடுத்துமாறு நதிகள் இணைப்பிற்கான பணிக்குழுத் தலைவர் திரு. சுரேஷ் பிரபுவிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். விரைவில் தீர்வு காணக்கூடிய இதர சில சிறிய இணைப்புத் திட்டங்களையும் விரைவாக முடிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்



இத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என இந்த அரசு வலியுறுத்தும்.

44. பாசன வசதி மேலாண்மையிலும் தண்ணீரை திறம்படப் பயன்படுத்துவதிலும் உழவர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 1,566 பாசனநீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தேர்தல்கள்

தற்போது முடிக்கப்பட்டுள்ளன. உழவர்களின் உரிமையினை நிலைநாட்டுவதிலும், மாநிலத்தில் உள்ள பாசன முறைகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்பில் அவர்களை பங்கேற்கச் செய்வதிலும் எங்களது இடையறாத உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது. நடப்பாண்டில் ரூபாய் 2,900 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய ஆற்று வடிநில அடிப்படையிலான ஒட்டுமொத்த நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

45. இந்த அரசு, வேலைக்கு உணவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2004–2005 இல் ரூபாய் 100 கோடி ஒதுக்கீட்டில், 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டைக் கொண்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ளும். பாசனத்திற்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 912.45 கோடியாக இருக்க 2004–2005–இல் ரூபாய் 967.45 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள்

46. வெளிநாட்டு நிதிநிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நடப்பு நிதியாண்டில் நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காடுவளர்ப்பில் கூட்டு நிருவாகத்தைக் கொண்ட இத்திட்டம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தமிழ்நாடு இயற்கை வள நிர்வாகத் திட்டம் எனும் தலைப்பில் ரூபாய் 779.33 கோடி மதிப்பீட்டில் ஐந்து ஆண்டு கால அளவில் மேற்கொள்ளப்படுவதற்காக வகுக்கப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி (Japan Bank for International Cooperation) யின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்புதலை எதிர்நோக்கி வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 65.63 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 21.40 கோடி மொத்த மதிப்பீட்டில் ஆற்றுப் படுகைகளில் தேக்கு மரங்களை வளர்க்கும் பெருந்திட்டம் ஒன்றிற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நமது கிராமம்

47. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களின் முழுமையான வளர்ச்சியினை உறுதிசெய்யும் நோக்கத்தினைக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டு 'நமது கிராமம்' என்று அவர்களால் பெயரிடப்பட்ட புதியதொரு திட்டத்தை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். ரூபாய் 200 கோடி செலவில் இந்தத் துணிகர முயற்சி செயல்படுத்தப்படும். வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 52.21 கோடி தொடக்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் நிதியுதவியைப் பெறுவோம்.

48. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமமும் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்காக ஜனநாயாக அதிகாரப் பகிர்வு மற்றும் பங்கேற்பு அணுகுமுறையில் அமைந்த கோட்பாடுகளுக்கு 'நமது கிராமம்' திட்டம் வடிவம் கொடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ், குடிநீர், துப்புரவு, வடிகால், சுகாதாரம், பெண்ணுரிமை, சத்துணவு, சுற்றுச்சூழல் மேம்பாடு, நீர் ஆதாரங்களின் மேலாண்மை, கிராமச் சாலைகள், தெருவிளக்குகள் போன்ற துறைகளில் திட்டவட்டமான மேம்பாடுகளை

உறுதிசெய்ய செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்க கிராமசபை கூடும். தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க ஒவ்வொரு அரசுத் துறையின் அதிகாரிகளும் இந்தக் கிராமசபைக்கு உதவிபுரிவர். கிராம சபைகள் தமது திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணிக்கும் வகையில் குறிப்பிட்ட கண்காணிக்கத்தக்க குறியீடுகள் வெளியிடப்படும். உள்ளூர்ப் பள்ளிகளில் பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை வீதம் குறித்தும், கிராமத் துப்புரவு, பொது சுகாதாரம் மற்றும் உடல்நலன் ஆகியவற்றிற்குக் கவனம் அளிப்பதும் இதில் அடங்கும். கிராம சபைகள் மக்களுக்கு உண்மையான நலன்களை அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் வாழும் சூழலையும் மேம்படுத்த உதவும் திட்டங்களின் மீது கவனம் செலுத்தச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதிகார உரிமை மற்றும் வறுமை குறைப்பு

49. மாநிலத்திலுள்ள ஊரகப் பகுதிகளில் வறுமையை விரைந்து குறைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றொரு துணிகரமான முயற்சியை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின் முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஏழைகளில் மிகவும் ஏழ்மையாக உள்ள 25 குடும்பங்கள் சில குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் கிராமசபை மூலமாகக் கண்டறியப்படுவர். இப்பயனீட்டாளர்களுக்குத் தேவையான வாழ்வாதாரப் பாதுகாப்பு, சத்துணவுப் பாதுகாப்பு, வீட்டுவசதிக்கான பாதுகாப்பு, சுகாதார வசதிக்கான பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை வாழ்நாள் தேவைகளை அளிக்க முற்படுவோம். இப்பயனீட்டாளர்கள் அவர்களுடைய குடும்ப வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான புதிய மற்றும் துணைத் தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பொதுவிநியோக முறையின் கீழ் பயன்பெறுதல், ஊரக வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் தரமான சுகாதார வசதிகள் ஆகியவை இப்பயனீட்டாளர்கள் தங்களது வாழ்நாள் அடிப்படைத் தேவைகளை மனநிறைவளிக்கும் வகையில் பெறக்கூடிய உரிமையைப் பெற்றுத்தரும். சமூகநலன் என்பதன்கீழ் ரூபாய் 6.50 கோடி தொடக்க ஒதுக்கீட்டுடனும், ஊரக வளர்ச்சி என்பதன்கீழ் ரூபாய் 5 கோடி ஒதுக்கீட்டுடனும் ஆகமொத்தம் ரூபாய் 11.50 கோடி ஒதுக்கீட்டுடன் இந்தப் புரட்சிகரமான அதிகார உரிமைத் திட்டம் 2004–2005 இல் செயல்படுத்தப்படும். இத்திட்டம், 2004–2005 இல் உலகவங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள தமிழ்நாடு அதிகார உரிமை மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டத்துடன் (TNERP) மேலும் விரிவுபடுத்தப்படும். ஆறாண்டுகளில் ரூபாய் 650 கோடி திட்ட மதிப்பீட்டில் இது செயல்படுத்தப்படும்.

ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாடு

50. ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் காணச் செய்வதோடு மட்டுமல்லாது தேவையான அளவு ஊரக வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்த ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. ஊரகப்பகுதி வாழ்மக்களுக்கு, ஊரகக் குடியிருப்பு, முழுமையான ஊரகத் தொடர்பு, குடிநீர் பாதுகாப்பு, முழுமையான துப்புரவு மற்றும் தடையில்லா மின்வழங்கல் ஆகியவற்றைப் பெறச்செய்வதற்கு இத்திட்டம் முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவத்தை அளிக்கும். திருத்த மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபாய் 1898.76 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சிக்கான மொத்த நிதியொதுக்கீடு ரூபாய் 1952.61 கோடிக்கு உயர்த்தப்படுகிறது.

ஏழை-எளியோருக்கான வீட்டுவசதி

51. ஏழை–எளியோருக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு, தொடர்ந்து உரிய கவனம் எடுத்துக் கொள்ளும். 2001 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து ரூபாய் 379.11 கோடி செலவில் 1.04 இலட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 52.05 கோடி செலவில் மேலும் 50,678 கச்சா வீடுகள் நிலை உயர்த்தப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஊரகக் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை நிலை உயர்த்துவதற்கான பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 79.66 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மொத்தம் 36,426 புதிய வீடுகள் கட்டப்படும் மேலும் 18,691 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும். ஊரக வீட்டுவசதியில் விரைந்த முன்னேற்றம் காண வர்த்தக வங்கிகளின் நிதிப்பங்கேற்பு கொண்ட ஊரக வீட்டுவசதிக்கான புதியதொரு திட்டத்தை நாங்கள் வடிவமைப்போம்.

ஊரகச் சாலைகளின் மேம்பாடு

52. ஊரகச் சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு இந்த அரசு முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவம் அளித்து வருகின்றது. மாநிலத்திலுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றினை இந்த அரசு தொடங்கியுள்ளது. இதில் பின்வரும் முக்கிய கூறுகள் அடங்கியுள்ளன:

- நெடுஞ்சாலைத் துறை மொத்தம் 41,125 கி.மீ நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைப் பராமரிக்கிறது. இதில் 4273 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2003–2004 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டன. 6492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளை,

குறிப்பாகப் பேருந்துகள் ஓடும் சாலைகளைச் சீரமைப்பதற்காக மொத்தம் ரூபாய் 336.05 கோடி செலவிலான சிறப்புத் திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஏப்ரல் 2004 க்கு முன்னரே மாண்புமிகு உறுப்பினர்கள் கண்கூடாகக் காணலாம்.

❑ ரூபாய் 15 கோடி செலவில் இதர மாவட்டச் சாலைகளில் 150 சிறுபாலங்களைக் கட்டும்பணி துவக்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

❑ இதுவரையிலும் எந்த அமைப்பினாலும் பராமரிக்கப்படாத 5850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தரமுயர்த்துவதன் மூலமும், சீரமைப்பதன் மூலமும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மற்றொரு பெருந் திட்டம் ரூபாய் 300 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையினால் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆனால் அதற்குப்பின் பராமரிப்பின்றி இருக்கும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், முன்னர் தார் போடப்பட்டு தற்போது சிதிலமடைந்துள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

❑ பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 164 கோடி செலவில் 1216.57 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாறாக ஊரகப்பகுதிகளில் அனைத்துப் பருவநிலைகளுக்கும் ஏற்ற தரமான சாலைகளை அளிக்கும் ஒட்டுமொத்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

53. இந்த அரசு 2001–2004 காலகட்டத்தில் 13,365 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்துள்ளது. மொத்தம் 14,449 கைப்பம்புகள் சிறுவிசைப் பம்புகளாக மாற்றப் பட்டுள்ளன. இக்கால அளவில் ஊரகப்பகுதிகளிலுள்ள 14,550 அரசுப் பள்ளிகளுக்கும், 1226 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கப் பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதற்கான துறைசீர்திருத்தத்



திட்டம், 6 மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 223.16 கோடி செலவில், சுமார் 9,900 குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 8877 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

54. 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 600 கோடி மொத்த மதிப்பீட்டுச் செலவில் 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்கான திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளும். ரூபாய் 327.32 கோடி மதிப்பீட்டில் 28 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், முழுமையான துப்புரவுத் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தும். மொத்தம் ரூபாய் 3,500 கோடி செலவில், ஒட்டுமொத்த ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டமொன்றை ஆறு ஆண்டு காலத்தில் செயல்படுத்த உலகவங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இத்திட்டத்தை 2004–2005 ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கருதியுள்ளோம்.

ஊரக வேலைவாய்ப்பு

55. 1992 இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப்பகுதிகளுக்கு அதிகார உரிமையும் சுய வேலைவாய்ப்புகளும் அளிக்கின்றமாபெரும் திட்டமாக உருவெடுத்துள்ளது. ரூபாய் 393.64 கோடி மதிப்பீட்டுச் சேமிப்புடன் சுமார் 25 இலட்சம் பயனீட்டாளர்களைக் கொண்ட மொத்தம் 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. சம்பூர்ண கிராமத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 'நபார்டு' வங்கியுதவியுடனான திட்டங்கள் ஆகியவற்றின்கீழ்

கடன் வசதிகளை அளிக்கும் திட்டங்களுக்கு 2004–2005 ஆம் ஆண்டில் முக்கிய கவனம் செலுத்துவோம்.

56. மத்திய அரசின் நிதியுதவியுடன் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் ஊதியத்திற்கு வேலை, உணவுப்பாதுகாப்பு, நிலையான சொத்துக்களை ஏற்படுத்துதல் ஆகிய பயன்களை இந்த அரசு அளித்துவருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 10.75 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக 7.08 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஊதியம் மற்றும் இடு பொருட்கள் ஆகியவைகளுக்கு இந்த அரசு ரூபாய் 392.13 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நீர்நிலைகளைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தும் வகையில், இத்திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் விரிவாக்கப்படும்.

57. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்த அரசு மேற்கொண்ட புரட்சிகரமான மற்றொரு முயற்சியாகும். இத்திட்டம் ஊரக பண்ணைசாராத் துறைக்கு புதியதொரு உத்வேகத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 369 வளர்ச்சி வட்டாரங்களை உள்ளடக்கிய மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது. ஏறக்குறைய 73 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 2004–2005இல் ரூபாய் 20 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஊரக மின் வசதி

58. நடப்பாண்டில் ரூபாய் 150 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக மின் வழங்கலின் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களை தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த ஒதுக்கீடு 2004–2005 இல் ரூபாய் 192.58 கோடியாக உயர்த்தப்படும். ஊரகப்பகுதிகளில் மின் வழங்கல் தரத்தை மேம்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியம், 12 புதிய துணை மின் நிலையங்களை ஏற்படுத்துவதுடன், 22 மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்தி 2,172 புதிய மின்மாற்றிகளையும் நிறுவும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

59. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 82 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இத்திட்டம் ரூபாய் 192.70 கோடி ஆண்டு ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் பணிகள் முடிவடையும் தருவாயில் 2004–2005 ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கம் மற்றும் பயன் பாட்டிற்கான பின்வரும் திருத்திய முறை பின்பற்றப்படும்.

(ரூபாய் இலட்சத்தில்)

▪ குடிநீர் வழங்கல் பணிகள்	15.00
▪ நமது கிராமம் திட்டம்	15.00
▪ பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மாணவர் இல்லங்கள்	5.00
▪ ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்லங்கள்	5.00
▪ சிமெண்ட் சாலைகள் உட்பட கிராம ஊராட்சி சாலைகள் மற்றும் தெரு விளக்குகள்	10.00
▪ குறிப்பான பணிகளுக்கு இல்லாத ஏனைய ஒதுக்கீடு	32.00
▪ **மொத்தம்**	**82.00**

திருத்திய ஒதுக்கீட்டு முறை குறித்த விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

வளர்ச்சித் துடிப்பு கொண்ட இரண்டாம் நிலைத் துறையை நோக்கி

60. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிற்கான 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையினை அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கை, உற்பத்தித் துறையினை முன்னிறுத்தி, மாநிலத்தின் முதலீட்டுச் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தை வகுத்துள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய சீரமைப்புப் பணிகளாவன:

❑ தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

❑ தரமான எரிசக்தி வழங்குதல்.

❑ நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் கூட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.

- மாநில வரி விதிப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்.
- தொழில்நுட்ப நீதியில் நவீனமயமாக்குதல் மற்றும் நிலை உயர்த்துதல்.

கட்டமைப்பு மேம்பாடு

61. கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கு மூலதன முதலீட்டினை அதிகரிக்கும் வகையில் பொது நிதியைச் சீரமைக்க வேண்டியுள்ளது. பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து பங்கேற்பதையும் ஊக்குவிக்க வேண்டும். வருவாய்க் கணக்கில் வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்படும் அதிக அளவு பற்றாக்குறையின் காரணமாக சாலைகள், நகர்ப்புறக் கட்டமைப்பு, குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், வடிகால் வசதி போன்ற பணிகளுக்குப் போதுமான மூலதனச் செலவுகளை மேற்கொள்ள இயலவில்லை. இச்சூழ்நிலையை நிதிச் சீர்திருத்தங்கள் மூலம் சரிசெய்திட உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு பெருமளவில் முதலீடு செய்வது உறுதி செய்யப்படும். கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புக் கொள்கை ஒன்றினை உருவாக்கிட, பன்னாட்டு வல்லுநர்களின் கருத்துகள் உள்ளிட்ட விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் மேம்பாடு

62. நெடுஞ்சாலைகள் மேம்பாடு தற்போது திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ் சாலைகளை மேம்படுத்திவருகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்த சிறப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகர் உள்ளிட்ட நான்கு



பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மிக விரைவான முன்னேற்றம் கண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 341 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலான இந்தியாவின் வடக்கு – தெற்கு இணைப்பில் பணிகளைத் தொடங்கி வைத்தனர். இத்திட்டத்தின் கீழ் 851 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர, இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 507 கிலோ மீட்டர் தூர தேசிய நெடுஞ்சாலைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

63. தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் ரூபாய் 2,160 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஆற்காட்டிற்கும் திருவாரூருக்குமிடையே 393 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்குமிடையே 330 கிலோ மீட்டர் நீளத்திற்கும், மாநில நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு இத்திட்டம் உதவும். சுமார் 2,000 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும், மாவட்டப் பெருஞ் சாலைகளும் தரமுயர்த்தப்படும். தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டில், ரூபாய் 500 கோடி ஒதுக்கப்படுகிறது.

64. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை உரியவாறு பராமரிப்பதும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1990 களின் பிற்பகுதியில் இது புறக்கணிக்கப்பட்டது. திருத்த மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதியொதுக்கம் 2003-2004 ஆம் ஆண்டிற்கு வரவு-செலவு திட்ட ஒதுக்கீடான ரூபாய் 248.56 கோடியிலிருந்து ரூபாய் 314 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதைப்போலவே, 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான ஒதுக்கீடு ரூபாய் 413 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. சாலைகளை உரியவாறு பராமரிப்பதை உறுதிசெய்ய, அரசு மேற்கொண்டு வருகின்ற இந்தத் திட்டவட்டமான நடவடிக்கைகளை அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

65. தமிழ்நாட்டில் மொத்தம் 14,576 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும் மாவட்டப் பெரும் சாலைகளும் உள்ளன. இதில் கிட்டத்தட்ட 723 கிலோ

மீட்டர் நீளமுள்ள சாலைகள் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. எஞ்சியுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெரும் சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கி / உலக வங்கியின் நிதி உதவி பெற அனுப்பிவைக்கப்படும். பொதுத்துறையும் தனியாரும் பங்கேற்கும் அமைப்பில், மாநில நெடுஞ்சாலைகளிலும், மாவட்டப் பெரும் சாலைகளிலுமுள்ள பெரும் போக்குவரத்து நெரிசலைக் கொண்ட சாலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றினை மேற்கொள்வோம். இப்புதிய திட்டங்கள் உருவாக்கப்படும் வரையில், மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2,149 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெரும் சாலைகள், சர்க்கரை ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் நிலை உயர்த்து தலுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றினை இந்த அரசு துவக்கியுள்ளது.

குடிநீர் வழங்கலும் துப்புரவும்

66. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் பின்வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கியுள்ளது:

- ரூபாய் 69.20 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 674 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 133.05 கோடி செலவில் நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 642 ஊரகக் குடியிருப்புகள் பயன் பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 74 கோடி செலவில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உசிலம்பட்டி நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 406 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 85.04 கோடி செலவில் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் திண்டுக்கல் நகராட்சி, 7 பேரூராட்சிகள் மற்றும் 816 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 78.70 கோடி செலவில் திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் சங்கரன்கோவில், சிவகாசி நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 401 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 98.85 கோடி செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 890 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூபாய் 126.85 கோடி செலவில் நாமக்கல் மாவட்டத்தில் 6 பேரூராட்சிகள் மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

67. 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 200 கோடி முதலீட்டில் 8 நகராட்சிகள் மற்றும் 42 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த 50 குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வோம். இச்செயல்பாடுகள் ஏறக்குறைய 14 இலட்சம் மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்குப் பெரிதும் உதவும். அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ள தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 3 மாநகராட்சிகள் மற்றும் 4 நகராட்சிகளில் ரூபாய் 575.30 கோடி செலவில் ஒட்டு மொத்த கழிவுநீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 844 கோடி செலவில் எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீரகற்று வசதியைப் பெறும் வண்ணம் பெருந்திட்டமொன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

மின் துறை

68. மின் துறையில் புதிய மின் சக்தித் திறனை உருவாக்கி மின் வழங்கல் திறனை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செலுத்தியுள்ள



தனிக்கவனம் மின்தடையின்றித் தரமான மின் சக்தி கிடைப்பதை உறுதி செய்துள்ளது. பயன்பாட்டு அடிப்படையிலான மின் கட்டண முறைக்கு மாறியதன் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும் மின்சக்தியின் தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்துள்ளது. இதன் பயனாக வழங்கப்படும் மின்சாரத்தின் அலை அதிர்வு எண் 48 ஹெர்ட்ஸ் என்பதிலிருந்து விதிக்கப்பட்ட 50 ஹெர்ட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

69. மாநிலத்தின் மின்சார உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதை உறுதி செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல புதிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். வட சென்னையில் 1,000 மெகாவாட் மின்உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவ தேசிய அனல் மின் கழகத்திற்கும், தமிழ்நாடு மின்வாரியத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. அதே போல தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் அனல் மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கூடங்குளத்தில் 2,000 மெகாவாட் திறனுடைய அணுமின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணி மிக வேகமாக நடந்தேறி வருகிறது. கல்பாக்கத்தில் 500 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட அதிக அணு பெருக்கி கலன் (proto type fast breeder reactor) ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. மின் வழங்கலில் மேம்பட்ட தரத்தினையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்காக மின்னனுப்புகை மற்றும் பகிர்மானத் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 1,305.46 கோடி அளவிற்கு முதலீடு செய்யும்.

70. மத்திய அரசு, 2003 ஆம் ஆண்டு மின்சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. எதிர்காலத்திற்கான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். இதில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த கலந்தாலோசனைகளையும், விவாதங்களையும் மேற்கொள்வோம். மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான கொள்கை வடிவம் ஒன்று உருவாக்கப்படும்.

துறைமுகங்கள்

71. உருவாக்கி, சொந்தமாக்கிக் கொண்டு இயக்க வருவாய்ப் பங்கு அளித்துப் பின்னர் அரசுக்கு உரிமை மாற்றும் (Build Own Operate Share and Transfer) அடிப்படையில், ரூபாய் 250 கோடி திட்ட மதிப்பீட்டில், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினை மேற்கொள்ள இந்த அரசு திட்டமிட்டுள்ளது. எண்ணெய்ப் போக்குவரத்திற்கு உதவிடும் வகையில், ரூபாய் 56 கோடி செலவில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குகளைக் கையாளத் தளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 5 இலட்சம் மெட்ரிக்டன் எண்ணெய் வர்த்தகம் மேற்கொள்ள முடிகிறது. குளச்சல் துறைமுகத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அதன் திட்டக் கோட்பாடுகளை விரிவாக ஆராய்ந்துவருகிறோம். 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேதுசமுத்திரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை "சாகர்மாலா" (Sagar Mala) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

விதிகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி எளிமைப்படுத்துதல்

72. ரூபாய் 25 கோடிக்கு மேலான முதலீடு கொண்ட தொழில்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான எளிய நடைமுறை ஒன்றினை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த நடைமுறையின் கீழ், 10 வெவ்வேறு படிவங்களை ஒருங்கிணைத்து பொதுவான விண்ணப்ப படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. புதிய முதலீடுகளுக்கான விண்ணப்பங்கள் ஒற்றைச் சாளர முறையில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் (GUIDANCE BUREAU) மூலம் பரிசீலிக்கப்படுகின்றன. முதலீட்டாளர் தொழில் துவங்க அனுமதியைப் பெறுவதற்கு, அலுவலகங்களை நாடிச் செல்லவேண்டியதில்லை. பல்வேறு துறைகள் ஒரே நேரத்தில் இணையாக விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதால் (Parallel Processing), பரிசீலனை நேரம் குறைக்கப்படுகிறது. இதுபோன்ற ஒற்றைச்சாளர முறை ஒரு முன்னோடித் திட்டமாக இரண்டு மாவட்டங்களில் சிறுதொழில் முதலீட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது படிப்படியாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்படும்.

73. தமிழ்நாட்டில் தற்போது தொழில் முனைவர்கள் மொத்தம் 53 பல்வகைப் பதிவேடுகள் மற்றும் படிவங்களைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது, பெருமளவில் மேலாண்மை நேரம் மற்றும் உழைப்பினை வீணாக்கும் பெருந்தொல்லையாக உள்ளது. இந்தப் பதிவேடுகளையும் படிவங்களை ஒருங்கிணைத்து சீராக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் எண்ணிக்கை அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில் வெகுவாகக் குறைக்கப்படும். கையாளுவதற்கு எளிதான முறையில் இவை எளிமையாக்கப்படும்.

வரிச் சீரமைப்புகள்

74. பிரபல பொருளாதார வல்லுநர் டாக்டர் ராஜா J. செல்லையா அவர்களின் தலைமையின்கீழ் வரிச் சீரமைப்புமற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையத்தை இவ்வரசு அமைத்தது. 2003–2004 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் தீர்வை மற்றும் மின்நுகர்வுக்கான புதிய சட்டம் இயற்றப்பட்டது. எந்த வகையான மின்நுகர்வோருக்கும் வரி விலக்களிக்கக்கூடாது என ஆணையம் பரிந்துரை செய்த போதிலும், இந்த அரசு சிறிய மின்நுகர்வோரின் நலனைக் காக்கும் பொருட்டு விவசாயப் பம்பு செட்டுகளுக்கும், குடிசை மின் இணைப்புகள் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்கும் விலக்களித்துள்ளது.

75. ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்துரிமை மாற்றத்திற்கான முத்திரைத்தாள் தீர்வையையும், உடைமையுரிமை மாற்றத் தீர்வையையும் குறைக்கும் துணிவான முடிவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ளார்கள். இவ்வாறாக, முத்திரைத்தாள் தீர்வை மற்றும் உரிமை மாற்றத் தீர்வை ஊரகப் பகுதிகளில் 12 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகிதமாகவும், நகர்ப் பகுதிகளில் 13 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகித மாகவும் 21.11.2003 முதல் குறைக்கப்பட்டன. பத்திரப் பதிவு நடைமுறையில் ஒளிவு மறைவற்ற தன்மையினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கட்டண வீதங்கள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப் பட்டுள்ளன. கட்டண வீதங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்ட போதிலும், இந்த கட்டணக்குறைப்பு செயல்படுத்தப்பட்டதிலிருந்து அரசின் வருவாய் அதிகரித்துள்ளது.

76. விற்பனை வரிக் கட்டமைப்பில் சில திருத்தங்களும் சீரமைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் அறிவோம். வரிச்சீர்திருத்த மற்றும் வருவாய் பெருக்கக் குழு மதிப்புக் கூட்டு வரியை உள்ளிட்ட சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. இதற்கான தொடக்கநடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தேசிய அளவில் ஒருமித்த கருத்து உருவாகும் அதே நேரத்தில், தயார் நிலைக்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம். வருமாண்டுகளில் இத்திட்டத்தின் செயலாக்கம் பற்றிய தேசிய அளவிலான விவாதங்களின் அடிப்படையில் இதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும். தமிழ்நாட்டில் வரி விதிப்பினை எளிமையாக்குவதும், ஒளிவுமறைவற்றதாக ஆக்குவதுமே நமது நோக்கமாகும்.

தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்

77. இரண்டாவது தேசியத் தொழிலாளர் ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குப் பொருத்தமான தொழிலாளர் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் விதிகளை ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தக்க ஆலோசனைக்குப் பின், தொழிலாளர் துறைச் சீர்த்திருத்தங்கள் குறித்த செயல் திட்டம் வகுக்கப்படும். தொழிலாளர்களின் நியாயமான நலனைப் பாதுகாக்கும் அதே சமயத்தில் மாநிலத்தில் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துதலும் தரம் உயர்த்துதலும்

78. தமிழ்நாடு உற்பத்தியில் இந்தியாவின் முக்கிய நடவடிக்கை மையமாக உருவெடுத்துள்ளது. உற்பத்தித் துறையில் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளின் அளவு தமிழ்நாட்டில்தான் மிக அதிகமாகும். இத்துறையில் மாநிலத்தின் தன்னிகரற்ற நிலையை இது தெளிவாக்குகிறது. இத்தகைய ஒப்பீட்டு ஆதாயத்தை வலுப்படுத்த வேண்டியதன் தேவையை இது நன்கு உணர்த்துகிறது. உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்குத் தனியார் உற்பத்திப் பிரிவுகள் திறமையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். இவற்றை அடைய தொழில்நுட்பத்தின் தரத்தை உயர்த்துதலும், நவீனப்படுத்துதலும் இன்றியமையாத வையாகும். 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையில் கோடிட்டுக் காட்டியுள்ளவாறு, தொழில் தேவைகளுடன் கலந்தாலோசித்து தொழில் நுட்பத்தைத் தரம் உயர்த்தி நவீனமயமாக்குவதற்குத்

தக்க உதவிகளைப் பரிந்துரைக்க புதிய பணிக் குழுக்கள் அமைக்கப்படும்.

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துலை மேம்பாடு

79. தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அரசு கொள்முதலில், முன்னுரிமை அளிப்பதற்கான கொள்கை, பல தொழில் பிரிவுகள் புத்துயிர் பெற உதவியுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கென புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) ஒத்துழைப்புடன், சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் ஒன்று தொடங்கப்படும். பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பு முறையில் இந்த மையத்தை ஏற்படுத்துவதற்காக 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில் தனியார் தொழில் முனைவோர் முதலீட்டிற்கு ஊக்குவிப்பதுடன், மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

80. தொழிற்சாலைகள் பெருவாரியாக அமைந்துள்ள பகுதிகளுக்குப் பயனளிக்கும் வகையில், தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர். இத்திட்டம் இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளையும் சந்தைத் தொடர்பு வசதியையும் அளிக்கும். தமிழ்நாட்டில் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொகுப்பு, மோட்டார் பம்பு மற்றும் வார்ப்படத் தொழில் தொகுப்பு, தோல் தொழில் தொகுப்பு, மோட்டார் வாகனத் தொழில் தொகுப்பு, மாம்பழக் கூழ் தொகுப்பு, சுயிறு தயாரிப்பு மற்றும் உணவு தானியத் தொகுப்புகள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். 'ஐஎஸ்ஓ' (ISO) சான்றிதழைப் பெறுவதற்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கும் சிறு தொழில் பிரிவுகளுக்குத் தக்க உதவியளிக்கும் திட்டம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. சிறு தொழில்களுக்கான தொழில் நுட்பத்தைத் தரம் உயர்த்துதல் மற்றும் நவீனப்படுத்த உதவும் வகையிலான திட்டத்தை ஏற்கெனவே தொடங்கியுள்ளோம். இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்

81. சென்னைப் பெருநகர்ப்பகுதியில் அனைத்து வகையிலும் அதன் சிறப்பினை மீண்டும் நிலை நாட்டுவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கமாகும். மெரினா கடற்கரையினை அழகுபடுத்தியது பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. சென்னையில் தரமான சுட்டமைப்பு வசதிகளையும், சுகாதாரமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்துவதே இந்த அரசின் உயர் முன்னுரிமையாகும். தற்போது நடைபெற்றுவரும் கழிவுநீர்கற்றுத் திட்டங்கள் முடிவடைந்த பின்னர், எஞ்சியுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, படிப்படியாக தரமான சாலைகளாக மாற்றப்படும். சென்னை மாநகருக்கான ஒட்டுமொத்தப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதேவேளையில், போக்குவரத்திற்கான கால அளவைக் குறைக்கும் வகையில் சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அம்சமாகும். இத்திட்டம் 10 ஆண்டு கால அளவில் ரூபாய் 18,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் அதற்காக இலக்கிடப்பட்ட ஒதுக்கீடான ரூபாய் 1780.95 கோடியை விடக் கூடுதலாக இருக்கும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மின்வழங்கல் மற்றும் பகிர்மானம், சாலைப் போக்குவரத்து, வடிகால் வசதிகள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், வீட்டு வசதி, குடிசைவாழ் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் 2004-2005 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை உயரளவாக ரூபாய் 2010 கோடி என இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

நெசவாளர்கள் நலன்

82. நெசவாளர்களின் நலன் அரசின் உயர் கவனத்தைப் பெற்றுள்ளது. கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை உறுதி செய்யும் வகையில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம், திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்டு வரும் இலவச



சேலைகளும், இலவச வேட்டிகளும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்தே வாங்கப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. உயர்தரம் வாய்ந்த பாலிகாட் சேலைகள், வேட்டிகளை 1.11 கோடி பெண்கள் மற்றும் 1.11 கோடி ஆண்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிப்பதோடல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள 2.22 கோடி மக்களுக்கு ஆடைப் பாதுகாப்பு வசதியையும் அளிக்கிறது. இத்திட்டம், 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 173 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

83. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலைப் பகுதியில் 1010 நெசவாளர்கள் பயனடையும்வகையில், ரூபாய் 6.87 கோடி செலவில், தறிக்கூடங்களுடன் கூடிய வீட்டு வசதித் திட்டம் ஒன்று தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இது இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவிலான வீட்டு வசதித் திட்டமாகும். நெசவாளர்களுக்குரிய இந்த தறிக்கூடத்துடன் கூடிய வீடுகளைக் கட்டும் திட்டத்திற்கு அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

84. இந்த அரசு, மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 73 கோடி செலவில் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்தை திருத்தியமைக்கக் கருதியுள்ளது. பல்லடம், திருச்செங்கோடு, ஈரோடு மற்றும் ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் நாடா இல்லாத் தறிப் பூங்காக்கள் (Shuttleless Weaving Parks) நான்கு நிறுவப்பட்டு வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், கைத்தறி-துணித்தொழில் குறித்த திட்ட ஒதுக்கீடு, ரூபாய் 304.51 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

85. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உருவான "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002", தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு புதிய சாதனைகளைப் படைக்க உதவியுள்ளது. தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள் துறையின் (ITES) ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 2000-2001 இல் இருந்த 11 சதவிகிதத்திலிருந்து, 2002-2003 இல் 17 சதவிகிதமாக வியத்தகு வளர்ச்சியடைந்துள்ளது. இந்தச் சாதனையை மேலும் வலுப்படுத்தத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

86. மாமல்லபுரம் செல்லும் சாலையில் சோழிங்கநல்லூரில் அறிவுத்திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) 2004-2005 இல் வடிவமைக்கப்படும். மொத்தம் ரூபாய் 127.41 கோடி செலவில், மத்திய கைலாஷ் சந்திப்பையும் மாமல்லபுரத்தையும் இணைக்கும்வகையில், தகவல் தொழில்நுட்ப விரைவுப்பாதைக்கானத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கியுள்ளார்கள். இந்த விரைவுப்பாதையில் அமையப்பெறும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைப்பதற்கு உலகத்தரம் வாய்ந்த சாலை வசதியினை இத்திட்டம் ஏற்படுத்தும். இப்குதியிலுள்ள பெரும்பரப்பு திட்டமிட்ட வளர்ச்சியின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்ப வளைகுடாப் பகுதி என அழைக்கப்படும். சென்னையைத் தவிர கோயம்புத்தூர் மாநகரமும், தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணி ஆகியவற்றிற்கான முதலீட்டைப் பெறும்வகையில் மேம்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளில் தமிழ்நாட்டின் ஒப்பீட்டு அனுகூலங்களை

நிலைப்படுத்தும் ஒருபெரும் முயற்சியாக தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளின் பாடத்திட்டத் தொகுப்பு ஒன்று மேல்நிலைப் பள்ளி கணினி அறிவியல் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. இதனால் இத்துறையில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறுவதற்கு நமது இளைஞர்கள் தயார் செய்யப்படுவர்.

சுற்றுலா வளர்ச்சி

87. மாண்புமிகு முதலமைச்சரின் தொழில் ரீதியான மற்றும் தொலைநோக்கு சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால் தமிழ்நாடு கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலம் என்ற பெருமை யினைப் பெற்றுள்ளது. இது, புதிய வேலை வாய்ப்பு களை உருவாக்கியதோடு உள்ளூர் சேவைப் பணித் தொழிலுக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென ஒதுக்கீடு ரூபாய் 5 கோடி என்றிருக்க, 2004-2005 ஆம் ஆண்டில் இது ரூபாய் 30.35 கோடியென பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசு ஆடம்பர வரி வீதங்களைக் குறைத்துள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் தற்போது உணவகத் தொழில் விரைந்து முன்னேறி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆதாயம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.



நல்லாளுமைக்கான மின் ஆளுமை

88. நல்ல ஆளுமைக்குத் திறமையான, ஒளிவு மறைவற்ற, மக்கள் பங்கேற்கும் நிருவாக அமைப்பு தேவை. நிருவாகத் திறமையையும், பணிவழங்கலையும் பெரிய அளவில் மேம்படுத்த இந்த அரசு மின் ஆளுமையை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் தலைமைச் செயலகம் ஏற்கனவே தொலைத்தூரத் தொடர்பு (Video-Conferencing) மூலம் மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களையும், சிறைச்சாலைகளையும் தொலை தூரத் தொடர்பு மூலம் இணைத்துள்ளோம்.

89. மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், பெருமளவில் மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்றும் நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்படும். வணிகவரி, பத்திரப்பதிவு, கருவூலக் கணக்கு, போக்குவரத்து மற்றும் நில அளவை மற்றும் தீர்வை ஆகிய துறைகளில் மின் ஆளுமைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 23 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களுக் கிடையே எளிதில் அலுவலகத் தகவல் பரிமாற்றத்திற்கும், புள்ளிவிவரங்களை எளிதில் பகிர்ந்துகொள்வதற்கும் உதவும் வகையில், 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network) ஒன்றை ஏற்படுத்த ரூபாய் 8 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சமூகப்பாதுகாப்புறுதி வளையம்

90. 1990 களின் முற்பகுதியில், பொருளாதார நிலைப்பாட்டையும், அமைப்பு ரீதியிலான மாற்றங்களையும் மத்திய அரசு துவக்கியபொழுது, நலிவுற்றோர், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் வறியோர் ஆகியோர் நலனை, இச்சீர்திருத்த நடைமுறைகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள்தான் ஒருங்கிணைந்த சமூகப்பாதுகாப்புறுதி வளையம் ஏற்படுத்தும் கொள்கை ஒன்றை முன்மொழிந்தார்கள்.

91. தமிழ்நாட்டில் நிதி நிலைச் சீர்திருத்த நடவடிக்கைகள் சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு எந்தவொரு மாநிலத்திலும் இது சாத்தியமாகவில்லை. இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். அரசு



எதிர்கொண்டுள்ள நிதி இடர்பாட்டின் தன்மையையும் கடுமையையும் பொருட்படுத்தாது ஏழை எளியோருக்கான ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் அமைப்பதில் எந்தவிதக் குறைபாடும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தி செயலாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே இப்பெருமை சாரும். இதன் மூலம் சமூகப்பாதுகாப்பு வளையம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005 வரவு-செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5329.28 கோடியாகும்.

மனிதவள மேம்பாடு
அனைவருக்கும் கல்வி

92. ஒரு கிலோ மீட்டர் வளையத்திற்குள் உள்ள குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும் பயன்தரும் வகையில் ஒரு தொடக்கப்பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ள தனிச் சிறப்பினை 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்த அரசு 2004-2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும். இதனால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களும் எளிதாகவும் வசதியாகவும் அணுகக்கூடிய நடுநிலைப் பள்ளிகளைப் பெறுவது உறுதி செய்யப்படும். மேலும், 2004-2005 ஆம் ஆண்டில் 30 நடுநிலை மற்றும் 30 உயர்நிலைப் பள்ளிகளை முறையே உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவோம்.

93. "அனைவருக்கும் கல்வித்" திட்டத்தின் கீழ், பள்ளிகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு ரூபாய் 506.13 கோடி செலவிட்டுள்ளது. 600 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் ஆய்வகக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கணினிக் கல்வி விருப்பப் பாடமாக கற்பிக்கப்படுவது 2004-2005 ஆம் ஆண்டில் மேலும் 400 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்படும். இதன் மூலம், 1,597 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். அடுத்த நிதியாண்டில் ரூபாய் 5.30 கோடி செலவில் 500 உயர்நிலைப்பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படும். பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3937.29 கோடியாக இருந்தது. இது 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 4202.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

94. தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலகவங்கியின் நிதியுதவி பெறுவதற்கான அனுமதியை தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை அறிவதில் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இத்திட்டம் ஐந்து வருட கால அளவில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்படும். அடிப்படை அறிவியல் துறைகள் சிறந்து விளங்க இந்திய அறிவியல் நிறுவனத்தை (Indian Institute of Science) ஒத்த தேசிய அறிவியல் நிறுவனம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது சென்னைப் பல்கலைக்கழகமும் அண்ணா பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சியாகும். உயர்கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 614.70 கோடி என்றிருக்க, அது 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 649.81 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மேம்பாடு

95. 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுக் களுக்கான ஒதுக்கீடு ரூபாய் 27.27 கோடியாக இருந்தது; அது 2004-2005 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 48.14 கோடியாக பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அளவில் விளையாட்டுக்களுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், விளையாட்டு வீரர்களின் உடல்திறனைக் கண்டறிவதற்கும், விளையாட்டில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான பயிற்சிகளுக்கும்

தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் படுவதற்கும் அடுத்த நிதியாண்டில் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டிற்கான தனித்தொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும்.



தமிழ் வளர்ச்சி

96. தமிழ்மொழி மேம்பாடு இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான அறிவியல் தமிழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 5.42 கோடி செலவில் அறிவியல் தமிழ்ப் பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளோம். தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2004–2005 ஆம் ஆண்டில், உலகளவில் தமிழ் தேடுபொறி(Search Engine), வணிகத் தமிழுக்கான இணைய உள்ளடக்கம் (Web content), தமிழ் இணைய வகுப்பறைகள் ஆகியவற்றை வடிவமைப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்

97. மக்களுக்கு எளிதில் பெறத்தக்கதும் தரமானதுமான சுகாதார வசதிகளைக் கிடைக்கச் செய்வதில் தமிழ்நாடு வியத்தகு சாதனை புரிந்துள்ளது. இதனை முக்கிய நல்வாழ்வுக்கான குறியீடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திலிருந்து அறியலாம். 2000 ஆம் ஆண்டில், குழந்தை இறப்பு வீதம் (IMR) ஆயிரத்திற்கு 51 என்ற நிலையிலிருந்து, 2002 ஆம் ஆண்டில் ஆயிரத்திற்கு 44 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இதேபோன்று இந்தக் கால அளவில் பிறப்பு வீதம் ஆயிரம் மக்கள்தொகைக்கு (CBR) 19.3 என்ற அளவிலிருந்து, 18.5 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

98. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து ரூபாய் 86.25 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதோடு, 93 ஆரம்ப சுகாதார மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. எம்.ஆர்.ஐ. (MRI), சி.டி.ஸ்கேன் (C.T. Scan) ஈ.சி. ஜி. (ECG), ஈ.ஈ.ஜி (EEG), அல்ட்ரா சவுண்ட மற்றும் எக்ஸ்ரே, போன்ற வசதிகள் கொண்ட ஏழு வட்டார நோய் அறி மையங்கள் ரூபாய் 21 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை விபத்துக்களில் உயிரிழப்பைக் குறைப்பதற்குத் தனிமுக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

99. ரூபாய் 9.34 கோடி செலவில் பொதுமக்களுக்கு அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே தரமான மருத்துவ சேவையை அளிக்கும் வகையில் மொத்தம் 571 சிறப்பு சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 11.38 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். 56.65 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் 2003–2004 ஆம் ஆண்டில் பள்ளி மருத்துவ முகாம் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

100. மகப்பேறு காலத்தில் தாய்மார்கள் ஆயிரம் மகப்பேறுக்கு இறப்பு வீதம் 1.3 என்ற வீதத்தில் இருப்பதைக் குறைப்பதற்கான உறுதியான நோக்குடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது இரண்டு மருத்துவமனைகளில் 24 மணிநேர மகப்பேறு அறுவை சிகிச்சையை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அவசரகால

மகப்பேறு கவனிப்பு வசதியைச் செய்து கொடுக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. குழந்தை இறப்பு வீதத்தை மேலும் குறைப்பதற்காக "24 மணி நேர ஒட்டுமொத்த அவசரகால பிறந்த குழந்தை கவனிப்பு வசதியையும்" இந்த மருத்துவமனைகள் அளிக்கும்.

101. உலக வங்கியின் நிதி உதவியுடன் சுகாதார அமைப்புகள் மேம்பாடுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரும் முன்னேற்றத்தை கண்டுள்ளோம். 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 500 கோடி செலவிலான இந்த நல்ல திட்டம் தொடங்கப்படும். ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் அயல்நாட்டு நிதியுதவி பெறும் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Reproductive Child Health Project) 5 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டவுடன், ஆரம்ப சுகாதார கட்டமைப்பு வசதி பெருமளவில் வலுப்படுத்தப்படும்.

102. பிரதம மந்திரி ஸ்வாஸ்த்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் புது தில்லியில் அமைந்திருக்கும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்துக்கு இணையாகத் தமிழ்நாட்டில் ஒரு மருத்துவக் கல்லூரி நிலை உயர்த்தப்படும் என்கிற மத்திய அரசின் அறிவிப்பை வரவேற்கிறோம். நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்கு ரூபாய் 1304.31 கோடியாய் இருந்த ஒதுக்கீடு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1387.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பெண்ணுரிமை

103. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்வது இம்மாநிலத்திலுள்ள இலட்சோப இலட்சம் பெண்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரொளிமிக்க முன்மாதிரியாகத் திகழ்வதனால் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது. இப்புது உத்வேகம் மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரவியுள்ளது. முன்னர் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பெண்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தற்போது பீடுநடை போடுகின்றனர்.

104. அரசின் அனைத்துச் சட்டம் மற்றும் சட்டம்சாராக் குழுக்களிலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய தக்க நடவடிக்கை எடுத்துள்ள நாட்டிலுள்ள ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத் தலைவர், தமிழ்நாடு அரசுத்



தலைமைச் செயலாளர் போன்ற தலைமைப்பதவிகளைப் பெண்கள் நிருவகித்து வருகின்றனர். அனைத்து மகளிர் அதிரடிப்படை நிறுவப்பட்டது மற்றும் முதல் மகளிர் காவல்படை உருவாக்கப்பட்டது ஆகிய நடவடிக்கைகள் மகளிர் ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று ஆண்களைவிடச் சிறந்த முறையிலும் செயல்படுவர் என்பதை நிரூபித்துள்ளது.

105. 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் விரைவாக வளர்ந்து பெண்ணுரிமைக் கான ஒரு மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மகளிர் திட்டத்திற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கியுள்ளோம். பயிற்சித் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் புதிய குழுக்கள் அமைத்தல் ஆகியவைகளுக்கும் இது உதவும். 2004–2005 ஆம் ஆண்டில் கூடுதலாக 5 இலட்சம் மகளிரைச் சேர்த்து மேலும் 25,000 சுய உதவிக் குழுக்களை அமைக்க இயலும் என்று நம்புகிறோம்.

சத்துணவு

106. இந்த அரசின் முனைப்பான செயலாக்கத்தினால் துணை ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் சேர்க்கை மற்றும்

உணவின் தரம் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 77 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தவாறு, மதிய உணவுப் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளை வழங்க இந்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 685.41 கோடியாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

107. தரமான கல்வி, கடன்வசதி, சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சி, வீட்டுவசதி போன்றவற்றை எளிதில் கிடைக்கச் செய்வதன்மூலம், ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல் எனும் இந்த அரசின் அணுகுமுறை நல்ல வரவேற்பினைப் பெற்றுத்தந்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மேம்பாடடைவதற்கான வளர்ச்சித் திட்டச் செயலாக்கம் பரவலாக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்புச் செயல் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 1.43 இலட்சம் மக்களுக்கு ரூபாய் 65.99 கோடி அளவிற்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் இச்சமுதாயங்களைச் சேர்ந்த 7,000 நிலமற்ற பெண்கள் பயனடையும் வகையில் நிலமற்றோருக்கு நிலம் வழங்குவதற்கான புதிய திட்டமொன்று தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

108. 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவர் இல்லங்கள் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பதினோராம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 429.09 கோடியாக இருந்தது. இது 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 448.91 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

109. இந்த வகுப்பைச் சேர்ந்த மக்களின் நலனுக்கான ஒதுக்கீடு 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 159.79 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமுதாயத்தினரின் சமூகப்பொருளாதார முன்னேற்றம் மற்றும் கல்வி அறிவு பெறும் உரிமையைப் பெறுவதற்கான உதவிகளை இந்த அரசு தொடர்ந்து அளிக்கும்.

110. 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டப்படும். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசத் தொழிற்கல்வி பெறுவதற்கு ரூபாய் 4.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இச்சமுதாயப் பெண்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டம் தொடரப்படும். வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் இச் சமுதாயத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக ரூபாய் 2.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி நிலைமைக் கணிப்புகள்

111. 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் இம்மாமன்றத்தின் முன்வைக்கப் பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 3933.47 கோடியாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையைத் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3699.51 கோடியாக நம்மால் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1295.15 கோடியாக இருந்த மொத்தப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 245.52 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 22,665.90 கோடியாக இருக்கையில், திருத்த மதிப்பீட்டில் இது ரூபாய் 22,850.53 கோடியாக இருக்கிறது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,599.37 கோடி என்று இருக்கையில், திருத்த மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,550.04 கோடியாக உள்ளது.

112. நடப்பாண்டில் திருத்த மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளதைவிடக் குறைவாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இருந்த குழப்பமான நிதி நிலைமையை, இன்று சீர்செய்துள்ளோம் என்பதில் நாம் பெருமை அடையலாம். அரசின் வழிவகை நிதிநிலை சீரடைந்துள்ளதோடு, தற்போது செலவுப் பட்டிகளுக்கு உடனடியாகத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் நிதிநிலைச் சுமன்பாட்டை மீளப்பெற்றதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில்லான இவ்வரசு சிறப்பான முயற்சி எடுத்துள்ளதை அவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர்.

113. 2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவுகள் ரூபாய் 24,792.30 கோடியாக இருக்க, மொத்த வருவாய்ச் செலவு ரூபாய் 28,128.73 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 3336.43 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறையின் பங்கு 13.5 சதவீதமாக இருக்கும். 2004-2005 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிப்பற்றாக்குறை ரூபாய் 6921.77 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் இனங்களில் விதிகளுக்குட்பட்டு உரிய வசூல் நடவடிக்கைகள் மூலமாக வருவாயைப் பெருக்கியும் ஆதாயமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தியும் நிதிநிலையைச் சீராக்கும் கொள்கை 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

நிலவரி

114. தொடர்ந்து மூன்றாண்டுகளாக பாதகமான பருவநிலை நிலவி, 2002-2003 ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. 2003 ஆம் ஆண்டில் பருவமழை அதற்கு முந்தைய ஆண்டைவிட மேலாக இருந்தபோதிலும், வடகிழக்குப் பருவமழை மீண்டும் பொய்த்தது. நிலத்தடி நீரின் அளவும் குறைவாகவே உள்ளது. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று 2003 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஜூன் வரையிலான பசலி 1413-இல் விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி அனைத்து மாவட்டங்களிலும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேலும், உள்ளூர் தலவரி, உள்ளூர் தலமேல்வரி ஆகியவையும் தள்ளுபடி செய்யப்படும். அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக இவை அறிவிக்கப் பட்டுள்ளன. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இந்த உதவி காரணமாக, சுமார் ரூபாய் 60 கோடி அளவில் அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

வேளாண்மை வருவாய் மீது வரிகள்

115. விலைச்சரிவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக தோட்டத் தொழில்களில் தொடர்ந்து இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, 1997-98 ஆம் ஆண்டில் மாநில அரசிற்கு ரூபாய் 39.4 கோடி அளவிற்கு வருவாய் ஈட்டித் தந்த வேளாண் வருமான வரி 2002-2003 ஆம் ஆண்டில் ரூபாய் 1.6 கோடி என்ற அளவிற்கு மிகவும் குறைந்துவிட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபாய் 1.35 கோடியாக இருக்க இதே வரியை வசூலிப்பதற்கு ஆகும் செலவு ரூபாய் 1.6 கோடியாகும். இவ்வாறாக, வசூலுக்கு ஆகும் செலவு வருவாயை விஞ்சிவிட்டது.

116. தோட்டத் தொழில் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் தேயிலை பயிரிடுவோருக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், இவ்வரி வசூலுக்கு ஆகும் நிர்வாகச் செலவு கிடைக்கும் வருவாயை விட கூடுதலாக இருப்பதாலும், 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து வேளாண் வருவாய் வரியை ரத்து செய்யலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது.

வணிகவரிகள்

117. விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் ஒருமாதத்திற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 சதவிகிதம் வட்டி விதிக்கப்படுகிறது. வட்டிவிகிதங்கள் மிக உயர்வாக

இருந்த காலத்தில் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது, வட்டி விகிதங்கள் குறைந்துள்ளதால் புதிய முறையில் வட்டி விகிதத்தை குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதல் 90 நாள்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு மாதத்திற்கு 1.5 சதவிகிதமும், அதன்பிறகு மாதத்திற்கு 2 சதவிகிதமும் விதிக்கப்படும். வரியினை குறித்த காலத்தில் செலுத்த இந்தப்புதிய முறை உதவும். 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

118. உலராத மோர்ச்சம்பழத்தின் மீது தற்போது 12 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. பொதுவாக உணவுப் பொருள்கள் 4 சதவிகித வரிவிகித அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. பால்பவுடர், இனிப்பு, மிட்டாய் வகைகள், ஊறுகாய், சாக்லெட்கள் போன்றவை 4 சதவிகித வரிவிகித அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பிற பொருட்களாகும். உலராத மோர்ச்சம் பழம் உணவுப் பொருளாக உள்ளதால், இதன் மீது விதிக்கப்படும் வரியினை 4 சதவிகிதமாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

119. கணினி உபரி பொருள்கள் மற்றும் உதிரி பாகங்கள் மீது விற்பனை வரி 4 சதவிகிதமாகும். மத்திய விற்பனை வரியும் 4 சதவிகிதமாகும். தமிழ்நாட்டை கணினி வன்பொருள் மையமாக நிலைநிறுத்தும் நமது திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்கப்படும்.

120. மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் இடைமாநில விற்பனைக்கு "சி" படிவம் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சிக்கல் உருவாகியுள்ளது. இதனால், பதிவு பெறாத வணிகர்களுக்கு இடைமாநில விற்பனையின் மீது 10 சதவிகிதம் மத்திய விற்பனை வரி கட்டாயமாக வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. வடமாநிலங்களில் உள்ள சிறு வணிகர்களுக்கு விற்பனை செய்யும் தமிழ்நாட்டிலுள்ள பின்னலாடைத் தொழில் துறைக்கு இதனால் பிரச்சினை எழுந்துள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வுகாண மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். இது சட்டமாகபட்டு விட்டதனால், பின்னலாடை இடைமாநில விற்பனைக்கு முதலில் 10 சதவிகித வரிவிதிக்கப்பட்டுபின்னர் அதில் 9 சதவிகிதத் தொகை ஒரு குறிப்பிடத்தக்கமானியமாக திருப்பியளிக்கப்படும். இதனால் இறுதி வரிவிகிதம் 1 சதவிகிதமாக மட்டும் இருக்கும். இந்தச் சலுகை ஓராண்டில் பின்னலாடையை வெளிமாநிலத்திலுள்ள கிளைகளுக்கு அனுப்பும்பொழுதோ அல்லது வெளிமாநில முகவர் மூலம் விற்பனை செய்தாலோ அவர்களுக்கு இது பொருந்தாது.

121. உயிர்காக்கும் மருந்துகளுக்கு ஏற்கெனவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சிறுநீரகச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் (CAPD) என்ற திரவமும் உயிர்காக்கும் இன்றியமையாத மருந்தாக இருப்பதால் இதற்கும் வரிவிலக்கு அளிக்க உத்தேசிக்கப்படுகிறது. மேலும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் சிகிச்சைக்கு பின்வரும் பத்து மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. ZIDOVUDINE
2. LAMIVUDINE
3. STAVUDINE
4. DIDANOSINE
5. NEVIRAPINE
6. EFAVIRENZ
7. NELFINAVIR
8. INDINAVIR
9. SEQUINAVIR
10. RETONAVIR

இந்த மருந்துகளை உயிர்காக்கும் மருந்துகளின் பட்டியலில் சேர்த்து விற்பனை வரி விலக்களிக்கப்படும்.

122. மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) தமிழ்நாட்டிலுள்ள எரிவாயுக் கிணறுகளிலிருந்து இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்து பின்னர் கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் (GAIL) என்ற மற்றொரு மத்திய அரசு நிறுவனத்திற்கு விற்பனை செய்துவருகிறது. தற்போதுநடைமுறையில் உள்ள வரி விதிப்பு விகிதத்தின் கீழ் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC), GAIL நிறுவனத்திற்கு செய்யும் முதல் விற்பனையின் மீது 8 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. பின்னர், தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட பிற உபயோகிப்பாளர்களுக்கு GAIL நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் இரண்டாம் நிலை விற்பனைக்கு 1 சதவிகித விற்பனை வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனைத்து கொள்முதல்களுக்கும் 4 சதவிகிதம் வரி செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கும் இயற்கை எரிவாயுவிற்கு ஏற்கெனவே முதல் நிலையில் 8 சதவிகித வரி விதிக்கப்பட்டுவிட்டதால் இது சாத்தியமாகாது. எனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு GAIL நிறுவனம் விற்பனை செய்வதற்காக மட்டும் (ONGC) நிறுவனத்திடமிருந்து வாங்கும் இயற்கை எரிவாயுவின் மீதான முதல் நிலை விற்பனை வரி 4 சதவிகிதமாக குறைத்து விதிக்கப்படும். மேலும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு GAIL நிறுவனம் செய்யும் இரண்டாம் நிலை விற்பனைக்கு மறுவிற்பனை வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

123. மாசுக்கட்டுப்பாட்டு சாதனங்களை நிறுவுவதற்கு ஊக்குமளிக்கும் வகையில் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் மீதான வரியினை திருத்தியமைத்து பொதுவான 4 சதவிகித வரிவிகிதமாக குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாசுக்கட்டுப்பாடு வரியத்திலிருந்து இவ்வகை சாதனங்களுக்கான பட்டியல் பெறப்படும்.

124. கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைவினைப் பொருட்கள் மீதான விற்பனை வரிவிகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

125. இசைக் கலைஞர்களின் நலன் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு தற்பொழுது விதிக்கப்பட்டு வரும் 4 சதவிகித வரியிலிருந்து முழுவதுமாக வரிவிலக்கு அளிக்க உத்தேசித்துள்ளேன்

126. தற்போது கோழித் தீவனத்திற்கு முழுவதுமாக வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. சுண்ணாம்புக்கல் கோழித் தீவனத் தயாரிப்பில் சிறிதளவு சேர்க்கப் படுகிறது. சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதமாக உள்ளது. கோழித் தீவனம் தயாரிக்க கொள்முதல் செய்யப்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரியை 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

127. கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீது ஒரு சதவிகிதம் மறுவிற்பனை வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவு அங்காடிகளில் பொருட்களை வாங்கும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் கூட்டுறவு சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நுகர்வோர் பொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் பிரிவு 17 ன் கீழ் விதிக்கப்படும் மறு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

128. சட்டத்திருத்தம் தேவைப்படும் மாற்றங்களைத் தவிர்த்து நான் அறிவித்த ஏனைய வரி விதிப்பு மாற்றங்கள் அனைத்தும் இதற்கான அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

முத்திரைத்தாள் வரி

129. டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரிசீரமைப்பு மற்றும் வருவாய்ப் பெருக்க ஆணையம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்து மாற்ற கிரைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் மிகு வரி சதவிகிதங்களை அரசு ஏற்கெனவே குறைத்துள்ளது. இது அனைவராலும் வரவேற்கப் பட்டுள்ளது. மேலும் சொத்து மாற்றங்களை எளிமை யாக்கவும் சட்ட வரையறைகளின்படி முத்திரைத் தீர்வைகளை செலுத்தவும் இன்னும் பிற ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வை சதவிகிதங்களை எளிமையாக்கிடவும் குறைத்திடவும் இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை விரிவாக பரிசீலித்துள்ளோம். பின்வரும் நடைமுறைகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

130. தற்போது, குடும்ப உறுப்பினர்களிடையே மேற்கொள்ளப்படும் சொத்து மாற்றங்கள் ஏற்பாடு (Settlement), விடுதலை (Release), பாகப் பிரிவினை (Partition) மற்றும் கூட்டாண்மை கலைப்பு (Dissolution of partnerships) ஆகிய ஆவணங்கள் வழி நடைபெறுகின்றன. குடும்ப உறுப்பினர் களிடையேயான ஏற்பாடு மற்றும் விடுதலை முறையிலான சொத்துமாற்ற ஆவணங்களுக்கு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட மதிப்பின் மீது 4 சதவிகிதம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகின்றது. பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு சொத்து

மதிப்பின் மீது 2 சதவிகிதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகின்றது. கூட்டாண்மைகலைப்புக்குபின் ஏற்படும் பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு பிரிக்கப்பட்ட பங்குகளின் சந்தை மதிப்பிற்கு 3 சதவிகிதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப் படுகின்றது. மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்திற்கும் 1 சதவிகிதம் பதிவு கட்டணமாக உச்சவரம்பின்றி வசூலிக்கப்படுகின்றது. டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரி சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம் இந்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை 1 சதவிகிதமாக குறைத்திடவும் அதிகபட்சமாக ரூபாய் 2 இலட்சம் நிர்ணயித்திடவும் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள அனைத்து வகையான ஆவணங்களுக்கும் முத்திரைத் தீர்வை சொத்தின் சந்தை மதிப்பின் மீது 1 சதவிகிதமாகவும், உயர்ந்தபட்ச முத்திரைத் தீர்வை ரூபாய் 10,000 என குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் அறிவிக்கின்றேன். பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் எனவும் அதிகபட்ச கட்டணம் ரூபாய் 2,000 எனவும் நிர்ணயிக்கப்படும். பாகப்பிரிவினை ஆவணங்களைப்பொறுத்த வரையில், ஒவ்வொரு பங்கிற்கும் முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படும். விவசாய நிலம் சம்பந்தமான பாகப் பிரிவினையைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள சலுகைப் பதிவுக் கட்டணங்கள் தொடரப்படும்.

131. கடன் அளிப்பதற்கும் கடன் பெறுவதற்கும் அடமான ஆவணங்கள் பரவலாக பயன்படுத்தப் படுகின்றன. பெரும்பாலான நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் தாங்கள் அளிக்கும் கடனுக்குப் பாதுகாப்பாக இந்த அடமானத்தைப் பெறுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளை முற்றிலும் எளிமையாக்கிட முடிவு செய்துள்ளோம். வர்த்தக வங்கிகளும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் வசூலிப்பதை எளிமையாக்கிடக் கோரியுள்ளன. எனவே சொத்து ஒப்படைக்கப்படாத சாதாரண அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவிகிதத்தில் இருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும் எனவும் இதற்கான உச்ச வரம்பு ரூபாய் 20,000 எனவும் நிர்ணயித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவிகிதமாகவும் இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் விதிக்கப்படும்.

132. சொத்து ஒப்படைப்புடன் கூடிய அடமான ஆவணங்களுக்கு தற்போதைய முத்திரைத் தீர்வை கடன் தொகையின் மீது 6 சதவிகிதம் என்பது கடன் தொகையின் மீது 3 சதவிகிதம் என குறைக்கப்படும். மிகுவரி (Transfer Duty) கடன் தொகையின் மீது 2 சதவிகிதம் என்பது 1 சதவிகிதமாக குறைக்கப் படும். இவ்வாறாக மொத்த கட்டணமும் கடன் தொகையில் 4 சதவிகிதமாக அமையும். பதிவுக் கட்டணம் முன்போலவே 1 சதவிகிதமாகவும் அதற்கான உச்சவரம்பு ரூபாய் 2 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப் படும்.

133. உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு நிதி நிறுவனங்களால் கையாளப்படும் மிகுதொரு முக்கிய ஆவணமாகும். இத்தகு நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்திடுவதை ஊக்குவிக்க, குறிப்பு, குறிப்பாணை மற்றும் பிற ஆவணங்களையும் உரிமை ஒப்படைப்பு ஆவணங்களாகக் கருத முடிவெடுக்கப் பட்டுள்ளது. தற்போது இந்த ஆவணங்களுக்கு கடன் தொகையின் மீது 0.5 சதவிகிதம் முத்திரைத் தீர்வையும் 1 சதவிகிதம் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படுகின்றது. இது தொடர்ந்து விதிக்கப்படும். தற்போதுள்ள முத்திரை தீர்வைக்கு உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் பதிவுக் கட்டணத்திற்கு ரூபாய் 1,000 எனவும் நிர்ணயிக்கப் படும். இந்தப் புதிய ஏற்பாடு இந்த வகையான ஆவணங்களை எளிதில் பதிவு செய்திட வழிவகுக்கும்.

134. பரவலாக பயன்படுத்தப்படும் மற்றொரு ஆவணம் குத்தகை முறையாக முத்திரையிடப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், சொத்து மாற்றங்களில் ஒரு தெளிவினையும் ஒளிவு மறைவற்ற தன்மையையும் உறுதி செய்யும். தற்போதைய முத்திரைத் தீர்வை விகிதம் மிகவும் சிக்கலானதாகவும் பல அடுக்குகளை கொண்டதாகவும் உள்ளது. இந்த ஆவணங்களுக்குகான முத்திரைத் தீர்வையை பின்வருமாறு சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விகிதம் முழு வாடகை (Total Rent) மற்றும் முன்பணம் (Advance) அல்லது அபராதம் (Fine) அல்லது தவணைக் கட்டணம் (Premium) ஆகியவைகளின் மீது வசூலிக்கப்படும்.

குத்தகை காலம்	உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதம்
30 ஆண்டுகள் வரை	1%
31 ஆண்டுகள் முதல் 99 ஆண்டுகள் வரை	4%
100 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்	8%

முழு வாடகை, முன்பணம் அபராதம் மற்றும் தவணைக் கட்டணம் ஆகியவற்றின் மீதான பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் ஆகும். இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 என்ற நிபந்தனைக்குட்பட்டு விதிக்கப்படும்.

135. கைமாற்றுத் தொகையுடன் கூடிய அதிகார ஆவணம் (Power of Attorney for Consideration) மற்றொரு முக்கிய ஆவணமாகும். தற்போதைய முத்திரைத் தீர்வை 6 சதவிகிதம் என உயரளவில் உள்ளதால் இந்த அதிகார ஆவணங்கள் பொதுவாக பதிவு செய்யப்படுவதில்லை. ஆகையால் இது தவறாகப் பயன்படுத்தப்பட்டு, சொத்து வாங்கும் ஏதுமறியாத பொதுமக்கள் ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. சொத்து வாங்குபவர்கள் பதிவு பெற்ற அதிகார ஆவணங்களை ஏற்பது என வற்புறுத்தினால் மட்டுமே இதனைச் சரிசெய்ய இயலும். வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம் பரிந்துரைத்தபடி இதற்கான முத்திரைத் தீர்வையை 6 சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாகக் குறைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் தொடர்ந்து 1 சதவிகிதமாகவே இருக்கும்.

136. ஒன்பது வருவாய் மாவட்டங்களில் பட்டா பாஸ் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆவணங்களைப் பதிவு செய்திட பட்டா பாஸ் புத்தகம் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டியது ஒரு நிபந்தனையாகும். இதனால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. வட்ட அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் நாளது வரை சரிசெய்யப்பட்ட தேவையான சிட்டா நகல்களை அளிப்பது ஏதுவாகும். எனவே பதிவின்போது பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்திட வற்புறுத்தத் தேவையில்லை. ஆகவே இந்த நிபந்தனை தளர்த்தப்படும். இதனால் விவசாயிகள் பலன் பெற்று தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்து திரும்பப் பெற்றிட வழிவகுக்கும்.

137. பல்வேறு சட்டங்களின் கீழ் உள்ள தொடர்புடைய பிரிவுகளுக்கு சட்டத்திருத்தம் தேவைப்படும் இனங்கள் தவிர பிற இனங்கள் மீதான கட்டண விகித மாற்றங்கள் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1908 ஆம் ஆண்டு பத்திரப்பதிவுச் சட்டம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உரிய அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

ஒட்டுமொத்த நிதி நிலவரம்

138. மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வரிகள் மீதான பல கருத்துருக்களை கோடிட்டுக் காட்டியுள்ளேன். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இந்த அரசு பல வரிச்சலுகைகளை அளிக்க உத்தேசித்துள்ளது. நிதி நிலைமையை வலுப்படுத்த வேண்டியிருக்கும் வேளையில் மக்களுக்கு பயன்தரும் வகையிலும் முதலீட்டுச் சூழலை மேம்படுத்து வதற்காகவும் இந்தச் சலுகைகளை நீட்டிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. நான் தற்போது அறிவித்த சலுகைகளை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் பெருவாரியாக வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

139. நிலவரித் தள்ளுபடி, வேளாண்மை மீதான வரிகளை விலக்கியது மற்றும் மக்களுக்கு பயனளிக்கும் ஏனைய சலுகைகளினால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு ரூபாய் 140 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. வரிநிலுவைகளை வசூலிப்பதில் முன்னேற்றம், மேலும் ஆதாயமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இது சரிக்கட்டப்படும். இதன் காரணமாக 2004–2005 ஆம் ஆண்டு இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாகவே இருக்கும். இப்பற்றாக்குறையை தகுந்த நிதி மேலாண்மையின் மூலமும் மத்திய அரசிடமிருந்து உயரிய அளவில் நிதிகளைப் பெறுவதின் மூலம் ஈடு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

140. வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இதனை வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படித்ததாக எடுத்துக் கொள்ளலாம். இந்த அரசு எடுத்த முயற்சிகள் நிதிச்சமன்பாட்டை எய்துவதில் ஏற்கெனவே எய்திய முன்னேற்றங்களைத் தொகுப்பதாக இருக்கும். நிதிச் சரிக்கட்டல் குறித்த நடவடிக்கை மிகவும் சிக்கலானதாக உள்ளது. ஏற்கெனவே நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், நடுத்தரக்கால நிதித் திட்டத்தில், குறிப்பிட்டுள்ள இலக்கு மேலும் முன்னேற்றம் அடைவதற்குரிய கட்டமைப்பை அளிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து மகிழ்வர்.

141. 2003–2004 ஆம் ஆண்டில் நாம் கண்ட விரைவான முன்னேற்றத்தின் அடிப்படையில் வரும்நிதி ஆண்டில் (2004–2005) இந்த அரசு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து நான் இங்கு கோடிட்டு காட்டியுள்ளேன். பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை நமக்கு முன் தொடங்கிய மாநிலங்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கணிசமான நிதியுதவியை ஏற்கெனவே பெற்றிருந்தன. தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுடைய அயராத கடும் உழைப்பினால் மட்டுமே மிகக்குறுகிய காலத்தில் எவ்வித உதவியுமின்றி வளர்ச்சி மற்றும் வளமை நோக்கிய பாதையில் நாம் வெகுவேகமாக முன்னேறியுள்ளோம். தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களது நிலைமாறாத கடும் உழைப்பு இல்லையெனில் 1996–2001 கால அளவில் நிதிநிலைச் சீரழிவுபடுகுழியில் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்பதற்கு இயலாமல் போயிருக்கும். உண்மையான தலைவர் பாதகமான ஒரு சூழ்நிலையில்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார். தமிழ்நாட்டு மக்கள் நலமும் வளமும் பெறவேண்டும் என்பதற்கான முயற்சிகளிலிருந்து சற்றும் வழுவாது ஒவ்வொரு தடையையும் தாண்டி நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னின்று நம்மை வழிநடத்திவருகிறார்கள்.

142. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக கடுமையான உழைப்பு மற்றும் முழு உறுதிப்பாட்டிற்கு தக்க வெகுமதி மிகவிரைவிலேயே கிடைக்க உள்ளது. தங்களது இன்ப துன்பங்களில் பங்கேற்று இடர்ப்பாடுகளின் போது துணை நிற்கும் உண்மையான தலைவரை நமது நீதிபதிகளாகிய பொது மக்கள் தவறின்றி இனங்கண்டு கொள்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு பீடுநடை போடுகிறது என்று உலகளவில் தற்போது பாராட்டப்பட்டு வருகிறது. இதன் காரணமாகத்தான் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஒளிபொருந்திய, எழுச்சி மிக்க, தலைமையினால்தான் குறுகிய காலத்தில் இவை அனைத்தையும் சாதிக்க முடிந்தது.

143. மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் வகையில் 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது ஆக்கபூர்வமான கருத்துக்களை நான் வரவேற்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் உதவிய வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

144. இத்துடன் 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

* * *

சென்னையில், இன்போசிஸ் நிறுவனம் 129 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,250 கோடி முதலீட்டில் அமைக்கவுள்ள உலகின் மிகப்பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 25.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டினார்கள்.

அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது தொலைநோக்குத் தேவைகளுக்கு மட்டுமன்றி உடனடித் தேவைகளுக்கும் இயற்கை வளங்கள் மீது உரிய மேலாண்மையை நாம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் விரிவான தரிசு நிலத்திட்டம், வேளாண்மையில் தொடர்ச்சியான முன்னேற்றம் அடைவதற்கு அடிகோலும் முக்கியத் திட்டமாகும். நடைமுறையில் பாசனவசதி போதுமானதாக இல்லாமல் முற்றிலும் வான்மழையை நம்பியிருக்கிற நிலங்கள் மானாவாரி நிலங்கள் எனப்படுகின்றன. மழை பொய்த்துப்போகும் காலங்களில் இந்த நிலங்களின் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது மழை குறைவாகக் கிடைக்கும்

விரிவான தரிசு நிலத் திட்டம்

நிலங்களில் உற்பத்தி பாதிக்கப்படும் நிலங்கள் பொதுவாக தரிசு நிலங்கள் எனப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்கு மிகாமலும் ஓராண்டுக்குக் குறையாமலும் பயிர் செய்யப்படாத நிலங்கள் இதர தரிசு வகைப்படும்.

தமிழ்நாட்டில் இவ்வகை நிலங்கள் 12.28 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ளன. அதாவது மொத்தப் பரப்பில் இவை 9.50 சதவிகிதமாகும். சென்ற ஆண்டில் பருவ மழை பொய்த்ததனால் தரிசு நிலங்களின் பரப்பு அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் சுமார் 7.80 சதவிகிதம் அதிகமாகும்.

தமிழகம் ஒரு வேளாண்மை சார்ந்த மாநிலம். இதன் மக்கள்தொகையில் 70 சதவிகிதம் பேருக்கு வேளாண்மை தான் உயிர் நாடி. நிலத்தின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதாலும் நிலத்தின் உரிமையாளர்களின் பயிரிடும் வழக்கம் ஒரே மாதிரியாக இருப்பதாலும், சராசரி மனிதனுக்கு உரிமையான நிலத்தின் அளவு நாளுக்குநாள் குறுகிக் கொண்டே போவதாலும், விவசாயத்தை இலாபகரமான தொழிலாக செய்ய முடிவதில்லை. நமது நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையில் தானிய கையிருப்பு, இயற்கை வளங்களை செம்மையான முறையில் பயன்படுத்துவது ஆகிய இரண்டு காரியங்களும் கவலைதரக்கூடிய விதத்தில் உள்ளன. இதன் காரணமாக, விவசாயத்தில் நாம் இடும் ஒவ்வொரு இடு பொருளுக்குத் தகுந்தவாறு உயரிய அளவில் நமக்கு விளைச்சல் அதிகரித்து அதிக வருமானத்தை ஈட்டித் தரும் வகையில் தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டிய

பொதுவாக 800 மி.மீ மழையளவுக்கு மேல் மழைபெறும் இடங்கள் மானாவாரி நிலங்கள் எனவும், 800 மி.மீக்குக் குறைவாக மழைபெறும் இடங்கள் தரிசு நிலங்கள் எனவும் வகைப் படுத்தப்படுகிறது. தரிசு நிலங்களும் மானாவாரி நிலங்களும் தமிழகத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 60 முதல் 70 சதவிகிதம் உள்ளன. இத்தகைய நிலங்கள் மூலம் தமிழக உணவுத் தேவையில் சுமார் 45 சதவிகிதம் ஈடுகட்டப் படுகிறது. சோளம், கம்பு, சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவை

முக்கிய மானாவாரி பயிர்களாகும். தமிழகத்தின் மொத்தப்பரப்பான 130 இலட்சம் எக்டேர் பரப்பில் சுமார் 25.60 இலட்சம் பரப்பு (19.70%) நடப்புத் தரிசு, இதர தரிசு மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு வகையைச் சார்ந்ததாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையின் திட்டங்களை ஆய்வு செய்தபோது 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை 5 ஆண்டுகளில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முறையில் மேம்படுத்துவதற்காக 2001-02 ஆம் ஆண்டு ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். வேளாண்மை, மரம் வளர்ப்பு, பழத்தோட்டம் அமைத்தல், மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல் போன்ற பன்முக வளர்ச்சிப் பணிகளை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்த வழிவகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பழப் பண்ணைகள் உருவாவதோடு நீர் மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் உவர் மற்றும் அமிலத் தன்மையுடைய நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்படவுள்ளன.

பொதுவாக, தரிசு நிலங்கள் பயிரிடப்படாமல் இருப்பதற்குக் காரணம் மண்ணில் குறைவான ஈரப்பசை உள்ளதும் மண்ணிலுள்ள சத்துக்கள் நலிவதுமே ஆகும். தமிழகத்தில் பொதுவாக அனைத்து வட்டாரங்களிலும் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள நீர் மட்டுமல்லாது நிலத்தடி நீரும் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் இவ்வகைத் தரிசு நிலங்கள் அமைந்துள்ள நீர்வடிப் பகுதிகள் மீது கவனம் செலுத்தாததேயாகும். பொதுவாக இவ்வகை நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்தும்போது நில உரிமையாளர்களின் நலன்கள் மட்டுமல்லாது நிலமற்ற ஏழை தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதுவே நமது நோக்கமாகும். மொத்த சமுதாயமும் பயனடையும் வகையில் இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. எனவே நீர்வடிப்பகுதி திட்டமானது ஒரு பன்முக சமுதாயத் திட்டமாகும். விரிவான தரிசு நிலத் திட்டத்தின் மூலம் உயர்நிலை தரிசு நிலங்களில் (ஓரளவு அதிக அளவில் மழை கிடைக்கும் தரிசுப் பகுதிகள்) மருத்துவ மற்றும் வாசனைப் பயிர்கள் பயிரிடுவதோடு பழப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. இடைநிலை தரிசு நிலங்களில் எண்ணெய் தரக்கூடிய மரங்களான ஜெட்ரோபா மற்றும் சொர்க்க மரம் பயிரிடப்படுகிறது. இதன்மூலம் உணவு எண்ணெய் மற்றும் எரிபொருள் கிடைக்க வாய்ப்புள்ளது. குறுநிலை தரிசு நிலங்களில் குறைவான மழையளவு கிடைப்பதனால் கருவேல் மற்றும் சவுக்கு மரங்கள் பயிரிடப்படுவதோடு அவற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் எரிசக்தி தோட்டங்கள் அமைக்கப் படுகின்றன.

விரிவான தரிசு நிலத் திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள்:

1. நமது இயற்கை வளங்களை சமநிலைக்குக் கொண்டுவந்து அவற்றைப் பாதுகாப்பதன் மூலம் நமது தலைமுறையினரின் தேவைகளைச் சந்திப்பதுவே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். அதுமட்டுமல்லாது சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கெடுத்து எதிர்கால சந்ததியருக்குப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொடுக்காமல் இருப்பதே நாம் செய்யும் தொண்டாகும்.

2. இயற்கை வளங்களைச் சீராகப் பயன்படுத்துவதற்கு தொழில்நுட்ப ரீதியாகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் இயற்கை வளங்களை சரியான வண்ணம் நிருவகிக்கும் திறமையை இத்திட்டம் கிராமத்தாருக்கு உருவாக்கிக் கொடுக்கிறது. இதன்மூலம் கிராமியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது தெளிவு.

3. மேலும் கிராம மக்களின் பரிபூரண ஒத்துழைப்பின்றி அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை சரியாக நிருவகிக்க இயலாது என்பது வெளிப்படையான உண்மையாகும். அதுபோலவே தனியார் வசம் உள்ள நீர் நிலை, நிலங்கள் ஆகிய இயற்கை வளங்களின் சரிவிகிதப் பயன்பாடும் தனிமனித முயற்சியால் மட்டுமே நடக்கக்கூடியது அன்று. இயற்கை வளங்களை மேலாண்மை செய்வதே சமுதாயத்தின் முக்கியப்பணியாகும். இது அவர்களுக்காக அவர்களால் மட்டுமே செய்யப்பட வேண்டிய பணி. எனவே பின்வரும் முக்கிய சமுதாய மேலாண்மைப் பணிகளான :

1. சமுதாய மக்களை ஒருமுகப்படுத்தி, இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்தல்.

2. மேலாண்மை நிருவாகத்தின் மூலம் கூட்டமைப்புகளை நிருவகிக்கும் திறமையை ஏற்படுத்துதல் ஆகியவையே விரிவான தரிசு நிலத்திட்டத்தின் சிறப்பம்சங்களாகும். திட்டச் செயலாக்க முகமைகள் கீழ்க்கண்ட முக்கியமான நடவடிக்கைகள் மூலமாக சமுதாய பங்கேற்புக்கு வழிசெய்கின்றன.

1. நுழைவுப் பணிகள் மூலம் மக்களின் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது.
2. கிராம முன்னேற்றத்திற்கான திட்டத்தை கிராம மக்கள் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுதல்.
3. கிராமப் பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் அமைத்தல்.
4. பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்களின் திறமையை மேம்படுத்துதல்.
5. திட்டப் பணிகளை பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் மூலமாக கூடிய மட்டும் செயல்படுத்துதல்.
6. பிரச்சினைகளுக்குத் தீர்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன.

2001 ஆம் ஆண்டு முதல் 1.2.2004 முடிய இத்திட்டத்தின் கீழ் சுமார் ஒரு இலட்சம் எக்கர் நிலப் பரப்புக்கும் மேல் பழக்கன்றுகளும், வனக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. 2004-05 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில் 60,000 எக்டேர் (அதாவது 1,48,000 ஏக்கர்) பரப்பில் செடிகள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு தரிசு நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டத்தின் கீழ் 3 எக்டேர் மற்றும் 8 எக்டேர் நிலப்பரப்புக்கு மேல் உள்ள நிலங்கள் சுமார் 1054.06 எக்டேர் அளவில் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய உயர்மட்டக் குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள்

- இயற்கை வளங்கள் சீரழிவது தடுக்கப்படுவதோடு சமநிலைபடுத்தப்பட்டு மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.
- இயற்கை வளங்களைச் சீராக்குவதற்காக எடுக்கப்படும் நிலமேம்பாட்டுப் பணிகள் அதிகமான இலைதழைகளை உருவாக்குகிறது. இதன்மூலம் இயற்கை உரம் அதிகமாகக் கிடைக்கிறது. இதனால் மண்வளம் காக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மண்வளம் பாதுகாக்கப்பட்டவுடன் வேளாண் பணிகளின் தரம் மேம்படுகிறது. இதனால் பயிர் விளைச்சல் அதிகரிக்கிறது. மேலும் மாற்றுப்பயிர் திட்டங்களை செயல்படுத்த முடிகிறது.
- வளம் குன்றிய நிலங்களில் மரங்களும், தீவனப் பயிர்களும், பயிரிடப்படுவதனால் கிராம மக்களுக்கு வேண்டிய எரிபொருள், தீவனம், உணவு, நார் மற்றும் உரம் ஆகியவை கிடைக்கிறது. இதனால் கிராம வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
- வனப்பாதுகாப்புக்கு இடையூறுகள் குறைந்து வனவளம் மறுபடியும் தழைத்தோங்க நல்ல ஆரோக்கிய சூழல் உருவாகி நீர் ஆதாரங்களில் நீர்வரத்து அதிகரிக்கிறது. இதனால் நீண்ட காலத்துக்கு ஓடைகளில் நீர் பெறும் வாய்ப்பு உருவாகிறது.
- வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பதன் மூலம், வேளாண் சார்ந்த மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வருமானம் அதிகரிப்பதோடு மக்களின் சேமிப்புத்திறன் அதிகரிக்கிறது.
- குடிநீர் ஆதாரங்கள் அதிகரித்தல், எரிபொருள், தீவனம் மற்றும் கச்சாப் பொருட்களின் உற்பத்தி ஆகியவை கிராம மக்களின் அடித்தள வாழ்க்கை முறையை மாற்றி அவர்களின் முன்னேற்றத்திற்கு குறிப்பாக கிராம மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது.
- விரிவான தரிசு நிலத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, இருக்கும் இயற்கை வளத்தை மூலதனமாக வைத்துக்கொண்டு அதிகமான உற்பத்தித் திறனை அடைவதுதான். அதற்காக இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாக உபயோகித்தல் என்பது இதற்கு அர்த்தமல்ல என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

விரிவான தரிசு நிலத் திட்டத்தின் நோக்கமே பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் திறமையான உபயோகம் ஆகியவையே. இயற்கை வளங்களின் நிலையான மேலாண்மை என்பதற்கு, இயற்கை வளங்களை மேலும் நாசப்படுத்தாமல், மேம்பாடான உற்பத்திக்கு வழிகோலுதல் என்பதுவே பொருளாகும்.

– துணைத் தலைவர் மற்றும்
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை,
சென்னை.

தமிழ் தாத்தா உ.வே.சா. நினைவு இல்லம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

"தமிழ் தாத்தா" என்று தமிழ் மக்கள் அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், அவர் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவகமாக ஆக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1855 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று பிறந்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கர் ஆவார். திருவாவடுதுறை ஆதீனம் கும்பகோணம் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகிய இடங்களில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய உ.வே.சாமிநாத அய்யர் தமிழ் மீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக, ஓலைச் சுவடிகளில் இருந்த சங்கத் தமிழ் நூல்களையும், பழந்தமிழ்க் காப்பியங்களையும் தேடிக் கண்டுபிடித்து அவற்றை அச்சுக்கு கொண்டுவந்து காலத்தால் அழிந்து போகாமல் காப்பாற்றினார்.

இவ்வாறு தமிழுக்குத் தனிப் பெருமையும், தமிழ் இலக்கியங்களுக்கு ஒரு மறுமலர்ச்சியையும் உருவாக்கித்தந்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள அவரது உருவச் சிலைக்கு ஆண்டு தோறும் அவரது பிறந்த நாளில் தமிழ்நாடு அரசு சார்பில் மாலை அணிவிக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்பட வேண்டும் என்று 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணையின்படி ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் அன்று அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசு சார்பாக மாலையணிவித்துச் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இதுவரையிலும் ஒரு நினைவகம் அமைக்கப் படவில்லை என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது.

தமிழுக்கு அரும்பெரும் தொண்டு செய்து, மகா மகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்ய கலாநிதி போன்ற பல பட்டங்களைப் பெற்று தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்களது 150-ஆவது பிறந்தநாளை ஒட்டி அவரது நினைவைப் போற்றும் வகையில், அவர் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, பழுது பார்த்து அதனை தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் நினைவு இல்லமாக அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். *



JL
V211m / N70TA
P04